# சங்க கால வரலாறு

(THE AGE OF THE SANGAM)

டாக்டர் C.E. இராமச்சந்திரன்



தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க.வெ.) வரிசை எண்—772

# சங்க கால வரலாறு

(மேற் பட்டப்படிப்பிற்குரியது)

ஆசிரியர்

டாக்டர் சி.ஈ. இராமச்சந்திரன், எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.,
தலைமைப் பேராசிரியர்,
இந்திய வரலாற்றுத் துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—October, 1977

Number of copies—1000

T.N.T.B.S. (C.P.) No. 772

© Government of Tamilnadu

# THE AGE OF THE SANGAM

DR. C. E. RAMACHANDRAN

**Price Rs. 8-05**

Published by the Tamilnadu Textbook Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

This book has been printed on concessional paper made available by the Government of India.

*Printed by*

**Kandeepam Printers,**
**3128-C. Annanagar,**
**Madras-600 040.**

# அணிந்துரை

(திரு. செ. அரங்கநாயகம், தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதினே ழாண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் இளங் கலை வகுப்புவரை மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வந்தனர். 1969ஆம் ஆண்டிலிருந்து அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர் களின் ஊக்கம், பிற பல துறைகளில் தொண்டு செய்வோர் இதற் கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித்தர முன்வந்துள்ள நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மனநிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ் வகையில் கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்களுக்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக்கழகமும் சென்னைப் பல்கலைக்கழகமும் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெருமுயற்சி யைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

வரலாற்றியல், அரசியல், உளவியல், பொருளியல், மெய்ப் பொருளியல், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணித வியல், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல், சட்டவியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் மூலநூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்று இரு வகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் நூல் களை வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான **சங்க கால வரலாறு** என்னும் இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 772ஆவது வெளி யீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 807 நூல்கள் வெளிவந் துள்ளன. இந்நூல் மைய அரசு, கல்வி, சமூக நல அமைச்சகத்தின் 'மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்ட'த் தின்கீழ் வெளியிடப்படுகிறது.

தமிழில் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெற வேண்டும் என்பதே நம் குறிக்கோளாகும். கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் கலையியற்பாடங்களையும், அறிவியற் பாடங்களையும், தொழில்நுட்ப அறிவுப் பாடங்களையும் பயிலுகின்ற மாணவர்கள் அவற்றைத் தமிழில் பயிலவேண்டும் என்பதை வலியுறுத்தி வருவதற்குக் காரணம், தமிழறிவு வளர வேண்டும் என்பதைவிட, தமிழ் மக்களின் அறிவு ஆற்றல் எளிதாக, விரைவாக வளரவேண்டும் என்பதுதான். 'எதிலும் தமிழ்; எங்கும் தமிழ்' என்னும் குறிக்கோளை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு தமிழக ஆசிரியப் பெருமக்களையும் மாணவர்களையும் சார்ந்த தாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களின் பல்வகை உதவி களுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம்கலந்த நன்றி உரியதாகுக!

செ. அரங்கநாயகம்

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. சங்கம் | ... | 1 |
| 2. சங்க காலம் | ... | 12 |
| 3. சங்க கால வரலாற்று ஆதாரங்கள் | ... | 20 |
| 4. சங்க கால அரசியல் | ... | 60 |
| 5. சங்க கால ஆட்சி முறை | ... | 107 |
| 6. சங்க காலச் சமுதாயம் | ... | 165 |
| 7. சங்க காலத் தமிழரின் வாணிகம் | ... | 189 |
| 8. சங்க காலச் சமய வாழ்வு | ... | 204 |
| முடிவுரை | ... | 214 |

# 1. சங்கம்

'சங்கம்' என்ற அமைப்பு ஒன்று தமிழை வளர்த்தற் பொருட்டுத் தமிழகத்தில் நிறுவப்பட்டிருந்ததா? என்ற கேள்வி பன்னெடுங்காலமாக எழுப்பப்பட்டுள்ளது. 'சங்கம்' என்று எதுவும் இல்லை என்று ஒரு சாரார் வாதிட்டுள்ளனர். ஆனல், சங்கம்பற்றி இதுகாறும் நடைபெற்றுள்ள ஆராய்ச்சிகள், சங்கம் என்னும் அமைப்பு இருந்தமையைக் காட்டக் கூடியனவாகவே உள்ளன.

சங்கம் என்ற ஓர் அமைப்பு இருந்திருக்கும் எனக் கொள்வ தற்கான சான்றுகள் வலுவற்றனவாகவே உள்ளன என்பாரின் கூற்றுகளை முதலில் காண்போம். பாண்டிய மன்னர்கள் மதுரையில் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தனர் என்பதற்கு வெளிப்படையான சான்றுகள் எதுவுமில்லை. சீத்தலைச் சாத்தனர் என்ற புலவர் பிறர் நூல்களில் குற்றங் காணும்போது தலையில் குத்திக் கொள்வார் என்ற செய்தியும், திருக்குறள் அரங்கேற்றம் பற்றிய செய்தியும், இறைவனுடைய பாடலிலே நக்கீரர் குற்றங் கண்டு எதிர்த்தார் என்பதும் பொருத்தமில்லாக் கதைகளாகவே படுகின்றன.

சங்க இலக்கியங்கள் பலவற்றின் இறுதியில் தொகுத்தவர், தொகுப்பித்தவர் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளனவே அன்றி, அவை அரங்கேற்றப்பட்டதற்கான குறிப்புகள் எதுவுமில்லை. பி. டி. சீனிவாச அய்யங்கார் 'சில புறப்பாடல்கள் பாண்டிய நாட்டை வெற்றிகொண்டு அடிமைப்படுத்திய சோழ மன்னர்களைப் புகழ்ந்து பாடுகின்றன. ஆதலால் இவை பாண்டிய நாட்டிலிருந்த தமிழ்ச் சங்கங்களில் எங்ஙனம் அரங்கேற்றப்பட்டிருக்கும்?' என்ற கேள்வியை எழுப்பியுள்ளார்.

இவ்வாருகப் பல்வேறு வகைகளிலும், 'சங்கம்' பற்றிய ஐயப்பாடுகள் எழுப்பப்பட்டுள்ளமையால், சங்கம் பற்றிய பிற் காலச் சான்றுகளை முதலில் தொகுத்தல் இன்றியமையாத தாகிறது. சமயகுரவர்களும், பிற்கால உரையாசிரியர்களும், புராணம் பாடிய புலவர்களும் மதுரையில் சங்கம் இருந்தமை

பற்றிக் குறிப்பிடுகின்றனர். இறையனார் அகப்பொருளின் உரையாசிரியர் மூன்று சங்கங்களையும் பற்றி விரிவான விளக்கம் தருகிறார். இவற்றையெல்லாம் உற்றுநோக்குகின்றபோது புலவர்கள் தமக்குப் பல ஆண்டுகளுக்கு முன் இருந்த சங்கத்தைப் பற்றிச் சிறிதளவேனும் கேள்விப்படாமலிருந்திருந்தால் இத்துணைப் பெருமளவு பாடியிருக்கமாட்டார்கள் என்ற முடிவிற்கு வருகிறோம்.

அகநானூற்றின் பழைய உரை ஒன்றில் 'பழுதில் கொள்கை வழுதியர் அவைக்கண்' முத்தமிழை ஆராய்ந்த சான்றோர் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இந்த உரையில் 'சங்கம்' என்று சுட்டிக்காட்டாமல் 'வழுதியர் அவை' என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. அதுபோலவே, சங்கப் புலவர்களும் 'சான்றோர்' என்றே கூறப்பட்டுள்ளனர். மாணிக்கவாசகர், தம் திருவாசகத்தில் 'உறைவான் உயர்மதில் கூடலில் ஆய்ந்த ஒண் தீந்தமிழ்' என்று கூடலில் (மதுரையில்) தமிழ் ஆராயப்பட்டது என்று குறிப்பிடுகிறார். அப்பர், திருப்புத்தூர்த் திருத்தாண்டகத்தில்,

> 'நன்பாட்டுப் புலவனாய்ச் சங்க மேறி
> நற்கனகக் கிழிதருமிக் கருளி னோன்காண்'

என்று குறிப்பிட்டுள்ளார். 'கொங்குதேர் வாழ்க்கை' என்ற பாடற் கருத்தைப்பற்றி இறைவனுக்கும் நக்கீரருக்கும் பாண்டியன் அவையில் பெரும் சொற்போர் நிகழ்ந்ததென இறையனார் அகப்பொருளுரை அறிவிக்கின்றது.

திருமங்கையாழ்வார் என்ற வைணவப் பெரியார்,

> 'சங்கமுகத் தமிழ்மாலை பத்து'
> 'சங்கமலி தமிழ்மாலை பத்து'

என்றெல்லாம் சங்கம் பற்றிக் குறிப்பிடுவதைப் 'பெரிய திருமொழி' என்னும் வைணவப் பக்தி இலக்கியத்தில் காணலாம். நாளெல்லாம் இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞானசம்பந்தன், 'ஞானசம்பந்தன் உரைசெய் சங்கமலி செந்தமிழ்கள் பத்து' என்று சங்கத் தமிழ்பற்றிக் கூறுகின்றார். 'சூடிக் கொடுத்த சுடர்க்கொடியாகிய ஆண்டாள்' திருப்பாவையின் இறுதிப் பாட்டில் 'பட்டர்பிரான் கோதை சொன்ன சங்கத் தமிழ்மாலை முப்பதும்' என்று குறிப்பிடுவதையும், 'பாடுதமிழ் வளர்த்த கூடலின் வடாஅது' என்று புறத்திரட்டு என்ற தொகைநூலில் சங்கம் பற்றியும் அங்குத் தமிழ் வளர்க்கப்பட்டமை பற்றியும் கூறப்பட்டுள்ளதையும் இங்குச் சான்றாகக் காட்டலாம்.

பெரியபுராணத்தில் மூர்த்திநாயனர் வரலாற்றை எடுத்துரைக்கும் சேக்கிழார் மதுரையில் சங்கமிருந்ததுபற்றித் தெளிவாக எடுத்துரைக்கிருர்.

'சங்கப் புலவரும் தழைத்தினி திருக்கும்
மங்கலப் பாண்டி வளநா டென்ப'

ஔவையாரின் பிற்காலத் தனிப்பாடல் ஒன்றில், 'சங்கத் தமிழ் மூன்றும் தா' என்று கூறப்பட்டிருப்பதும் அனைவரும் அறிந்த ஒன்றே.

இறையனர் அகப்பொருள் உரைதான் முதன் முதலில் சங்கத்தைப் பற்றிய செய்திகளை விளக்கமாக அளிக்கிறது. இறையனர் அகப்பொருள் உரைப்படி பாண்டிய மன்னர்கள் தமது மூன்று தலைநகர்களிலும் (தென்மதுரை, கபாடபுரம், வடமதுரை) மூன்று தமிழ்ச் சங்கங்கள் வைத்துத் தமிழை வளர்த்தனர். மதுரையும் கபாடபுரமும் கடற்கோள்களால் அழிவுற்றதால் இறுதியில் இன்றுள்ள மதுரையில் கடைச் சங்கம் வைக்கப் பட்டுத் தமிழ் வளர்க்கப்பட்டது என்று அந் நூலில் கூறப்படும் செய்திகள் அனைத்தும் கற்பனை மிக்க கதைகளாக உள்ளன. இந் நூலின் காலம் குறித்தும், உரையாசிரியர் நக்கீரர்தாமா என்பது பற்றியும் கருத்து வேறுபாடுகள் உள்ளன. நக்கீரர் உரையெழுதிய இறையனர் அகப்பொருளில் குறிக்கப்பட்டுள்ள செய்திகளே சங்கம் குறித்து நமக்குக் கிடைத்திட்ட தொன்மையான செய்திகள் ஆகும். அக் குறிப்பின்படி முதற் சங்கத் தலைவர் அகத்தியர் எனவும், மற்றைய உறுப்பினர்களில் சிவபிரான், முருகன் ஆகிய கடவுளர் உட்பட முரஞ்சியூர் முடிநாகன், நிதியின் கிழவன் உள்ளிட்ட 544 புலவர்கள் இருந்தனர் எனவும் அறிகிறேம். பரிபாடல், முதுநாரை, முதுகுருகு முதலிய நூல்கள் சங்கத்தினல் ஏற்கப்பட்டன. காய்சின வழுதி முதல் கடுங்கோன் வரை 89 பாண்டிய அரசர்கள் சங்கத்தின் புரவலர்களாக விளங்கினர். இச் சங்கம் 4,440 ஆண்டுகள் நிலைபெற்றது.

இரண்டாம் சங்கம் பற்றிய செய்திகளைக் காண்போம். கபாடபுரத்தில் இருந்த இச் சங்கம், அகத்தியர், தொல்காப்பியர், மோசியார், கீரந்தையார், வெள்ளூர்க் காப்பியன் முதலானேரைக் கொண்டிருந்தது. 3,700 புலவர்களின் படைப்புகள் இச் சங்கத்தினல் ஆய்வு செய்யப்பட்டன. வெண்டேர்ச் செழியனில் தொடங்கி முடத்திருமாறன் வரை 59 பாண்டிய மன்னர்கள் இரண்டாம் சங்கத்தின் புரவலர்களாக விளங்கினர். இச் சங்கம் 3,700 ஆண்டுகள் நிலைபெற்றிருந்தது.

கடைச் சங்கம் எனப்படும் மூன்றும் சங்கத்தின் தலைவராக விளங்கியவர் நக்கீரர் ஆவார். சீத்தலைச் சாத்தனுர், கல்லாடனுர், கபிலர், பரணர், மாங்குடி மருதனுர் ஆகியோருடன் நாற்பத்திரண்டு புலவர்கள் உறுப்பினர்களாய் இருந்தனர். உத்தர மதுரை எனப்பட்ட வடமதுரையில் இருந்த இச் சங்கத்தில் 449 புலவர்களின் படைப்புகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. முடத்திருமாறன் முதல் உக்கிரபாண்டியன் வரை 49 பாண்டிய மன்னர்கள் சங்கத்தை ஆதரித்தனர். அவர்களில் மூன்று பாண்டிய மன்னர்கள் புலவர்களாயும் விளங்கினர். இச் சங்கம் 1,850 ஆண்டுகள் நிலைபெற்றிருந்தது.

சங்கம் பற்றிய மரபுகளில் குறிக்கப்படும் எண்ணிக்கைகள் இயற்கையின்பாற் பட்டவையாகத் தோன்றவில்லை. அவை புனைந்து உரைக்கப்பட்டனவாகவே தோன்றுகின்றன என்றும், சங்கம் இருந்தது என்பது கற்பனைக்கதையே என்றும், திரு. கே. என். சிவராஜ பிள்ளை குறிப்பிட்டுள்ளார். சொல்லக் கூடிய புலவர்களைக் கொண்ட அவை தற்காலத்தில் காணக் கூடிய தொன்றுகும். அத்தகைய அவை அக் காலத்தில் இருந்திருக்க முடியாது என்றும் கூறியுள்ளார். சங்கப் பாடல்கள் எதிலும் சங்கம் பற்றிய குறிப்பு எதுவுமில்லை என்பதையும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மேலும் அவர், 'மூன்று சங்கங்களின் மொத்த ஆண்டு 9,990 எனக் குறிப்பிடப்படுகிறது. அதனை 197 பாண்டிய மன்னர்கள் ஆதரித்ததாகக் கூறப்படுகிறது. அப்படியானல், ஒவ்வொரு பாண்டியனும் சராசரி ஐம்பது ஆண்டுகளுக்குமேல் ஆட்சி செய்திருக்க வேண்டும். இது நடைமுறையில் நடக்கக் கூடியது அன்று' என்றும் கூறியுள்ளார். கடைச் சங்கப் புலவர் எண்ணிக்கை குறித்துப் பலர் பலவிதமாகக் கூறுவதைச் சிறிது ஆராய்தல் வேண்டும். இறையனுர் அகப்பொருள் உரையில் நக்கீரரால் கூறப்பட்ட தொகை 449. கனகசபைப் பிள்ளை அவர்கள் புலவர்களின் எண்ணிக்கை 514 என்றும், 'சங்க காலம்' என்ற நூலின் ஆசிரியர் ஞா. சா. துரைசாமிப் பிள்ளை 486 என்றும், 'சங்க இலக்கியம்' என்ற நூலைத் தொகுத்த மா. பாலசுப்பிரமணிய முதலியார் 473 என்றும் குறிக்கின்றனர். 'சங்க நூற் புலவர் அகராதி' என்னும் நூலின்படி 729 என்றும் இருக்கக் காண்கிறோம்.

இதுவரையில் சங்கம் பற்றிய புறச் சான்றுகளை, அதாவது சங்கப் பாடல்கள் தவிர்த்த ஏனைய நூற் சான்றுகளையே கண்டோம். இறையனுர் அகப்பொருள் உரைச் செய்திகள்

முழுவதுமே கற்பனை என்று ஒதுக்கிவிடுவதற்கில்லை. ஏனெனில், கடற்கோள்களால் தென்னக நிலப்பரப்புகள் அழிவுபட்டிருக்கும் என்பதைப் பிறநாட்டு நிலநூல் வல்லாரும், இலங்கைப் புத்தசமய வரலாற்று அறிஞர்களும் ஒப்புக்கொண்டு உள்ளனர். எனவே, அடிப்படையாகச் சில உண்மைகள் இருந்திருக்க வேண்டும்.

தமிழக மன்னர்கள் அனைவருக்குமே தமிழை வளர்க்கும் சீரிய நோக்கமிருந்தது. எனவே, பாண்டிய மன்னர்களும் தமிழை வளர்ப்பதிலே தனி அக்கறை கொண்டனர். தமது அவையிலேயே பழைய நூல்களைக் காக்கவும், புதிய நூல்களைப் படைக்கவுமான முறைகளைக் கையாண்டனர் எனலாம். இவ்வாறு அவர்கள் மேற்கொண்டதற்குக் கடற்கோளால் அவர்கள்தம் உடைமைகளுடன் தமிழ் நூல்களையும் இழக்க நேர்ந்த படிப் பினைகளே காரணமாக இருந்திருக்கக் கூடுமென ஊகிக்கலாம்.

சங்கம் பற்றிய சில அடிப்படை உண்மைகள் சமயப்பாடல் களிலும் புராணக் கற்பனையிலும் கலந்துவிட்டன என்றே தோன்று கிறது. சங்க நூல்களில் காணப்படும் கடுங்கோன், உக்கிரப் பெருவழுதி முதலான பெயர்கள் பிற்காலப் பட்டயங்களிலும் காணப்படுவதால், அப் பாண்டிய மன்னர்கள் உண்மையில் வாழ்ந்திருந்து அரசாண்ட மன்னர்களே என்பது பெறப்படு கின்றது.

சின்னமனூர்ச் செப்பேடுகளில் பாண்டிய மன்னர்கள் மதுரை யில் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தமையும், மகாபாரதத்தைத் தமிழில் மொழிபெயர்த்து எழுதினமையும் குறிப்பிடப்பட்டிருப்பது, இறையனார் அகப்பொருளில் சங்கம் இருந்தது பற்றிக் கூறப்படும் செய்திகள் உண்மையானவை என்பதை எடுத்துக் காட்டும்.

இவையன்றிச் சில அகச் சான்றுகள் சங்கம் இருந்தமையைச் சுட்டிக் காட்டக் கூடியவையாக இருக்கின்றன. எல்லாத் தமிழ் மன்னர்களுமே தமிழைப் போற்றி, தமிழ்ப்புலவரைப் போற்றிப் பரிசளித்து வந்துள்ளனர். அந்நாளில் மன்றம், அவை, அம்பலம் முதலான சொற்கள் அரசவையையும், மக்கள் கூடுமிடங்களையும் குறித்தன.

சிறுபாணாற்றுப்படையில்,

'தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரை' (66-7)

என்று காணப்படும் வரிகளுக்கு உரையாசிரியர் நச்சினார்க் கினியர், தன்னிடத்துத் தோன்றிய மன மகிழ்ச்சி பொறுத்தற்காய

முறைமையினையுடைய தமிழ் வீற்றிருந்த தெருவினையுடைய மதுரை என்று பொருள் கூறியுள்ளார். தமிழ் நிலைபெற்று விளங்கும் மிக்க சிறப்பினை உடைய தெருவைக் கொண்ட மதுரை என்பதால், கல்விச் சிறப்பு விளக்கப்படுகின்றது. புலவர்களும், இத்தகைய மன்றங்களில் கூடித் தமிழில் நூல்களை இயற்றினர் என்பதையே சிறுபாணாற்றுப்படைக் குறிப்பு நிலைநாட்டுகிறது.

பட்டினப்பாலையில்,

'பல்கேள்வித் துறைபோகிய
தொல்லாணை நல்லாசிரியர்
உறழ்குறித்து எடுத்த உருகெழு கொடியும்'

என்ற அடிகளைக் காண்கிறோம். இப்பாடலில், கடைத்தெருவில் பல்வேறு பொருள்களின் விற்பனை குறித்து எடுக்கப்பட்ட பல கொடிகளின் அழகை வருணித்துவரும் உருத்திரங்கண்ணனார், 'கற்றுத் துறைபோகிய முற்றுமுணர்ந்த அறிஞர்கள் தம்முள் மாறுபட்ட கருத்துகளை எடுத்துக் கூறிச் சொற்போர் நிகழ்த்துவதை அறிவிக்க உயர்த்தப்பட்ட கொடிகள்' எனக் குறித்துள்ளமை, சொற்போர் மன்றங்கள் அக் காலத்தே இருந்தன என்பதனை மெய்ப்பிக்கின்றன.

பரிபாடலிலும் இத்தகைய சொற்போர் மன்றங்களைக் குறிக்கும் சான்று ஒன்று உள்ளது.

'புலத்தினும், போரிலும் போர்தோலாக் கூடல்' எனவரும் பரிபாடல் அடிக்குப் பரிமேலழகர், 'அறிவிலும் வீரத்திலும் பிறரைப் போர் வெல்லும் கூடல்' என்று பொருள் கூறுகின்றார். போரில் பிறரை வெல்வது போல, அறிவிலும் வெல்லுமென்ற இப் புகழ் உரையானது, அன்று பல சொற்போர் மன்றங்கள் மதுரையில் இருந்தமையை நிலைநாட்டுகிறது.

சங்கப் பாடலான கலித்தொகையின் 27ஆம் பாடலில் மதுரையின் அமைப்பு விளக்கப்படுகிறது. அதன் முதல் தாழிசையில் கூடல் மாநகர் பற்றிக் குறிப்பிடுகையில், 'புலம்பூத்துப் புகழ் பாடும் கூடல்' என்று அறிவால் பொலிவு பெற்றுப் புகழ் நிறைந்த கூடலின் சிறப்பு விளக்கப்படுகிறது. மூன்றாம் தாழிசையில், 'நிலவுலகிலே உள்ளார் நாவிலே வழங்கும் நீண்ட மாடங்களையுடைய கூடலிலே வாழும் மக்கள் அறிவினையுடைய சான்றோரின் நாவிலே பிறந்த நூல்களின் புதுமையை நுகர்ந்து கொண்டாடும்

இளவேனில் காலத்திலே அன்றோ அவர் திரும்பி வருவதாக உரைத்தார்' என்று தோழி குறிப்பிடுவதாக அமைந்த பாடல் வரிகள் இவை:

'நிலனாவில் திரிதரூஉம் நீண்மாடக் கூடலார்
புலனாவில் பிறந்தசொல் புதிதுண்ணும் பொழுதன்றோ'

இளவேனில் காலம் என்பது சித்திரை, வைகாசி மாதங்களாகும். இளவேனிற் காலத்தில் புலவர்கள் கூடலில் கூடித் தங்கள் அறிவால் பிறப்பித்த புதிய நூல்களை மக்களுக்குப் படித்துக் காட்டினர். புதிய புதிய கருத்துகளை ஆண்டுதோறும் இளவேனில் காலத்தில் மக்களுக்குப் புலவர்கள் படைத்து மகிழ் வித்ததைக் கலித்தொகையின் 68ஆம் பாடலும் தெளிவாகக் குறிப்பிடுகிறது.

'செதுமொழி சீத்த செவிசெறு வாக
முதுமொழி நீராப் புலன்நா உழவர்
புதுமொழி கூட்டுண்ணும் புரிசைசூழ் புனலூர'

என்ற வரிகளிலிருந்து சான்றோர்களின் புதிய படைப்புகளை மக்கள் அனைவரும் கூடியிருந்து கேட்டு மகிழும் பழக்கம் கூடலின் கண் மிக்கிருந்தது என்பதும், சான்றோர்கள் புலமைப் புதுமையை நுகர்வதே அந் நகருக்குத் தனிச் சிறப்பாகக் கருதப்பட்டது என்பதும் விளங்குகின்றன. இங்கிலாந்து நாட்டில் ஷேக்ஸ்பியருடைய நாடகப் படைப்புகளைக் கேட்கவும் பார்க்கவும் எலிசபெத் கால மக்கள் கூடியதற்கு ஒப்பானதாக இது கருதப்படுகிறது.

பனம்பாரனார் எழுதிய தொல்காப்பியச் சிறப்புப் பாயிரத்தில் தொல்காப்பியர், செந்தமிழ் வழங்கிய நாட்டிலிருந்த பழைய நூல்களையெல்லாம் ஆராய்ந்து, முறைப்படி சிந்தித்து, அறிவுக் கருவூலங்களான அவற்றைத் தொகுத்துக் குற்றமற்ற நூலாகத் தந்தார். அவர், அதனை நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையில் அறங்கூறும் நாவினையுடைய நான்கு மறைகளைக் கற்றுத் தேர்ந்த அதங்கோட்டாசான் என்னும் சான்றோர்க்குக் குற்றமற எடுத்துக் கூறி, 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியர்' எனப் புகழ் பெற்றார் எனக் கூறுகிறார்.

கடற்கோளால் பல நூல்களை இழந்தமையை உணர்ந்த நிலந்தரு திருவிற் பாண்டியன் புதிய நூல்களைப் படைக்கும்படி புலவர்களைத் தூண்டி, அந் நூல்களைத் தன் பேரவையில் படிக்க

வைத்தான். பேரிழப்பிற்குப் பின் பெற்ற புது நூல்களாதலின் அவற்றை அனைவரும் அறிந்து மகிழும்படி தன் அவையில் அரங்கேற்றம் போன்று வெளிப்படுத்தினன். மக்கள் பலரும் புது நூல்களின் நயங்களையும் சிறப்புகளையும் கேட்டு மகிழ்ந்தனர். இங்ஙனம் புலவர்களையெல்லாம் தன் பேரவைக்கு வரவழைத்துக் கூட்டி, அவர்களுடன் கலந்து பழகி இலக்கியச் சுவையை நுகர்ந்து மகிழும் இனிய பழக்கமுடையவனாய் இப் பேரரசன் திகழ்ந்தான் என்பதனை,

'தொல்லாணை நல்லாசிரியர்
புணர்கூட் டுண்ட புகழ்சால் சிறப்பின்
நிலந்தரு திருவின் நெடியோன் போல'

என்ற மதுரைக் காஞ்சியின் பாடல் வரிகள் நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

மதுரைக் காஞ்சி, தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைச் சிறப்பித்துப் பாடுகிறது. அவன் புலவர்களுக்கும் பிறருக்கும் பரிசுகள் பல வழங்கும் முறைமை யையும். புலவர்களையும் நல்லமைச்சர்களையும் தன் உறவினரைப் போல் கருதும் அருமையையும், குறுநில மன்னர்கள், புலவர்கள் முதலானோர் அடங்கிய பேரவையினர் புகழ அம் மன்னன் வாழ்ந்த பெருமையையும் இந் நெடும் பாட்டில் சிறப்பித்துப் பாடு கிறார் புலவர் மாங்குடி மருதனார்.

மாங்குடி மருதனார் தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியனை 'நிலந்தரு திருவிற் பாண்டியனைப் போலச் சிறப்புடன் வாழ்க' என்று வாழ்த்துகிறார். இதற்கேற்பப் புறநானூற்றில் இதே மாங்குடி மருதனாரைக் குறிப்பிட்டு இப் பாண்டியனே,

ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
'புலவர் பாடாது வரைகஎன் நிலவரை'

என்று பாடும் வரிகள் மாங்குடி மருதனாரைத் தலைவராகக் கொண்ட புலவர்கள் சூழ அவன் பேரவை விளங்கியது என்பதைத் தெற்றெனப் புலப்படுத்துகிறது.

மேலே குறிப்பிடப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் நாம் கீழ்க்கண்ட முடிவுகளைக் கொள்ளலாம். அரசர்களது அவை களே அன்று தமிழ் வளர்க்கும் பேரவைகளாக இருந்தன. நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையும், தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் அவையும் இதற்கு எடுத்துக்காட்டுகள். சங்க கால அரசர்களின் பேரவை ஒவ்வொன்றிலும் பல புலவர்கள் கூடியிருப்பர். அவர்களிடையே தலைமைப் புலவர் ஒருவர் இருப்பார். இங்ஙனம், ஒரு பெரும் சான்றோரைத் தலைவ ராகக் கொண்ட பல புலவர்கள் கூடியிருக்க, மன்னன் திரு வோலக்கத்தில் வீற்றிருத்தலைச் சிறப்பாகக் கருதினன். பாரியிடம் கபிலரும், அஞ்சியிடம் ஔவையாரும், கோப்பெருஞ் சோழ னிடம் பொத்தியாரும் தலைமைப் புலவர்களாக விளங்கினர் என்பதற்குப் புறநானூறு சான்று பகர்கிறது. மாங்குடி மருதனைத் தலைவனாகக் கொண்டு புலவர்கள் 'என் நிலப் பரப்பைப் பாடாதொழிக' என்பதால் 'தலைமை' தெரிகிறது. 'புதிதுண்ணும்' பொழுதன்றோ இளவேனிற் காலத்தைச் சுட்டுவது, சித்திரை, வைகாசி மாதங்களில் சிறப்பாகப் புலவர்கள் கூடுவது பழக்கமாக இருந்தது என்பதை எடுத்துக்காட்டுகிறது.

**கடற்கோளும் சங்கமும்:** தமிழகத்தைக் கடல்கொண்ட மரபுவழிச் செய்தியோடு முச்சங்கங்களின் வரலாறும் இணைந்து உள்ளமை குறிப்பிடத்தக்கது. களவியல் உரைகாரர் தமிழ்ச் சங்கங்களைப் பற்றிய மரபுவழிச் செய்திகளை முதன் முதலாகத் தொகுத்து உரைத்திருப்பதையும், சங்கம் இருந்து தமிழ் ஆராய்ந்த கூடல் என்னும் மதுரையும் கபாடபுரமும் கடல் கொள்ளப்பட்டன என்பதையும் குறிப்பிட்டுள்ளார். சிலப்பதி காரத்திற்கு விளக்க உரை எழுதிய அடியார்க்கு நல்லார் முச்சங்க வரலாற்றோடு, தமிழகத்தின் தென்பகுதி கடல் வாய்ப்பட்டதைக் குறிப்பிட்டுள்ளார். கடற்கோள் கற்பனையே, எனவே சங்கமும் கற்பனையே என்று கூறப்படும் கருத்துத் தவறெனப் படுகிறது.

தமிழகத்தின் தென்பகுதி கடல்வாய்ப்பட்டது என்பதற்குப் பழந்தமிழ் இலக்கியத்தில் பல அகச்சான்றுகள் உள்ளன. இலங்கையின் வரலாற்றைக் கூறும் 'இராசாவளி' என்னும் நூலில் மூன்று பெரும் கடற்கோளினைப் பற்றிய மரபுவழிச் செய்திகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

'மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வெளவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்நா டிடம்படப்
புலியொடு வில்நீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை
வலியினன் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்'
(கலித்தொகை 104)

என்று பாண்டியனுடைய வீரத்தின் சிறப்பினைக் கூறும் புலவர் கடலலைகள் மிகப் பலவாகப் பொங்கி எழுந்து பாண்டித் திருநாட்டை விழுங்கிய செய்தியினைக் கூறுகிறார்.

சிலப்பதிகாரத்தில் வரும்,

'பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள'

என்னும் வரிகளையும் காணலாம். புறநானூற்றுப் பாடலொன்றில் 'நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே' என்று பாண்டியன் முதுகுடுமிப் பெருவழுதி வாழ்த்தப்படுவதால் அப் பஃறுளியாறு, நெட்டிமையார் என்ற அப்பாடற் புலவரின் காலத்திலிருந்தது என்பதும், அதன் பின்னரே அந் நிலப்பகுதி கடலால் சூழப்பட்டது என்பதும் புலப்படுகிறது.

இவையெல்லாம் தமிழகத்தின் தென்பகுதியில் கடைச்சங்க காலத்திற்குமுன்புகடற்கோள்கள் உண்டானதை நன்கு வலியுறுத்துகின்றன. இலங்கையின் வரலாற்றை எழுதப் புகுந்த பேராசிரியர் 'டென்னண்டு' என்பவர், 'இந்தியாவிலிருந்து இலங்கை கடல் கொந்தளிப்பால் கிறித்து பிறப்பதற்கு 2387 ஆண்டிற்கு முன் பிரிவுற்றதாகப் பௌத்தர்களால் கூறப்படுகின்றது. மற்றுமொரு முறை கி. மு. 504 ஆம் ஆண்டில் பாண்டுவாசா (இலங்கை அரசன்) காலத்தில் அவ்வாறே கடற்கோள் ஒன்று உண்டாயிற்று. இதற்கு 200 ஆண்டுகளுக்குப்பின் கி.மு. 306-ல் ஆட்சி புரிந்த தேவனாம்பிரிய திஸ்ஸாவின் காலத்தில் கொழும்புப் பக்கத்தில் இருந்த நிலமானது தன் மட்டத்தில் தாழ்ந்து அமிழ்ந்ததாகக் கூறப்பட்டுள்ளது என்று கூறுகிறார். கி.மு. 2000-க்கு முன்பு ஒரு கடற்கோள், கி.மு. ஆறும் நூற்றாண்டில் ஒரு கடற்கோள், கி.மு. நான்காம் நூற்றாண்டில் ஒரு கடற்கோள் உண்டாகியிருக்க வேண்டும் என்பது அவர் கருத்து. அப்படியானால் தமிழகத்தில் மட்டும் கடற்கோள் நிகழவில்லை என்பது எங்ஙனம் பொருந்தும்? எனவே, கடற்கோள் கற்பனையன்று என்பது மெய்ப்பிக்கப்படுகிறது. அதுபோலவே கடற்கோளால் சங்கம் அழிந்தது

என்ற கூற்றும் உண்மையே எனலாம். எல்லாச் சங்க இலக்கியங்களும் கிடைக்காமைக்கும், சங்கமானது ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு மாற்றப்பட்டமைக்கும் மேற்கண்ட ஆதாரங்கள் விளக்கம் தருகின்றன எனக் கூறலாம்.

இவையனைத்தையும் ஒருசேர நோக்குகின்றபோது, சங்கம் என்ற சொல் சங்க இலக்கியங்களில் காணப்படவில்லையாயினும் புலவர்கள், அரசனின் அவையில் கூடிப் புதிய படைப்புகளை எடுத்துக் கூறிப் பெருமை பெறும் பழக்கம் இருந்து வந்ததை எவரும் மறுக்க முடியாது. அத்தகைய புலவர் குழுவிற்குச் சங்கம் என்ற பெயர், வடமொழிச் சொற்கள் அதிகமாக உபயோகிக்கப்பட்ட ஏழு, எட்டாம் நூற்றாண்டுகளில் இடப்பட்டது என்று கூறினால் அது மிகையாகாது.

# 2. சங்க காலம்

சங்க இலக்கிய நூல்களின் கால ஆராய்ச்சி, கடந்த ஒரு நூற்றாண்டுக்கு மேலாக நடைபெற்றுவருகிறது. எனினும், எப்போது சங்கம் இருந்தது என்பதைக் குறித்து நன்கு வரையறுக்கப்பட்ட மதிப்பீட்டை அளிப்பது கடினமான பணி எனலாம். எனவே, சங்க இலக்கியங்கள் படைக்கப்பட்ட காலம் எனச் சற்று விரிவான காலப் பகுதியினைக் கருத்தில் கொள்ளலாம்.

கிறித்துவ சகாப்தத்திற்குச் சில நூற்றாண்டுகள் முன்னாலோ, பின்னாலோ உள்ள காலமே சங்க காலமாயிருக்க வேண்டும் எனப் பெரும்பாலான வரலாற்று அறிஞர்கள் கருதுகின்றனர். இப்போது கிடைத்துள்ள சங்கப்பாடல்கள் கி. பி. முதல், இரண்டு அல்லது மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்தவை என்றும், சில படைப்புகள் கிறித்து பிறப்பதற்கு முற்பட்டவை என்றும் சொல்லி விடுதல் எளிது. ஆனால், சங்க காலத்தைச் சார்ந்தவை என்பவற்றை விளக்கமாகக் காணுதல் வேண்டும்.

'சங்க இலக்கியம்' என்று எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றை எல்லாம் பொதுவாகக் குறிப்பிட்டாலும், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய இரண்டும் சங்க கால இலக்கியங்கள் என்றும், ஏனையவை சங்கம் மருவிய கால இலக்கியங்கள் என்றும் கூறப்படுகிறது. இறையனார் அகப்பொருள் விளக்க உரையிலிருந்து இம் மரபு தொடர்கிறது. சங்க காலத்திற்குப் பிற்பட்ட காலத்தைச் சேர்ந்த புலவர்கள், விளக்க உரையாளர்கள், திறனாய்வாளர்கள் முதலானவர்கள் இம் மரபினை ஏற்றுக்கொள்கின்றனர்.

சிலப்பதிகாரம்,மணிமேகலை ஆகிய இரண்டும் சங்க காலத்திய நூல்கள் அல்ல என்றே பொதுவாகக் கருதப்படுகின்றன. பேராசிரியர் கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி அவர்கள், 'நெடுங்காப்பியமான சிலப்பதிகாரம் சங்க காலத்திற்குப் பிற்பட்ட காலத்தைச் சேர்ந்தது எனப் பொதுவாகக் கருதலாம்' என்று குறிப்பிடுகிறார் இதைப்போலவே மணிமேகலை என்னும் மற்றொரு காப்பியமும்

பிற்பட்ட காலத்தை அதாவது கி. பி. ஆறும் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட காலத்தைச் சேர்ந்ததாகக் கருதப்படுகிறது. மணிமேகலையின் இருபத்தொன்பதாம் காதையில், தின்னாகரின் நியாயப் பிரவேசம் எனப்படும் தத்துவம் காணப்படுகின்றது. ஆனால் கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார், 'அந்தக் காதையில் காணப்படுகின்ற மற்றத் தத்துவ முறைகளை ஆராய்கின்றபோது அவை பழமையானவையாயும், கி. பி. ஆறும் நூற்றாண்டுக்கு முற்பட்டவையாக இருக்க வேண்டும் என்று கருதலாம்' என்ற கருத்தைத் தெரிவித்துள்ளார்.

வரலாற்று அறிஞர்கள் பலர் சிலப்பதிகாரம், மணிமேகலையின் அடிப்படையில் சங்க காலத்தை நிர்ணயிக்கச் சில முடிவுகளை மேற்கொள்வதாலேயே சங்கம் மருவிய இவ் விலக்கியங்களைக் குறித்த ஆய்வினை இங்கு மேற்கொள்ள வேண்டியதாயிற்று.

இனிச் சங்க காலம் எது? என்று காட்டும் பல்வேறு அறிஞர்களின் கருத்துகளைக் காண்போம்.

டாக்டர் வின்சென்ட் ஸ்மித் 'சிறந்த தமிழ்ப் பாடல்களின் கால வரையறையினைப் பழைமையானதாக அறிஞர்கள் கருதுவது சரியே. தமிழ் இலக்கியத்தின் பொற்காலம் கிறித்துவ ஊழியின் முதல் மூன்று நூற்றாண்டுகள் என்று கொள்ளுதலே பொருத்தமாகும்' என்று உரைக்கின்றார்.

'தமிழ் இலக்கியத்தின் தலைசிறந்த நற்பண்பு வாய்ந்த பகுதி முழுவதும் கி. பி ஒன்பதாம் நூற்றாண்டுக்கு முன் இயற்றப்பட்ட பகுதியே எனலாம். அவற்றுள் ஒரு பெரும்பகுதி 2000 ஆண்டுகட்கு முன் இயற்றப்பட்டது என்பதில் சிறிதும் ஐயம் ஏற்பட வழியில்லை' என வி. கனகசபை பிள்ளை, '1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம்' என்னும் தம்முடைய நூலில் குறிப்பிடுகிறார்.

பேராசிரியர் கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி அவர்கள், 'சங்கம், கிறித்துவ ஊழியின் முதல் நூற்றாண்டுகளைச் சார்ந்தது என்றே எண்ண வேண்டி உள்ளது' என்றும், 'இவ்விலக்கியங்கள் கிறித்துவ ஊழியின் முதல் நூற்றாண்டுகளைச் சேர்ந்தவை' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பேராசிரியர் வி. ஆர். இராமச்சந்திர தீட்சிதர், கி. மு. ஐந்தாம் நூற்றாண்டே சங்கம் தோன்றிய காலம் என்றும், கி. பி. ஐந்தாம் நூற்றாண்டே சங்கம் மறைந்த காலம் என்றும் குறித்தார். மூன்று

சங்கங்களும் சுமார் ஆயிரமாண்டுக் காலத்தை உட்கொண்டவை என்பதே பொருத்தமானதாகும் என்று உரைப்பதோடு, கி.மு. 500 ஐயும், கி. பி. 500-யும் சங்க காலத்தின் எல்லைக் கோடுகளாகக் கொள்வதும் தவறாகாது என்றும் கே. ஆர். சீனிவாச ஐயங்கார் 'The Age of Imperial Unity' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

சிலப்பதிகாரத்தில் கட்டுரை காதையில் காணப்படும்,

'ஆடித் திங்கள் பேரிருள் பக்கத்து
அழல்சேர் குட்டத்து அட்டமி ஞான்று
வெள்ளி வாரத்து ஒள்ளெரி உண்ண
உரைசால் மதுரையோடு அரைசு கேடுறும்'

என்ற பாடல் வரிகளின் அடிப்படையில் எல். டி. சுவாமிக்கண்ணுப் பிள்ளை கி.பி. எட்டாம் நூற்றுண்டினைக் கடைச் சங்க கால எல்லையாகக் கொண்டார். இப் பகுதியில் கண்டுள்ள பேரிருட் பக்கம்-கிருஷ்ண பட்சம் (பௌர்ணமி முதல் அமாவாசை வரையுள்ள காலம்), அழல் சேர் குட்டம் - கார்த்திகை பரணி என்ற உரைக் குறிப்புகளையும், தமது வான நூல் அறிவையும் பயன்படுத்தி, கண்ணகி மதுரையை எரியூட்டியது கி.பி. 756ஆம் ஆண்டு ஜுலைத் திங்கள் 23ஆம் நாள் என்றும், அதனுல் கடைச் சங்க காலமும், அதுவேதான் எனவும் முடிவு கூறுகின்றுர்.

இவ்வாறு முடிவினை அறிவிக்கும் சுவாமிக்கண்ணுப் பிள்ளையவர்கள், சிலம்பின் உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் கூறும் வானியற் குறிப்புகள் தவறுனவை என்றும் கூறுகிறுர். அவ்வாருயின் அந்தத் தவறுன குறிப்புகளைக் கொண்டு நேரிதான முடிவைக் கூறுவது இயலாது.

இச் சோதிடக் குறிப்பும், இது பற்றிய ஆய்வும் பெரும் குழப்பமாயுள்ளன. இதில் கருத்து வேறுபாடுகளும் மிகுதி. திரு. கே. சி. சங்கரய்யர் என்பார் இச் சோதிடக் குறிப்புகளையே கொண்டு ஆய்ந்து, மேற்கண்ட முடிவு பொருந்தாதென மறுத்துள்ளார். கே. ஜி. சேஷய்யர், திருவாரூர் எஸ். சோமசுந்தர தேசிகர், பி. டி. சீனிவாச அய்யங்கார் முதலானவர்களும் எல். டி. சுவாமிக்கண்ணுப்பிள்ளையின் கருத்தை மறுத்துள்ளனர்.

மு. இராகவ ஐயங்கார் 'சேரன் செங்குட்டுவன்' என்ற தம் நூலில் சங்க காலம் கி.பி. ஐந்தாம் நூற்றுண்டு என்றும், 'ஆராய்ச்சித் தொகுதி' என்ற தம் நூலில் கி.பி. நான்காம் நூற்றுண்டு என்றும் கூறியுள்ளார்.

அப்பர் பெருமான் தம் தேவாரத்தில்,

'நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி
நற்கனகக் கிழிதருமிக் கருளி னோன்காண்'

என்று கடந்தகால நிகழ்ச்சியாகக் குறிப்பிடுகின்றார். அதனால், சங்கம் இவர் காலத்திற்கு முன்பே இருந்திருக்க வேண்டும் என்று புலனாகின்றது.

கிரேக்க, உரோமர்களாகிய யவனர்களைப் பற்றித் தமிழ் இலக்கியங்களில் காணப்படும் செய்திகளும், அந்நாட்டுப் பயணிகளின் குறிப்புகளும் தமிழகத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ள தொன்மை மிக்க யவனக் காசுகளும் ஒன்றுக்கொன்று தொடர்புபடச் சான்றாக நின்று, சங்க இலக்கிய காலத்தின் தொன்மையை நிலைநாட்டுகின்றன. யவனர்கள் சேரநாட்டுத் துறைமுகத்தில் வந்து, பொன்னைக் கொடுத்து, மிளகு பொதிகளை ஏற்றிச் சென்ற செய்தி பெரிபுளூஸ் என்னும் நூல் ஆசிரியரால் கூறப்படுகிறது. இந் நூல் கி.பி. அறுபதில் தோன்றியதாகும். கி. பி. 77ஆம் ஆண்டைச் சேர்ந்த பிளினியின் இயற்கை வரலாறு, சுமார் கி. பி. 160 ஐச் சார்ந்த தாலமியின் பூகோள விவரணம் ஆகியவற்றில், அவ் வெளி நாட்டு அறிஞர்கள் தமிழகத்தைப் பற்றியும், அதன் வெளிநாட்டு வாணிகத் தொடர்புகள் பற்றியும் குறிப்பிட்டுள்ளனர்.

யவனநாட்டு நாணயங்கள், பல தமிழ்நாட்டில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. 'கி.பி. முதல், இரண்டு நூற்றாண்டுகளில் ரோம் வாணிகம் மிகப் பெருகி இருந்தது. தென்னிந்தியாவில் உள்ள நகரங்கள் சிலவற்றில் ரோம் நாட்டு வணிகர்கள் குடியேறினர். ரோம் பேரரசர் நீரோ, கி.பி. 68ஆம் ஆண்டில் இறந்த பின் இவ் வாணிகம் குன்றியது' என டாக்டர் கே. கே. பிள்ளை அவர்கள் குறிப்பிடுகிறார். இக் கருத்துகளுக்கு ஏற்ப, பழந்தமிழகத்தில் யவனர்கள் வாணிகத்தின் பொருட்டு வந்து குழுமி, மக்களுடன் கலந்து வாழ்ந்தமையைச் சங்க இலக்கியங்கள் தெரிவிக்கின்றன. கீழ்க்கண்ட பாடல் வரிகளைச் சான்றாகக் காட்டலாம்:

'யவனர் ஓதிம விளக்கு'

'மெய்ப்பை புக்க வெருவரும் தோற்றத்து
வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்'

'யவனர் இயற்றிய வினைமாண் பாவை
கையேந்து ஐயகல் நிறையநெய் சொரிந்து'

'யவனர் நன்கலந் தந்த தண்கமழ் தேறல்'

எனவே, சங்க இலக்கிய காலம் இவ் வெளிநாட்டு வாணிகம் சிறப்புற நடைபெற்ற காலமாகிய கி. பி. இரண்டு, மூன்றும் நூற்றாண்டுக் காலமென்பது தெளிவடைகிறது.

தமிழ் இலக்கியங்களில் சமய கால இலக்கியம் கி. பி. ஆறும் நூற்றாண்டுக்குப் பின்னர் என்பது ஆழ்வார்கள், நாயன்மார்களின் கால ஆராய்ச்சிகளால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. திருநாவுக் கரசர் கி. பி. ஏழாம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் வாழ்ந்தவர். இச் சமய இலக்கியங்களில் சமயப் போராட்டங்களும், பூசல் களும், வசைகளும் காணுகிற நாம், இத்தகைய பூசல்களின்றி எல்லாச் சமயங்களும் சமமாக எண்ணப்பட்ட பாடல்கள் தோன்றிய காலம், இதற்குச் சில நூற்றாண்டுகட்கு முன்பாக இருந் திருக்குமென நம்பலாம்.

இப்படிச் சமயப் பொறையோடு, அடிப்படை உண்மை களை மட்டும் கூறிப் போவனவும், பெரும்பாலும் வாழ்வோடு ஒட்டிய அனுபவங்களையே படைப்பனவுமாகிய சங்க இலக்கியங்கள் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இக் காப்பியங்கள் தோன்றுவதற்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன்னர்த் தோன்றி இருக்கக்கூடும் என்பது, மனநூல் முறைக்கும் மொழி நூல் முறைக்கும் ஒத்த முடிபேயாகும்.

காஞ்சியில், பல்லவர் ஆட்சி தொடங்கிய காலம் கி. பி. நான்காம் நூற்றாண்டாகும். பல்லவ ஆட்சி கி. பி. மூன்றும் நூற்றாண்டுக்குப் பிறகே தொடங்கியது என்றும் கொள்ளலாம். தென்னாட்டு வரலாற்றில் தமிழக அரசியல் சீர்குலைவிற்குக் காரண மாக இருந்த களப்பிரர்கள், கி. பி. நான்கு, ஐந்தாம் நூற்றாண்டு களில் தமிழகத்தில் இருந்தனரெனத் தெரிய வருகின்றது.

இக் களப்பிரர்களைப் பற்றியோ, ஏறத்தாழ ஆறு நூற்றாண்டுகள், சிற்பக்கலை முதல் பக்தி இயக்கம் வரை வளர உதவிய பல்லவர்களைப் பற்றியோ, சங்க நூல்களில் ஒரு வரியோ ஒரு சொல்லோ காணப்படவில்லை. யவனர், நந்தர், மோரியர் முதலானோரைப் பற்றியெல்லாம் குறிப்பிடும் அவ்விலக்கியங்கள் களப்பிரரைப் பற்றியும் பல்லவர் அரச பரம்பரையினரைப் பற்றியும் குறிப்பிடாமை, இவ்விலக்கியங்கள் அனைத்தும் அவரது காலத்திற்கு முற்பட்டன என்பதை மிகவும் தெளிவுபடுத்திக் காட்டுகிறது எனலாம். எனவே, கி. பி. நான்காம் நூற்றாண்டுக்கு முற்பட்டன சங்க இலக்கியங்கள் என்று கூறலாம்.

சிலர் கருதுவது போலச் சங்கப் பாடல்கள் கி.பி. ஆறும் நூற்றாண்டைச் சேர்ந்தவையாயின், போர்களைப் பற்றியே திணை வகுத்தும், பலநூறு புறப்பாடல்களைப் புனைந்தும் பாடிய புலவர்கள், பல்லவர்களோ களப்பிரர்களோ நிகழ்த்தியிருக்கக் கூடிய போர்களைப் பாடாமல் இருக்கமாட்டார்கள்.

சமய கால இலக்கிய நடை, காப்பிய கால இலக்கிய நடை, சங்க கால இலக்கிய நடை மூன்றும் ஒன்றுக்கொன்று வேறுபடுகின்றன. சமய கால நடை எளிமையினைக் காப்பிய காலத்தில் காண முடியவில்லை. காப்பிய காலத்து நடையைவிடச் சங்க இலக்கிய நடை கடினமானதாக உள்ளது. வாழ்வியல், கற்பனை என்று பாகுபடுத்திப் பார்க்கும் போதும், சங்க காலப் பாடல்களில் உண்மை வாழ்வியலே ஆட்சி செய்கின்றது. காப்பிய கால இலக்கியத்தில் வாழ்வியலைவிடக் கற்பனையே மிகுதியாக உள்ளது.

வட சொல்லாட்சி சங்க இலக்கிய நூல்களில் மிக மிகக் குறைவு. அதிலும் பல சங்க இலக்கிய நூல்களில் 2 விழுக்காடாக இருந்த பிறமொழிக் கலப்பு, காப்பிய காலத்தில் 10 விழுக்காடாகவும், சமய காலத்தில் 15 அல்லது 20 விழுக்காடு வரை மிகுந்தும், விரவியும் வருவதை நோக்கச் சங்க காலத்தின் தொன்மை மீண்டும் தெளிவடைகிறது. சமய காலச் சொற்கள் விரிவுடையன; உருபுகள் விரிந்து நிற்பன; காப்பிய காலத்தில் உருபுகள் விரிந்து நிற்கும் தொடக்க நிலையினைக் காணும் நாம், சங்க கால நூல்களிலோ, உருபு விரியாத ஓரசை ஈரசைச் சொற்களே ஒவ்வொரு நூலிலும் 90 விழுக்காட்டுக்கு மேல் எடுத்தாளப்பட்டுள்ளதைக் காண்கிறோம். எனவே, இலக்கியங்களின் கருத்து, நடை, கற்பனை, சொல்லாட்சி முதலானவையும், சங்க நூல்களின் தொன்மையை நிறுவத் துணைபுரிகின்றன.

மௌரியர்களின் படையெடுப்பினைப் பற்றிச் சங்க இலக்கியங்களுள், நான்கு இடங்களில் குறிப்புகள் காணப்படுகின்றன. நான்கில் இரண்டு அகப் பாடல்கள், இரண்டு புறப்பாடல்கள் ஆகும். அப்பாடல்கள் அனைத்திலும் தேர்ப்படையால் சிறப்புற்ற மௌரியர்களைப் பற்றியே குறிப்பிடப்படுவதால் இவையனைத்தும் ஓர் அரச இனத்தாரையே குறிப்பிடுகின்றன எனக் கொள்ளலாம்.

தெற்கே படையெடுத்து வரும்போது கோசர்களை, மௌரியர் சிற்றரசர்களாக ஆக்கிக் கொண்டனர். கோசர்களுக்குப் பணியாத மோகூர் மன்னனைப் பணிய வைக்கவே மோரியர் மலைத்தொடர்

வழியாக வழியமைத்துக் கொண்டு தெற்கே வந்து மோகூர் மன்னனுடன் போரிட்டனர். வேங்கட மலையே தமிழகத்தின் வடவெல்லையாக இருந்ததென்பது நாம் அறிந்ததே. அதைத் தாண்டியே மோரியர் வந்தனர் எனக் கூறலாம். வேங்கட மலையில் வாழ்ந்த 'புல்லி' என்ற மன்னனால் ஆதரிக்கப்பட்டு வாழ்ந்த மாமூலனார் மோரியர்களைப் பற்றி அறிந்திருந்தார் என்று கூறினால் அது மிகையாகாது.

மௌரியர்களை 'வம்ப மோரியர்' என்று அவர் குறிக்கும் சொல்லாட்சி முறையே அக்காலத்தே அவர் வாழ்ந்தவர் என்பதை மெய்ப்பிக்கிறது. 'வம்ப' என்றால் 'புதிய' என்று பொருள். முன்னறியாது புதிதாகத் தோன்றியவர்களையே வம்ப என்ற அடைமொழி கொடுத்து அழைத்திருக்கக் கூடும். மோரியர் வந்து நீண்ட நாள்களுக்குப் பிறகு மாமூலனார் தோன்றி இவ்வரலாற்றினை இறந்த காலத்தாற் பாடினர் எனக் கொண்டால் 'வம்ப மோரியர்' எனக் குறித்தாரென்பது பொருத்தமுடையதாகாது. எனவே, மாமூலனார் காலம் கி. மு. மூன்றும் நூற்றாண்டாகக் கொள்ளலாம். நந்தர்களைப் பற்றியும், அவர்கள் பாடலியில் அரசு செலுத்தியதைப் பற்றியும் அவர் கேள்விப்பட்டுப் பாடியிருக்க வேண்டும்.

சேரமன்னன் கண்ணகிக்குச் சிலையெடுத்தபோது கடல்சூழ் இலங்கைக் கயவாகு மன்னன் சேரநாடு போந்திருந்த செய்தி சிலப்பதிகாரத்தினால் அறியப்படுகிறது. இலங்கையின் வரலாற்றைக் கூறும் 'மகாவம்சம்' முதலாம் கயவாகு மன்னன் ஆண்ட காலம் கி.பி.171 முதல் கி.பி. 193 வரை என்றும் கூறுகிறது. முதலாம் கயவாகுவே சிலம்பின் காலத்தவன் என்பது பொருந்தும். ஏனெனில் இரண்டாம் கயவாகுவின் காலம் கி.பி. 12ஆம் நூற்றாண்டாகும். இதனால் சங்க நூல்கள் கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்கு முந்தின என்ற கருத்து வலிவுறும். கயவாகு, செங்குட்டுவன் கால ஒற்றுமையே தமிழ் வரலாற்றின் காலக் கணிப்பிற்கு அடிப்படையாக விளங்குகிறது. தற்போது உள்ள தொகை நூல்களைக் கிறித்துவ சகாப்தத்தின் முதல் மூன்று நூற்றாண்டுகளைச் சேர்ந்தவை என்று நம்மை ஏற்றுக்கொள்ளச் செய்யும் கருத்துகளைத் தொகுத்துக் காண்போம்:

1. ரோமானிய, கிரேக்க நிலவியலாரின் குறிப்புகள், வரலாற்றறிஞர்களின் குறிப்புகள் சங்க இலக்கியக் குறிப்புகளுடன் பொருந்துகின்றன.

2. சங்க இலக்கியங்கள் எனப் பொதுவாகப் பகுக்கப்படுகின்ற இப் படைப்புகளின் எழுத்து, சொல், நடை

ஆகியவற்றில் நெருக்கமான ஒற்றுமை காணப்படு கிறது.

3. சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றின் எழுத்துநடை, சொல்நடை, விளக்க உரைகள் இக் காவியங்கள் பிற்பட்ட காலத்தவை எனக் கருதச் செய்கின்றன.

4. தொகை நூல்களில் காணப்படும் சமயப் பொறை உணர்வு தேவாரம், திருவாய்மொழி ஆகியவற்றில் காணப்படவில்லை.

5. சங்க இலக்கியங்களில் பல்லவர்களைப் பற்றிய குறிப் பேதுமில்லாமை, தொகை நூல்கள் பல்லவர் காலத் திற்கு முற்பட்டவை என்று கூறத்தக்க சான்று ஆகும்.

6. சிம்ம விஷ்ணுவிற்கு, ஒன்று அல்லது இரண்டு நூற்றாண்டு களுக்கு முன்னர்த் தமிழ் அரசுகளின் மரபினைக் களப் பிரர்கள் கவிழ்த்து விட்டனர் என்பது நாம் அறிந்ததே. எனவே, நான்காம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலமே சங்க காலம் என்பதனை ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

சங்க கால இலக்கியங்கள் பாடப்பட்ட காலம் கி.மு. 500ல் தொடங்கி, கி.பி. 300 வரையாகும் என்று கொள்ளலாம்.

# 3. சங்க கால வரலாற்று ஆதாரங்கள்

வரலாறு என்னும் அழகிய மாளிகை, ஆதாரங்கள் என்னும் அடிக்கல்லின் மேல் எழுப்பப்படுகிறது. அடிப்படை வலுவுள்ளதாக அமையவில்லை எனில், எழுப்பப்படும் மாளிகை ஆட்டம் கண்டுவிடும். எனவே, சங்க காலம்பற்றி அறிய உதவிடும் ஆதாரங்களைப் பற்றிய மதிப்பீடு இன்றியமையாதது ஆகிறது. தமிழக வரலாற்றின் பொற்காலம் என்றும், அகஸ்டஸின் காலத்திற்கு ஒப்பானது என்றும் சங்க காலத்தைக் குறிப்பிடுகின்றனர்.

சங்க காலம்பற்றி அறிய உதவிடும் செய்திகளைத் தரும் ஆதாரங்களை (1) இலக்கிய ஆதாரங்கள், (2) தொல்பொருள் சான்றுகள், (3) அயல்நாட்டவர் குறிப்புகள் என்று பகுக்கலாம். பேராசிரியர் கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியார் 'பிற நாடுகளில் இலக்கியம் வரலாற்றுக்கு அடிப்படையாக அமைய, இந்தியாவில் அது அடிக்கடி சோதனையாக அமைந்துவிடுகிறது' என்று குறிப்பிட்டார். அவருடைய கூற்று மிகப் பொருத்தமாக அமைவதைச் சங்க இலக்கிய ஆய்வு மெய்ப்பிக்கிறது எனலாம். இலக்கிய ஆதாரங்களைச் சங்க கால வரலாற்றிற்குத் துணையாகக் கொள்பவர்கள் மேற்கொள்ள வேண்டிய பணி ஒன்று உள்ளது. சங்க இலக்கியச் செய்திகளை முழுமையாக அப்படியே ஏற்றுக்கொள்ளக் கூடாது. அந்த சமயத்தில் முழுமையாக அவற்றை ஒதுக்கி விடவும் கூடாது. சங்க இலக்கிய ஆதாரங்களைக் கல்வெட்டுகள், பிறநாட்டு ஆதாரங்கள் ஆகியவைகளைக்கொண்டு உறுதி செய்து கொள்ளுதல் வேண்டும்.

சங்க கால வரலாற்றை ஆய்வு செய்யும் எவரும் கட்டுக்கதைகளையும், பகுத்தறிவிற்குப் பொருந்தாதவற்றையும் வடிகட்டத் தெரிந்துகொள்ள வேண்டும். ஆழ்ந்த புலமையும், அனுபவ அறிவும் மிக்க அறிஞர்கள் சங்க இலக்கியங்களில் காணப்படும் மிகைப்படுத்தப்பட்ட கருத்துகளைத் தனியே ஒதுக்கி வைத்துவிடுகின்றனர்.

இனி, மேலே குறித்த வரிசையில் அவ் வாதாரங்களையும், அவை எந்த அளவிற்கு உதவுகின்றன என்பதையும் காண்போம்.

## இலக்கிய ஆதாரங்கள்

இலக்கிய ஆதாரங்களை இந்திய நாட்டைச் சார்ந்தவை, வெளி நாட்டைச் சார்ந்தவை எனப் பிரிக்கலாம். இந்திய இலக்கியங்களையும், தமிழ்ச் சங்க இலக்கியங்கள், தமிழல்லாத பிற இலக்கியங்கள் என இருவகையாகப் பிரித்திடலாம். தமிழல்லாத இலக்கியங்களைக் காட்டிலும் சங்க இலக்கியங்களே நமக்கு மிக மிக இன்றியமையாத ஆதாரங்களாகும். எனவே, அவற்றை முதலில் காண்போம்.

சங்க காலத் தமிழ் இலக்கியங்கள், வரலாற்றை விளக்கும் பொருட்டு எழுதப்பட்டவை அல்ல என்ற போதிலும் புறநானூறு, பதிற்றுப்பத்து முதலான தொகைநூல்களில் அரசர்களைக் குறித்த உரைகள் ஏராளமாகக் காணப்படுவதால் அவை இயற்கையாகவே வரலாற்றுச் செய்திகளைக் கொண்டு விளங்குகின்றன. சங்க இலக்கியங்களில் அடங்கியவை தொல்காப்பியமும், எட்டுத் தொகை, பத்துப்பாட்டு ஆகிய தொகைநூல்களும் ஆகும்.

சங்க நூல்களைத் தவிர, சங்கம் மருவிய கால இலக்கியங்களான பதினெண்கீழ்க்கணக்கு நூல்களும், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவையும் துணைபுரிகின்றன. சங்கப்பாடல்களின் தொகுப்புகள் சில, சங்க கால அரசர்களின் தூண்டுதலினால் சங்கப் புலவர்களால் ஆக்கப்பட்டன. இலக்கியங்கள் மனித சமுதாயத்தின் சுயவரலாறு என்பதற்குச் சங்க இலக்கியங்கள் சான்றுகளாலாம். இந்த இலக்கியங்கள் சங்க காலத் தமிழரின் உயிரோட்டமான எண்ணம், வாழ்க்கை ஆகியவற்றைக் கருக் கொண்டு விளங்குகின்றன.

சங்க இலக்கியங்கள் பெரும்பாலும் உண்மையான வாழ்க்கைப் படப்பிடிப்பினைக் காட்டுகின்றன. சமயச் சார்போ, புராணக் கதைகளோ சங்க இலக்கியங்களின் முன் நிற்கவில்லை; வடபுலக் கருத்துகளும் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. காதல் சூழ்நிலைகள் சங்கப் பாடல்களில் சற்று மிகையாகக் காணப்பட்ட போதிலும், அக்கால இயல்பான சூழலையே அவை கொண்டுள்ளன. சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் சிறப்பு சங்க இலக்கியத்தில் கையாளப்பட்டுள்ளது. சங்க இலக்கியத்தின் அகம், புறம் என்ற பாகுபாடு தமிழிலக்கியத்திற்கே உரிய தனிச் சிறப்பாகும். இதைப் போன்றதுதான் திணைப் பாகுபாடும். குறிஞ்சி (மலையும், மலைசார்ந்த இடமும்), முல்லை (காடும், காட்டைச் சார்ந்த இடமும்), பாலை (மலையும் காடும் திரிந்து, வறண்ட இடம்), மருதம் (வயலும், வயலைச் சார்ந்த இடமும்), நெய்தல் (கடலும்,

கடலைச் சார்ந்த இடமும்) என ஐந்து திணைகளாக நிலப் பாகுபாடு காணப்பட்ட போதிலும், உண்மை வாழ்க்கையில் ஐந்தும் ஒன்றுடன் ஒன்று கலந்திருத்தல் வேண்டும் எனலாம்.

**தொல்காப்பியம்**

தொல்காப்பியம் என்னும் இலக்கண நூல் எட்டுத் தொகை, பத்துப்பாட்டு ஆகிய நூல்களுக்கெல்லாம் காலத்தால் முற்பட்டது ஆகும். இலக்கண நூல் செய்யும் ஆசிரியன் தன் காலத்தில் உள்ள எல்லா இலக்கிய நூல்களையும், இலக்கண நூல்களையும் நன்கு ஆராய்ந்த பின்னரே இலக்கண விதிகளை அமைப்பது இயல்பு. 'இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பலின்' என்பர். அவ்வாறு இலக்கணம் அமைக்கின்ற போது உலக வழக்கிலுள்ள சொற்களையும், செய்யுள் வழக்கிலுள்ள சொற்களையும் ஆராய்ந்து விதி கூறுதலே முறை. தொல்காப்பியம் சங்க நூல்களுக்குக் காலத்தால் முற்பட்டது என்பதற்கு அகச் சான்றுகள் பலவற்றைக் காண்போம்.

சகர மெய் அ, ஐ, ஔ என்னும் மூன்று உயிரெழுத்துக்களுடனும் சேர்ந்து மொழிக்கு முதலில் வராது என்பது தொல்காப்பியர் வகுத்த விதி. ஆனால், இவ்விதிக்கு மாறாகப் புறநானூற்றில் 'சடை', 'சமம்', 'சகடம்' முதலிய சொற்களும், பத்துப்பாட்டில் 'சவட்டி,' 'சலம்,' 'சந்து' என்பவையும், பதிற்றுப் பத்தில் 'சவட்டும்' என்ற சொல்லும் வந்துள்ளன.

ஞகர மெய் ஆ, எ, ஒ என்னும் மூன்று உயிரோடு மட்டுமே கூடி மொழிக்கு முதலில் வரும் என்ற தொல்காப்பிய விதிக்கு மாறாகப் புறநானூற்றில் ஞமன், ஞமலி, ஞிமிறு ஆகிய சொற்கள் இடம் பெற்றுள்ளன. யகர மெய் 'ஆ' என்னும் உயிரோடு மட்டும் மொழிக்கு முதலில் வரும் என்ற விதிக்கு மாறாக யவனர் என்னும் சொல் சங்க இலக்கியங்கள் பலவற்றில் இடம் பெற்றுள்ளது. தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ள அதோளி, இதோளி, உதோளி, எதோளி முதலிய சொற்கள் சங்க இலக்கியங்களில் இடம் பெறாமல் வழக்கொழிந்தன. 'கள்' என்னும் பன்மை விகுதி அஃறிணையில் வரும் என்ற தொல்காப்பியர் விதிக்கு மாறாகக் கலித்தொகையில் ஐவர்கள் எனக் 'கள்' விகுதி உயர்திணையில் வந்துள்ளது. 'அன்' விகுதி ஆண்பால் படர்க்கைக்கே உரியது என்று தொல்காப்பியர் கூறினும், புறநானூற்றில் 'உரைத்தனன் யானாக' என்றும், அகநானூற்றில் 'நினக்கியான் கிளைஞன் அல்லனோ' என்றும், நற்றிணையில், 'கூறுவன் வாழி தோழி' எனவும் அன் விகுதி தன்மை ஒருமையில் இடம் பெற்றுள்ளதைக்

காண்கிறோம். பரிபாடல் அகப்பொருள் பற்றி வரும் என்பது தொல்காப்பிய விதி. இதற்கு மாறாக இன்று கிடைத்துள்ள பரிபாடல் பாட்டுகள், கடவுள் வாழ்த்துப் பற்றி அமைந்துள்ளன. இதுபோன்ற மாறாக அமைந்துள்ள சான்றுகளை நோக்கத் தொல்காப்பியர் தமக்கு முன்னும் தம் காலத்திலும் இருந்த பல வகைச் செய்யுள் நூல்களையும், உரைநடை நூல்களையும், தமிழ் இலக்கண நூல்களையும் பயின்று தமது இலக்கண நூலைச் செய்தார் என்பதும், தொல்காப்பியருடைய விதிகள் பல சங்க காலத்திலேயே வழக்கொழிந்துவிட்டன என்பதும் தெளிவாகின்றது. தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்ற முப்பெரும் பிரிவுகளை உடையது. எழுத்ததிகாரத்தில் தொல்காப்பியர் எழுத்துகளின் பிறப்பினைப் பற்றிச் செய்துள்ள ஆராய்ச்சி இன்றைய மொழிநூல் அறிஞர்களைத் திகைக்க வைப்பதாய் அமைந்துள்ளது. பொருளதிகாரத்தமைந்த பகுத்தறிவிற்குட்பட்ட திணைப் பாகுபாட்டு அமைப்பு முறையினை டாக்டர் கால்டுவெல் போன்றவர்கள் பாராட்டி வியக்கின்றனர்.

முதல்நூல், " தொகைநூல், விரிநூல், தொகைவிரிநூல், விரிதொகைநூல், மொழிபெயர்ப்பு நூல் எனப் பலவகை நூல்கள் அவர் காலத்தில் இருந்தன என்பதை மரபியல் உணர்த்துகிறது. தொல்காப்பியர்க்கு முன்பே, தமிழில் ஆற்றுப்படை நூல்கள் இருந்திருக்க வேண்டும். 'குழவி மருங்கினும் கிழவ தாகும்' என்று தொல்காப்பியர் கூறுவதால் பிள்ளைத்தமிழ் நூல்களும் தொல்காப்பியர் காலத்தில் இருந்திருக்க வேண்டும் என்று கொள்ளலாம். 'ஊரொடு தோற்றம் உரித்தென மொழிப' என்று கூறுவதால் உலா நூல்கள் இருந்திருக்க இடமுண்டு எனவும், 'மடன் மாக் கூறும் இடனுமா ருண்டே' என்பதால் மடல் நூல்களும் இருந்திருக்கலாம் என அறிஞர்கள் கருதுகின்றனர்.

'பாட்டிடை வைத்த குறிப்பி னானும்
பாவின் றெழுந்த கிளவி யானும்
பொருளொடு புணராப் பொய்மொழி யானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழி யானுமென்று
உரைவகை நடையே நான்கென மொழிப'

எனச் செய்யுளியலில் நால்வகை உரைநடைகளைப் பற்றித் தொல்காப்பியர் கூறுகிறார். இத்தகைய ஒப்பீட்டுக்குத் தொல்காப்பியம் பெரிதும் துணைபுரிகிறது. எனவே, தொல்காப்பியத்தினையும் சிறந்ததொரு சான்று எனக் கொள்ளலாம்

### எட்டுத்தொகை

எட்டுத்தொகை நூல்கள் யாவை என்பதைப் பழைய வெண்பா ஒன்று குறிப்பிடுகின்றது:

'நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூ
றொத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறமென்று
இத் திறத்த எட்டுத் தொகை'

### நற்றிணை

நற்றிணை என்றால் நல்லதிணை என்பது பொருளாகும். நற்றிணையில் 400 பாடல்கள் உள்ளன. அவை காதலைப் பற்றியும், ஐந்து திணைகளைப் பற்றியும் குறிப்பிடுகின்றன. முற்காலப் பாண்டியன் மாறன் வழுதியின் ஆதரவினால் நற்றிணை தொகுக்கப் பட்டது. தொகுப்பித்தவரின் பெயர் தெரியவில்லை. நற்றிணையின் 97ஆவது பாடலையும், 301ஆவது பாடலையும் பாடியவர் பாண்டிய அரசரே ஆவர். சங்க காலத்தின் தொடக்கத்திலேயே இந் நூல் தொகுக்கப்பட்டிருக்க வேண்டும்.

தனக்குரிய பொதுப் பெயரால், நெடுஞ்செழியன் ஆலங் கானத்துச் செழியன் என்று குறிப்பிடப்பட்டுள்ளான். ஓரி, பழையன், தித்தன், அழிசி, மலையமான், பெரியன், ஆய் அண்டிரன், அன்னி, பாரி, விராஅன் நன்னன், மிஞிலி, தழும்பன், பாணன், அருமன், நெடுமான் அஞ்சி, முடியன் முதலிய சிற்றரசர்கள் நற்றிணையில் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

நற்றிணையிலிருந்து நாம் பல வரலாற்றுச் செய்திகளை அறிந்து கொள்கின்றோம். அரசர் தம் கடமையை அறிந்து நடக்க வேண்டும். அவ்வாறு நடந்தால் அவர்தம் ஆட்சி குளிர்ந்த நிழலைப் போன்றது என்ற செய்தியை நற்றிணைப் பாடலொன்று குறிப்பிடு கின்றது. சோழர், அறம் தவறாமல் நீதி வழங்குபவர் என்ற செய்தியையும் அறிகின்றோம்.

குறிஞ்சி நில ஊர்களில் ஊர்காவல் இருந்தது. ஊர்காவலர் குறிஞ்சி என்னும் பண்ணைப் பாடிக்கொண்டு தூங்காமல் இரவு முழுவதும் ஊர்காவல் காத்தனர். நெய்தல் நில ஊர்களில் காவலர் யாமந்தோறும் மணி அடித்து ஒலியெழுப்பித் 'தலைக்கடை, புறக்கடை வாயில்களைப் பாதுகாத்துக் கொள்ளுக' என்று கூறிச் சென்றதாக ஒரு பாட்டு இயம்புகிறது.

ஆயர் தயிர்த் தாழியின் முடை நாற்றம் போக்கிட, அவற்றில் விளாம்பழம் இட்டு வைப்பர். ஆயர் பாலை விலைகூறி விற்பர். கையில் கோலூன்றி இருப்பர்; வாயைக் குவித்து 'வீளை' என்னும் ஒலியை எழுப்புவர்.

பனையோலைகளாலும் இலைகளாலும் பரதவர் வீடுகள் வேயப் பட்டிருக்கும். பனையோலையுடன் முட்களைச் சேர்த்துக் கட்டப் பட்ட வேலி ஊரைச் சுற்றியிருக்கும். திமிங்கிலத்தையும் பரதவர் வேட்டையாடுவர். அவர்கள் அதிகாலையில் மீன்களைப் பிடித்து வருவர். புன்னை மரநிழலில் அமர்ந்து, தேன் மணம் வீசும் தெளிந்த கள்ளைப் பருகுவர். பரதவர் 'நியமம்' எனப்பட்ட கடைத் தெருவில் மீனை விற்றுக் கள்ளைப் பெற்றனர்; உப்பு வணிகர் உப்பை விற்று நெல்லைப் பெற்றனர்.

இந் நூலிலே தொண்டி, போர், கொற்கை, மாந்தை, காண்ட வாயில், கூடல், கிடங்கில், சாய்காடு, பொறையாறு அம்பர், ஆர்க்காடு, மருங்கூர்ப்பட்டினம், புனல்வாயில், இருப்பையூர், பாரம், ஆறேறு, குன்றூர், கழாஅர், முள்ளூர், ஊனூர், வாணன் சிறுகுடி, அருமன்சிறுகுடி, குடந்தைவாயில், வெண்ணி முதலான ஊர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

கலிங்கம், பூங்கலிங்கம், துகில், நுண் துகில், அம் துகில் முதலான பல வகை ஆடைகள் அக் காலத்தில் பழக்கத்தில் இருந்தன. பாலை நிலத்து ஆடவர், துவர் ஆடையினையும், குறிஞ்சி நிலத்து ஆடவர், மரப்பட்டை நாரால் பின்னிய உடையையும், குறிஞ்சி நிலத்து மகளிர் தளிர்களையும் பூங் கொத்துகளையும் நெருக்கமாக வைத்துக் கட்டப்பெற்ற தழைகளையும் ஆடையாக உடுத்தி இருந்தனர்.

ஓவியக் கலைஞர்கள் பலர் இருந்தனர். பல்வேறு யாழ்களையும், வேறு இசைக் கருவிகளையும் வாசித்த கலைஞர்கள் தமிழகத்தில் வாழ்ந்தனர். மருத்துவன் அறவோன் எனப்பட்டான். சோதிடர், கணியர் எனப்பட்டனர். மகளிர் தைத்திங்களில் நீராடி, நோன்பு இருந்ததையும், நீண்ட சடை முடியையுடைய தவசியர் வாழ்ந்ததையும், பெண் துறவிகள் அல்லது படிவ மகளிர் கடற்கரை இடங்களில் வாழ்ந்ததையும் சில பாடல்கள் அறிவிக்கின்றன.

'நில்லாப் பொருள் என்றும், மன்னுப் பொருள் என்றும் செல்வம்' கருதப்பட்டது. இரவிலும் விருந்தினரை வரவேற்றனர். ஈதற் பொருட்டே பொருளீட்டினர். உயிர், பல பிறவிகள் எடுக்கும்

என்ற நம்பிக்கை அக் காலத்தில் இருந்தது என்பதை அறிகிறோம். வீட்டில் செயலற்று இருப்பவருக்கு இம்மைக்குரிய புகழும், இருமைக்குரிய இன்பமும், மறுமையில் இன்புறுவதற்கு ஏதுவாகிய கொடைமையும் ஆகிய மூன்றும் கைகூடுவதில்லை. அருள் உணர்வுடையோரின் செல்வம் வளரும். இத்தகைய பல செய்திகளை நற்றிணை அளிக்கிறது.

## குறுந்தொகை

எட்டுத் தொகை நூல்களிலொன்றான குறுந்தொகை, நான்கடிச் சிற்றெல்லையும் எட்டடிப் பேரெல்லையும் கொண்டு விளங்குகிறது. இதிலுள்ள பாடல்கள் அகத் துறை பற்றியவை. பூரிக்கோ என்னும் அரசன் இதிலுள்ள பாடல்களைத் தொகுப்பித்தான். ஆனால், தொகுத்த புலவர் யாரெனத் தெரியவில்லை. குறுந்தொகையில் 402 பாடல்கள் உள்ளன.

இதிலுள்ள கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார் ஆவார். குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னும் ஐவகை ஒழுக்கங்களைப் பற்றிய பாடல்கள், இதில் காணப்படுகின்றன. காதல் உணர்ச்சியைக் கற்பனைப் பாங்குடன் எத்தனையோ வகைகளில் படம் பிடித்துக்காட்டி அகத்துறை இலக்கியத்திற்கே சிறப்புத் தருவது குறுந்தொகை என்று கூறினால் மிகையாகாது. இந் நூலில் எவ்வி நன்னன், எழினி, ஆய், அஞ்சி, வல்வில் ஓரி, பாரி, மலையன், நள்ளி, அழிசி, ஆதி, அருமன், அகுதை, விச்சிக்கோ முதலிய சிற்றரசர்கள் குறிக்கப்பட்டுள்ளனர். காஞ்சியூர், மாந்தை, சிறுநல்லூர், உறந்தை, தொண்டி, குன்றூர், முள்ளூர், குறும்பூர் முதலியன இதில் குறிப்பிடப்பட்ட ஊர்களாகும்.

குறிஞ்சி நிலத்தவரின் வாழ்க்கை முறை, மிக விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. கொல்லி மலையின் ஒரு பகுதியில் அமைக்கப்பட்டிருந்த பேரெழில் மிக்க கொல்லிப்பாவையைப் பற்றி ஒரு பாடல் கூறுகின்றது. பறை, பணிலம், பதலை, முழவு, தட்டைப் பறை, குளிர் முரசு முதலிய இசைக் கருவிகள் இந் நூலில் இடம் பெற்றுள்ளன. நடனமாடும் பெண், 'ஆடுகள மகள்' என்றும், நடனமாடும் ஆண் மகன், 'ஆடுகள மகன்' என்றும் அழைக்கப்பட்டனர்.

'பெரும் பெயர் உலகம்' எனச் சொர்க்கத்தைக் கூறினர். நல்வினை, தீவினை, நரகம் முதலியவற்றை நம்பினர். நோன்பிருந்தவர், நோற்றோர் எனப்பட்டனர். உயிர்களைப் பிரிப்பவன் கூற்றுவன் என்று கூறப்பட்டான்.

துணங்கைக் கூத்து என்ற ஒரு வகைக் கூத்து ஆடப்பட்டது. ஆரியக் கூத்தர், பறை கொட்டப்பட்ட சமயத்தில் மூங்கிலில் கட்டிய கயிற்றின் மேல் நின்று ஆடினர். பரம்பரைச் செல்வர்கள் 'பெருமுது செல்வர்' என்று பாராட்டப்பட்டனர். பெரியோர் பொய்க்கரி கூறார். அறிவு சான்ற பெரியோர் தம்மைப் பிறர் புகழ்வதற்கு நாணுவர். சான்றோர் பிறர் உற்ற வறுமைத் துன்பத்திற்கு அஞ்சி அவர்கள் இரந்தவற்றைக் கொடுப்பர்; தாம் கொடுத்த அவற்றைத் 'தருக' என்று சொல்லுதலைக் காட்டிலும் தம் உயிரை மகிழ்ச்சியோடு இழப்பர்.

## ஐங்குறு நூறு

ஐங்குறு நூறு என்னும் நூல் மூன்றடிச் சிறுமையும், ஆறடிப் பெருமையும் கொண்ட ஐந்நூறு பாக்களைக் கொண்டது. இந்நூல் மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை ஆகிய ஐந்து பிரிவுகளை உடையது. ஒவ்வொரு பிரிவிலும் நூறு செய்யுள்களைக் கொண்டுள்ளது. இந் நூலும் அகத்துறை பற்றிய பாடல்களைக் கொண்டதே. ஐங்குறுநூற்றைத் தொகுத்தவர் கூடலூர் கிழார்; தொகுப்பிக்கச் செய்தவன் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை என்ற சேர மன்னன்.

இந் நூலில் மருதம் பற்றிய பாடல்களை ஓரம்போகியாரும், நெய்தல் பற்றிய பாக்களை அம்மூவனாரும், குறிஞ்சி பற்றிய பாடல்களைக் கபிலரும், பாலை பற்றிய பாக்களை ஓதல் ஆந்தையாரும், முல்லை பற்றிய பாக்களைப் பேயனாரும் பாடியுள்ளனர். மருதம் பாடிய ஓரம்போகியார் என்ற புலவர் அவினி என்ற சேர மன்னன் காலத்தவர். நெய்தலைப் பாடிய அம்மூவனார் தொண்டி, மாந்தை முதலான ஊர்களைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

ஆதன், அவினி, குட்டுவன் என்ற சேர மன்னர்களும், கடுமான் கிள்ளி என்ற சோழ மன்னனும், தென்னவன், தேர்வண் கோமான், கொற்கைக் கோமான் முதலான பாண்டிய மன்னர்களும் ஐங்குறுநூற்றுப் பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளனர். ஆமூர், இருப்பை, மத்தி, கழாஅர், தொண்டி, கொற்கை, வயலூர் முதலிய ஊர்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

ஐங்குறு நூறு அளித்திடும் சில செய்திகளைத் தொகுத்துக் காண்போம். குறிஞ்சி நிலக் குறவன், தன் உறவினருடன் மழை வேண்டும் என முருகனை வேண்டுதல், மகனையோ, மகளையோ பெற வேண்டி மகப்பேறு பெறக் குறவன் கடவுளை வேண்டுதல், குறமகள் விழிகளில் நீர் வழிய மலர்களைக் கொண்டு இறைவனைப்

பூசித்தல் முதலான நிகழ்ச்சிகள் ஐங்குறுநூற்றில் குறிக்கப் படுகின்றன. தை நீராடும் வழக்கமும், வளை, இழை, தொடி, காஞ்சி, சங்கு வளையல், மணிப்பூண், மேகலை, பாண்டில், சிலம்பு, கழல் முதலிய அணிகள் அணிந்தமையும் இதில் கூறப்பட்டுள்ளன.

குறிஞ்சி நில வீடுகள் புல்லால் வேயப்பட்டிருந்தன. குடிமக்கள் நாடு காவற் பொருட்டு அரசனை வாழ்த்தினர். கடல் துறையிலிருந்து கப்பல்கள் சென்றன. போரில் இறந்த வீரனுக்கு நடுகல் நடப்பட்டு, அக்கல் வீரர்களாலும் மற்றவர்களாலும் வணங்கப்பட்டது. பொன் கயிற்றால் யானைகளைச் செல்வர் கட்டினர் என்பது செல்வச் செழிப்பை வெளிப்படுத்துகிறது. தந்தையின் பெயர் பிள்ளைக்கு இடப்படும் வழக்கம் காணப் படுகிறது. இடக்கண் துடித்தால் பெண்களுக்கு நன்மை உண்டு என்று நம்பினர்.

## பதிற்றுப்பத்து

பதிற்றுப்பத்து என்ற புறப்பொருள் பற்றிய நூல் சேர வேந்தர்களின் போர்ச் செயல்களை மிகுதியாக விளக்கு கிறது. சங்க காலத்தில் வாழ்ந்த சேர மன்னர் பதின்மருள் ஒவ்வொருவரைப் பற்றியும், பத்துப் பத்தாகப் பத்துப் புலவர்கள் பாடிய பாடல்களின் தொகுதியே இப் பதிற்றுப்பத்தாகும். முதலாவது பத்துப் பாடல்களும், இறுதிப் பத்துப் பாடல் களும் கிடைத்தில. பதிற்றுப்பத்தைத் தொகுத்தவர், தொகுப் பித்தவர் யாரெனத் தெரியவில்லை. கிடைத்துள்ள பாடல்கள் சேரர்தம் வரலாற்றை அறிந்திடப் பெரிதும் உறுதுணையாக உள்ளன. இப்பாடல் நூலிலிருந்து அறியப்பெறும் செய்திகளைக் காண்போம்.

இமயவரம்பனும் செங்குட்டுவனும் கடம்பர் என்னும் கடற் கொள்ளைக்காரர்களை முறியடித்தனர். நெடுஞ்சேரலாதன் யவனரையும் ஆரியரையும் முறியடித்தான். இரும்பொறை தகடூர் அதிகமானுடன் போரிட்டுத் தகடூரை அழித்தான்; கழுவுள் என்னும் ஆயர் தலைவனையும் வென்றான். இளஞ்சேரல் இரும் பொறை, இரு பெரும் வேந்தரையும் விச்சிக்கோவையும் போரில் முறியடித்தான. இமயவரம்பன், தான் வென்ற ஏழு அரசர்களின் பொன் முடிகளை உருக்கித் தன் வெற்றிச் செருக்கைக் காட்டப் பொன் மாலை ஒன்று அணிந்தான்.

சேர மன்னர்கள், முத்தமிழ்ப் புலவர்களுக்குப் பரிசில் நல்கி மகிழ்வித்தமையால் 'பாடினி வேந்து', 'பரிசிலர் செல்வம்' எனப் பாராட்டப்பட்டனர். பொதுவாகச் சேர வேந்தர்கள் தம்மை நாடிய, பாடிய புலவர்களுக்கு நாட்டின் பகுதிகளையும், அவற்றி

விருந்து பெற்ற வருவாய்களையும் வழங்கினர். சேர மன்னர்கள் நீர்நிலை பெருக்கி, வாணிகம் வளர்த்து, அறநிலை நின்று அரசோச்சினர்.

சேர மன்னர்களின் படையெடுப்பு முறை குறித்தும் அறியப் பதிற்றுப்பத்து துணைபுரிகிறது. ஒரு நாட்டின்மீது படையெடுக்கும் அரசனுடைய வீரர்கள் தங்கள் முரசத்திற்குச் செந்தினையையும் குருதியையும் பலியாகத் தூவுதல், குருதியால் அதன் கண்ணைத் துடைத்தல், குறுந்தடி கொண்டு முழக்குதல் முதலான செய்திகளையும் அறிகிறோம். படைவீரர், பகைவர் ஊர்களை எரி மூட்டுவர். அரசன் பொன்னால் செய்த தும்பைப் பூ மாலையைச் சூடியபோது சமவெளியில் போரிடும் வீரர் தும்பைப் பூ மாலை சூட்டிக் கொள்வர்.

கோட்டை குறித்தும், கோட்டை மதில்களைப் பற்றியும், பாசறை, படைகள் தங்கியிருக்குமிடம், பாசறையில் கேட்கும் இசை முழக்கம் ஆகியவை குறித்தும் பலவாகிய செய்திகளை அறிகிறோம். போரில் வெற்றி பெறச் சேரமன்னர் கொற்றவையை வழிபட்டதாகப் பதிற்றுப்பத்துக் கூறுகிறது. சேரநாட்டில் சிறந்திருந்த நறவு, தொண்டி, கொடுமணம், பந்தர், மாந்தை முதலிய ஊர்களைக் குறித்தும், மருதவளம், மலைவளம், பூழிநாட்டு வளம், பாலைவழி, சோழ நாட்டுச் சிறப்பு முதலியன குறித்தும் இந் நூலில் வருணிக்கப்படுவதைக் காண்கிறோம்.

### பரிபாடல்

பரிபாடல் முழுமையும் கிடைக்கப் பெறவில்லை. திருமாலைப் பற்றி எட்டுப் பாடல்களும், முருகனைப் பற்றி முப்பத்தொரு பாடல்களும், காடுகிழாள் அல்லது கொற்றவை பற்றி ஒரு பாடலும், வைகையைப் பற்றி இருபத்தாறு பாடல்களும், மதுரையைப் பற்றி நான்கு பாடல்களும் ஆக மொத்தம் எழுபது பாடல்களைக் கொண்டது பரிபாடல் என அறிகிறோம். ஆயின், இப்போது கிடைப்பவை 24 பாடல்களே ஆகும். அகம், புறம் ஆகிய இருதுறைப் பாடல்களும், பரிபாடலில் காணப்படுகின்றன. குறிஞ்சி, முல்லை ஆகிய இருதிணைக் கடவுள்களான முருகன், திருமால் பற்றியே சிறப்பித்துப் பாடப்படுகிறது.

பரிபாடல் என்னும் இசைப்பாக்களால் தொகுக்கப் பெற்றமையால் இப் பாக்களின் தொகுதி பரிபாடல் என்ற பெயரால் வழங்கப்படுகிறது.

பரிபாடல் இசையுடன் சங்க காலத்தில் பாடப்பட்டிருக்க வேண்டும். பரிபாடலுக்குத் தொல்காப்பியர் இலக்கணம் வகுத்

துள்ளார். அவர் 'இது தொகைநிலை வகையால், பா என்று சொல்லப்படும் இலக்கணம் இன்றி எல்லாப் பாவிற்கும் பொதுவாக நிற்றற்கு உரியதாய் இன்பப் பொருளைப் பற்றிக் கூறும்; சிறுமை இருபத்தைந்து அடியும், பெருமை நானூறு அடியும் பெற்று வரும்' என்று கூறுகிறார். மலையும் ஆறும் பரிபாடலில் வருணிக்கப்படும் என இளம்பூரணர் கூறுகிறார். உறுதிப் பொருள்கள் நான்கனுள் இன்பத்தையே பொருளாகக் கொண்டு கடவுள் வாழ்த்து, மலை விளையாட்டு முதலியவற்றில் பரிபாடல் வருமென்று உரைகாரர் பேராசிரியர் கூறியுள்ளார். நச்சினார்க்கினியர், கடவுள் வாழ்த்து உள்ளிட்ட காமப் பொருள் குறித்து உலகியலைப்பற்றி பரிபாடல் வரும் எனக் கூறியுள்ளார்.

நமக்குக் கிடைத்துள்ள பரிபாடல் தொல்காப்பியர் வகுத்த விதிக்கு மாறுனது. இதனுள் பல திருமால், முருகன், வையை, மதுரை பற்றியவை எனவும், அகம், புறம் இரண்டுமே இடம் பெற்றுள்ளன எனவும் கண்டோம். பரிபாடலில் வையையாறு, மதுரை, திருப்பரங்குன்றம், திருமாலிருஞ்சோலைமலை ஆகியவை பற்றிய செய்திகள் காணப்படுவதால் இவை பாண்டிய நாட்டைச் சிறப்பிக்கப் பாடப்பட்டவையாக இருக்க வேண்டும்.

பிற தொகை நூல்களைவிடப் பரிபாடலில் வடமொழிச் சொற்களும், இதிகாசக் கதைகளும் அளவிறந்தனவாக இடம் பெற்றுள்ளன என்பது வையாபுரிப் பிள்ளையின் கூற்று. கி. மு. இரண்டாம் நூற்றுண்டிலே வட இந்தியாவில் தோன்றிய பக்தி நெறி தமிழகத்தில் பரவிவிட்ட காரணத்தால் கடவுளர் பற்றிய புராணக்கதைகளும், பரிபாடல் முதலான நூல்களில் இடம் பெற்றன எனக் கருதலாம்.

பரிபாடலில் காணப்படும் வரலாற்றுச் செய்திகளைக் காண்போம். பரிபாடலில் இருங்குன்றம் என்று இன்றைய அழகர் மலை குறிப்பிடப்பட்டுள்ளது. இக் குன்றத்தின்மீது திருமாலுக்குக் கோவில் ஒன்றிருந்தமையால், இக் குன்றம் மாலிருங்குன்றம் எனவும், சோலைகள் மிக்கிருந்தமையால் திருமாலிருஞ் சோலை எனவும் கூறப்பட்டது. திருப்பரங்குன்றத்தில் திரு முருகன் திருக்கோவிலிருந்தது.

மதுரை மக்கள், வைகையைப் போற்றியதால் வையை 'தமிழ் வையை' எனவும், மதுரைத் திருநகர், "தமிழ் கெழு கூடல்' எனவும் கூறப்பட்டது. ஓவியம் எழுதுவோன் 'வல்லோன்' என்று கூறப்பட்டான். தண்பரங்குன்றத்து மலைமீதிருந்த

முருகன் திருக்கோவில் மண்டபத்தில் பல ஓவியங்கள் வரையப் பட்டிருந்தன. நெய்தல், குவளை, ஆம்பல், சங்கம், கமலம், வெள்ளம் என்ற பேரெண்களைக் குறிக்கும் தமிழ்ச் சொற்களை இந்நூலில் காண்கிறோம். தொகுத்தவரும், தொகுப்பித்தவரும் யார் எனக் கண்டறிய இயலவில்லை.

**கலித்தொகை**

கலித்தொகை 'கற்றறிந்தார் ஏத்தும் கலி' என்று சிறப் பித்துக் கூறப்பட்டுள்ளது. கலித்தொகையின் ஆசிரியர் ஐவரே என்பதற்கு,

'பெருங்கடுங்கோன் பாலை கபிலன் குறிஞ்சி
மருதனிள நாகன் மருதம் - அருஞ்சோழன்
நல்லுருத்தி ரன்முல்லை நல்லந் துவனெய்தல்
கல்விவலர் கண்ட கலி'

என்னும் வெண்பா சான்றாகக் காட்டப்படுகிறது. ஆயினும் இப்பாடற் கருத்து ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லை.

குறிஞ்சித் திணை பாடுவதில் கபிலர் வல்லவர். பாலைத் திணைப பாடல்கள் சிலவற்றைப் பெருங்கடுங்கோன் பாடியுள்ளார். ஆனால், ஏனைய கலிப் பாடல்களைப் பாடியவர்கள் அவற்றைப் பாடுவதற்குத் தகுதியுடையவரா என்றால் இல்லை. மருதக் கலியைப் பாடியவராகக் கருதப்படும் இளநாகனார் ஏனைய நூல்களின் பாலைத் திணைப் பாடல்களையே அதிகம் பாடியுள்ளார். அப்படியானால் மருதக் கலியைப் பாடினாரென்று ஏற்றுக்கொள்வது பொருந்துமா? புறநானூற்றில் சோழன் நல்லுருத்திரன் ஒரே ஒரு செய்யுளை மட்டுமே பாடியுள்ளானே தவிர வேறு எந்த நூலிலும், எந்தப் பாடலையும் பாடியுள்ளதாகத் தெரியவில்லை. அப்படியிருக்க அவனே முல்லைத் திணை முழுமையையும் பாடியவன் என்பதும் சரியா? நல்லந்துவனார் நெய்தல் திணைப்பற்றி வேறு ஒரு செய்யுளும் பாடவில்லை. அப்படியிருக்க அவரே நெய்தற்கலி பாடினாரென்பது சாலுமா?

முல்லைக்கலியில் காட்டப்படும் முல்லை நில மக்கள் பாண்டிய நாட்டவராய், பாண்டிய மன்னனை வாழ்த்துவதாய்ச் செய்யுள் கூறுகின்றது. சோழ வேந்தனாகிய நல்லுருத்திரன் தன்னுடைய நாட்டிலுள்ள முல்லை நில மக்களின் வாழ்வைப் பற்றி பாடாமல் பாண்டிய நாட்டு முல்லை நில மக்களின் வாழ்க்கையைப் பாடினான் என்பது பொருத்தமாகப் படவில்லை.

ஐவர் பாடியதாகக் கூறப்படும், மேலே காட்டப்பட்டுள்ள வெண்பா எந்தக் கலித்தொகை ஏட்டிலும், வேறெந்த ஏட்டுப் படிகளிலும் இல்லை. எனவே, ஆதாரமற்ற இந்த வெண்பா பிற்சேர்க்கை என்பது புலனாகின்றது. எனவே, கலித்தொகை முழுவதையும் ஆராய்ந்தால் அதிலுள்ள செய்யுள்கள் எல்லாம் ஒரே ஆசிரியரால் பாடப்பட்டிருக்கும் என எண்ணத் தூண்டுகின்றது. இந்நூல் கபிலர், பரணர் முதலிய புலவர்களுக்குப் பிற்பட்ட காலத்தில் வாழ்ந்த புலவர் ஒருவரால் சங்க இறுதிக் காலத்தில் பாடப்பட்டிருக்க வேண்டும் என்று கருத வேண்டியுள்ளது. இதற்குக் காரணம் கலித்தொகைப் பாக்களின் நடை, மொழி அமைப்பு, சொல் அமைப்பு முதலியவை ஏனைய சங்கத் தொகை நூல்களினின்றும் வேறுபட்டு அமைந்துள்ளன. நூல் முழுவதும் புராண இதிகாசக் கதைகள் விரவிக் கிடக்கின்றன என்பதும், பிற தொகை நூல்களில் குறிக்கப்பட்டுள்ள சிற்றரசர், பேரரசர் பற்றிய செய்திகள் கலித்தொகையில் இல்லை என்பதுமே ஆகும்.

கலித்தொகையின் காலம் எது என்று அறிதலும் இன்றியமையாத ஒன்று எனலாம். கலித்தொகையின் காலமும், சங்க இறுதிக் காலம் எனப்படுகிறது. அஃதாவது ஏறத்தாழக் கி. பி. 500 என்று கூறலாம். கலிச் செய்யுள்களின் காலம் கடைச் சங்கப் புலவருக்குப் பிற்பட்டது எனக் கொள்ளுதற்குத் தகுந்த காரணமும் உண்டு.

'மையின் மதியின் விளங்கு முகத்தாரை
வவ்விக் கொளலும் அறனெனக் கண்டன்று'

என்று குறிஞ்சிக் கலி கூறுகிறது. பெண்களை வவ்விக் கொள்ளுதல் இராட்சச மணம் எனப்படும். இம்முறைபற்றித் தொல்காப்பியர் எவ்விடத்தும் கூறவில்லை. சங்க இலக்கியமும், அத்தகைய மணம் தமிழர்க்கு உடன்பாடு என்று கூறவில்லை. அப்படியிருக்க, தொல்காப்பியர் கருத்திற்கு மாறாக இக் குறிஞ்சிக் கலியுள் இராட்சச மணம் பேசப்பட்டுள்ளது; அஃது அறன் எனவும் கூறப்பட்டுள்ளது. எனவே, கலித்தொகையின் காலம் கடைச் சங்கப் புலவருக்குப் பிற்பட்ட காலம் எனக் கருத இடம் உள்ளது.

குறிஞ்சிக் கலியில் மற்றுமொரு செய்யுளில் தலைவி தோழியைப் பார்த்து, 'நீ தெருவில் போவார்க்கெல்லாம் இரங்குகின்றாய்; அது வாரணவாசியில் பிறர் வருத்தம் தம் வருத்தமாகக் கருதும் அருளுடையார் செயலைப்போன்று காணப்படுகிறது' என்று கூற

கிறாள். ஏனைய தொகைநூல்களில் வாரணவாசியைப்பற்றியோ, அந் நகர மாந்தர் இயல்புபற்றியோ யாதும் கூறப்படவில்லை. கலியில் மட்டுமே இவ்வாறு கூறப்பட்டமையால், கலித்தொகை மற்றைய தொகை நூல்களுக்குப் பிற்பட்டதாகக் கருதப்படு கின்றது.

அன்பின் ஐந்திணைக் களவுபற்றியும் கற்புப்பற்றியுமே சங்கப் பாடல்கள் அறிவிக்கின்றன. ஆனால், கலித்தொகையிலோ சங்கச் சான்றோரால் உயர்வாகக் கருதப்படாத கைக்கிளை, பெருந் திணைச் செய்திகளும், இழிந்தோர் களவும், கூனும் குறளும் உறழ்ந்து கூறலும், புணர்தலும் கூறப்பட்டுள்ளன. முல்லைக் கலிச் செய்யுளொன்று, "தேள் கொட்டிய விடம் தலைக்கேறுவதுபோலக் காமம் தலைக்கேறுகிறது" என்று கூறுகிறது. இத்தகைய செய்திகள் சான்றோரால் வெறுக்கத் தக்கவை; பண்டைத் தமிழ்ப் புலவர்தம் நெறிக்கு மாறானவை. இவற்றிற்குத் தொல்காப்பியத்துள் இலக் கணம் காணப்பட்டாலும், இவற்றைப் பிற்காலப் புலவர்களே விரிவாகப் பாடினர் என்று கருதிட வேண்டியுள்ளது. காமன், ஆரியக் கடவுள். அவன் 'காமனார்' எனவும், காமனுருக்கு மூத்த சாமனார் எனவும் மருதக் கலியில் கூறப்பட்டுள்ளது. இது போன்ற செய்திகள் பிற தொகைநூல்களுள் கூறப்படவில்லை.

மற்றத் தொகை நூல்களில் கூறப்படும் வள்ளல்களோ, புலவர்களோ, அரசர்களோ சுட்டிக் காட்டப்படாது, கலித் தொகைச் செய்யுட்களில் பாண்டியனே சுட்டப்படுகிறான். வையையும் கூடலும் குறிப்பிடப்பட்டுள்ளன. வாரணவாசிப் பதம் முதலிய வடநாட்டுச் செய்திகளும், புராணக் கதைகளும், உவமைகளும், தெய்வங்களுமே கூறப்பட்டுள்ளன. அன்றித் தமிழகச் செய்திகள் ஒன்றேனும் விவரிக்கப்படவில்லை. மேற் கூறிய காரணங்களால், கலித்தொகைச் செய்யுள்கள் பிற அகப் பொருள் நூல்களுக்குப் பின்னர்ச் செய்யப்பட்டவை என்று கூறலாம்.

கலித்தொகையைப் பாடிய புலவர் பாண்டிய நாட்டினராகவே இருத்தல் வேண்டும். ஏனெனில், பாண்டியன் மட்டுமே பாராட்டப் பட்டுள்ளான். கலித்தொகையில் பாண்டியன், அவனது தலைநகரான மதுரை, வையை ஆறு, பொதியில் மலை, நேர்மையான அவனது ஆட்சி, பாண்டியர் வளர்த்த தமிழ்ச் சங்கம் ஆகியவை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளதே அன்றி, சேர, சோழரைப் பற்றியோ, அவர் தம் நாடு, நகரங்களைப்பற்றியோ எவ்விதக் குறிப்புமில்லை.

கலித்தொகை என்னும் நூல், சங்க காலத்தின் இறுதியில் களப்பிரர் படையெடுப்பிற்குச் சிறிது முற்பட்ட காலத்தில் பாண்டியன்மீதும், அவன் நாட்டின்மீதும் பற்றுக்கொண்ட பாண்டிய நாட்டுப்புலவர் ஒருவரால் பாடப்பட்டிருக்க வேண்டும் என்ற கருத்தே ஏற்புடைத்தாய் உள்ளது.

கலித்தொகை வாயிலாக அறியக் கூடிய செய்திகளைத் தொகுத்துக் காண்போம். முல்லைக் கலியுள் ஏறுதழுவல் குறித்த செய்திகள் உள்ளன. ஆயர்கள் பல நிறங்களையுடைய எருதுகளின் கொம்புகளைச் சீவுவர். எருதுகளின் ஆற்றலும் நிறமும் பல பாடல்களில் கூறப்பட்டுள்ளன. முல்லை நில இளைஞர்கள் தொழுவில் பாய்வதற்கு முன் நீர்த்துறையிலும், ஆலமரத்தின் கீழும், மாமரத்தின் கீழும் வாழும் தெய்வங்களை வழிபடுவர். கன்னிப் பெண்கள் பரண்மீது நின்று வேடிக்கை பார்ப்பர். போரில் வென்று, வாகை சூடும் வீரர்கள் ஆயராலும் ஆய்ச்சியராலும் பாராட்டப்படுவர். ஏறுதழுவலில் ஈடுபடாத இளைஞனை ஆயர் மகள் கணவனாக ஏற்க உடன்படாள். ஆயர்தம் வீட்டைச் செம்மண்ணால் அலங்கரித்துத் தரையில் மணல் பரப்புவர். பெண் எருமையின் கொம்பைத் தெய்வமாக வைத்து வழிபட்டுச் செய்யப்படும் திருமணம், பெருமணம் என்று கூறப்படும்.

இளவேனிற் காலத்தில், மதுரையில் புலவர்கள் கூடித் தமிழ்ச் செய்யுள்களை இயற்றினர். நிலமகள் பூமாலை சூடிய தன்மையை ஒத்து, வையையாறு மதுரையைச் சூழ்ந்து வந்தது. குறிஞ்சிநிலத் தலைவன், தன்னை நாடி வந்த புலவர்களுக்குத் தேர்களையும் களிறுகளையும் கொடுத்தான். 'தான் கற்ற கல்வியினிடத்தே, தவறு செய்பவனது கல்விப் பொருள் நாள்தோறும் தேயும்; அவனும் தானைச் சிறப்பு இழப்பான்' என்று ஒரு கலிப்பா பேசுகிறது.

கலிப்பாக்களில் முத்துவடம், இழை, மகரக் குழை, தொடி மேகலை, தெள்ளரிச்சிலம்பு, கனங்குழை, வரிக்குழை, பவளவடம், தாயத்து, சதங்கை, பொன்மணிவடம், வல்லிகை, வயந்தகம், கன்னசாமரை, புல்லிகை, கண்டிகை, தெய்வ உத்தி முதலிய அணிகள் பேசப்பட்டுள்ளன.

முக்கோல் பகவர் என்பவர் உறியிலே தங்கின கமண்டலத்தை உடையவர். திருமால், பலராமன், சிவன், முருகன் ஆகிய நால்வரும் சிறப்புடைக் கடவுளராய் மதிக்கப் பட்டனர். படைப்புக் கடவுளான பிரமன் 'முதல்வன்' எனப் பட்டான். மக்கள் கோவிலை வலம் வருதலும், சிறு பிள்ளைகளை

வலம்வரச் செய்வித்தலும் வழக்கம். கடவுட் கடிநகர் என்றும் புத்தேளிர் கோட்டம் என்றும் கோவில் கூறப்பட்டது. கன்னிப் பெண்கள் தைத் திங்களில் நீராடி, நோன்பிருந்து, பிற வீடுகளில் ஐயமேற்றுப் பாடி, அங்குப் பெற்றதைப் பிறர்க்குக் கொடுத்தனர். மார்கழி நோன்புபற்றியும் கலிப்பாக்களால் அறிகிறோம்.

செல்வம் நிலையற்றது; வறியவனது இளமை சிறப்படையாது; கொடைக் குணம் இல்லாதவனுடைய செல்வம் அவனைச் சார்ந்தோரைக் காத்திடாது; யாவர்க்கும் தீங்கு செய்பவன் இறுதியில் உறவினர் இன்றி, நண்பரின்றிக் கெடுவான் இளமையும் செல்வமும் நாள்தோறும் அழியும் இயல்பின; தமக்கு இறுதியும் மூப்பும் உண்டு என்பதை அறிவில்லாதவர் மறப்பர்; நேர்மையற்ற முறையில் தேடப்பட்ட பொருள் இம்மையிலும் மறுமையிலும் பகையாகும்; முழுமதி நாள்தோறும் தேய்வதுபோல் இளமையும் அழகும் தேயும்; நற்குணம் வாய்க்கப் பெற்ற சான்றோர் வாய்மை தவறார்; நிலையாமை உணர்ந்தவர் கொடை புரிவர்; சோம்பல் இல்லாதவனின் செல்வம் வளரும்; மனித யாக்கை பெறுதற்கரியது; பொருளற்றவரின் இல்லறம் இன்பமளிக்காது முதலான உயரிய கருத்துகள் கலித்தொகையில் இடம் பெற்றுள்ளன. புராணக் கதைகளும், அரசியல், உலகியல் பற்றிய உவமைகளும் பல இதில் இடம் பெற்றுள்ளன.

**அகநானூறு**

அகநானூற்றுப் பாடல்களில் சிறியவை பதின் மூன்று அடிகளையும், பெரியவை முப்பத்தோர் அடிகளையும் கொண்டுள்ளன. 'நெடுந்தொகை' என்ற மற்றொரு பெயரும் இந் நூலுக்கு உண்டு. இந் நூலினைத் தொகுப்பித்தவர் உக்கிரப் பெருவழுதி; தொகுத்தவர் மதுரை உப்பூரி குடி கிழான் மகன் உருத்திரசன்மன் ஆவார். அகநானூற்றின் முதல் 120 பாடல்கள் 'களிற்றியானை நிரை' என்றும், 121 முதல் 300 வரையுள்ள பாடல்கள் 'மணிமிடை பவளம்' என்றும், இறுதியாகவுள்ள 100 பாடல்கள் 'நித்திலக் கோவை' என்றும் பிரிக்கப்பட்டு உள்ளன. அகநானூறு பாடிய புலவர்களின் எண்ணிக்கை 158. அக நானூற்றுப் பாடல்களில் குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம் நெய்தல் என்னும் ஐந்து நிலங்களின் இயல்புகள் விளக்கப்பட்டுள்ளன. ஐவகை நிலங்களுக்கும் உரிய ஒழுக்கங்கள், சிறந்த உவமைகளுடன் தெளிவுறுத்தப்பட்டு உள்ளன. பாடல்கள் சொற்செறிவும் பொருட்செறிவும் நிறைந்தவை.

அகநானூற்றுப் பாடல்களில் ஒற்றை எண் பட வருபவை பாலைத் திணைப் பாடல்களாகும். 2, 8, 12, 18 என, 2, 8

என்னும் எண்களை இறுதியில் பெற்று வருபவை குறிஞ்சியாகவும், 4, 14, 24 என இறுதியில் 4 என்ற எண்ணைப் பெறுபவை முல்லையாகவும், 6, 16, 26 என இறுதியில் 6 என்ற எண்ணைப் பெறுபவை மருதமாகவும், 10, 20, 30 எனப் பத்தாம் பாடல்களாக வருபவை நெய்தலாகவும் அமைந்துள்ளன. அகநானூற்றுப் பாடல்களில் குறிஞ்சித் திணை பற்றியவை 80; பாலைத் திணை பற்றியவை 200; முல்லைத் திணை பற்றியவை 40; மருதம் பற்றியவை 40; நெய்தல் பற்றியவை 40.

அகநானூறு அகப்பாடல்களைக் கொண்ட நூலாக விளங்கிய போதிலும், எண்ணற்ற வரலாற்றுச் செய்திகளை அளிக்கின்ற நூலாகவும் அமைந்துள்ளது. மௌரியர்தம் தமிழ்நாட்டுப் படையெடுப்பு, வடுகர் அவருக்குத் துணையாக நின்றமை அகநானூற்றுப் பாடல்களில் விரிவாகப் பேசப்படுகின்றன. பேரரசர், சிற்றரசர் வரலாறுகளையும், அகநானூற்றுப் பாடல்கள் விவரிக்கின்றன. தமிழக வரலாற்றிற்கு உதவிடும் பலவகைச் செய்திகளையும் காணலாம். அகநானூற்றுப் பாடல்கள் தோன்றிய காலத்தில் தமிழ்நாட்டில் ஆட்சி புரிந்த பேரரசர்கள் பலரும், சிற்றரசர்கள் பலரும் இந் நூலின்கண் இடம் பெற்றுள்ளனர். கங்க அரச மரபினரைப்பற்றியும், தொண்டை மண்டலத்தை ஆண்ட திரையர் பற்றியும் சில பாடல்கள் விவரிக்கின்றன.

பாணர்கள் என்பார்களைப்பற்றி நான்கு அகப் பாடல்களில் காண்கிறோம். அவர்கள் ஆண்ட நாடும், நிலப்பரப்பும் கூறப்பட்டுள்ளன. பெரும்பாணப் பாடி எனக் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுவது அவர்தம் நாடே. சங்க கால ஊராட்சி முறையினை அறிந்திடவும் இந்நூல் உதவுகிறது. இரண்டு அகப்பாடல்கள் சங்க காலத் தமிழரின் திருமணம் குறித்த சமுதாயச் செய்திகளை அளிக்கின்றன. திங்களை, உரோகிணி கூடிய நன்னாளில் திருமணம் நடைபெற்றது. விருந்து அயர்வதும், மங்கல மகளிர் மணமகளை நீராட்டுவதும், வாழ்த்துவதும் அக்கால வழக்கம். சங்க காலத் திருமணத்தில் ஆரியச் சார்பு இல்லையென எடுத்துக் காட்டிட இந்நூற் செய்திகள் உதவுகின்றன.

கண்ணன், யமுனைத் துறையில் நீராடிய கோபியர் ஆடைகளைக் கவர்ந்தமை, முருகன் சூரனைக் கொன்றது, பரசுராமன் மன்னர் மரபை அழித்தது, இராமன் கோடிக்கரையில் பறவைகள் ஒலியை அடக்கியது ஆகிய கதை நிகழ்ச்சிகள் அகநானூற்றுப் பாடல்களில் காணக்கிடக்கின்றன.

**புறநானூறு**

'புறம்' எனப் பொதுவாகக் கூறப்படும் புறநானூறு நானூறு பாடல்களைக் கொண்டது. சங்க காலத்தமிழக அரசியல் வரலாற்றை உருவாக்கிட இந்நூல் பெரிதும் துணைபுரிகிறது. புறநானூறு அறம், பொருள், வீடு ஆகியவற்றைக் குறித்துப் பேசுவதால், பண்டைய தமிழரின் சமய, சமுதாய வரலாற்றை அறிய உதவுகிறது. இந் நூலைத் தொகுத்தவரும் தொகுப்பித்தவரும் யாவரெனத் தெரியவில்லை. இந் நூலின் பாடல்களின் காலத்தை அறிஞர் பெருமக்கள் பெரிதும் விவாதித்துள்ளனர்.

சங்க காலத்தின் இறுதிக் காலம் ஏறத்தாழக் கி.பி. 300 என்பதால் புறநானூற்றுப் பாடல்களின் இறுதிக் கால எல்லையும் அதுவே என்று கருதுகிறோம். இந்திய வரலாற்றுடன் தொடர்புடைய சில நிகழ்ச்சிகள் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளன. பாரதப் போரில் பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் பெருஞ் சோறு அளித்ததைப் புறப்பாடலொன்று தெரிவிக்கிறது. அதனை மாமூலனார் என்ற சங்கப் புலவரும் அகநானூற்றில் குறிப்பிட்டுள்ளார். பாரதப் போர் நடைபெற்ற காலம கி.மு. 1400-800 என்று ஒரு சாராரும், கி.மு. 1000 என்று மற்றொரு சாராரும் கூறுவர். எனவே, பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் காலமும், அவனைப் புறநானூற்றில் பாடிய முரஞ்சியூர் முடிநாகனார் காலமும், பாரதப் போர் நடைபெற்ற கி.மு. 1000 என்று கொள்ளுதல் வேண்டும்.

'அறவோர் மகனே, மறவோர் செம்மால்' என்னும் புறப் பாட்டால், கோதமனார் என்பவரால் பாடப்பெற்ற தருமபுத்திரன் தமிழ்நாட்டு அரசனைத் தெரியவில்லை. இவன் பாண்டவருள் மூத்தவன் என்பதே பொருந்தும். எனவே, இப் புறப்பாட்டில் கண்ட தருமபுத்திரனும், அவனைப் பாடிய கோதமனார் என்ற புலவரும் ஏறத்தாழ கி.மு. 1000-ல் வாழ்ந்தனர் என்றே கொள்ளுதல் வேண்டும். பாரத நிகழ்ச்சிக்குப் பிற்பட்டது இராமாயணம். இதனை வடமொழியில் பாடியவர் வான்மீகி முனிவர். புறநானூற்றில் 358ஆம் பாடலைப் பாடிய வான்மீகி முனிவரும். வடமொழி இராமாயணத்தை இயற்றிய வான்மீகியும் ஒருவரே என்பர். அவ்வாறாயின் புறப்பாட்டில் கண்ட வான்மீகி முனிவர் வாழ்ந்த காலம் சுமார் கி.மு. 600 என்று கொள்ள வேண்டும். புறப்பாட்டில் குடபுலவியனாரால் பாராட்டப்பட்ட நெடியோன் என்பவன், தொல்காப்பியர் காலத்தில் வாழ்ந்தவன் என்று பண்டித இராகவ ஐயங்கார் கூறியுள்ளார்.

தொல்காப்பியர் காலம் கி.மு. நான்காம் நூற்றாண்டு என்று கூறப்பட்டதன் அடிப்படையில் 'நெடியோன்' என்று புறப்பாட்டில் கூறப்பட்டவன் காலமும் அதுவே எனப்படுகிறது. புறநானூற்றின் காலத்தில் சோழ நாட்டை ஆட்சி புரிந்தவர்களுள் ஒருவன் கரிகால் சோழன். இவன் இலங்கைமீது படையெடுத்துப் பன்னிரண்டாயிரம் சிங்களவரைச் சிறைசெய்து சோழ நாட்டிற்கு மீண்டான் என்று இலங்கை வரலாறு கூறுகிறது. கரிகாலன் சேர நாட்டையும் தொண்டை நாட்டையும் வென்று சோழ நாட்டை விரிவுபடுத்தினன்; காவிரிக்குக் கரை கட்டினன். கரிகாலன் ஆண்ட காலம் கி.பி. 75 முதல் கி.பி. 115 வரை எனவும், இலங்கைப் படையெடுப்பு, கி.பி. 111 முதல் கி.பி. 114 வரை எனவும் கருதப்படுகிறது. கரிகாலனோடு கி. பி. 115 முதல் 136 வரை ஆண்ட நெடுமுடிக் கிள்ளி என்ற சோழ மன்னனும் புறநானூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளான்.

பாண்டிய நாட்டில் இதே காலத்தில் அரசு செலுத்தியவன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன். அவன் பாடிய புறப்பாடல் 'உற்றுழி உதவியும்' என்று தொடங்குகிறது. ஏறக்குறையக் கரிகாலனுக்கு முன்னும் பின்னும் வாழ்ந்தவர்களான நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி, மாவளத்தான், கிள்ளி வளவன், கோப் பெருநற் கிள்ளி, இராயசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, வேல்பஃறடக்கைப் பெருவிறல் கிள்ளி, சோழன் நல்லுருத்திரன் ஆகியோரைப்பற்றிப் பாடப்பட்ட பாடல்கள் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளன. கரிகாலனுக்குப் பிற்பட்டவர்களின் காலம் கி.பி. 136 முதல் 300 வரை என்று கூறலாம். எனவே, புறநானூற்றில் அடங்கியுள்ள பாடல்களின் காலம் கி.மு. 1000 முதல் கி.பி. 300 வரை எனக் கருதப்படுகிறது.

புறநானூற்றால் அறியலாகும் செய்திகள் எண்ணிலடங்கா. பாண்டியன் நெடுஞ்செழியன், பூதப்பாண்டியன், சோழன் நலங்கிள்ளி ஆகிய அரசர்கள் உரைத்த சூளுரைகளைப் புறப்பாடலில் காண்கிறோம். அவற்றால் தமிழ் அரசர்கள் ஒழுக்கம் தவறா உயர்நிலையில் வாழ்ந்தமை புலப்படுகின்றது. புறநானூறு வாயிலாகத் தமிழ்ப் புலவர்கள் தம் மதிப்பை இழக்க விரும்பாதவர்கள் எனவும், வறுமையில் வாடினலும் உயர்ந்த பண்பாடு பெற்றிருந்தனர் எனவும், அரசர்கள் அறவழியினின்று தவறுகின்ற காலங்களில் இடித்துரைத்து நல்வழிப்படுத்தினர் எனவும், புலவர்களின் அறிவுரைகளை அரசர்கள் ஏற்றுக்கொண்டனர் எனவும் அறிகிறோம்.

தமிழ்நாட்டு வீரர்கள் போர் ஆர்வம் கொண்டு, தாம் போரிடச் செல்லும் நாடுகள் நெடுந்தொலைவில் இருந்தாலும் மிக்க மகிழ்ச்சியோடு சென்றனர். போரில் இறந்த வீரர்களுக்குக் கல் நடுதல் அக்கால வழக்கம். அக் கல் அனைவராலும் வழிபடப் படும். 'வாழ்க்கையின் இறுதியில் யமன் உயிரைக் கொண்டு செல்வது திண்ணம்; ஆகவே நல்வினைகளைச் செய்யுங்கள்; அவற்றைச் செய்ய முடியவில்லை என்றால் தீவினைகளையாவது செய்யாமல் இருங்கள்,' என்று புறநானூற்றுப் புலவர் ஒருவர் அறிவுரை கூறியுள்ளார். மற்றொரு புலவர் "நல்லவை செய்பவர் துறக்கம் புகுவர். அல்லவை செய்பவர் மாறிப் பிறப்பர்" என்று கூறியுள்ளார். தமிழர்தம் பண்பாட்டின் நிலைக்களமாகவும் இந்நூல் விளங்குகிறது. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற ஒருமைப்பாட்டுத் தத்துவத்தை உலகுக்கு அன்றே அளித்துள்ளது. புறப்பாடல். 'இந்திரனுக்குரிய அமிழ்தம் கிடைப்பதாயினும் தனியே உண்ணக்கூடாது; புகழ் கிடைக்குமாயின், உயிரைக் கொடுத்தேனும் பெறுதல் வேண்டும்; பழி வருமெனின் உலகமே கிடைப்பதாயினும் கொள்ளுதலில்லை, எனப் பண்பாட்டுக் கருத்துக் களை அடுக்கிச் சொல்லி அறிவுறுத்துகின்றது புறநானூறு எனலாம்.

புறநானூற்றுப் பாடல்கள் தோன்றிய காலத்தில் வடமொழி யாளர் செல்வாக்குத் தமிழகத்தில் பரவிவிட்டது எனலாம். அந்தணர்களுக்கு ஊர்களும் செல்வமும் நீர்வார்த்துக் கொடுக்கப் பட்டன. அவர்தம் தூண்டுதலால் தமிழரசர் சிலர் வேள்வி செய்யத் தலைப்பட்டனர். வேள்வியின்போது அந்தணர்க்குப் பொன்னும் பொருளும் வழங்கப்பட்டன. புறநானூற்றில் வட மொழிச் சொற்கள் பலவும் இடம் பெற்றன.

## பத்துப்பாட்டு

"முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி—மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து."

என்னும் பழையவெண்பாவில் பத்துப்பாட்டு நூல்கள் யாவை எனக் குறிப்பிடப்பட்டுள்ளன.

பத்துப்பாட்டின் காலத்தினைக் குறித்த ஆய்வினை மேற் கொள்ளுதல், முதலில் இன்றியமையாத ஒன்று ஆகும். கடியலூர் உருத்திரங் கண்ணனார் என்ற புலவர் கரிகாற் சோழன்மீது

பட்டினப்பாலை என்னும் நூலைப் பாடியுள்ளார். இப் புலவரே தொண்டைமான் இளந்திரையன்மீது பெரும்பாணாற்றுப்படை என்ற நூலினைப் பாடியுள்ளார். ஆகவே, கரிகாற் சோழனும் தொண்டைமான் இளந்திரையனும் ஒரு காலத்தவர் எனலாம். கரிகாற் சோழனின் காலம் கி.பி. முதல் நூற்றாண்டின் இறுதியும் கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் முதற் பகுதியுமெனக் கண்டோம்.

மாங்குடி மருதனார், மதுரைக் காஞ்சி என்ற தம் நூலினைத் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்மீது பாடியுள்ளார். நக்கீரரும் அவன்மீது நெடுநல்வாடை என்னும் நூலைப் பாடியுள்ளார்.

நக்கீரர் அகம் 141ஆம் பாடலில்,

"செல்குடி நிறுத்த பெரும்பெயர்க் கரிகால்
வெல்போர்ச் சோழன்"

என்று குறிப்பிட்டுள்ளார். எனவே, நக்கீரர் என்ற புலவரும் அவரால் பாடப்பட்ட நெடுஞ்செழியனும் கரிகாற் சோழனுக்குப் பிற்பட்டவராவர். மேலும், கரிகாற் சோழனைப் பாடிய எப்புலவரும் நெடுஞ்செழியனைப் பாடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

நன்னன் சேய் நன்னன் என்பவனைப்பற்றி மலைபடுகடாம் என்ற நூலில் பெருங் குன்றூர்ப் பெருங் கௌசிகனார் என்ற புலவர் பாடியுள்ளார்.

மதுரைக் காஞ்சியில்,

"பேரிசை நன்னன் பெரும்பெயர் நன்னாட்
சேரி விழவின் ஆர்ப்பெழுந் தாங்கு"

என்னும் வரிகள் அம் மன்னனைச் சிறந்த கொடைவள்ளல் என்ற கூற்றிற்கு அரண் செய்கிறது. மாங்குடி மருதனார் காலத்திலோ, அதற்குச் சற்று முற்பட்டோ மலைபடுகடாம் பாடப்பட்டது எனல் பொருந்தும்.

பதிற்றுப்பத்திலுள்ள எட்டுப் பத்துகளும் கால முறைப்படி அமைந்துள்ளன. ஐந்தாம் பத்தைப் பரணரும், ஏழாம் பத்தைக் கபிலரும் பாடியுள்ளனர். இவ்விருவரும் பேகனைப் புறப்பாடலில் பாடியுள்ளனர். எனவே, பரணரின் முதுமைக் காலத்தில் கபிலர்

இளைஞராய் வாழ்ந்தார் எனலாம். கரிகாலனின் தந்தை உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னியைப் பாடினுர் பரணர் என்பதால், கரிகாலன் காலத்தே கபிலர் குறிஞ்சிப்பாட்டைப் பாடினுர் என்பது பொருந்தும். புறப்பாடல் ஒன்றில் மதுரைக் காஞ்சிக்குரிய பாண்டியனிடம் தோற்ற யானைக்கட் சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை என்னும் சேர வேந்தனைப் பாடிய பொருந்தில் இளங்கீரனுர், "கபிலன் இன்னுள ஞயின் நன்றுமன்" என்று கூறியுள்ளதால் மதுரைக்காஞ்சி பாடப்பட்ட காலத்தே கபிலர் இல்லை என்பது தெளிவாகிறது. இதுகாறும் கூறிய வற்ருல் கரிகாலன் காலமாகிய கி.பி. 75 முதல் கி.பி. 115 வரை உள்ள காலத்தைச் சேர்ந்த நூல்களாகப் பொருநர் ஆற்றுப்படை, பெரும்பாணுற்றுப்படை, பட்டினப்பாலை, குறிஞ்சிப்பாட்டு ஆகிய நான்கையும் கூறலாம்.

சிறுபாணுற்றுப்படையின் ஆசிரியர் மேலே கூறப்பட்ட புலவர்களுக்குக் காலத்தால் பிற்பட்டவர் என்பது தெளிவாகத் தெரிகின்றது. நல்லூர் நத்தத்தனுர் என்ற ஆசிரியரால் ஓய்மா நாட்டு நல்லியக்கோடன் என்ற சிற்றரசனைப்பற்றியே சிறுபாணுற்றுப்படை பாடப்பட்டுள்ளது. அந் நூலில் கபிலர், பரணர், முடமோசியார், ஔவையார் முதலியவர்களால் பாடப் பட்ட ஏழு வள்ளல்களின் வரலாறு இறந்தகாலச் செய்தியாகக் கூறப்பட்டுள்ளமையே இம் முடிவிற்குக் காரணமாகின்றது.

முல்லைப்பாட்டிலும் நெடுநல்வாடையிலும் மிலேச்சரைப் பற்றிய குறிப்புகள் காணப்படுவதைக் கவனித்தால் நெடுநல் வாடையும் முல்லைப்பாட்டும் ஒன்றை ஒன்று அடுத்துத் தோன்றி யிருக்க வேண்டும் என்று கருதலாம்.

தமிழறிஞர் வையாபுரிப் பிள்ளை, பத்தாம் பத்து யானைக்கட் சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறை பற்றியதாக இருக்க வேண்டும் என்று கருதுகிருர். ஐந்தாம் பத்திற்குரிய செங்குட்டுவனுக்கு இவன் காலத்தால் மிகவும் பிற்பட்டவன். தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், மாந்தரஞ் சேரல் இரும் பொறையைப் போரில் வென்றதாகப் புறநானூற்றுப் பாடல் ஒன்று கூறுவதால், இப் பாண்டியன் நெடுஞ்செழியன், சேரன் செங்குட்டுவனுக்குப் பிற்பட்டவன் எனவும், பதிற்றுப்பத்தின் வைப்பு முறைப்படி இவன் காலம் கி.பி. மூன்ரும் நூற்ருண்டு எனவும் கொள்ளக் கிடக்கின்றது. இஃது ஏற்றுக்கொள்ளப் பட்டால் பாண்டியன் நெடுஞ்செழியனைப்பற்றிப் பாடப்பட்டுள்ள நெடுநல்வாடையும் மதுரைக்காஞ்சியும், நெடுநல்வாடை பாடிய

நக்கீரரால் இயற்றப்பட்ட முருகாற்றுப்படையும், நப்பூதனாரால் பாடப்பட்ட முல்லைப்பாட்டும் கி.பி. மூன்றும் நூற்றாண்டில் தோன்றி இருக்க வேண்டும்; சிறுபாணாற்றுப்படை கி.பி. மூன்றும் நூற்றாண்டின் இறுதியில் செய்யப்பட்டதாதல் வேண்டும்.

பத்துப்பாட்டு என்ற பெயரே, அத்தொகைநூலில் உள்ளன பத்துப்பாட்டுகள் என்பதைக் காட்டுகின்றன. அவற்றுள் அகப் பொருள் பற்றியவை முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப் பாலை ஆகிய மூன்றுகும். நெடுநல்வாடை அகமும் புறமும் விரவி வந்த நூலாகும். மதுரைக்காஞ்சி நிலையாமையை உணர்த்தும் புறத்திணைப் பாடலாகும். மற்ற ஐந்து பாட்டுகளும் புறப் பொருளைச் சார்ந்த ஆற்றுப்படை வகையினைச் சார்ந்தவை. பத்துப்பாட்டில், அக் காலத் தமிழரின் பீடுமிகு வாழ்வினைக்கண்டு இன்புறுகிறோம். பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள்,

> ‘பத்துப்பாட் டாதிமனம் பற்றினர் பற்றுவரோ
> எத்துணையும் பொருட்கிசையு மிலக்கணமில் கற்பனையே’

என்று பாடினர்.

### திருமுருகாற்றுப்படை

பத்துப்பாட்டில் முதற்பாட்டாக அமைந்த முருகாற்றுப்படை மற்ற ஆற்றுப்படை நூல்களினின்றும் தனித்த சிறப்புடன் அமைந்துள்ளது. ஏனைய ஆற்றுப்படை நூல்கள் பொருட்செல்வம் விரும்பிய புலவர்களால் பாடப்பட்டிருக்கவும், முருகாற்றுப்படை ஒன்றே, அருட் செல்வம் காரணமாகப் பாடப்பட்டுள்ளது. இந் நூலில் முருகன் கோயில் கொண்டுள்ள இடங்களான திருப்பரங் குன்றம், திருச்சீரலைவாய், திரு ஆவினன்குடி, திரு ஏரகம், குன்றுதோறாடல், பழமுதிர்ச்சோலை ஆகியவை குறிப்பிடப் பட்டுள்ளன.

### பொருநராற்றுப்படை

சோழன் கரிகாலனிடம் பரிசில் பெற்று மீண்டு வந்த பொருநன் ஒருவன், பரிசில் பெறக் கருதிய பொருநன் ஒருவனை வழியிற் கண்டு அவனைக் கரிகால் சோழனிடம் ஆற்றுப்படுத்தி, இந் நூல் பாடப்பட்டு உள்ளது. இந் நூல் ஆசிரியர் முடத்தாமக் கண்ணியார் என்ற பெண்பாற் புலவராவார். வரலாற்றுச் செய்திகள் பொருநராற்றுப்படையில் இடம் பெற்றுள்ளன.

'உருவப் பல்தேர் இளையோன் சிறுவன்'

'தாய்வயிற் றிருந்து தாயம் எய்தி'

'இருபெரு வேந்தரும் ஒருகளத் தவிய
வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்றாள்
கண்ணார் கண்ணிக் கரிகால் வளவன்'

என்னும் அடிகள் கரிகாலனின் இளமை நிகழ்ச்சிகளையும், வெண்ணி என்ற இடத்தில் சேர பாண்டியர்களை ஒருங்கே வென்று வாகை சூடியமையையும் அறிவிக்கின்றன.

**சிறுபாணாற்றுப்படை**

சீறியாழ் வாசித்த பாணன் ஒருவனைப் பரிசில் பெற்ற சிறுபாணன் ஓய்மா நாட்டு நல்லியக்கோடனிடம் ஆற்றுப் படுத்தியதாக இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் என்னும் புலவரால் பாடப்பட்டது. இந்நூல் ஆசிரியர் வளர்ச்சி குன்றி வளமிழந்து கிடந்த தமிழகத்தை இங்குக் காட்டுகின்றார். செங்குட்டுவனும், நெடுஞ்செழியனும், கரிகால்வளவனும் மறைந்த பின்னர் தமிழகம் அடைந்த இழப்பையும், தன்னிலை தாழ்ந்த தன்மையினையுமே இந்நூலில் காண்கின்றோம். வாழ்வு தேடி வரும் பாணன் மூவேந்தர்களையும் நாடிப் பரிசில் பெறாது, கடையெழு வள்ளல்களையும் நினைந்து, அவர்களும் மறைந்துவிட்டமையால் வருந்தி, முடிவில் தொண்டை நாட்டில் ஒரு பகுதியில் அரசாண்ட நல்லியக்கோடனிடம் சென்று, பரிசில் பெறுவதாக இப் பாடல் அமைந்துள்ளது. வளமான தமிழகம் ஏறக்குறைய கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் வறுமையின் எல்லையை நோக்கிச் செல்லத் தொடங்கிவிட்ட கொடுமையையே இவ் ஆற்றுப் படையில் காண்கிறோம்.

**பெரும்பாணாற்றுப்படை**

கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்பவரால் பாடப் பட்டது இந் நூல். காஞ்சி நகர மன்னனை தொண்டைமான் இளந்திரையனிடம் பரிசு பெற்ற பெரும்பாணன் ஒருவன், பரிசில் பெற விரும்பிய மற்றொரு பெரும்பாணனை அத் தொண்டைமானிடம் ஆற்றுப்படுத்திப் பாடப்பட்ட நூலாக இது அமைந்துள்ளது. இதில் யாழின் வருணனை, இளந்திரையன் ஆட்சியின் சிறப்பு, மாமல்லபுரச் சிறப்பு, இளந்திரையன் வீரம் முதலியன நன்கு விளக்கிக் கூறப்பட்டுள்ளன

### முல்லைப்பாட்டு

பண்டைத் தமிழ்க்கவிஞர் தம் செய்யுளிடத்துப் பொருந்தியப் பொருளை ஆராய்கின்றபோது முதற் பொருள் எனவும், கருப்பொருள் எனவும் உரிப்பொருள் எனவும், பாகுபடுத்திக் கூறுவர். சங்க இலக்கியங்களில் முதல், கரு, உரிப்பொருள்கள் சிறப்பாகப் போற்றப்பட்டுள்ளன. முதற்பொருள் எனப்படுவது நிலமும் பொழுதுமாகும். கருப்பொருள் என்பது தெய்வம் முதலான பலவாகும். உரிப்பொருள் என்பது ஒழுக்கமாகும். ஒவ்வொரு திணைக்கும் இம் மூன்று பொருள்களும் உரியன ஆகும். முல்லைத் திணைக்கு உரிய உரிப்பொருள் இருத்தல் எனப்படும். முல்லைப்பாட்டின் தொடக்கத்தில் கார்காலத்தில் வரவும், அது கண்டு தலைவனைப் பிரிந்த தலைவியைப் பெருமுது பெண்டிர் தேற்றவும் தேற மாட்டாதவளாய் வருந்தி நிற்கும் தோற்றமும், பின்னர்ப் பாடி வீட்டில் போர்மேற் சென்ற தலைவனின் இருப்பும், ஆண்டு நிகழும் செயல்களும் கூறப் பெற்றுள்ளன. இறுதியில் தலைவன் தான் மேற்கொண்ட வினையில் வெற்றி பெற்றுத் திரும்பி வரும் தேரோசை, பிரிவுத் துயரால் நலிந்து கிடந்த தலைவியின் செவி குளிர ஆரவாரித்தலும், கார் கால வருணனையும், முல்லை நிலத்தின் இயல்பும் அழகுறக் கூறப் பட்டுள்ளன. ‘வஞ்சிதானே முல்லையது புறனே’ என்ற தொல் காப்பியச் சூத்திரப்படி முல்லை என்னும் அகத்திணைக்கு இயைந்த புறவொழுக்கமான ‘வஞ்சி’ இம் முல்லைப்பாட்டின் இடையில் அமைவுறப் பொருந்தி வருகிறது. காவிரிப்பூம்பட்டினத்துப் பொன் வணிகனார் மகனார் நப்பூதனார் தாம் இயற்றிய முல்லைப்பாட்டிலே முல்லைத் திணைக்கு இயைந்த முதல், கரு, உரிபொருள்களையும், அதற்கு இயைந்த புறவொழுக்கமான வஞ்சித் திணையினையும் பொருளும் பொருத்தமும் சிறக்க அமைத்துள்ளார்.

### மதுரைக்காஞ்சி

பத்துப்பாட்டிலேயே நீண்ட அடிகளைக் கொண்டது மதுரைக் காஞ்சியாகும். இந் நூலில் 782 வரிகள் உள்ளன. மாங்குடி மருதனார் என்ற புலவரால் பாடப்பட்ட இந் நூல் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுக்கு, வீடு பேறு நிமித்தமாகப் பலவகை நிலையாமைகளை எடுத்துக் கூறுவதன் வாயிலாகப் பாடப்பட்டது. இந்நூலில் நெடுஞ்செழியனின் படையெடுப்பு, போர்ச் செயல்கள், பகைவர் நாடுகளை அழித்தல், இரு பெரு வேந்தரையும் ஐம்பெரு வேளிரையும் வெற்றி கொள்ளல், பரதவரை அடிப்படுத்தல், பகைவர் நாட்டுப் பொருட்களை நாட்டோர்க்கும் புலவர்க்கும் வழங்குதல் முதலிய செய்திகள் இடம்

பெற்றுள்ளன. பாண்டியனின் முன்னோர்களின் அருஞ்செயல் களும், பாண்டிய நாட்டின் ஐந்திணை வளங்களும், மதுரையின் பல்வகைச் சிறப்புகளும் விவரிக்கப்பட்டுள்ளன. மன்னன் நாட் காலையில் வீரர்க்கும் பரிசிலர்க்கும் களிறு முதலியவற்றை வழங்கு தலும், அரசன் மேற்கொள்ள வேண்டிய கடமைகளும், இறுதியில் கூறப்பட்டுள்ளன. வானநூற் குறிப்புகளும் இந்நூலின்கண் காணப்படுகின்றன.

**நெடுநல்வாடை**

பகைமேற் சென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைப் பிரிந்து வருந்தும் கோப்பெருந்தேவிக்கு அவ்வருத்தம் நீங்கும்படி, அவன் பகையை வென்று விரைவில் வருவானாக என்று கொற்றவையைப் பரவி ஒருத்தி கூறுவதாக நக்கீரரால் பாடப்பட்டது. இந்நூல் தலைவனைப் பிரிந்து வருந்தும் தலைவிக்கு ஒரு நாள் ஓர் ஊழிபோல் நெடிதாகத் தோன்றுவதால் 'நெடு' என்ற அடையினையும், தலைவன் இல்லத்தை விட்டு நீங்கிக் கடமையே கண்ணாக இருப்பதால் 'நல்' என்ற அடையினையும் பெற்று நெடுநல்வாடை என்றாயிற்று. அக்காலக் கட்டடக் கலையைப்பற்றிய குறிப்பொன்று இந் நூலில் காணக் கிடக்கின்றது. நூலறி புலவர் எங்ஙனம் அரண்மனைக்கு அடி கோலினர்; எங்ஙனம் அமைத்தனர் என்ற செய்திகள் விரி வாகக் கூறப்பட்டுள்ளன. மலர்கள் மலர்வதைக் கொண்டு, நாளின் கால அளவினை நிர்ணயிப்பதை இந்நூல் கூறுகின்றது.

**குறிஞ்சிப்பாட்டு**

ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ்ப் பண்பாட்டினை அறிவித்தற்பொருட்டு கபிலர் இதனைப் பாடினார் என்பர். குறிஞ்சி ஒழுக்கம்பற்றிப் பாடப்பட்ட பாட்டு குறிஞ்சிப்பாட்டு எனவாயிற்று. களவு வாழ்க்கையில் தலைவிக்கு அமைந்த காவல், தலைவன் வரும் வழியிலுள்ள கேடுகள், அவள் பாங்கிக்கு அறத்தொடு நிற்றல், பாங்கி அதனைச் செவிலிக்கு நயம்பட உரைத்தல் என்ற முறையில் இந்நூல் அமைந்துள்ளது. குறிஞ்சி நிலத்து மலர்களாகத் தொண்ணூற்றொன்பது மலர்கள் இதில் குறிப்பிடப்பட்டுள்ளன. குறிஞ்சிநிலச் சிறப்பு இங்கு விவரிக்கப் பட்டுள்ளதையும் காண்கிறோம். தமிழகக் காதல் மரபை இந்நூல் அறிவிக்கின்றது எனின் மிகையன்று.

**பட்டினப்பாலை**

காவிரிப்பூம்பட்டினத்தைச் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ள பாலைத்திணைப் பாடலான பட்டினப்பாலை என்பது காதல் பாடலே ஆகும். கடியலூர் உருத்திரங்கண்ணனார் இதனைப்

பாடியுள்ளார். தலைவியை விட்டுப் பொருளீட்டப் பிரிந்து செல்லக் கருதிய தலைவன், 'புகழ் மிக்க காவிரிப்பூம்பட்டினத்தைப் பெறுவதாயினும் என் மனைவியைப் பிரிந்து வாரேன்' என்று கூறிச் செலவு தவிர்ந்ததாக இப் பாடல் அமைந்துள்ளது. இப்பாட்டில் காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பு, கரிகாற் சோழனின் வீரச் செயல்கள், காவிரியின் சிறப்பு, சோழ நாட்டுக் குடிவளம், பரதவர் செயல்கள், வணிகரின் நல்லியல்புகள் முதலியன விவரிக்கப்பட்டு உள்ளன.

**மலைபடுகடாம்**

மலைக்கு யானையை உவமித்து அதன்கண் பிறந்த ஓசையைக் 'கடாம்' என்று சிறப்பித்தமையால் இந் நூல் மலைபடுகடாம் என்ற பெயரைப் பெற்றது. இது கூத்தராற்றுப் படை எனவும் வழங்கப்படும். இது இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகன் என்பவரால் பாடப்பட்டது. செங்கண்மாத்துவேள் நன்னன் சேய் நன்னன் என்பவனிடம் பரிசில் பெற்ற கூத்தன் ஒருவன் பரிசில் பெற வரும் கூத்தனை அவ் வேளிடம் ஆற்றுப்படுத்தியதாகப் பாடப்பட்டது. நன்னன் நாட்டு மலை, மலைமீது பாய்ந்தோடும் சேயாறு, செங்கண்மா என்னும் நகர், மலை அடிவார ஊர்கள், காடுகள், மக்களின் இயல்புகள், ஆங்குக் கிடைக்கும் உணவு வகை, நன்னனது கொடைத் திறன் ஆகியவை இப்பாட்டில் இடம் பெற்றுள்ளன. இசையைப் பற்றியும், இசைக் கருவிகளைப்பற்றியும் இந் நூல் விரிவாகக் கூறுகின்றது. முழவு, சிறுபறை, ஊதுகொம்பு, யானையின் துதிக்கை போன்ற நெடுவங்கியம், சிறுவங்கியம், குழல், கரடிகை, சல்லிகை, கிணைப்பறை முதலிய இசைக்கருவிகள் குறிக்கப் படுகின்றன.

பத்துப்பாட்டுள் 'மலைபடுகடாம்' என்னும் நூல், ஆரியர் வருகைக்கு முன்னரும், தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரும் இயற்றப்பட்டதாக டாக்டர் சி. இலக்குவனார் குறிப்பிட்டுள்ளார் அதற்கு அவர் கூறும் காரணங்கள் இவையே.

ஒன்பது என்னும் எண்ணினைக் குறிக்கும் தொண்டு என்னும் சொல், தொல்காப்பியர் காலத்தில், வழக்கில் வீழ்ந்துவிட்டாலும் 'தொடித்திரி வன்ன தொண்டுபடு திவவின்' என அச்சொல் மலைபடுகடாத்தில் வந்துள்ளது. புதிய யானையைப் பழக்குங்கால் யானைப்பாகர் வடமொழிச் சொற்களைக் கூறிப் பழக்கியதாக முல்லைப்பாட்டில் கூறப்பட்டுள்ளது. ஆனால், மலைபடுகடாம் நூலில் 'வீரவுமொழி பயிற்றும் பாகர் ஓதை' என்று கூறப்படுவ

தால் தமிழ்ச் சொற்களில் இன்ன ஓசையுடையனவற்றைக் கலந்து கூறி யானைகளை அச்சுறுத்தினர் என்பதை அறிகிறோம்.

ஆரியப் பழக்க வழக்க நாகரிகங்களைப்பற்றிய குறிப்பு யாதொன்றும் மலைபடுகடாம் என்னும் நூலில் இல்லை. மூவேந்தர் களைப்பற்றிய குறிப்பு யாதொன்றும் இதில் காணப்படவில்லை. ஆகவே, பெருநிலந் தோன்றாத மிகப் பழங்காலத்தில் இந்நூல் இயற்றப்பட்டிருக்க வேண்டும். திணை நிலங்களைப்பற்றி இந் நூலில் கூறப்படுகின்ற இடங்களில் தொல்காப்பியத்தில் கூறப் பட்டுள்ள திணைநிலக் கடவுள்பற்றியோ, ஆரியச் சார்பால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கடவுள்பற்றியோ கூறப்படவில்லை. தொல்காப்பியர் கூறும் ஆற்றுப்படை இலக்கணத்திற்கு ஏற்ப இந்நூலைக் கூத்தராற்றுப்படை என்னாது 'மலைபடுகடாம்' என்று அழைத்ததும் ஒரு சான்றாகும். இந் நூலை இயற்றிய ஆசிரியரின் பெயர் கோசிகன் என்பதே; கௌசிகனன்று. கோசிகம் என்பது தமிழ்ச்சொல். ஆகவே, மலைபடுகடாம் ஆசிரியர் வருகைக்கு முன்னர் இயற்றப்பட்டது என்று கூறுதல் வேண்டும் என்பர்.

## பதினெண் கீழ்க்கணக்கு

கீழ்க்கண்டவை பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் ஆகும். (1) நாலடியார், (2) நான்மணிக்கடிகை, (3) இனியவை நாற்பது, (4) இன்னா நாற்பது, (5) களவழி நாற்பது, (6) கார் நாற்பது. (7) ஐந்திணை ஐம்பது, (8) ஐந்திணை எழுபது, (9) திணைமொழி ஐம்பது, (10) திணைமாலை நூற்றைம்பது, (11) திருக்குறள் (முப்பால்), (12) திரிகடுகம், (13) ஆசாரக்கோவை, (14) பழமொழி, (15) சிறுபஞ்சமூலம், (16) முதுமொழிக்காஞ்சி, (17) ஏலாதி, (18) கைந்நிலை.

"நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகம் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைய காஞ்சியோ டேலாதி யென்பவே
கைந்நிலையொ டாம்கீழ்க் கணக்கு"

என்னும் வெண்பா கீழ்க்கணக்கு நூல்களைக் குறிக்கும்.

எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் அகம், புறம் என்ற மரபினைப் பெற்று இயற்கையோடு இயைந்த வாழ்வினைக் காட்டு வதாய் அமைந்தவை; இப் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களோ பெரும்பாலும் நீதியினை எடுத்துக் கூறுவனவாய் அமைந்துள்ளன. எவ்வெக்காலத்துச் சமுதாயத்தில் தேக்கங்கள் ஏற்பட்டனவோ

அவ்வக்காலத்தே அவற்றை நீக்க நீதிநெறி முறைகளும் தோன்றின எனலாம்.

இந்நிலைக்குக் காரணம் தமிழ்நாட்டில் ஏற்பட்ட அரசியல் குழப்பமேயாகும். மூவேந்தரின் வலுவான ஆட்சி கி.பி. 3ஆம் நூற்றாண்டில் சரிந்தது. கி.பி. 3ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் களப்பிரர்களும் பல்லவர்களும் முறையே சோழ, பாண்டிய நாடுகளையும், நடு நாடு, தொண்டை நாடுகளையும் கைப்பற்றினர் என்பதை வரலாற்றுச் சான்றுகள் மெய்ப்பிக்கின்றன.[1]

இக் களப்பிரர்களும் பல்லவர்களும் வேற்றுமொழிச் சார்பினராயும் வேற்றுச் சமயத்தைச் சார்ந்தோராயும் வாழ்ந்தவர்; வடமொழி, பாலி, பிராகிருதம் போன்ற மொழிகளை ஆதரித்தவர். தமிழும், தமிழ்க்கலைகளும், தமிழ்ப்பண்பாடும் இவர்களால் சீர் குலைந்திருக்க வேண்டும். எனவேதான், கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் முதற்பகுதி முதல் கி.பி. ஆறாம் நூற்றாண்டின் இறுதி வரைக்குட்பட்ட இக் காலப்பகுதி தமிழக வரலாற்றின் இருண்ட காலம் என்றழைக்கப்படுகிறது.

அன்னிய ஆட்சியில் தமிழகம் சீர்குலைந்த நிலையில் எழுதப்பட்ட நூல்களே இந் நீதி நூல்கள் எனலாம். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் கார் நாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, கைந்நிலை, களவழி நாற்பது ஆகிய ஆறு நூல்களும் திணை பற்றி அமைந்தவை. முன்னவை ஆறும் அகத்திணைக் கருத்துக்களை கூற, களவழியோ போர்பற்றிய புறத்திணைப் பாடலாகும்; தவிர திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை, இனியவை நாற்பது, இன்னா நாற்பது, திரிகடுகம், ஆசாரக்கோவை, சிறுபஞ்சமூலம்,பழமொழி, முதுமொழிக்காஞ்சி, ஏலாதி ஆகிய இப் பதினொன்றும் நீதி நூல்களாகும்.

இப் பதினொன்றில் திருக்குறளும் நாலடியாரும் தனியே வைத்தெண்ணப்படும் சிறப்பும் தலைமையும் வாய்ந்தவை ஆகும். பாட்டின் குறுகிய அளவால் பதினென்கீழ்க்கணக்கு நூற்றொகுதியில் திருக்குறள் சேர்க்கப்பட்டிருப்பினும், காலத்தால் ஏனையவற்றைக் காட்டிலும் முந்தியது எனல் வேண்டும்.

திருக்குறள் தமிழ்மறை என்று அழைக்கப் பெறும் சிறப்பு வாய்ந்தது. அகம், புறம் என்ற தமிழர் பாகுபாட்டைத் தழுவாது

[1] The Pallawas by G. J. Dubreuil, p. 10.
Administration and Social Life under the Pallawas, by Dr.C. Meenakshi.

அறம், பொருள், இன்பம் எனத் தம் நூலை வகுத்துக் கொண்டமை யின், வடமொழிச்சார்பு இந் நூலில் மிகுதி என்பர்; ஆயின் அதற்கு மாறுன நிலையையே நூலுள் காண்கிறோம். வடநூற் கருத்துகளை மறுத்துத் தம் நூலில் யாண்டும் தமிழர்தம் பண் பாட்டுக் கருத்துகளையே திருவள்ளுவர் கூறிச் செல்லுதலைக் காணலாம்.

மக்களின் வாழ்க்கைமுறை, இல்லறம், துறவறம் எனக் குறிக்கப்படுகின்றதே தவிர, வடமொழிப் பாகுபாடான பிரம்மச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சன்னியாசம் என்ற பகுப்பு இந்நூலில் இல்லை.

'அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணுமை நன்று'

என்ற குறளில் அவிப்பலி கொடுக்கும் யாகமுறையினைக் கண்டிக் கின்றார். மானத்தை இழந்து வாழ்தல் கூடாது என்ற கருத்தை அறிவிக்குமுகத்தால்,

'இன்றி அமையாச் சிறப்பின ஆயினும்
குன்ற வருப விடல்'

எனக் கூறுகிறார். இக் குறளுக்கு உரை கூறும் பரிமேலழகர் 'இறப்ப வருவழி இளிவந்தன செய்தாயினும் உய்கவென்னும் வடநூல் முறைமையை மறுத்து, உடம்பினது நிலையின்மையையும், மானத்தினது நிலையுடைமையையும் தூக்கி அவை செய்யற்க என்பதாம்' என அறிவிக்கின்றார்.

'ஈன்றாள் பசிகாண்பா ளாயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை'

என்ற இடத்தும் பரிமேலழகர் கூறும் கூற்று அறிந்து சிந்திக்கற் பாலது. இக்குறளில் வள்ளுவர் 'ஆரிய அறநூற் பொது விதி வினைத் தூய்மையுடையார்க்கு எய்தாமை உரைத்தார்' என்பதை எடுத்துக்காட்டி, அறநூற் பொது விதியாவது 'இறந்த மூப்பினராய இருமுதுகுரவருங் கற்புடை மனைவியுங் குழவியும் பசியான் வருந்தும் எல்லைக்கண் தீயன பலவுஞ் செய்தாயினும் புறந்தருக என்பதாம்' எனப் பரிமேலழகர், ஆரியக் கருத்தை எடுத்துக்காட்டி, வள்ளுவர், அதை மறுத்துரைத்தலையும் நன்கு விளக்குகிறார்.

சாணக்கியர், சுக்கிரர் முதலானோரைக் கண்டே வள்ளுவர் தம் நூலைச் செய்தார் என்பர் சிலர்; ஆயின் அவர்களோ தத்தம் நூலில் கள்ளினைச் சிறிதளவு உண்ணலாம் எனக் கூறியுள்ளனர். அளவாக உண்ணும் கள் மதிநுட்பத்தையும் மன உறுதியையும் தரும் எனக் கூறியிருப்பவும், வள்ளுவரோ கள் உண்ணுதலை அறவே கடிகின்றார்.

இங்ஙனம் அவரது நூற்கருத்துகளை நோக்குமிடத்து, வடநூற் கருத்துகளை வள்ளுவர் அறிந்திருந்தாரேனும், அவற்றை மறுத்தே உரைத்துச் செல்கின்றார் என்பது தெளிவாகும்.

**நாலடியார்**

கீழ்க்கணக்கு நூல்களில் குறளைப் போலவே சிறப்பு வாய்ந்தது நாலடியார் ஆகும்.

'பழகுதமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்'

என்ற ஔவைக் கூற்றும்,

'நாலுமிரண்டும் சொல்லுக்குறுதி'

என்ற பழமொழியும் இந்நூலின் சிறப்பை அறிவிப்பன.

திருக்குறளைப் போலவே அறம், பொருள், இன்பம் என்ற பகுப்பு முறையை உடையது. செல்வம், இளமை, யாக்கை நிலையாமை குறித்தும், அறன் வலியுறுத்தல், தூய்மை, துறவு, சினமின்மை முதலான நீதிகள் குறித்தும் இந் நூல் பேசுகின்றது, செல்வத்தின் நிலையாமையும், கல்வியின் மேன்மையும் அழகாகக் காட்டப்பட்டுள்ளன; கற்புடைப் பெண்டிரின் உயர்வும், பொருட் பெண்டிரின் தாழ்வும் விளக்கப்பட்டுள்ளன.

**சிலம்பும் மேகலையும்**

சங்கம் மருவிய நூல்களென அழைக்கப்படும் சிலம்பும் மேகலையும் இரட்டைக் காப்பியங்கள் எனப் பேசப்படுகின்றனவே தவிர, காலத்தால் சிலம்பு சிறிது முன்பும், மேகலை சிறிது பின்புமாக இயற்றப்பட்டிருக்க வேண்டும். சிலம்பு, நாட்டு ஒற்றுமையைக் கூறும் காப்பியமாகவும், சமய ஒருமைப்பாட்டை அறிவிக்கும் உன்னத நூலாகவும் விளங்க, சமயக் காழ்ப்பை முதன்முதலாக அறிவிக்கும் நூலாக மேகலை விளங்குகின்றது. அதற்குக் காரணம் சமய ஒருமைப்பாடு விளங்கிய சங்க காலத்தை யொட்டிச் சிலம்பும், களப்பிரர்களின் ஆதரவை யொட்டி மேகலையும் தோன்றியமையே எனலாம். காப்பிய

இலக்கணம் பெற்ற சிறந்த நூலாகமட்டுமன்றி, பண்டைத்தமிழரின் வாழ்வியல் முறைகளையும் கலைகளின் வளர்ச்சியையும் காட்டும் கருவூலமாகச் சிலப்பதிகாரம் விளங்குகின்றது.

## தொல்பொருள் ஆய்வு
### (Archaeology)

பழந்தமிழ் நாட்டின் சிறப்பு மிக்க இடங்களை இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறையினரும், தமிழகத் தொல்பொருள் ஆய்வுத் துறையினரும் ஆய்வு செய்து அவை குறித்த விளக்கங்களை அளித்துள்ளனர். இந்த ஆய்வுகள் சங்க கால வரலாற்றிற்குப் பெரிதும் துணைபுரிகின்றன. தொல்பொருள் ஆய்வு, இலக்கிய ஆதாரங்களில் காணப்படும் செய்திகளைச் சரி பார்த்திட உதவுகின்றது. இவ்வாறு ஒப்புநோக்கிச் சரி பார்ப்பதன் விளைவாக ரோம் நாட்டிற்கும் தமிழகத்திற்கும் இடையே நிலவிய வாணிக உறவு, சங்க இலக்கியத்தின் காலம், அக்காலத்திய நிகழ்ச்சிகள், நிலைமைகள் ஆகியவை அவ்விலக்கியங்களில் குறிப்பிடப் பட்டு இருப்பதை உறுதி செய்கின்றன. 894.811A09

பல்லவர்க்கு முற்பட்ட கட்டடங்களின் அமைப்பு, சிற்பக்கலை, ஓவியம் ஆகியவை குறித்த திடமான ஆதாரங்கள் இல்லை. சங்க காலத் தமிழகத்தின் கலை அழிந்தமைக்கு மதுரையின் அழிவு, புகாரின் முழு மறைவு ஆகியவை எடுத்துக்காட்டு எனலாம். அக்காலத்தில் கலை தலைநகரிலேயே வளர்ந்தது. தலைநகருடன் கலையும் அழிந்துவிட்டதால் கலைச் சிறப்பினை விளக்கும் ஒரு சிறு ஆதாரமும் இல்லை எனினும் இலக்கியங்கள் மட்டும் அவற்றை வெளிப்படுத்துகின்ற விதத்தில் தப்பிப் பிழைத்துள்ளன. கலைப் படைப்புகள் அழிந்தபோதும் பரம்பரைக் கலை உணர்வு அழிந்துவிடாமல் மக்களிடையே நிலவியதால் மக்களை இந்த மண்ணின் கலைப் பண்பைக் காத்துவரச் செய்துள்ளது. தொல் பொருள் ஆய்வு என்ற தலைப்பினை மேலும் மூன்று பிரிவுகளாகக் கல்வெட்டுகளும் பட்டயங்களும், காசுகள், நினைவுச் சின்னங்கள் என்று பிரித்து அறியலாம்.

#### பட்டயங்களும் கல்வெட்டுகளும் (Inscriptions)

பட்டயங்கள், நம்பத்தக்க உறுதியான வரலாற்றை அளிப்பவை என்பதில் ஐயமில்லை. ஆனால், இந்திய வரலாற்றை அறிய பட்டயங்கள் உதவுகின்ற அளவிற்குத் தென்னிந்தியாவின் பண்டைய வரலாற்றினை அறிந்திட அதிலும் சங்ககால வரலாற்றை அறிந்திடப் பட்டயங்கள் பெருமளவில் உதவிடவில்லை என்றே கூறவேண்டியுள்ளது.' ஏனென்றால், சங்க

காலத்திய உள்நாட்டுக் கல்வெட்டு ஆதாரங்கள் ஏதும், பிற சான்றுகளிலிருந்து கிடைத்தவற்றை உறுதி செய்யத்தக்க அளவிற்கு இல்லை என்று கூறலாம். தமிழகத்திலுள்ள பட்டயங்களில், முந்தைய பட்டயங்கள் குகைகளில் காணப்படும் சிறிய பட்டயங்கள் ஆகும். பாறைகளில் செதுக்கப்பட்ட அப் பட்டயங்களில் செதுக்கியவர்களின் பெயரோ அங்கு வாழ்ந்தவர்களின் பெயர்களோ காணப்படுகின்றன. இவை எவ்வகையிலும் பயன் விளைவிப்பவை ஆகா.

மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றத்தில் உள்ள சமணப் படுக்கையிலும், கீழ்க்குயில்குடி, நாகமலை, ஆனைமலை முதலான இடங்களிலும், சிற்றண்ணல் வாயிலில் உள்ள மலையிலும் மிகப் பழைமை வாய்ந்த சங்க காலத்தைச் சார்ந்தவை என்று கருதத் தக்க கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. அவற்றை வாசித்தறிந்த போதும் இப்படுக்கைகள், எவ்வகையில் சமண, பௌத்த முனிவர்களோடு தொடர்பு கொண்டவை என்பது அறிய இயலவில்லை. சில கல்வெட்டுகளை ஈண்டுக் காணுதல் மேலும் இக்கருத்து உறுதி பெற உதவும்.

திருப்பரங்குன்றத்தில் மலையிலுள்ள சமணப் படுக்கையில் காணப்படும் வாசகத்தினைக் கொண்டு, அங்குள்ள கற்படுக்கைகளை, அந்துவன் என்பான் வழங்கினனென அறிய முடிகிறது. நம்மால் அந்த அந்துவன் யார் என்பதை அறிய முடியவில்லை. இக் கல்வெட்டில் 'அந்துவன் கொடுபிதவன்' என்று கூறப்பட்டுள்ளது. இந்தக் கல்வெட்டில் குறிப்பிடப்பெற்றவன் பரிபாடலில் காணப்படும் நல்லந்துவனாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

இக் குகைகளில் வாழ்ந்தவர்கள் தொல்காப்பியம் குறிப்பிடுகின்ற, சுற்றித் திரிகின்ற ஆண்டிகளான அறிவு சான்றோர்கள் அல்லது அறிவர்கள் எனப்பட்டோர் இக் குகைகளைப் பயன்படுத்தி இருக்கக்கூடும். இப் பட்டய மொழி 'தமினி' எனப்படுகிறது. பிராமி வரி வடிவத்தில் எழுதப்பட்ட தமிழ்மொழி ஆகும். இவ்வரி வடிவம் பிராமி வரி வடிவமே என்றும், தமிழ் வரி வடிவமே என்றும் விவாதத்திற்குரியதாக இருந்து வருகிறது. முப்பதிற்கு மேற்பட்ட இத்தகைய கல்வெட்டுகள் மேலும் ஆராய்தலுக்குரியன.

இனித் தமிழகத்தில் உள்ள தமிழரின் கல்வெட்டுகள், பட்டயங்களைத் தவிர வேறு பட்டயங்கள் எவ்வகையில் உதவுகின்றன என்று காண்போம்.

**அசோகரின் பட்டயங்கள்:** சித்தபுரம், பிரம்மகிரி மாஸ்கி, எர்ருகுடி ஆகிய இடங்களில் தென்னிந்தியாவில் அசோகரின் பட்டயங்கள் கிடைத்துள்ளபோதிலும், அவை தமிழகத்தில் இல்லாமையால் அத்துணை முக்கியத்துவம் பெறமாட்டா. அசோகரின் மைசூர்ப் பட்டயங்கள்கூடத் தமிழக வரலாற்றிற்கு உதவக்கூடியனவாக இல்லை. கி.மு. மூன்றும் நூற்றாண்டின் இடைப் பகுதிக்குரிய அசோகரின் இரண்டாம் பாறைக் கல்வெட்டி லிருந்து, நாம் அறியக்கூடிய செய்தி ஒன்றே ஒன்றுதான் எனலாம்.

**ஹாதிகும்பாப் பட்டயம்:** கலிங்க தேசத்துக் காரவேல மன்னனின் ஹாதிகும்பாப் பட்டயத்தில், கலிங்கத்தின் பாதுகாப் பிற்கு இடையூறாக விளங்கிய தமிழக அரசுகளின் கூட்டணிபற்றிக் கூறப்பட்டு உள்ளது. இதற்கு 113 ஆண்டுகளுக்கு முன்னர் இக் கூட்டணி காணப்பட்டது. இப் பட்டயத்தில் காணப்படும் குறிப்பு களைத் தமிழ் இலக்கியங்களின் துணையோடு ஆராய்ந்து பார்த் தால் மௌரியர்கள் தெற்குப் படையெடுப்பு மேற்கொண்டது, கோசர்கள் படையை நடத்திவந்த மௌரியர்களுக்குத் துணையாக விளங்கி, மோகூரைத் தோற்கடித்தது முதலான செய்திகளை அறிய முடிகிறது.

ஹாதிகும்பாப் பட்டயத்திற்கு 113 ஆண்டுகளுக்கு முன் ஆட்சி செலுத்திய பிந்துசாரர் காலத்தில்தான் மௌரியப் பேரரசு விரிவடைந்து இருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. பிந்துசாரர் படை நடத்தி வந்தபோது, தமிழக அரசுகள் ஒன்று கூடிக் கூட்டணி ஒன்றனை அமைத்தன. இக் கூட்டணி பற்றிய செய்தியே காரவேலனின் பட்டயத்தில் காணப்படுகின்றதென்று கருதப்படுகிறது. பொது எதிரியை எதிர்நோக்கத் தமிழக மன்னர்கள் ஒன்று திரண்டனர் என்பதும், தென்னக அரசுகள் பல நூற்றாண்டுகள் சுயேச்சை அரசுகளாகத் திகழ்ந்தன என்பதும் ஹாதிகும்பாப் பட்டயம் வாயிலாக அறியப்படுகிறது.

இதுவரையில் பார்த்த கல்வெட்டுகள் பெரும்பாலும் சங்க காலத்தைச் சார்ந்தவையாகவோ அதை ஒட்டியவையாகவோ உள்ளன. இக் கல்வெட்டுகள் துணைபுரிவதைப் போலச் செப்பேட்டுப் பட்டயங்கள் சங்க காலத்தைச் சேர்ந்தவை என்று குறிப்பிடத்தக்கவை ஏதும் கிடைக்கப்பெறவில்லை. ஆனால் சங்க காலம் பற்றிய அறிவுத் தெளிவிற்குப் பிற்காலத்திய செப்புப் பட்டயங்கள் துணைபுரிகின்றன.

கி.பி. எட்டாம் நூற்றுண்டைச் சேர்ந்த பராந்தக நெடுஞ் சடையனின் **வேள்விக்குடிச் செப்பேடு,** சங்ககால அரசனை முதுகுடுமிப் பெருவழுதியிடமிருந்து வேள்விக்குடியினைப் பெற்று இருந்த பார்ப்பனர்களின் வாரிசுகளுக்கு மீண்டும் வேள்விக்குடி உரிமையினை அளித்ததை எடுத்துக் காட்டுகிறது.

**சின்னமனூர்ப் பட்டயங்கள்** இதைப் போலவே தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப்பற்றிக் குறிப்பிடுகை யில் சங்ககால அரசன் ஒருவனைப்பற்றிக் குறிப்பிடுகின்றன.

**குடுமியாமலை இசைப் பட்டயங்கள்** முதலாம் மகேந்திர வர்மனின் காலமான கி.பி. 600-630ஐச் சார்ந்தவை என்று கருதப்படுபவை. ஏழாம் நூற்றுண்டைச் சார்ந்தவையாயினும், சங்ககால வாழ்க்கையினை எடுத்துக் காட்டுவதால் வேள்விக்குடிப் பட்டயம் போலக் குறிப்பிடத் தகுந்தவை. **திருக்கோவலூர்ச் செப்புப் பட்டயத்தில்,** கோவலூர் அரசன் மலையமானுக்குப் பாரியின் மகளிரை மணம் முடித்துக் கொடுத்த பின்னர் சங்கப் புலவர் கபிலர் உயிர் நீத்த செய்தி காணப்படுகிறது.

இப்பட்டயங்களைப் போலவே நடுகற்களும் வரலாற்றுக்குத் துணை புரிகின்றன. நடுகற்கள் வாயிலாக அரசியல் வரலாற்றை அறிய வாய்ப்பு ஏற்படுகின்றது. இந் நடுகற்களில் அவை எழுப்பப்பட்ட ஆண்டுகள் குறிப்பிடப்படாவிடினும், அவற்றில் காணப்படும் மொழி, சொற்கள் முதலானவை அவற்றின் காலத்தைக் கணிக்க உதவுகின்றன. சங்க இலக்கியங்களில் காணப்படுகின்ற, பின்னர் வழக்கொழிந்த பல சொற்களை இவற்றில் காண்கிறோம். சங்க காலத் தமிழரின் சமுதாய வாழ்விற்கு இவை பெரிதும் துணைபுரிகின்றன. தமிழரின் வீரத்தையும், போர்த் திறனையும், மறத்தன்மையையும், இந் நடுகற்கள் வெளிப் படுத்துகின்றன எனலாம்.

**காசுகள் (Numismatics)**

பட்டயங்களுக்கு அடுத்தபடியாகக் குறிப்பிடத்தக்கவை காசுகளாகும். சங்க காலத்தில் உள்நாட்டுக் காசுகளின் பயனை அறிய இயலவில்லை. செம்பு, வெள்ளி ஆகியவை காசுகளைச் செய்திடப் பயன்பட்டன என அறிகிறோம். மதுரையிலும், காவிரிப் பூம்பட்டினத்திலும் பழங்காலப் பாண்டியர், சோழர் காசுகள் கிடைத்துள்ளன. காவிரிப்பூம்பட்டினத்திலும் காஞ்சிபுரத்திலும் காசுகள் உருவாக்கிடப் பயன்படும் களிமண் அச்சுகள் கிடைத் துள்ளன.

உள்நாட்டுக் காசுகள் அயல்நாட்டு வர்த்தகத்திற்கே அதிகமாகப் பயன்படுத்தப்பட்டன. தாமரைபோன்ற காசுகள் பற்றிக் குறிப்பிடப்பட்டிருப்பினும் பொன் அல்லது காணம், காசு ஆகியவற்றின் அளவோ எடையோ அறிய இயலவில்லை. உண்மையிலேயே பழைய காசுகள் அரிதாகக் கிடைத்தபோதிலும் அதில் அக் காசுகள் வெளியிடப்பட்ட காலம் ஏதும் குறிப்பிடப்படவில்லை என்பதோடு அதில் உள்ள செய்திகளைப் புரிந்து கொள்வதும் எளிதாயிருக்கவில்லை.

பொன் என அழைக்கப்பட்டுப் பின்னர் 'ஹன்' என ஆன காசு ஒரு வராகனுக்குச் சமமாகும். அதனுடைய எடை ஒரு கழஞ்சு அல்லது ஒரு குன்றிமணி எடைக்குச் சமம். பணம் என்பதற்கும் காணம் என்பதற்கும் உள்ள வேறுபாடு தெளிவாய்த் தெரியவில்லை. ஆனால், பொதுவாகப் 'பணம்' எனப்படுவது வராகனில் ஒரு பங்கு ஆகும். ஐந்து அல்லது ஆறு தானியமணிகளுக்குச் சமமானது மஞ்சாடி எனப்படும் நிறுவை ஆகும். அந்த மஞ்சாடியின் அளவுதான் பணமாகும். மஞ்சாடி எனப்படுவது திலக மரத்தின் பழம் ஆகும்.

தமிழகத்தில் ரோமானியப் பேரரசின் தங்க, வெள்ளி நாணயங்கள் வர்த்தகத்தின் விளைவாய் ஏற்றுக்கொள்ளப் பட்டுத் தமிழகத்தில் தாராளமாகப் புழங்கின. வெளிநாட்டுக் காசுகளில் அகஸ்டஸ் காலத்தவையும், அவருக்கு பின் வந்தவர் காலத்தைச் சேர்ந்தவையுமான தங்க வெள்ளிக் காசுகள், தமிழகத்திற்கும் ரோமானியப் பேரரசுக்குமிடையே நிலவிய வர்த்தக உறவைமட்டும் விளக்குவதோடல்லாமல், சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வர்த்தக உறவினை மெய்ப்பிக்கவும் செய்கின்றன.

தமிழகத்திற்கும் ரோமானியப் பேரரசுக்குமிடையே வர்த்தக உறவு நிலவியதைப் போல் சீன தேசத்துடனும் வர்த்தக உறவு நிலவியது. மைசூருக்கு அருகில் சந்திரவல்லி என்னுமிடத்தில் சீன தேசத்துக் காசுகள் கிடைத்துள்ளன என்ற செய்தி வியப்பை அளிக்கிறது.

சங்க காலத் தமிழ் வேந்தர்கள் வெளியிட்ட பழங்காசு என்று கூறத் தக்க காசு எதுவும் இன்றுவரை கிடைக்கவில்லை. ரோமானியர் நாணயச்சாலைகளை நிறுவித் தமிழகத்தில் காசுகளை வெளியிட்டனரா என்பதும் தெரியவில்லை.

நீரோ மன்னனின் ஆட்சிக்குப் பிறகு ரோமானிய நாணயங்களின் புழக்கம் தமிழகத்தில் குறைந்து விட்டது. இவர்களுடைய பொற்காசுகள் 'ஆரியஸ்' (Aureus) என்றும், வெள்ளிக் காசுகள் 'டிளேரியஸ்' (Delerius) என்றும் குறிப்பிடப்படுகின்றன.

**நினைவுச் சின்னங்கள் (Monuments)**

தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் பண்டைத் தமிழக வரலாற்றுக்கு உதவிடும் பழம் பொருட் சின்னங்களை ஏராளமாகக் கண்டறிந்துள்ளனர். பல்லாவரம், வல்லம் முதலிய இடங்களில் பழங் கற்காலச் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. புதுக் கற்கால நாகரிகச் சின்னங்கள் திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் எண்ணற்றவை கிடைத்துள்ளன.

தமிழகத்தின் இரும்புக்கால நாகரிகத்தை அறிந்திட அரிக்கமேடு, ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வுகள் துணைபுரிகின்றன. காவிரிப்பூம்பட்டினத்திற்கு அருகில் கீழையூர் என்னுமிடத்தில், பெரிய செங்கல் மேடையொன்று மணலில் புதைந்து இருந்தது கண்டறியப்பட்டது. அம் மேடையின் மூலைப் பகுதிகளில் மரக் குச்சிகளை நடுவதற்கான அடையாளம் காணப்படுவதால் படகுகள் அவற்றில் கட்டி வைக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதப் படுகிறது.

இப் பகுதியில், மேலும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் விளைவால், கிறித்துவ ஊழியின் தொடக்கக் காலத்தைச் சேர்ந்த பௌத்த விகாரம், அவற்றின் தொடர்புடையன எனக் கண்டறியப் பட்டது. தஞ்சை மாவட்ட அகழ்வாய்வும் பெரும்பயனை விளைவித்துள்ளது. சமயத் தொடர்புடைய, சமயச் சார்பற்ற பொருள்கள் பல கிடைத்துள்ளன. ரோமானிய மட்கலங்களின் பகுதிகள் கிடைத்திருப்பது, இரு நாடுகளுக்கிடையே இருந்த வாணிக உறவினை வெளிப்படுத்துகிறது.

காவிரிக் கரையின் நாகரிக வாழ்க்கையின் சின்னங்களைத் திருச்சி மாவட்டத்தில், திருகாம்புலியூரில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வு வெளிப்படுத்துகிறது. இங்குத் தானியங்களைச் சேமித்து வைக்கக்கூடிய தானியக் கிடங்கு கண்டறியப்பட்டது. களிமண் பொருள்கள் பலவும் கிடைத்துள்ளன. உறையூருக்கும் ரோமானியப் பேரரசுக்குமிடையே நிலவிய வாணிக, பண்பாட்டுத் தொடர்பிற்குச் சான்று பகர்வது உறையூரில் மேற்கொள்ளப் பட்ட அகழ்வாய்வே எனலாம்.

காஞ்சி நகரில் 1962-ல் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வு, கறுப்பு, சிவப்பு மட்பாண்டங்களைக் கண்டுபிடித்துள்ளது. பதின்மூன்று சாதவாஹனக் காசுகளும் கண்டறியப்பட்டுள்ளன. சென்னைப் பல்கலைக்கழகத்தவர், காஞ்சியில் மற்றொரு பகுதியில் ஆய்வினை மேற்கொண்டு, புதிய நினைவுச் சின்னங்களைக் கண்டறிந்துள்ளனர். தென்னகத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வு, பிராமி எழுத்துகள் பானையொன்றின்மேல் காணப்படுவதைக் கொண்டு, எழுத்து மொழியாகப் பிராமியும், பேச்சு மொழியாகத் தமிழும் விளங்கினவென அறிவிக்கின்றது.

இவ்வாறு பல பழம்பொருட் சின்னங்கள், பழங்காலத் தமிழக வரலாற்றினை அறிந்திட உதவி புரிகின்றன.

## அயல் நாட்டவர் அளிக்கும் குறிப்புகள்
## (Foreign Accounts)

கிறித்துவ ஊழியின் தொடக்க காலத்தில் தமிழகத்துடன் ரோம் நெருக்கமான வர்த்தக உறவினைக் கொண்டிருந்தது. இரு நாடுகளுக்கும் இடையேயான உறவினால் நமக்கு இன்றியமையாத வரலாற்றுச் செய்திகள் கிடைக்கப் பெறுகின்றன. கிரேக்கர்கள், ரோமானியர்கள் விட்டுச்சென்ற குறிப்புகள் யாவை எனக் காண்போம்.

**மெகஸ்தனிஸ்**

சந்திரகுப்த மௌரியரின் அவையில் இருந்த மெகஸ்தனிஸ், தாம் எழுதிய 'இண்டிகா' என்ற நூலில் தாம் கண்டவற்றையும் கேட்டவற்றையும் தொகுத்து வரைந்துள்ளார். மௌரியர்களின் கால நகராட்சி முறையினை அறிந்திடப் பெரிதும் அவை உதவக் கூடியன என்பது அனைவரும் அறிந்த ஒன்றே. அந்நூல் தமிழக வரலாற்றிற்கும் உதவிடக்கூடியது ஆகும்.

மெகஸ்தனிஸ் எழுதிய மூலநூல் கிடைக்கப் பெறவில்லை. ஆனால், அதிலிருந்து ஸ்டிராபோ, பிளினி, ஏரியன் முதலியோரால் தொகுக்கப்பட்ட பகுதிகள் கிடைத்துள்ளன. பாண்டியர்களைக் குறித்துத் தாம் கேள்விப்பட்ட செய்திகளை அவர் அளிக்கிறார். ஹிராக்கிளிஸ் என்பவரின் மகள் 'பண்டையா' என்பவள் பாண்டிய நாட்டை ஆண்டாள் என்பதும், தெற்குப் பகுதியில் கடல்வரை விரிந்த பகுதியைத் தன் மகளுக்கு, ஹிராக்கிளிஸ் அளித்தார் என்பதுமே அவர் தரும் செய்தி. அவருடைய செய்திகள் ஆர்வத்தைத் தூண்டக் கூடியவையாயினும் முரண்பாட்டை உருவாக்கக் கூடியவையாகவும் உள்ளன.

முதன் முதலாகத் தமிழகத்தைப்பற்றி அதிலும் பாண்டிய அரசைப்பற்றிக் குறிப்பிட்ட இந்தியரல்லாதவர் இவரே ஆவார். பாண்டிய நாடு கிரேக்கத் தூதுவரால் குறிப்பிட்டுக் கூறத்தக்க அளவில் கி.மு. நான்காம் நூற்றூண்டிலேயே இருந்தது என்பது தெரிய வருகிறது. ஆனால், மெகஸ்தனிஸின் குறிப்புகளை ஏற்றுக் கொள்வதில் சில இடையூறுகள் உள்ளன. நம்ப இயலாச் செய்திகள் பலவற்றையும் மெகஸ்தனிஸ் தம் நூலில் அளித்துள்ளார். அவர் தாம் கண்டவற்றை மட்டுமன்றிக் காதால் கேட்டவற்றையும் தொகுத்து வைத்திருப்பதுதான் அவருடைய நூலில் காணப்படும் பலவீனமான அம்சம்.

நம்ப இயலாச் செய்திகள் சிலவும் அவர் நூலில் காணப்படுகின்றன. உதாரணமாகத் தங்கம் தோண்டும் எறும்பும், இறக்கைகள் உள்ள பாம்புகளும், கொம்புள்ள குதிரையும், மூக்கில்லாத மக்களும், ஆறு வயதிலேயே தாய்மை அடைந்த பெண்களும் இருந்தனரென்ற அவர்தம் செய்தி வியப்பை அளிப்பதாக உள்ளது. மெகஸ்தனிஸின் கருத்துகளை ஸ்டிராபோ என்ற ஆசிரியரே ஒதுக்கித் தள்ளியுள்ளது குறிப்பிடத்தக்கது.

**ஸ்டிராபோ**

அகஸ்டஸ் மன்னனிடம், பாண்டிய மன்னனால் அனுப்பப்பட்ட தூதுக் குழுக்களைப்பற்றி ரோம் நாட்டவரான ஸ்டிராபோ என்பவர் விளக்கிக் கூறுகிறார். அவர் முதல் நூற்றூண்டின் கடைசிப் பகுதியிலும், இரண்டாம் நூற்றூண்டின் தொடக்கத்திலும் தமிழகத்திற்கும் அகஸ்டஸ் காலத்திய ரோமானியப் பேரரசுக்கும் இடையே நிலவிய அரசியல் வணிக உறவுகளைச் சுட்டிக் காட்டி உள்ளார். அவர் காலத்தில் ரோமானிய மக்கள் இந்தியாவைப் பற்றி அதிகமாக அறிந்து வைத்திருந்தனர் என்பதனை அறிய அவர்தம் குறிப்பு உதவுகிறது.

காலஸ் என்பவரின் தலைமையில் அகஸ்டஸ் கி.மு. 25-ல் ஏடனுக்கு எதிராகப் படையெடுப்பு நிகழ்த்தியதை எடுத்துக் காட்டுகையில், செங்கடல் துறைமுகப் பாதை வழியாக இந்தியாவிற்குச் செல்லும் பாதையினை வணிகர்கள் அறிந்துகொண்டிருந்தனர் என்பதனை இவர்தம் குறிப்பிலிருந்து அறிகிறோம். பாண்டிய நாட்டிற்கு மாற்றுத் தலைநகர் இருந்த செய்தியினையும் அறிந்திட ஸ்டிராபோவின் குறிப்புகள் உதவுகின்றன. கொற்கையிலிருந்து, மதுரைக்குத் தலைநகர் மாற்றப்பட்ட செய்தியினையும் அறிய அவர்தம் குறிப்பு உதவுகிறது.

**பிளினி**

கி.பி. 77-ல் பிளினி 'இயற்கை வரலாறு' என்ற நூலை எழுதினர். பிளினி அந் நூலில் தம் முன்னோர்களிடமிருந்து தாம் அறிந்துகொண்ட செய்திகளைக் குறிப்பிடுகின்றார். மேலைக் கடற்கரையில் இருந்த தமிழகத் துறைமுகங்களைப்பற்றிய குறிப்பினைப் பிளினி வாயிலாக நாம் அறியலாம்.

**பெரிபுளூஸ்**

கி.பி. 80-ல் தமிழகம் இருந்த நிலையைப்பற்றியும், தமிழகம் கொண்டிருந்த வாணிக உறவினைக் குறித்தும் 'பெரிபுளூஸ் ஆப் எரித்ரீயன் சீ' (Periplus of Erithrian Sea) என்னும் நூல் வாயிலாக அறிகிறோம். இந் நூலின் ஆசிரியருடைய பெயர் தெரியவில்லை. இந் நூலில் காணப்படும் சிறப்பு நூலாசிரியர் தாமே நேரடியாக அனுபவ வாயிலாக அறிந்த செய்திகளைத் தொகுத்து அளிப்பதே ஆகும். தமிழ்நாட்டைக் குறிப்பிடுகையில் 'தமிரைக்' என்று குறிப்பிட்டுள்ளார். பண்டைய நாளில், தமிழ் மக்கள் மேற்கொண்ட கடற்பயணம் குறித்தும், இந் நூலின் வாயிலாக அறியலாம்.

**தாலமி**

கி.பி. இரண்டாம் நூற்றூண்டில் வாழ்ந்தவர் (கி.பி. 150 தாலமி.) இவர் அலெக்சாந்திரிய நிலவியலார். 'உலகின் வரைபடம்' என்னும் நூலில் தென்னிந்தியாவைப்பற்றித் தாம் அறிந்தவற்றை அவர் எடுத்துக் காட்டுகிறார்.

**இலங்கைக் குறிப்புகள்**

தமிழகத்திற்கும், இலங்கைக்குமிடையேயான தொடர்பு பன்னெடுங் காலத்திற்கு முன்பிருந்தே நிலவி வந்ததொன்றாகும். இலங்கை, தமிழகத்தின் ஒரு பகுதியாகக் கடலால் பிரிக்கப்படாமல் ஒரு காலத்திலிருந்தது என்று கூறப்படுகின்றது. இலங்கையின் ஆதாரங்களிலிருந்து, சிறப்பான வரலாற்றுச் செய்திகள் கிடைக்கின்றன. சங்க காலத்திற்கு, முக்கியமான காலமரபு முறையினை அறிந்திட உதவும் செங்குட்டுவன், கயவாகு உறவினை அறியக் கி.பி. இரண்டாம் நூற்றூண்டைச் சார்ந்த 'மகாவம்சம்' என்னும் நூல் பெரிதும் உதவுகிறது. இலங்கை அரச மரபினைக் கூறக்கூடிய 'இராஜாவளி' என்ற நூலினையும் வரலாற்றிற்கு உதவிடக்கூடிய நூலாகக் கருதலாம். மேலை நாட்டின் இலக்கியக் கர்த்தர்களின் செய்திகள் வாயிலாகத் தமிழகம் கிறித்து பிறப்பதற்குச் சில நூற்றூண்டுகள் முன்னும் பின்னும் தென்கிழக்கு ஐரோப்பாவுடன் சிறப்பான முறையில் வாணிகத்தில் ஈடுபட்டிருந்தது என்பதனை அறிகிறோம்.

# 4. சங்க கால அரசியல்

## சங்க காலச் சேரர்

வடவேங்கடம் தென்குமரி இடைப்பட்ட எல்லையமைந்த சங்கத் தமிழகத்தை ஆட்சி செய்த முடியுடைவேந்தர் மூவராவர். அவர் சேர, சோழ, பாண்டியர் எனப் பெறுவர். 'வண்புகழ் மூவர் தண் பொழில் வரைப்பு' என்றும், 'மூவேந்தர் நாடு' என்றும் தமிழகம் தொல்காப்பியரால் அழைக்கப்பட்டது. சேர, சோழ, பாண்டியரைக் குறித்து அசோகரின் கல்வெட்டுகள் முதன் முதலாகக் குறிப்பிடுகின்றன.

மூவேந்தர்களும் 'முடியுடை மூவேந்தர்' என அழைக்கப் பட்டனர். அவர் தம் நாடுகளை முறையே குடபுலம், குணபுலம், தென்புலம் என வழங்கினர் குடபுலம் என்ற பெயரால் வழங்கப் பட்டது சேரநாடாகும். சேலம், கோவை, மாவட்டங்களைக் கொண்ட கொங்கு நாடு சேர நாட்டின் பகுதிகளில் ஒன்றாகும். சேர நாட்டில் கருவூர், தொண்டி, நறவு, மாந்தை, வஞ்சி முதலானவை பேரூர்களாகும். சேரநாடு வேழக்காடு அல்லது உம்பற்காடு என்ற பெயராலும் வழங்கப்பெறும்.

செந்தமிழ் வேந்தர் மூவருள்ளும் சேரர் முதன்மையானவர் என்ற பொருளில் சேரர், சோழர், பாண்டியர் என்றே வழங்கி வந்தனர். சேரரின் மாலை முதற்கண் வைத்துத் தொல்காப்பிய ரால் 'போந்தை, வேம்பே, ஆர் என வரூஉம் மாபெருந் தானையர்' எனச் செய்யுட்கண் வழங்கப் பெற்றது. சேரர், சேரலர், ஆதன், கோதை, குட்டுவன், குடவர், பொறையன், இரும்பொறை முதலான பெயர்களைக் கொண்டு சேரரை அழைத் தனர்.

சேரர்களின் அரசியல் வரலாற்றை அறிந்திடப் புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகிய சங்க இலக்கியங்கள் பெரிதும் துணைபுரி கின்றன. எனினும் சேரர் வரலாற்றை மட்டுமே கூறக்கூடிய நூல் பதிற்றுப்பத்து ஆகும். ஒவ்வொரு சேர மன்னனைப்பற்றியும் பத்துப் பாடல்களைக்காண்கிறோம். ஒவ்வொருபத்துப்பாடல்களின்

ஆசிரியர்களும் அந்தந்த அரசர்களின் காலத்தவர் ஆவர். பதிற்றுப்பத்துப் பாடலின் பதிகங்கள் பாடல்களில் காணாத செய்திகளை அளிக்கின்றன. அகநானூறு, நற்றிணை ஆகியவையும் சேரர் தம் வரலாற்றை அறிய உதவுவன.

சேரநாட்டை ஆண்ட சேரவேந்தர் இரு கிளையினராகக் காணப்படுகின்றனர்; ஒருவர் உதியன் சேரலாதன் வழி வந்தவர்; மற்றொருவர், இரும்பொறை என்ற பெயரால் அழைக்கப்படுவோர். இவருள் முன்னவர், வஞ்சியைத் தலைநகராகக் கொண்ட உள்நாட்டுப் பகுதியினையும், பின்னவர் தொண்டியைத் தலைநகராகக் கொண்ட கடற்கரைப் பகுதியினையும் ஆண்டவராவர். இவ்வாறாக ஆட்சி செலுத்திய சேரமன்னர் இருபத்தைவரின் வரலாற்றினைச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. சிலரைக் குறித்து விளக்கமாகவும், சிலரைக் குறித்து சுருக்கமாகவும் பாடல்கள் வாயிலாக அறியப்படுகின்றன. சில சேரர்களைப்பற்றி இவன் இன்னார் மகன், இவன் இன்னாரைப் பெற்றவன், இவன் இன்னாருடன் உடன்பிறந்தவன் என்ற செய்திகள் அறியத்தக்க நிலையில் உள்ளன. பலரைப்பற்றிய உறவுமுறை விளங்கவில்லை. எனவே, மரபுவழிப்படி முறையே வரிசையாகச் சேரர் தம் வரலாற்றை உணர்தல் எளிதாயில்லை.

### உதியஞ்சேரலாதன் மரபினர்

**உதியஞ்சேரலாதன்:** வரலாறு விளங்க வாழ்ந்த முதற் சேர மன்னன் பெருஞ்சோற்றுதியன் சேரலாதன், உதியன் சேரலாதன், உதியஞ்சேரல் என்றெல்லாம் அழைக்கப்பட்டான். இவன் முரஞ்சியூர் முடிநாகராயரால் பாராட்டப்பெறும் பெருமை வாய்ந்தவனாவான். முரஞ்சியூர் முடிநாகராயருடன், மாமூலனாரும், இளங்கீரனாரும், கோட்டம்பலத்துத் துஞ்சிய சேரமானும், இளங்கோவடிகளும் உதியஞ்சேரலாதனைப் பாராட்டிப் பாடியுள்ளனர்.

உதியஞ்சேரலாதனின் மனைவி பெயர் **நல்லினி** என்பதும், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், பல்யானைச் செல்கெழு குட்டுவன் ஆகிய இருவரும் இவன் மக்கள் என்பதும் பதிற்றுப் பத்தின் இரண்டு, மூன்றாவது பதிகங்களால் அறியப்படுகின்றன.

உதியஞ்சேரலாதனின் வாழ்க்கை நிகழ்ச்சிகளுள் தன் நாட்டு எல்லையை விரிவாக்கியது, தன்னை நாடிவந்த இரவலர்க்குப்

பொருள் அளித்துக் காத்தது, பெருஞ்சோறு அளித்தது, கரிகால னுடன் போரிட்டுப் பெற்ற புறப்புண் நாணி வடக்கிருந்து உயிர் விட்டது ஆகியவை குறிப்பிடத்தக்கன.

'நாடுகண் அகற்றிய உதியஞ் சேரற்
பாடிச் சென்ற பரிசிலர் போல
உலவினி வாழி!'

என்ற அகநானூற்றுப் பாடல் வரிகளால் பிறநாட்டினை வென்று தன் நாட்டினை விரிவாக்கினன் என்பதும், தன்னை நாடி வந்த பரிசிலர் பொருள் பெற்று மகிழச் செய்தான் என்பதும் அறியப் படுகிறது.

உதியன் சேரலாதன் ஒரு சமயம் தமிழகம் முழுவதையும் தன் ஒரு குடைக்கீழ் வைத்து உலகாண்ட பேரரசன் ஆவான். கிழக்கு, மேற்கு ஆகிய இருபெருங் கடல்களை எல்லையாகக் கொண்ட நாடு முழுவதும் உதியன் அரசே நடைபெற்றது என்பதனை முரஞ்சியூர் முடிநாகராயர் புறநானூற்றில்,

'நின்கடல் பிறந்த ஞாயிறு, பெயர்த்தும் நின்
வெண்தலைப் புணரிக் குடகடல் குளிக்கும்'

என்று சிறப்பித்துக் கூறுகிறார்.

முரஞ்சியூர் முடிநாகராயரும் இளங்கோவடிகளும், பாண்டவருக்கும் கௌரவருக்கும் நடைபெற்ற பாரதப்போரில், இருதிறப் படையினர்க்கும் உதியன் சேரலாதன் சோறளித்துப் புரந்தான் எனக் கூறுகின்றனர். மாமூலனாரும், கோட்டம்பலத்துத் துஞ்சிய சேரமானும் முறையே பெரும் புகழ் நிறைந்த தன்முன்னோரை வழிபடல் கருதி அவர்க்குப் பெருஞ்சோறளித்தான் எனவும், குழுமூர் என்னுமிடத்தில் சோறு சமைக்க எடுத்த அட்டிற்சாலை இருந்தது எனவும் குறிப்பிடுகின்றனர்.

பாரதப் போரில் சேரலாதன் வீரர்க்குச் சோறு அளித்தான் என்பது பொருந்தாது என்றே பெரிதும் கருதப்படுகிறது. அதற்குக் காரணம் உதியஞ்சேரலின் காலம் கி.பி. முதல் இரண்டு நூற்றுண்டுக்குள் இருத்தல் வேண்டும் என்பதே. எனவே அவன் முன்னோன் செயலை அவனுக்கு ஏற்றிக் கூறியிருக்க வேண்டும். பாரத நிகழ்ச்சியை நாடகமாக்கி ஆண்டுதோறும் நடித்துக்கொண்டாடும் இறுதி நாளன்று அனைவர்க்கும் சோறு வழங்கிப் பேணும் இந்நாட்டு வழக்கத்தையே உதியன் செயல்

காட்டுகிறது எனவும் கருதப்படுகிறது. உதியன் சேரலாதனுக்கும் பாரதப்போர் நிகழ்ச்சிக்கும் யாதொரு தொடர்புமிருக்க சாத்தியமில்லை.

சோழன் கரிகாற் பெருவளத்தானுடன் போரிட்டுப் பெற்ற புறப்புண் நாணி வடக்கிருந்து உயிர்விட்ட சேரமான் பெருஞ்சேரலாதனைப்பற்றிக் கழாத்தலையார், வெண்ணிக் குயத்தியார் ஆகியோர் புறநானூற்றிலும், மாமூலனார் அகநானூற்றிலும் குறிப்பிட்டுள்ளனர். உதியனுடைய சிறப்புகளை எடுத்துரைத்த மாமூலனாரே வெண்ணியில் தோற்ற சேரலாதனைக் குறித்துள்ளமையாலும், உதியஞ்சேரலாதனும் கரிகாற் பெருவளத்தானும் ஒரு காலத்தவரேயாவர் என ஆராய்ச்சியாளர் கருதுவதாலும் கரிகாற் பெருவளத்தானுடன் போரிட்டுத் தோற்றவன் உதியஞ் சேரலாதனே எனக் கொள்ளலாம்.

உதியனுடைய சிறப்புகளைப் புலவர் முரஞ்சியூர் முடிநாகராயர் பாடியுள்ளார். அவர், அவனைப் பொறுமை, சூழ்ச்சி, ஆற்றல், அழித்தல், அருளல் ஆகிய பண்புகளின் நிலைக்களனாகக் கொண்டு உதியன் விளங்குகிறான் எனக் கூறுகிறார் (புறம்-2). ஐம்பெரும் பூதத்தியற்கையினையும், அவை ஒவ்வொன்றும் முறையே பெற்றுள்ள அப் பண்புகள் அனைத்தினையும் ஒருவனே பெற்று விளங்கும் அவன் பெருமையினையும் அவர் பாராட்டிப் பாடியுள்ளார்.

**இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்:** உதியஞ்சேரலாதனின், மகனான இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் தாய், வெளியன் வேண்மான் எனும் வேளிர்குலத் தலைவன் மகளாய நல்லினி ஆவாள். இவ் வேந்தன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், நெடுஞ்சேரலாதன், குடவர் கோமான் நெடுஞ்சேரலாதன், குடக்கோ நெடுஞ்சேரலாதன் என அழைக்கப்படுகிறான். இமயவரம்பனின் வெற்றிச் சிறப்புகளைப் பாடிய புலவர்கள் பரணர் மாமூலனார், குமட்டூர்க் கண்ணனார் ஆகியோர் ஆவர்.

இமயவரம்பனுக்குச் சோழன் மணக்கிள்ளியின் மகளாகிய நற்சோணை, வேளாவிக் கோமான் பதுமன் மகள் ஆகிய இருவரும் மனைவியர் ஆவர். முன்னவள் வழிப்பிறந்தவன் செங்குட்டுவன் எனவும், பின்னவள்வழிப் பிறந்தவரே களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் எனவும் அறிகிறோம். பதிற்றுப்பத்தே இதற்குச் சான்றாய் அமைகிறது. பல்யானைச் செல்கெழு குட்டுவன் இமயவரம்பனின் தம்பியாவான்.

நெடுஞ்சேரலாதனும் பேரரசன் என்று கருதத்தக்க வெற்றிச் சிறப்புகளைக் கொண்டவன் ஆவான். பெரும்படையுடன் வடநாடு சென்று, ஆங்குத் தன்னை எதிர்த்த ஆரிய அரசர்களை வென்று வணங்கச் செய்து, இமயம்வரை சென்று தன் அரச இலச்சினை யாகிய வில்லைப் பொறித்து மீண்டான். எனவேதான் இமயவரம் பன் எனப் பெயரோடு அவன் வெற்றிச் சிறப்புப் புகழப்படுகிறது.

இதனை,

'இமயத்து
முன்னோர் மருள வணங்கு வில் பொறித்து'

என்ற அகப் பாடலால் அறிகிறோம்.

இமயவரம்பன் இமயம்வரை சென்றான் என்ற கூற்றுப் பொருந்துமா என ஆராய்கின்றபோது அக் கூற்றுச் சரியெனவே தோன்றுகிறது. வடபுலத்திலிருந்து மௌரியர் தென்னகம் படை யெடுத்தல் இயலுகின்றபோது இதுவும் இயலக்கூடியதே. இமய வரம்பனின் காலத்தில்தான் வடநாட்டில் யவனர், பஹலவர் முதலிய அயல்நாட்டவர் இந்தியாவின்மீது படை நடத்தி வந்துள் ளனர். இமயவரம்பன் ஐம்பத்தெட்டு ஆண்டுகள் ஆட்சி செலுத் தினான் என்பதை மனத்தில் கொள்ளும்போது, இமயப் படை யெடுப்பு இயலக்கூடியதே எனலாம்.

சேரலாதனின் கடற்படையெடுப்பும் அகநானூற்றின் வாயி லாக அறியப்படுகிறது. பகைவர்மீது கப்பற்படையின் துணை கொண்டு சென்று அவரையும் வென்று அவர் காவல் மரமாகிய கடம்பையும் வெட்டி வீழ்த்தி, அக் கடம்பினால் முரசு செய்து முழக் கினான் என அகம் கூறுகிறது. பகைவருக்குக் காவல் மரம் இருந்ததா? என்ற கேள்வி எழுகிறது. அப் பகைவர் தமிழருடன் கொண்ட தொடர்பினால் காவல் மரம் கொள்ளும் பழக்கத்தினை கைக் கொண்டிருக்கலாம்.

'வலம்படு முரசிற் சேர லாதன்
முந்நீ ரோட்டிக் கடம்பறுத்து'

என்ற அகநானூற்று வரிகள் கடம்பை வெட்டி வீழ்த்தியமைக்குச் சான்றெனலாம். இது குமட்டூர்க்கண்ணனார் என்ற புலவரால் நெடுவேளாம் முருகப்பெருமானுக்கு எதிராக நின்ற சூரபன்மன் மாமரமாகி நின்றிட அதனை முருகன் வேரோடு வெட்டி வீழ்த்திய தற்கு ஒப்பிடப்படுகிறது.

'ஆரியர் அலறத் தாக்கிப் பேரிசைத்
தொன்றுமுதிர் வடவரை வணங்குவிற் பொறித்து
வெஞ்சின வேந்தரைப் பிணித்தோன்'

என்று பரணரால் பாடப்பட்ட இமயவரம்பன், வேற்பஃறடக் கைப் பெருவிறற் கிள்ளி என்ற சோழனுடன் போரிட்டு உயிர் துறந்தான் (புறம், 63) என்று கூறப்படுகிறது. சோழனுடன் போரிட்டு உயிர் துறந்த சேரன் இமயவரம்பனே என்பது பதிற்றுப்பத்து இமயவரம்பனைக் குறிப்பிடும் 'குடக்கோ நெடுஞ் சேரலாதன்' என்ற சொல் வழக்கினல் அறியப்படுகிறது. குடக்கோ நெடுஞ்சேரலாதனும், வேற்பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளியும் இறந்து வீழ்ந்தது கண்டு பரணர் பாடியுள்ளதும் நம் கருத்துக்கு ஆதாரமாய் அமைகிறது. இப் போர் திருப்போர்ப் புறம் என்னுமிடத்தே நடைபெற்றது.

பேராண்மையும் பேராற்றலும் உடையான் நெடுஞ்சேர லாதன். பகைவர் நாட்டைப் பாழ் செய்த செயல் இச் சேரனல் மேற்கொள்ளப்பட்டது. எனினும், தன்னாட்டு மக்கள் தன்னே ரில்லாப் பெருவாழ்வு வாழ்தற்கு வகை செய்யும் நல்லோனவான். சேரன் ஆட்சி சிறப்புடைய ஆட்சி என்பதற்கு அந்நாட்டு வளமும் சிறப்பும் சான்றாகும். அவன் நாட்டில் பசியும் பிணியும் பறந்தோடி மறைந்தன. நெடுஞ்சேரலாதன் நல்ல பல பண்புகளின் நிலைக் களமாய் விளங்கினன். அறங் கூறும் ஆன்றோர்களைப் பிரியா இயல்பினன் அவன். பகைவர் பொறுத்தலாகாப் பெரும் பிழை புரிந்தாரேயாயினும், பணிந்து திறை தருவராயின் அவர் தம் பிழையினை மறந்து கொடுத்தன கொண்டு அருள்புரியும் அற வுள்ளம் அவன்பால் இருந்தது. சேரலாதன் புகழ் அவன்தன் கொடைச் சிறப்பாலும் சிறந்து விளங்கிற்று. வறியராய் வந்து தன் வாசல் முன் நிற்பார்க்கு அவர் வறுமைப் பிணி ஓட வழங்கும் வள்ளியோனாய் விளங்கினன்.

குமட்டூர்க் கண்ணனர்க்குத் தன் ஆட்சிக்குட்பட்ட உம்பற் காடு என்னும் வளம் நிறைந்த பகுதியில் உள்ள ஐந்நூறு ஊர் களைப் பிரம்மதேயமாகக் கொடுத்தான். இவ்வாறு வீரத்திலும், ஈரத்திலு ம்சிறந்து விளங்கிய சேரலாதன் ஐம்பத்தெட்டு ஆண்டுகள் வாழ்ந்தான். இச் சேரமன்னனிடமிருந்து நாம் அறிகின்ற செய்தி சேரர், சோழரிடையே மணவுறவு இருந்ததுபோலவே பகையும் காணப்பட்டது என்பதே.

**பல்யானை செல்கெழு குட்டுவன்:** பெருஞ்சோற்றுதியன் சேர லாதனின் மகனும், நெடுஞ்சேரலாதனின் உடன் பிறப்புமான

இச் சேரமன்னன் போர்க்களத்தே அஞ்சாது முன்சென்று அரும் போர் ஆற்றிப் பகைவர்தம் பற்றற்கரிய அரண்களை அழித்து வெற்றிதரும் விறல் மிக்க பல யானைகளைக் கொண்டவனுதலால் பல்யானை செல்கெழு குட்டுவன் எனப்பட்டான்.

பல்யானை செல்கெழு குட்டுவன் மலைநாட்டின் 500 சிற்றூர் களைக் கொண்ட சிறு நாடான உம்பற்காடு எனவும், வேழக்காடு எனவும் வழங்கப்பட்ட வளங்கொழிக்கும் நாட்டில் தன் அரசினை நிலவச் செய்தான். பாலைக் கௌதமனர் என்ற புலவர் அகப்பா என்ற அரணை வென்று கைக்கொண்டதைச் சிறப்பித்துக் கூறி யுள்ளார். இச் சேரனின் ஆற்றலும், ஆண்மையும் அறிந்து, அக் காலச் சோழ, பாண்டியரும், சில வேளிர்களைத் துணையாகக் கொண்டு குட்டுவனை எதிர்த்தனர். குட்டுவன் அவர்களுக்கு அரணுக அமைந்திருந்த கடலரணையும், காட்டரணையும் அழித் தான். பழைய தமிழகத்தில் வாழ்ந்திருந்த பூழியர், மழவர், கொங்கர் ஆகிய மூவருள்ளும் மழவர் விற்போரில் வல்லவராயும் சிறந்த குதிரைப் படை உள்ளவராயும் விளங்கியதால் அவர்களைத் தன் துணைவராய்க் கொண்டான். கொங்கு நாட்டைக் கைக் கொண்டு ஆண்டான். குட்டுவன் வாழ்வாங்கு வாழ்ந்து புலவர் தம் பாராட்டுரையும் பெற்று 25 ஆண்டுகள் ஆட்சி செலுத்தி மறைந்தான். இவ் வேந்தன் பத்து வேத வேள்விகளைப் பாலைக் கௌதமனர் என்ற புலவர்பொருட்டு நடத்தினுன் எனத் தெரிகிறது.

**களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல்:** இமயவரம்பன் நெடுஞ் சேரலாதனின் இளைய மனைவி வேளாவிக்கோமான் பதுமன் மகள் வயிற்றில் பிறந்தவனே இச்சேரமன்னன் ஆவான். களங்காயாற் கண்ணியும் நாரால் முடியும் செய்து அணிந்து இருந்ததால் இப் பெயர் பெற்றுன். 'சேரநாட்டிற்குரிய அனைத்துப் பகுதியையும் ஆளும் நாள்வரை சேரர்க்குரிய கண்ணியும் முடியும் புனையேன்' எனச் சூளுரைத்து அவற்றிற்கு ஈடாக களங்காய்க்கண்ணியும் நார் முடியும் புனைந்து நின்றமையால் இப் பெயர் பெற்றுன் எனவும் கூறப்படுகிறது.

நார்முடிச்சேரல் இளையோனுய் இருந்த காலத்தே நன்னன் என்பான் அவனுக்குரிய பூழி நாட்டைக் கவர்ந்துகொண்டமையால் நார்முடிச்சேரல் நன்னன் ஆண்டிருந்த பூழி நாட்டின்மீது படை யெடுத்துச் சென்று கடம்பின் பெருவாயில், வாகைப்பெருந்துறை என்னும் இடங்களில் கடும் போர் ஆற்றினுன். நன்னனுக்குரிய

காவல் மரமாகிய வாகை மரத்தை வெட்டி வீழ்த்திப் பெற்ற சிறப்பினைக் கல்லாடனாரும் காப்பியாற்றுக் காப்பியனாரும் பாடியுள்ளனர்.

அதியமான் நெடுமான் அஞ்சியின் குலத்தோன்றலான நெடுமிடல், வளங்கொழிக்கும் நாடு உடைமையால் செருக்குற்றிருந்தான். நார்முடிச்சேரல் படையொடு அவன் நாட்டின் உள்ளே புகுந்து, தன் யானைப் படையால் அவன் நாட்டையும் அவனையும் அழித்தான்.

நார்முடிச்சேரல் சிறப்புகளைக் காப்பியாற்றுக் காப்பியனார் என்ற புலவர் போற்றிப் புகழ்ந்து பாடியுள்ளார். புலவர் போற்றும் புகழுடையோன் ஆன களங்காய்க்கண்ணி தன் புகழ் பாடிய புலவர்க்கு நாற்பது நூறாயிரம் பொன் கொடுத்தான்.

**சேரன் செங்குட்டுவன்:** இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் மகனான இச்சேரன் சேரமன்னர்களுள் பெருஞ்சிறப்புடையோன் ஆவான். செங்குட்டுவன், நெடுஞ்சேரலாதனின் மனைவி நற்சோணையின் வயிற்றில் உதித்தவன். செங்குட்டுவனின் மனைவி பெயர் இளங்கோவேண்மாள் என்பதாகும். செங்குட்டுவன் அரியணை ஏறியபின்னர் பல்வேறு போர்களை மேற்கொண்டு வெற்றிகளைப் பெற்றான். தன் தாயைக் கங்கையில் நீராட்டிய போது ஒன்றுகூடி எதிர்த்திட்ட ஆரிய அரசர்களை வெற்றி கொண்டான் (சிலம்புக் காட்சிக் காதை 160-164).

சேரநாட்டின் ஒரு பகுதியாக விளங்கிய கொடுகூர் என்ற நாட்டினை ஆண்டுவந்த கொங்கர்கள், அண்டை நாடுகளின் அமைதியைக் குலைத்து வந்தனர். கொங்குநாட்டுக் கொடுகூர் மீது செங்குட்டுவன் படையுடன் சென்றபோது கொங்கர்களுக்குச் சோழபாண்டியர் படைத்துணையாக வந்தனர். அவர்களைத் தோற்கடித்துக் கொங்குநாட்டுக் கொடுகூரையும் செங்குட்டுவன் அழித்தான்.

செங்குட்டுவன் பெற்ற கடற்போர் வெற்றி குறிப்பிடத்தக்கதாகும். பரணர், செங்குட்டுவனுடைய கடற்போர் வெற்றிகளைக் குறித்துப் பாடிய பாடல்களைப் பதிற்றுப்பத்திலும் அகநானூற்றிலும் காண்கிறோம். கடல்நீரை அரணாகக்கொண்டு அக் கடலிடையே வாழ்ந்துவந்த பகைவரைக் கப்பற்படையுடன் சென்று அறவே அழித்துச் செங்குட்டுவன் பெற்ற வெற்றியினால்

கடலோட்டிய வேல்கெழுகுட்டுவன், கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன், கடலோட்டிய வெல்புகழ்குட்டுவன் என்று பாராட்டப்பட்டான்.

மோகூர் என்னும் ஊரில் பழையன் என்ற வீரன் வாழ்ந்து வந்தான். இப் பழையனோடு செங்குட்டுவனின் நண்பனான அருகை என்பவன் பகை கொண்டான்; அவன் மோகூர்ப் பழையனைப் பகைத்துப் போரிட்டுத் தோற்று ஓடி ஒளிந்து வாழ்ந்து வந்தான். செங்குட்டுவன் தன் நண்பனின்பொருட்டு மோகூர்மீது படையெடுத்துச் சென்றபோது சோழபாண்டிய வேந்தர்களும், வேளிர் பலரும் பழையனுக்குத் துணை நின்றனர். ஆனால், செங்குட்டுவன் பேராற்றல் கொண்டு போரிட்டுப் பழையனைப் பணியவைத்து அவனுடைய காவல் மரமான வேம்பை வெட்டிப் பழையன் மனைவியர்தம் மயிரைத் திரித்துப் பெற்ற கயிற்றால் கட்டி அவன் யானைகளைக் கொண்டு இழுத்துச் சென்று நண்பனின் இழிவினைத் துடைத்தான்.

'வயலைவேலி வியலூர்', 'விரிநீர் வியலூர்' என்றெல்லாம் புகழப்பெற்ற வியலூரில் செங்குட்டுவன் வெற்றி ஒன்றினைப் பெற்றான். சோழ நாட்டில் தன் அம்மான் இறந்த பிறகு அவன் தன் இளைய மகன் ஆட்சித் தலைமை ஏற்பதை எதிர்த்த அரசர் ஒன்பதின்மரை உறையூருக்குத் தெற்கேயுள்ள நேரிவாயில் என்னுமிடத்தில் எதிர்த்துப் போரிட்டு வென்றான். சோழ நாட்டில் இடும்பாவனம் எனப்படும் இருப்பாதவனத்தில் செங்குட்டுவன் மற்றொரு வெற்றியினைப் பெற்றான்.

செங்குட்டுவனின் வெற்றிகள் எல்லாவற்றிலும் சிறப்பானதாகக் கருதப்படும் வெற்றி வடபுலத்து ஆரிய மன்னர்களான கனகவிசயரைக் கங்கைக்கரையில் வென்றதே ஆகும். அவர்களை வென்று அவர் தலைமீது கல்லையும் ஏற்றிக்கொண்டு வந்து கண்ணகிக்குக் கோவில் கட்டினான் (சிலம்பு, கால்கோட்காதை).

செங்குட்டுவன் சிறந்த கொடையாளியாகவும் விளங்கினான். பாணர்களுக்குப் பரிசில்கள் பலவற்றைக் கொடுத்தான். முது பெரும் புலவராகிய பரணர் என்பவருக்குச் செங்குட்டுவன் உம்பற்காட்டின் வருவாயினை வழங்கினான். தன்மகன் குட்டுவன் சேரலை அறிவுப்பயிற்சி பெற அவர்பால் அனுப்பினான்.

**ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்:** ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் நறவு என்னும் கடற்கரை நகரைத் தலைநகராகக் கொண்டு சேரநாட்டின் வடமேற்குப் பகுதியை ஆண்டு வந்தான். இமய

வரம்பன் நெடுஞ்சேரலாதனுக்கும், வேளாவிக்கோமான் பதுமன் மகளுக்கும் பிறந்த இவன் களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரலின் உடன் பிறந்தான் ஆவான்.

ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் ஆண்டிருந்த நாட்டின் வடவெல்லையில் வாழ்ந்திருந்த சிலர், இவன் நாட்டினுள் புகுந்து அங்குள்ள ஆட்டு மந்தைகளைக் கைப்பற்றிக் காட்டினுள்ளே மறைந்துவிட்டனர். சேரலாதன் பெரும்படையுடன் அக் காட்டினுள்ளே புகுந்து ஆட்டு மந்தைகளை மீட்டுக் கொணர்ந்து வந்தான். ஆட்டு மந்தைகளை மீட்டுத் தந்த இச் செயலை அனைவராலும் போற்றப்பட்டதால் அவன் பெயரோடு அதனை அமைத்துப் போற்றி வந்தனர்.

ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் அன்பும் அருளும் அறனும் நிறைந்தவன் ஆவான். ஆடல் பாடலைக் கண்டும் கேட்டும் களிக்கும் கவின்மிகு உள்ளம் அவன் உள்ளம். ஈத்து உவக்கும் இன்பமே இன்பம்; ஈதல் இசைபட வாழ்தலே வாழ்வு எனக் கருதியவன். மனைவியின் கண்ணீரைக் காணினும் காண்பன்; இரவலர் முதலான வறுமையில் வாடுவார் கண்ணீரைக் காணப் பொறுது அவன் உள்ளம். காக்கைபாடினியார் நச்செள்ளையார் இவர் சிறப்புகளைப் புகழ்ந்துரைக்கிறார்.

முப்பத்தெட்டு ஆண்டுகள் ஆட்சி செலுத்திய இச் சேரன் புலவர் நச்செள்ளையாருக்கு நூறு ஆயிரங் காணப் பொருளும், அணி பல ஆக்கிப் புனைந்து கொள்க என ஒன்பது துலாம் நிறையுள்ள பொன்னும் அளித்துப் பெருமை செய்தான்.

**பிற மரபினர்**

உதியன் சேரலாதன் முதலாக ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் வரை நாம் கண்ட சேரமன்னர்கள் உதியன் சேரலாதனின் வழித் தோன்றல்கள் ஆவர். பதிற்றுப்பத்தில் காண்கின்ற பிற சேர மன்னர்கள் சேரரின் மற்றொரு வழியினர். அவர்களுடைய முன்னோர்கள் யார் எனத் தீர்மானித்தல் எளிதாக இல்லை. இதுவரை கண்ணுற்ற சேர மன்னர்கள் தங்களுடைய அண்டை அயலவர்களை வென்று தம் ஆட்சிப் பகுதியினை விரிவுபடுத்தினர். பூழி நாடு, கொங்கர் நாடு முதலியவை இணைக்கப்பட்டன. நாட்டினுடைய பரப்பு விரிவடைந்து கொண்டு செல்லுகையில் பேரரசர் தாமே அதனை நேரடியாக ஆளுதல் இயலாது. எனவே, ஆட்சிப் பரப்பின் விரிவைக் கருதி அரசப் பிரதிநிதிகள் நியமிக்கப்

பட்டிருக்க வேண்டும். இரும்பொறை என்னும் பெயருடைய வர்கள் அப் பதவிகளில் நியமிக்கப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும் எனக் கருதப்படுகிறது.

**அந்துவஞ்சேரல் இரும்பொறை:** சேரரில் ஒரு பிரிவினராகிய இரும்பொறை மரபில் வந்தவன் அந்துவஞ்சேரல் ஆவான். அந்துவன் என்ற இப்பெயர் அக்கால ஆண், பெண் மக்கள் இருவ ராலும் விரும்பி மேற்கொள்ளப்பட்ட பெயர்களில் ஒன்றாகும். அந்துவன் கருவூரிலிருந்து ஆட்சி புரிந்தான். உறையூர் ஏணிச் சேரி முடமோசியார்பால் பெருநட்புக் கொண்டான். கோப்பெரு நற்கிள்ளி என்ற சோழனுடன் பகைகொண்டு வாழ்ந்தவன் என அறிகிறோம்.

**செல்வக்கடுங்கோ வாழியாதன்:** அந்துவஞ்சேரலின் மகனே இச் செல்வக்கடுங்கோ ஆவான். செல்வக்கடுங்கோவைப் பாடிய புலவர்கள் கபிலரும், குண்டுகண்பாலியாதனருமாவர். இவ்விரு புலவர்களும் செல்வக்கடுங்கோவின் அருங்குணங் களையும், வெற்றிச் செயல்களையும் பொது வகையாற் கூறி யுள்ளனர்.

இச் சேரனைச் சோழனும் பாண்டியனுமாகிய இருபெரும் வேந்தரும் எதிர்த்தனர். அவர்கள் யார் எனத் தெரியவில்லை. அவ்விருவரையும் செல்வக்கடுங்கோ வென்று சிறந்தான். பாராட்டற்குரிய பண்பு பல நிறைந்தவன் எனவும், பகைவர் புறங்கூறக் கண்டும் பொறுத்திருப்பவன் எனவும் அறிகிறோம்.

செல்வக்கடுங்கோ சிறந்த கொடைச் சிறப்பு மிக்கவன். பாணர் முதலிய தன்னைப் பாடிவரும் புலவர்க்குப் பகையரசர் திறையாகத் தந்த யானைகளை அளிப்பதோடு, அளக்கும் மரக் காலின் வாயும் தேய்ந்து போகுமாறு நெற்குவியல் பலவற்றையும் நிறைய அளந்து அளித்தவன்.

செல்வக்கடுங்கோவின் கொடைச் சிறப்பிற்கு எடுத்துக் காட்டு இது. புலவர்க்குப் பெரியதொரு பரிசில் அளிக்க விரும்பிய செல்வக்கடுங்கோ புலவர் கபிலரை உடன் அழைத்துக் கொண்டு சென்று நன்று என்னும் குன்றின்மீது ஏறி நின்றான். அங்கிருந்து காண்பவர் கண்ணிற்குப் புலப்படும் நாடுகள் எவ்வளவு உண்டோ அவ்வளவையும் அளித்தானாம். இச் செய்தி யினை, மிகைப்படுத்தப்பட்ட கற்பனையான கூற்று என்று ஒதுக்கி விடுவதற்கில்லை. பெருங்குன்றூர்க் கிழார் என்ற மற்றொரு சங்கப் புலவரின் கூற்றும் இதற்குச் சான்றாகும் (பதிற்றுப்பத்து ஒன்ப தாம் பத்து, 85).

கொடுத்த வாக்கினைக் காப்பாற்றும் இயல்பினன் செல்வக் கடுங்கோ என்று கூறப்படுகிறது. நிலம் தன் இயல்பில் திரிந்தாலும் திரியலாம்; ஆனால் செல்வக் கடுங்கோவின் வாக்கு மாறுவதில்லை.

'பொய்யில் செல்வக்கடுங்கோ' எனப்படும் இம்மன்னவன் பார்ப்பனரை ஆதரித்தான். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் காலத்தவனாக இவன் விளங்கியிருக்கக்கூடும். வேள்ஆவிக் கோமான் பதுமனின் மற்றொரு மகளை செல்வக்கடுங்கோ மணந்தமையே அவ்வாறு கருதிடச் செய்கிறது. செல்வக்கடுங்கோ 25 ஆண்டுகள் ஆட்சி செலுத்தினான். நெடுஞ்சேரலாதனின் சம காலத்தவனாயின் அவனுடைய படைமுயற்சிகளிலும் உதவியிருக்கக்கூடும் எனலாம்.

செல்வக்கடுங்கோவின் புலவரைப் போற்றும் இயல்புகளும் கொடைத்திறனும் வியந்து பாராட்டத்தக்கனவாக உள்ளன.

**பெருஞ்சேரல் இரும்பொறை:** செல்வக்கடுங்கோவின் பெருமைமிகு மகனான இச் சேரல் இரும்பொறையின் தகடூர் வெற்றி சிறப்பித்துக் கூறத்தக்கது. அக்காலத்தில் தகடூர் என வழங்கிய இக்காலத் தருமபுரியினை அதியர் என்னும் இனத்தவர் ஆண்டு வந்தனர். அத் தகடூர்க் கோட்டையில் அரசோச்சியிருந்தவர் அதியர் குலத்தவருள் சிறந்தவனான அஞ்சி என்பவனாவான். அந்த அதியமான் நெடுமானஞ்சிக்கும் பெருஞ்சேரலாதனுக்குமிடையே பகை மூண்டது.

வழக்கம் போலவே சோழ, பாண்டிய வேந்தரும், வேளிர் சிலரும் சேரருக்கு எதிராக அதியமானுக்குத் துணை நின்றனர். எனவே தகடூர்க் கோட்டை எளிதில் சேரர்க்குக் கிடைத்திடவில்லை. இறுதியில் பெருஞ்சேரல் இரும்பொறையின் பெரும் படையை எதிர்த்து நிற்கும் ஆற்றல் அற்று அக் கோட்டை அழிவுற்றது. அதியமான் இறந்துவிட்டான். பெருஞ்சேரலின் வெற்றியை அரிசில் கிழார், பொன்முடியார் முதலான புலவர் பெருமக்கள் பாராட்டிப் பாக்கள் பல பாடியுள்ளனர். பெருஞ்சேரலும் தகடூர் எறிந்த பெருஞ்சேரலிரும்பொறை எனச் சிறப்பிக்கப்பட்டான்.

இப் பகைக்கான காரணம் அகநானூறு வாயிலாக அறியப்படுகிறது. சேரனின், திறையரசனான பித்தன் என்பவனுக்குரிய குதிரைமலைகளை அஞ்சி கைப்பற்றியதே காரணம் எனலாம்.

ஆனால், பதிற்றுப்பத்து வாயிலாக இதைக் குறித்து அறிந்திட இயலவில்லை.

பெருஞ்சேரலின் மற்றொரு வெற்றியும் குறிப்பிடத்தக்க ஒன்றாக அமைகிறது. அரிய அரண் ஒன்றினைக்கொண்ட கழுவுள் என்ற ஆயர்குலத் தலைவனைப் பணிய வைத்ததே ஆகும். பெருஞ் சேரலிரும்பொறையின் படைவீரரை எதிர்த்து நிற்கலாற்றாது அஞ்சி ஓடினான் கழுவுள். ஆயர்கள் கன்றோடு கூடிய பசுக்களைப் பெருஞ்சேரலுக்கு அளித்தனர். எனவே, வேறு வழியின்றி கழுவுளும் பணிந்து நின்றான்.

தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையின் ஆட்சி சேர நாட்டைச் சார்ந்த பூழி, கொல்லிக்கூற்றம் முதலிய பகுதிகளிலும், காவிரி பாயும் கவின்மிகு சேர நாட்டிலும் பரவியிருந்தது. அரிசில் கிழார், புகார் நகரும் அவன் ஆட்சிக்கு அடங்கியிருந்தது எனக் கூறுகிறார். அவன் கொடை, கொற்றம், குணம் ஆகிய அனைத்திலும் சிறந்து விளங்கினமையால் அவன் உயரிய பண்பு களைப் புலவர் போற்றுவராயினர்.

பெருஞ்சேரல் புலவர்மாட்டுக் கொண்டிருந்த பேரன்பும் பெருமதிப்பும் பல்லாற்றானும் பாராட்டற்குரியன. புலவர் அரிசில் கிழாருக்கு ஒன்பது நூறாயிரம் காணம் நல்கியதோடு அமையாது, அரசமாதேவியாரோடும், அரண்மனைவிட்டு வெளியேறி நின்று புலவரை அழைத்து, 'இவ்வரண்மனையும் ஆட்சிப் பொறுப்பும் இனி நின்னுடைமையாம், ஏற்றருள்க' என்றான். மோசி கீரனார் என்ற புலவர் அரசன் இரும்பொறையைக் காணவந்தபோது அரசன் இல்லாமையால் அரசனின் வெற்றி முரசு வைத்தற்குரிய கட்டிலில், முரசு கட்டில் என்பது தெரியாமல் படுத்துறங்கினார். முரசு கட்டிலில் படுத்து உறங்குவது பெருங்குற்றமாகும். அக் குற்றம் புரிந்தவர்க்குக் கொலைத் தண்டனையே உண்டு. அரசன் புலவர் கண்ணுறங்குவதைக் கண்டு வெகுண்டெழாமல் வெண்சாமரையினை எடுத்துத் தானே அவர் தூங்கி எழும்வரை வீசி நின்றான். அச் செயல் அரசனின் தமிழ்ப்பற்றைக் காட்டக் கூடியது.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் மக்களான நார்முடிச் சேரல், செங்குட்டுவன், ஆடுகோட்பாட்டுச் சேரல் ஆகியோரின் சம காலத்தவனாக இப் பெருஞ்சேரலாதன் இருத்தல் வேண்டும் என எண்ணப்படுகிறது. பெருஞ்சேரல் சுமார் 17 ஆண்டுகள் ஆட்சி செலுத்தினான் எனத் தெரிகிறது.

தமிழை, தமிழ்ப்புலவரைப் போற்றிய இப் பெருஞ்சேரலாதன் உயர்ந்தோன் என்பதில் ஐயமில்லை. புலவர்க்குத் தன் அரண்மனையையே அளித்த அரசனை எந்த வரலாற்றிலும் காண முடியாது. வேந்தனே புலவருக்கும் வெண்சாமரம் வீசிய விந்தை வரலாற்றுக்குச் சான்று இப் பெருமன்னனேயாவான்.

**இளஞ்சேரல் இரும்பொறை:** இளஞ்சேரல் இரும்பொறை இதுவரை கண்ணுற்ற சேர மன்னர்க்குக் காலத்தாற் பிற்பட்டவன் ஆவான். பெருங்குன்றூர்க் கிழார் என்ற புலவர் பாராட்டிய பேரரசர்களுள் ஒருவனை இளஞ்சேரல் குடகோச்சேரல் எனவும் அழைக்கப் பெறுகிறன். இவன் தந்தை குட்டுவன் இரும்பொறை எனவும், தாயார் வேண்மாள் அந்துவஞ்செள்ளை எனவும், குட்டுவன் இரும்பொறை, பெருஞ்சேரல் இரும்பொறையே எனவும் கூறப்படுகிறது.

இளஞ்சேரலின் புகழ்கூறும் பன்னிரண்டு செய்யுள்களில் ஒன்றுகூட அவன் வெற்றி முதலான வரலாற்றைக் கூறுவன அல்ல. அப் பாக்கள் அவனுடைய பொது நிகழ்ச்சிகளைப் பொது நிலையிலேயே கூறிச் செல்கின்றன. பதிற்றுப்பத்தின் ஒன்பதாம் பத்துப் பதிகம், பெரும் படையுடன் இவன் சென்று சோழ பாண்டியரையும், விச்சி மலையையும் அதைச் சூழ்ந்து விளங்கிய நாட்டையும் ஆண்ட குறுநில மன்னனையும் வென்று, அவர்க்கு அரணாக நின்ற கல்லும் மலையும் காவற்காடும் சூழ இருந்த ஐந்து பெருங் கோட்டைகளை அழித்தான் எனக் கூறும்.

இளஞ்சேரல் தன்னைப் புகழ்ந்து பாடிய பெருங்குன்றூர்க் கிழாருக்குப் பொருள் அளித்துப் போற்றியது வியக்கத்தக்கதாக உள்ளது. முப்பத்தீராயிரம் காணமும் ஊரும் மனையும் கொடுத்து அவரைச் சிறப்பித்தான். அவன் அன்பு, அறிவு, அருள், சுற்றம் ஆகியவற்றையும் புலவர் புகழப் பதினாறுண்டு ஆட்சி செலுத்தினான்.

ஏனைய சேரர்களைக் குறித்த செய்திகளை அறியப் பதிற்றுப் பத்தின் பதிகத்தையும், சில புறநானூற்றுப் பாடல்களையும் காணலாம்.

**பாலை பாடிய பெருங்கடுங்கோ:** இம் மன்னவன் வஞ்சி நகர்க்கண் இருந்து அரசோச்சினன். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்திணைகளுள் பாலைத் திணைக்குரிய, முதல் கரு உரிப்பொருள்களை உயர்ந்தோர் போற்றப் பாடியுள்ளமையால் பாலை பாடிய பெருங்கடுங்கோ எனப் பாராட்டப்

படுகிறுன். பாலை பாடிய பெருங்கடுங்கோவின் பெருங்கொடைச் சிறப்பினைப் பேய்மகள் இளவெயினி எனும் பெண்பாற் புலவர் பாராட்டிக் கூறியுள்ளார்.

அவர் புலவருக்கு வழங்கும் புரவலர் மட்டுமல்லர்; புலவரும் ஆவார். அவருடைய பாடல்களில் அரசர்களின் இயல்புகளை, அரசியல் நுட்பங்களை இடையிடையே காணலாம். அரசராகின்ற வர்களுக்குப் பொருள் எவ்வளவு இன்றியமையாதது என்று எடுத்துக்காட்டியுள்ளார்.

**யானைக்கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை:** 'வேழ நோக்கின் விறல்வெஞ் சேஎய்' மாந்தரஞ்சேரல் இரும்பொறை என இயற்பெயர் கொண்ட, இரும்பொறை மரபினனுன இவன் யானையின் கண் போலும் கண் பெற்றிருந்தமையால் அவ்வாறு அழைக்கப்பட்டான். தொண்டிநகரைத் தலைநகராகக் கொண்டு நாடாண்ட யானைக்கண்சேய், பேராற்றலும் பேராண்மையும் வாய்ந்தவனுவான்.

பாண்டிய மன்னர்களுள் சிறந்த, பேராற்றல் படைத்த தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுல் தலையாலங் கானப் போரில் சேரமான் யானைக்கண்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை தோற்கடிக்கப்பட்டுச் சிறைவைக்கப்பட்டான். இரும்பொறை தன்னை அடைத்து வைத்திருந்த சிறையிலிருந்து தப்பி வந்து வெளியே தன் அரசு கட்டில் ஏறிய சிறப்புமிகு நிலையினைப் புறப்பாடல் வாயிலாக அறிகிறோம்.

இரும்பொறையின் மற்றொரு தோல்வி குறித்தும் அறிகிறோம். இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியோடு துணையாக வந்த மலைய மான் திருமுடிக்காரியின் படைகளுடன் பொருது தோற்றுன் இச் சேரன். பெருநற்கிள்ளியின் வெற்றிக்கு மலையமானே காரணமாக விளங்கினுன். போரில் தோல்வி கண்டானெனினும் அன்பு, அருள், அறிவு ஆகிய பண்பு நலன் வாய்க்கப் பெற்றவனுக இச்சேரன் விளங்கினுன். குறுங்கோழியூர்க் கிழார், கூடலூர்க் கிழார், பொருந்தில் இளங்கீரனுர் முதலிய புலவர்கள் போற்றும் சிறப்பு உடையானுய் வாழ்ந்தான் இரும்பொறை. மாந்தரஞ் சேரலின் மறைவு கண்டு புலவர்கள் புலம்பி அழுதனர் என்ற செய்தி அவர்கள் மன்னன்பால் கொண்ட அன்பினை எடுத்துக்கூறும்.

பாணரின் அகநானூற்றுப் பாடல் ஒன்றில் (142) 'மாந்தரம் பொறையன் கடுங்கோ' என்ற அரசன் பெயர் காணப்படுவதைக் கொண்டுஅப்பெயர் மாந்தரஞ்சேரலைக் குறிக்கும் என்பர். ஆனுல்,

அப் பெயர் கொல்லிமலைத் தலைவனையே குறிக்கக்கூடியது என லாம். பரணர் செங்குட்டுவன் காலத்தவர் என்பது அறிந்ததே.

**மாரி வெண்கோ:** பாண்டிய நாட்டில் கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதியும், சோழ நாட்டில் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் அரசோச்சிய காலத்தில், சேரநாட்டு அரியணையினை அலங்கரித்தவன் இம் மன்னவன் ஆவான். மாவெண்கோ எனவும் மாரிவெண்கோவினை அழைத்தனர். ஔவையார் மாரிவெண்கோவின்பால் அமைந்திருந்த மாண் பினைப் பாராட்டிக் கூறியுள்ளார்.

மாரிவெண்கோ தன் காலத்தே வாழ்ந்த ஏனைய தமிழ் வேந்த ரோடு தலையாய நட்புப்பூண்டு நல்லோர் போற்ற வாழ்ந்தான். பாண்டியன் உக்கிரப் பெருவழுதி, பெருநற்கிள்ளி ஆகியோருடன் பிரியாப் பெருநட்புடையவனாய் விளங்கினான். ஒரு குடியிற் பிறந்தவர்களே ஒருவரோடொருவர் பகைத்துப் போர் மேற் கொண்டு, தந்தை மகனை எதிர்த்து, மகன் தந்தையுடன் போர் தொடுத்து வாழ்ந்த தமிழக வரலாற்றில் இத்தகைய நட்புடைய அரசன் ஒருவனைக் காணுதல் வியப்பைத் தருவதாய் அமைந் துள்ளது. மூவேந்தர்களும் ஒன்றுபட்டு ஒற்றுமையுணர்வுடன் வாழ்ந்த நிலைகண்டு மகிழ்ந்தார் ஔவையார். அவர் 'நீவிர் மூவரும் ஒன்றுகூடி உலகாளின், உலகில் இன்பம் உண்டாம்; நும்முள் ஒருவர் பகைகொண்டு பிரியினும் அது பாழ்படும்; ஆதலின் இன்றேபோல் என்றும் ஒருமனப்பட்டு உலகாள்வீராக! உங்கள் வாழ்நாளும் வற்றாது வளர்ந்து தோன்றுமாக' என்று வாழ்த்தினர்.

**மருதம் பாடிய இளங்கடுங்கோ:** இவன் அகநானூற்றில் (96) காணப்படும் அரசனாவான். இந்த அரசன் மருதத்திணையைப் பாடிய சிறப்பால் மருதம் பாடிய இளங்கடுங்கோ என அழைக்கப் பட்டான். இளங்கடுங்கோ தன் காலத்தில் நிகழ்ந்த பருவூர்ப் பறந்தலைப்போர் ஒன்றையும், அப் போரில் சோழனை எதிர்த்த சேர பாண்டிய இருவரையும், அச் சோழன் தான் ஒருவனாகவே நின்று வெற்றிகொண்ட சிறப்பையும் கூறியுள்ளான். பருவூர் என்னுமிடத்தில் நடைபெற்ற போரினையே அவன் சுட்டிக்காட்டி யுள்ளான் எனலாம்.

இப் போர் வரலாற்று உண்மை ஒன்றினை எடுத்துக் காட்டக் கூடியது. பாடலைப் பாடியவன் சேரன். போர் நடைபெற்றது சேர, பாண்டியருக்கும் சோழருக்கும் ஆகும். சேரன், சோழன்

கையில் பெற்ற தோல்வியினைச் சேரன் எடுத்துக் கூறுகிறான். இப் பாடல் புலவர்கள் என்றும் உண்மை நிலையினையே எடுத்துக் கூறுபவர் என்பதைக் காட்டும் சான்றாகும்.

**கோக்கோதை மார்பன்:** தொண்டியைத் தலைநகராகக் கொண்டு சேரநாட்டை ஆண்ட மற்றொரு சேர மன்னன் கோக் கோதை மார்பன் ஆவான். கிள்ளி வளவன் என்னும் சோழ அரசன் மதுரைப் பாண்டியன் பழையனை வென்று களிறும், புரவியும் கணக்கில கைப்பற்றிக் கொண்டதைக் கேட்டுக் கோக் கோதை மகிழ்ந்தான் என்று அகப் பாடல் (346) ஒன்று குறிப் பிடுவதால் பழையன் மாறன், சேரர்க்கு இடையூறாக விளங்கி யிருக்க வேண்டும் என்றும், இத் தோல்வி தன் பகையைத் தொலைத்ததால் இவன் மகிழ்ந்திருக்க வேண்டும் என்றும் கருத லாம். பொய்கையார் என்ற புலவர் கோதை மார்பனின் நாடு பல்வேறு வளமும் பெற்று விளங்கும் பெருநாடாதல் கண்டு புகழ்ந்து அந் நாட்டு வளம் உரைத்திட்ட பாடல்களைப் புறப் பாடல் (48,49) வாயிலாக அறிகிறோம்.

**கணைக்கால் இரும்பொறை:** சங்க நூல்களில் நாம் காணுகின்ற மற்றொரு சேர மன்னன் கணைக்கால் இரும்பொறை. கணைக்கால் இரும்பொறையின் வாழ்வு தமிழர்தம் மான வாழ்வுக்கு ஓர் எடுத் துக்காட்டு. ஆனால், போர் மறவரான தமிழர் வாழ்வில் எதிரியை எப்படியெல்லாம் இழிவுபடுத்தினர் என்று காட்டவும் இவன் உதாரணமாகத் திகழ்கிறான்.

இரும்பொறை மரபில் வந்த கணைக்காலிரும்பொறையின் படை வலிமை மிக்க பெரும்படையாகும். கணைக்காலிரும் பொறையின் காலத்தில் வாழ்ந்த மூவன் என்னும் பெருவீரனுக்கும் கணைக்காலிரும்பொறைக்கும் இடையே வளர்ந்த பகையினால், இரும்பொறை அவனைப் போரில் வென்று கைப்பற்றினான். அத் துடன் நில்லாது அவன் பற்களையும் பிடுங்கி, தன் வெற்றிச் சிறப்பினை ஏனைப் பகை வேந்தரெல்லாம் அறியுமாறு, தொண்டி நகர்க்கண் உள்ள தன் கோட்டை வாயிற் கதவில் அழுத்தி வைத்தான். இச் செய்தியினைப் பொய்கையார் என்ற புலவர் நற்றிணையில் பாடியுள்ளார்.

கழுமலம் என்ற நகரை அடுத்துள்ள திருப்போர்ப்புறம் என்னுமிடத்தே கணைக்காலிரும்பொறையும், செங்கணான் என்னும் சோழனும் பகைகொண்டு போரிட்டனர். கணைக்காலிரும்பொறை, செங்கணானின் பெரிய யானைப் படையினை வெல்லமாட்டாது தோற்றான். கணைக்காலிரும்பொறை குடவாயிற் கோட்டத்தின்

கண்ணேயுள்ள சிறையில் வைக்கப்பட்டான். சிறையிலிருந்த சேரன் ஒருநாள் சிறைக்காவலரை உண்ணுநீர்தர வேண்டினன். அவன் கேட்டபோது நீர் தராது காலம் தாழ்த்தி, மதிப்பின்றிக் காவலர் நீர் தந்ததால், அந் நீரை உண்ணது சிறையிலேயே வடக்கிருந்து உயிர்விட்டான். சேரமான் கணைக்காலிரும் பொறையின் அவைக்களத்தே இருந்த பொய்கையார் என்ற புலவர் 'களவழி நாற்பது' என்ற நூலைப் பாடியவர். அந்நூலில் கழுமலத்தில் நடைபெற்ற போரில் செங்கணன் பெற்ற வெற்றிச் சிறப்பைப் பாடினர். பாடல் சிறப்புக்கேட்ட கோச்செங்கணன் சேரமானைச் சிறையினின்றும் விடுவிக்க ஆணை பிறப்பித்தான் என்பர். ஆனல் அதற்குள் மானம் பொருத கணைக்காலிரும்பொறை உயிர் துறந்தான். தன் அவலநிலையை அழகிய பாடலாக வடித்து வைத்தான் அம்மன்னவன். புறநானூற்றுப் பாடலான 'குழவி இறப்பினும், ஊன்தடி பிறப்பினும்' என்ற பாடல் அம்மன்னவனின் கவிதைச் சிறப்பையும் தமிழர் மான உணர்வினையும் காட்டுவதாக அமைந்துள்ளது.

வேறு சில சேர அரசர்களைக் குறித்தும் அறிகிறோம். ஆனல், விளக்கமான தெளிந்த குறிப்புகள் கிடைக்கவில்லை யெனினும் அவர்களைப்பற்றிய செய்திகளை அறிந்தவரையில் காண்போம். ஐயனர்க்குரிய சாத்தனர் என்னும் பெயரைக் கொண்ட **கருவூர்ச் சாத்தன்** கருவூரைத் தலைநகராக் கொண்டு ஆண்ட சேர அரசர்களுள் ஒருவன். நாடாளும் அரசனய் அமர்ந்து புலவரைப் போற்றித் தமிழ் வளர்த்தவன் என்ற செய்தி ஒன்றே இச் சேர மன்னனைப்பற்றி நாம் அறியும் செய்தியாகும்.

**கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை** என்ற சேர வேந்தன் சேரநாட்டு மாக்கோதை மங்கலம் என்ற ஊரில் வாழ்ந்து வாழ்நாளின் இறுதியில் கோட்டம்பலம் என்ற ஊரில் உயிர்விட்டானகையால் இப்பெயர் பெற்றான். சிலர் இவன் பெயர் கூத்தம்பலத்துத் துஞ்சிய மாக்கோதையே என்பர். ஏனெனில் கூத்துக்குப் பெயர்போன கூத்தம்பலத்தே நடை பெற்ற கூத்தொன்றைக் கணடு களித்திருந்தபோது உயிர் துறந்தானதலால் கூத்தம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை என அழைக்கப்பட்டான் என்பர். இம் மன்னனைக் குறித்து வேறு செய்திகள் அறிய ஏதுமில்லை.

மாந்தரன், **மாந்தரன் பொறையன் கடுங்கோ** என்றழைக்கப் படும் சேரமன்னன் இரும்பொறை மரபின் முதல்வன் என்று கருதப்படுகிறான். பெருங்குன்றூர்க் கிழார் என்ற புலவர்

கூற்றிலிருந்து மாந்தரனை இளஞ்சேரல் இரும்பொறைக்கு முற்பட்டோன் எனக் கோடல் கூடுமேயன்றி, இரும்பொறை மரபினர் அனைவருக்கும் முற்பட்டவனுதல் எனக் கூறல் பொருந் தாது என்பர் ஆராய்ச்சியாளர். மாந்தரன் ஆண்ட நாடு, பிற அரசர்களுடன் அவன் கண்ட வெற்றிதோல்விகள் குறித்துச் சான்றுகள் ஏதுமில.

**'வஞ்சன்'** என்பான் சேரர் வழி வந்தவருள் ஒருவன் எனப் படுகிறன். பாயல் நாடு என ஒரு காலத்தில் அழைக்கப்பட்டுப் பின்னர் வயநாடு என்று ஆகி, இப்போது வைநாடு என வழங்கப் படும் பாயல் நாட்டை ஆண்டவன் இம் மன்னன். வைநாடு தாலுக்காவிலுள்ள அஞ்சு குன்று என்ற பெயருடைய மலை, ஒரு காலத்தில் அஞ்சன் குன்று எனப்பட்டு, இந்நாளில் இவ்வாறு வழங்கப்படுகிறது என்பர். வஞ்சன் ஆட்சி நடந்த இடம் இன்றைய நீலகிரி மாவட்டமே எனப்படுகிறது. இதற்குக் காரணம் வயநாடு சென்ற நூற்ருண்டின் இறுதிவரை குடகு நாட்டோடு சேர்ந்திருந்ததே. இப்போதுள்ள நீலகிரி வயநாட் டோடு சேர்ந்திருந்து கி.பி. 1887-ல் பிரிந்தது. இன்று நீலகிரி எனப்படும் மலை பழைய அஞ்சன்மலையே எனப்படும். வஞ்சன் கொடையும் கொற்றமும் உடையவன். புலவர்கள் இவனை,

> 'இரவுப்புறம் பெற்ற ஏம வைகறைப்
> பரிசிலர் வரையா விரைசெய் பந்தர்
> வரிசையின் நிறுத்த வாய்மொழி வஞ்சன்'

என உரைப்பர்.

உதியன் முதலாக வஞ்சன் வரை நாம் கண்ட சேர மன்னர்கள் பண்டைத் தமிழகத்தின் சிறப்பான அரசியல் வாழ்க்கைக்கு எடுத்துக்காட்டாக விளங்கினர். அன்னுருள் புலவராய் விளங் கினர் சிலர்; புரவலராய் விளங்கினர் பலர்; எனினும் போர் மறவராய் அக்கால மரபினுக்கேற்ப அனைவரும் தமிழ்ப்பண்பு நிறைந்தவர்களாய் வாழ்ந்தனர்.

## சங்க காலப் பாண்டியர்

'வண் புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு' என்று தொல் காப்பியரால் போற்றப்படுகின்ற தமிழகம், மிகப் பழைய காலத் திலிருந்தே சேர, சோழ, பாண்டிய மரபினரால் ஆளப்பட்டு வந்துள்ளது. மூவேந்தர் நாடுகள் மூன்றும் சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு என வழங்கப்பெறுவதோடு, அவை முறையே

'குடபுலம்', 'குணபுலம்', 'தென்புலம்' எனவும் வழங்கப்பட்டன. பழனிமலைத் தொடருக்குத் தெற்கேயுள்ள நிலப்பகுதியான தென் புலத்தை ஆண்டவர்கள் பாண்டியர் ஆவர்.

வால்மீகி இராமாயணத்தில், சுக்கிரீவன் சீதையைத் தேடிச் செல்லும் வானர வீரரிடத்துத் 'தெற்கே கபாடபுரம் என்றொரு நகர் உண்டு; அதன் வாயிற் கதவுகள் பொன்னும் முத்தும் வைத் திழைக்கப் பெற்ற வனப்புடையன' என்று கூறியதாகக் காணப் படும் குறிப்பு பாண்டி நாட்டின் பழைமையை நிலைநாட்டுவது ஆகும். பாண்டியரது பழைமையை நிலைநாட்டும் வேறு பல குறிப்புகளும் உள்ளன. தென்னாடு போந்த அர்ச்சுனன் பாண்டியன் மகளை மணந்தான் என வடமொழிப் பாரதம் கூறு கிறது. உரோமானியப் பேரரசன் அகஸ்டஸ் சீசரிடத்துப் பாண்டியன் அரசியல் தூதர்களை அனுப்பியிருந்தான் என அந் நாட்டு வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

சேரர், சோழர்க்கு இல்லாத தனிச்சிறப்புப் பாண்டியர்க்கு உண்டு என்று புலவர்கள் பாராட்டுவர். எல்லா நாடுகளும், நிலவளமும் நீர்வளமும் பெற்று அவற்றால் நெல்வளம் பெறுதல் உண்டு. ஆனால், பாண்டிய நாட்டுக் கடல்முத்தும், சந்தனமும் தனிச் சிறப்பை உடையன. ஆயினும் சேரர்க்கும் சோழர்க்கும் இல்லாத இயற்கைப் பகையான கடற் கோளினால் பாண்டியர் பன்முறை துன்புற்றனர். பஃறுளியாறும் குமரிமுனையும் அழி வுற்றன. கடற் கோள்களினால் இழந்த பகுதிகளுக்கு ஈடாக வடக்கே சென்று நிலப்பகுதிகளை வென்று ஆட்சி புரிந்தனர். பாண்டியநாடு பல்வகை வளமும் வனப்புமிகு வாழ்வும் உடைய தாய் விளங்கியது.

தென்மதுரை, கபாடபுரம், சங்க இலக்கியத்தில் கூடல் என்று குறிக்கப்பெறும் இன்றைய மதுரை ஆகியவை பாண்டிய நாட்டின் தலைநகரங்களாக விளங்கின. பாதுகாவலான அரண் மதுரையைச் சூழ அமையப்பெற்றிருந்தது. அவ்வாறு மதுரையைச் சூழ அமைந்த மதிலகத்து வாயில்கள்தோறும் யவன வீரர் பலர் நின்று காக்கும் காவலை உடையதாய் இருந்ததால் அவர்களைக் கடந்து உட்புகுதல் முடியாததாக இருந்தது.

மதுரை பாண்டியப் பேரரசின் தலைநகரமாக விளங்கிய தோடு வாணிகத்திலும் சிறந்து விளங்கியது. நாளங்காடி, அல்லங் காடி எனும் இரு அங்காடிகள் அங்கு இருந்தன. மதுரைப் பெருங்கடை வீதிகள் மக்கள் கண்டு மகிழ்தற்குரிய வளமும்

வனப்பும் கொண்டிருந்தன. மதுரை நகரக் காவலர்கள் மழை பெய்யும் நள்ளிரவிலும் காவல் புரியும் மாண்புடையவராதலால் களவு இன்றிச் சிறந்த காவலே அங்கு நிலவியது. ஆட்சிச் சிறப்பாலும் அரும்பொருள் உடைமையாலும் புகழ் பெற்ற மதுரைப் பேரூர், புலவர் பலர் வாழ்ந்ததாலும் சிறப்புடைத்தாய் விளங்கியது என்பது அனைவரும் அறிந்த ஒன்றே. பழைமையால், பெருமையால், மொழி வளர் சிறப்பால் பெயர் பெற்ற பாண்டி நாட்டை ஆண்ட கடைச்சங்க கால அரசர்களின் வரலாற்றினைக் காண்போம். சங்க இலக்கியங்களிலிருந்து சுமார் இருபது அரசர்களைப்பற்றிய செய்திகளை அறிந்திட்டாலும், அவர்களுடைய மரபு வரிசையினை நிர்ணயிக்க இயலவில்லை.

**நிலந்தரு திருவின் நெடியோன்:** இவ்வரசனுக்குப் பாண்டியன் மாகீர்த்தி, பாண்டியன் பன்றுடு தந்தான், வடிவலம்ப நின்ற பாண்டியன் முதலான வேறு பெயர்களும் இருந்தன என்ற செய்தி தொல்காப்பியம், மதுரைக் காஞ்சி ஆகிய நூல்களால் தெரிகிறது. இந் நெடியோன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதிக்கும், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுக்கும் முன்னோன் ஆவான். இக்கூற்றுக்கு ஆதாரமாக அமைவது,

> 'எங்கோ, வாழியகுடுமி, தங்கோச்
> செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீத்த
> முந்நீர் விழவின் நெடியோன்
> நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே' (புறம் 9)

என நெட்டிமையார் என்ற புலவர் முதுகுடுமியை வாழ்த்துங்கால் கூறிய பாடல் வரிகளே எனலாம்.

இவன் தன் காலத்தே கடற்கோளால் பாண்டி நாட்டின் பெரும் பகுதியாகிய பஃறுளியாறும், பன்மலையடுக்காகிய குமரிக் கோடும் அழிந்து போகவே அவ்வாறு அழிந்த தன் நாட்டிற்கு ஈடாக வடபகுதியினை வென்று ஆண்டான். இப் பாண்டியன் அவையிலேதான் தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்டது. தமிழ் வளர்த்த, தமிழை வளர்க்கத் துணைபுரிந்த இப் பாண்டியன் நற்றிணையைத் தொகுப்பித்தவன் ஆவான்.

**பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி:** இப்பாண்டியனின் இயற்பெயர் குடுமி என்பதாகும். இவன் வேள்வி பல ஆற்றியமையால் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என

அழைக்கப் பெற்றான். குடுமி, குடுமிக் கோமான், பல்சாலை முதுகுடுமி, பல்யாக முதுகுடுமிப் பெருவழுதி என்றெல்லாம் இவன் பெயர்கள் புறநானூறு, மதுரைக் காஞ்சி, வேள்விக் குடிச் செப்பேடு முதலியனவற்றில் காணப்படுகின்றன.

பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக் குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்வதற்கு முற்பட்டதான பழைய காலத்தே வாழ்ந்தவனை முதுகுடுமி வேதநெறி நின்று வேள்வி பல இயற்றியவன். நெட்டிமையார் என்ற புலவர் மானம் இழந்து வாழும் நின் பகைவர்களின் எண்ணிக்கை அதிகமா? சிறந்த வேள்விகளை முடித்து நாட்டிய வேள்வித் தூண்களின் எண்ணிக்கை அதிகமா? எனக் கேட்டுப் பாடியுள்ளார். வேள்விக்குடிச் செப் பேடுகள், முதுகுடுமி, கொற்கையைச் சேர்ந்த நற்கொற்றன் என்பானுக்கு அவ்வேள்வி நிகழ்ந்த ஊரை உரிமையாக்கித் தந்த செய்தியினை இயம்புகிறது.

முதுகுடுமியின் போர்த் திறத்தை நெட்டிமையார் என்ற அதே புலவர் பாராட்டியுள்ளார். பகைமேற்சென்று பகைவர் நாடுகளைப் பாழ்செய்வது எல்லாம் ஆங்குக் கைக்கொண்ட பொருள்களால் தன் வாழ்வை வளமாக்கிக் கோடற்கன்று; தன்னைப் பாடிவரும் பாணர்க்கும் புலவர்க்கும் பொருள் பல அளித்துப் புரத்தற்காகவே. பண்டைத்தமிழ் மன்னர்களிடம் காணப்பட்ட போரில் அழித்தலாகா உயிர்களை (அதாவது பசுக்களை, அந்தணரை, பெண்களை, பிணியுற்றோரை, ஆண்மக்கட்பேறு வாய்க்கப் பெறாதவரை) போக்கிடம் தேடிப் போர் தொடங்குமுன் செல்லுமாறு செய்த அறப்பண்புகள் முதுகுடுமியிடமும் காணப் பட்டன. வடக்கே இமயம், தெற்கே குமரியாறு, மேற்கே, கிழக்கே கடல்கள் ஆகிய இந்நான்கெல்லைக்குட்பட்ட மிகப்பெரிய நாட்டை முதுகுடுமி ஆண்டான் எனத் தெரிகிறது.

**பாண்டியன் அறிவுடை நம்பி:** கோப்பெருஞ் சோழனின் காலத்தவனாக இம்மன்னன் இருக்கலாம் என்று கருதப்படுகிறது. கோப் பெருஞ் சோழனைப் பாடிய பிசிராந்தையார் அறிவுடை நம்பியைப் பற்றியும் பாடல் ஒன்று பாடியுள்ளமையால் இம் முடிவினைக் கொள்ளலாம். ஆடவரில் சிறந்தவனை நம்பி என்றலும், பெண்டிரில் சிறந்தவளை நங்கை என்றலும் தமிழ் நூல் மரபு. ஆடவரில் சிறந் தவன், அறிவால் நிறைந்தவன் என்பதை அறிவுடை நம்பி என்ற பெயர் காட்டும்.

மக்கட் பேற்றின் சிறப்பினை எடுத்துக்காட்டும் வகையில் பாடல் பாடியுள்ளார். 'பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்

எம் அம்பு கடிவிடுதும் நும்அரண் சேர்மின்' என மக்கட் பேற்றினைப் போற்றிய காலத்தில் வாழ்ந்தவனல்லவா இவன். பல கோடிச் செல்வத்தைக் குவித்து வைத்திருந்தாலும், அச் செல்வத்தின் பயனால் பலரோடு இருந்து பகுத்து உண்ணும் பெரு வாழ்வு அடைந்திருப்பதாலும், மிகப பெரிய செல்வர்க்கு மகப் பேறு இல்லையெனில் அவர் தம் பெரு வாழ்வு, பயனுடைப் பெரு வாழ்வெனப் போற்றப்படாது: பயனிலா வாழ்வெனப் பழித்தே உரைக்கப்படும் என்று கூறியவர் இவ்வரசன்.

பாண்டியன் அறிவுடை நம்பி பாடிய பாடல்கள் நான்கு; அவை இலக்கியச் சுவை மிகுந்தவை. பிசிராந்தையார் பாராட்டிய இப் பாண்டியன் ஆட்வரிற் சிறந்தவன், அறிவிற் சிறந்தவன் என் பதற்கு அவனுடைய பாடல்கள் எடுத்துக்காட்டுகளாய் விளங்கு கின்றன. பிசிராந்தையார் போன்ற நல்லறிவுசால் புலவர்கள் துணையாகக் கொண்டமையால் அறிவுடை நம்பி நல்லாட்சி செலுத் தியவன் என அறிகிறோம்.

**ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன்:** பாண்டியன் அறிவுடை நம்பியைப் போலவே வீரமும், கவிதையியற்றும் புலமை யும் வாய்ந்தவன் இப்பாண்டியன் ஆவான். புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த ஒலியமங்கலமும், அதைச்சூழ உள்ள நாடும் ஒல்லையூர் எனவும் ஒல்லையூர் நாடு எனவும் முறையே பெயர் கொண்டு விளங்கின. சோழ நாட்டிற்கும் பாண்டிய நாட்டிற்கும் எல்லையாக ஓடும் வெள்ளாற்றின் தென்கரையான தென்கோனாடு என அழைக்கப்பெறும் தென்கோனாட்டின் மேலைப் பகுதியான ஒல்லையூர் நாடு பாண்டிய நாட்டின் வட எல்லை நாடாகும். அதனைச் சோழர்கள் கைப்பற்றிக் கொண் டிருந்தனர். பாண்டியனுக்கு ஏற்பட்ட சிறுமையைப் போக்கப் பூதப்பாண்டியன் அந் நாட்டின்மீது படையொடு சென்று அதனை வென்று மீண்டும் பாண்டியர்க்கு உடைமையாக்கியதால் ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் எனப்பட்டான். பூதப்பாண்டி யனின் மறச்சிறப்பினை இச் செய்தியின் வாயிலாக அறிகிறோம்.

பாண்டி நாட்டு மையல் எனும் ஊரினைச் சார்ந்த மாவன், எயில் ஊரினனான ஆந்தை, அந்துவஞ்சாத்தன், ஆதன் அழிசி, இயக்கன் ஆகிய ஐவரும் பூதப்பாண்டியனுடன் பெருநட்புக் கொண்ட குறுநிலத் தலைவர்கள் ஆவர். சேர சோழரை இவர்தம் நட்புக் கொண்டே எதிர்த்துப்பகை முடித்தான் எனலாம்.

பொதியிலிருந்து ஆட்சிமேற்கொண்டிருந்தோனயை திதியன் என்பான், பகைவர் தம் பேராண்மையைப் புறங்காண வல்ல வில்லாண்மையுடையோன் என அவனைப் பாராட்டியுள்ளமையால் பூதப்பாண்டியன் தன்போலும் பெருவீரரைப் பாராட்டும் பேருள்ளம் கொண்டவன் எனத் தெரிகிறது. பூதப்பாண்டியன்பால் அமைந்திருந்த ஆற்றல், அன்பு, பாடற்பண்பு, நாடாள் சிறப்பு ஆகிய குணங்கள் அவன் பாடிய பாடலில் காணக்கிடக்கின்றன.

**கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி:** கடற் பயணம் ஒன்றில் இறந்து போனமையால் இளம்பெருவழுதி என்ற இவ்வரசன் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி என்று பிற்காலத்தவரால் அழைக்கப்பெற்றுள்ளான். பெருவழுதி என்ற பெயரில் பாண்டிய மன்னர் பலர் உளர்; ஆதலால் இளமைக் காலத்திலேயே அரிய குணங்கள் நிரம்பப்பெற்ற இவனை இளம்பெருவழுதி என அழைத்தனர்.

இளம்பெருவழுதி அருந்தமிழ்ப் புலவனாய் விளங்கினான். நற்றிணையில் காணப்படும் பாடலும், புறநானூறு, பரிபாடல் ஆகியவற்றில் காணப்படும் பாடல்களும் இளம்பெருவழுதியின் சிறப்பினை எடுத்துக்காட்டக் கூடியனவாகும். இவ்வரசன் திருமாலின்பால் மிகுந்த பற்றுக்கொண்டவன் எனவும் அறிகிறோம். ஆட்சி, போர்குறித்த வேறு செய்திகளை அறிய இயலவில்லை.

**ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்:** புறநானூற்றின் வாயிலாகச் சிறந்த புலவர் என அறியப்படுகின்றவன் இந் நெடுஞ்செழியன் ஆவான். இப் பாண்டியன் காலத்தே தமிழகத்தை வென்று அகப்படுத்த எண்ணித் தமிழக எல்லைக்கண் வந்து தமிழரசர் பலருக்கும் தொல்லை தந்தனர் ஆரிய அரசர்கள். அவர்களுடைய படையினைப் பாழ் செய்து துரத்தியமையால் அக்கால மக்கள் அவ்வெற்றிச் சிறப்பினை அவன் பெயரோடு இணைத்துப் பாராட்டினர்.

கல்வியின் சிறப்பை உணர்ந்த மன்னவன் இவனெனலாம். 'உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றை நிலைமுனியாது கற்றல் நன்றே' என்று தொடங்கும் இவனுடைய புறப்பாடல் வரலாற்றுச் சிறப்புடைத்து.

நெடுஞ்செழியனின் செங்கோற் சிறப்பினை எடுத்துக் கூறுவது சிலப்பதிகாரம் ஆகும். கண்ணகி, குற்றமற்றவன் கோவலனே;

குற்றமுடையவன் நெடுஞ்செழியனே என்று எடுத்துக்காட்டிய போது, தம் அறியாமையால் அழித்த அறத்தைத் தம் உயிர் கொடுத்து உயிர்ப்பித்தான்.

**தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்:** சேரருள் செங்குட்டுவன் போன்று பாண்டியருள் சிறந்து விளங்கியவன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் ஆவான். இப் பாண்டியனைப் பாடிய புலவர் யாரும் நெடுஞ்செழியன் என்று அழைத்திடவில்லை. **'பசும்பூண் பாண்டியன்'** என்ற பெயர் கொடுத்துச் சிலர் அழைத்துள்ளனர். பரணர் **'வில்கெழுதானைப் பசும்பூட் பாண்டியன்'** எனவும், நக்கீரர் **'நாடு பல தந்த பசும்பூட் பாண்டியன்'** எனவும், மதுரைக் கணக்காயனார் **'பலர்புகழ் திருவிற் பசும்பூட் பாண்டியன்'** எனவும் பலவாறு அழைத்துள்ளனர். மற்றவர்கள், **'இயல் தேர்ச்செழியன்,' 'கைவண் செழியன்', 'கொடித் தேர்ச் செழியன்' 'கொற்றச் செழியன்', 'மறப்போர்ச் செழியன்'** எனப் பல்வேறு பெயர்களால் அழைத்துள்ளனர்.

பிரான்ஸ் நாட்டின் பதினான்காம் லூயியைப் போல் இளமையிலேயே அரியணை ஏறினான். அவ்வாறு இளையோனாய் விளங்கியமையால் யானைக் கண் சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறையும், சோழன் ஒருவனும், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோ வேண்மான், பொருநன் ஆகிய ஐவரும் ஒன்றுகூடி எதிர்த்தனர். பகைவர் செயல்களை அறிந்த பாண்டியன், தன்னை இளைஞன் என்று எண்ணிய, 'ஆற்றலறியா அரசர்களையும் அவர் தம் போர் முரசுகளையும் கைப்பற்றி மீளுவேன்' என்று சூளுரைத் தான். இடைக்குன்றூர் கிழார் இப்பாண்டியனின் போர்த் திறனைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

போரில் யானைக் கண் சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறையைச் சிறை செய்து, பகை அரசர் போர் முரசுகள் அனைத்தையும் கைப்பற்றினான்; எதிரிப்படை எதிர்த்து நிற்க ஆற்றாமல் புறங்காட்டி ஓடியது. பகைவர் மீண்டும் படையெடுத்து வராதபடி செய்திட விழைந்தான். சேரன் சிறைப்பட்டதால் பகைப் படை சோழ நாட்டை நோக்கி ஓடியது. ஓடும் படையை விடாது துரத்திச் சென்றான். தஞ்சை மாவட்டத்து ஆலங்கானம் என்னுமிடத்தே அவ்வரசர் படை அனைத்தையும் அழித்து, அவர் தம் முரசு, குடை, பொருள் முதலான வளம் அனைத்தையும் கொண்டு நாடு திரும்பினான். இவ் வெற்றிச் சிறப்பினாலேயே தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் எனச் சிறப்பித்துப் பாராட்டப்படுகிறான்.

நெடுஞ்செழியனின் தலையாலங்கானத்து வெற்றிச் சிறப்பினை நக்கீரர் பாராட்டியுள்ளார்; தலையாலங்கானத்தருகே அமைந்த செழியனின் பாசறைச் சிறப்பினையும், மின்னலைப்போல் ஒளிவிடும் அவன் வாட்படைச் சிறப்பினையும் புலவர் பொதும்பில் கிழார் மகனார் என்ற புலவர் போற்றியுள்ளார். நெடுஞ்செழியனின் வேற்படையின் சிறப்பினை ஆலம் பேரி சாத்தனார் என்ற புலவர் பாராட்டியதைப் போல மாங்குடி மருதனார் மதுரைக் காஞ்சியில் போர் முரசு கொண்ட செழியன் பேராண்மையினைப் பாராட்டியுள்ளார். கல்லாடனார் தாம் கண்ட போர்க் காட்சிகளையும், இடைக் குன்றூர் கிழார் செழியன் போர்க்களம் நோக்கிச் செல்லும் காட்சியையும் வியந்து பாராட்டியுள்ளனர். 'ஒருவனை ஒருவன் எதிர்ப்பதும், ஒருவனை ஒருவன் வெற்றிக் கொள்வதும் உலகியல்; அது எங்கும் நிகழக் கூடியது; அது உலகிற்கும் புதியது அன்று; ஆனால் ஏழு அரசர் கூடி ஒருவனை எதிர்ப்பதும் அந்த ஒருவன் ஏழு அரசர்களை வென்று அழிப்பதும் அரிது அரிது; அதிசயம் அதிசயம்; இதுபோல் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை' என்று புலவர்கள் வியந்து பாராட்டியுள்ளனர்.

செழியன் அவையிலிருந்து அறிவுரை வழங்கும் ஆன்றோராகிய குடபுலவியனார் என்ற புலவர், 'பாண்டியன் படையைச் சேர சோழரும், குறுநில மன்னர் ஐவரும் ஒன்று கூடி எதிர்த்து நின்றமையால் தமிழ்நாடே ஒன்றே கூடி நின்றாற்போல் காட்சியளித்தது அக்களம்' என ஆலங்கானப்போரை அழகாகப் பாராட்டியுள்ளார்.

ஏழு அரசருள் சிறைப் பிடிக்கப்பட்ட யானைக் கண்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை எவ்வாறோ சிறையில் இருந்து தப்பி விட்டான் என்பதை உணர்ந்து உடனே பெரும் படையுடன் சேரநாடு நோக்கிச் சென்று சேரனுடைய யானைப் படையை அழியவும், போர் வீரர் பலர் உயிர் துறக்கவும் களம் வென்றான்.

செழியனின் மற்றொரு வெற்றி கொங்கரை வென்றதாகும். கொங்கரை, அதிகன் என்னும் பாண்டியனின் படைத்தலைவன் வாகைப் பறந்தலை என்னுமிடத்தில் எதிர்த்துக் கடும் போரிட்டான். எனினும் கொங்கர் பாண்டியனின் யானைப் படையினை அழித்தனர். செழியன் உடனே போர்க்களம் புகுந்து கொங்கரை வென்று அவர்க்குரிய நாடு பலவற்றைக் கைப்பற்றிக் கொண்டான்.

நெடுஞ்செழியன் தன்னை எதிர்த்த சேர சோழர்க்குதவிய தமிழ்நாட்டுச் சிற்றரசர்தம் செருக்கினையும் அடக்கினன்; பரதவர்

என்பாரையும் செழியன் வென்றான்; நெல்லூர் என்னும் பெயர் உடைய பேரூரையும் கைப்பற்றிச் செழியன் ஆண்டான் என மாங்குடி மருதனார் கூறுகிறார்.

எப்போதும் போர் போர் என ஓயாப் பெரும் போர் மேற் கொண்ட வாழ்வினனாய் விளங்கிய போதிலும் பாராட்டத்தக்க பெருங்குணங்கள் அவன்பால் காணப்பட்டன. நெடுஞ்செழியன் நல்லறிவு வாய்க்கப் பெற்றவன். தனக்கென ஒன்றையும் வைத்துக் கொள்ளாது அனைத்துப் பொருளையும் தன்னை நாடி வந்தோர்க்கு வழங்கிய வள்ளலாய் விளங்கினான். நெடுஞ்செழியன் பாடிய வஞ்சினப் பாடலால், பகைவர் கூறும் பழிச்சொல் கண்டு பொறாத அவனது இயல்பையும், புலவர் பாடும் புகழுடையோர் நற்கதி பெறுவர் என்ற எண்ணத்தையும், இரப்போர்க்கு ஒன்று ஈயாமை இழிவு என்ற ஈகைக்குணத்தையும் அறிகிறோம். அள்ளூர் நன் முல்லையார், ஆலங்குடி வங்கனார், ஆலம்பேரி சாத்தனார், இடைக் குன்றூர்கிழார், ஈழத்துப்பூதன்தேவன், எருக்காட்டூர்த் தாயங் கண்ணனார், கல்லாடனார், குடபுலவியனார், குறுங்கோழியூர் கிழார், நக்கீரர், பரணர், பேராலவாயர், பொதும்பில் கிழார் மகனார், மதுரைக்கணக்காயனார், மருதன் இளநாகனார், மாங்குடி மருதனார், முதுகூத்தனார் ஆகிய புலவர்கள் இவனைச் சிறப்பித்துப் பாடியுள்ளனர் என்பதே இவன் பெருமைக்குச் சான்று எனலாம்.

**வெற்றிவேற் செழியன்:** ஆரியப்படை கடந்த நெடுஞ்செழி யனின் மகனை வெற்றிவேற்செழியன் இளஞ்செழியன் என அழைக்கப்பட்டான். கொற்கையினின்று நீங்கி மதுரையில் அரசோச்சினான். இவன் ஆட்சிக்காலத்தில் பாண்டிய நாடு மழை வளம் இழந்து வறுமையுற்றிருந்தது. அவ்வறுமை நீங்கிக் குடிகள் இன்புற்று வருமாறு கண்ணகிக்கு விழா ஒன்று எடுத்து பொற்கொல்லர் 1000 பேரைக் கொன்று களவேள்வி செய்தான் எனவும், இதனால் கண்ணகியின் சினம் தணிந்து நாடு மழை பெற்று பசியும்பிணியும் நீங்கிற்று என்றும் கூறுவர்.

**கானப்பேர் எயில்கடந்த உக்கிரப்பெருவழுதி:** கானப்பேர் என்பது இன்று காளையார்கோவில் என வழங்கப்படுவதே யாகும். அக் கானப்பேர் என்ற இடத்தில் உக்கிரப் பெரு வழுதியின் காலத்தில் வேங்கைமார்பன் என்பான் ஒருவன் ஆண்டுவந்தான். அவ் வேங்கைமார்பன் உயர்ந்த மதிலை எடுத்து அரிய கோட்டை ஒன்றினை அமைத்தான். அது தன் ஆட்சிக்குக் கேடு என அறிந்து உக்கிரப் பெருவழுதி, ஒரு பெரும் படையுடன் சென்று, வேங்கைமார்பனை வென்று அக் கானப்பேரெயிலைக் கைப்

பற்றிக் கொண்டான் என்றும், வேங்கைமார்பன் தான் இழந்த வற்றை மீண்டும் கைப்பற்ற முயன்று தன் முயற்சியில் தோல்வியே கண்டான். இச் செய்தியினை மூலங்கிழார் என்னும் புலவர் வாயிலாக அறிகிறோம். உக்கிரப் பெருவழுதியின் வெற்றிச் செயலை அவன் பெயரோடு இணைத்து மக்கள் கானப்பேர் எயில் கடந்த உக்கிரப் பெருவழுதி என்றனர்.

கடைச் சங்கத்தை ஆதரித்த வள்ளல் அவன் என்பர். கடைச் சங்கத்தின் இறுதியில் வாழ்ந்த அவன் அச் சங்கம் கலைந்து விடுமோ என்று அஞ்சி, அச் சங்கப் புலவர்களின் பாக்களை ஆராய்ந்து, அவற்றுள் அகத்திணை தழுவிய பாடல்களைத் தேர்ந்து அகநானூறு அல்லது நெடுந்தொகை என்ற பெயரால் அவற்றைத் தொகுப்பித்தவன். உப்பூரி கிழார் மகனார் உருத்திரசன்மனார் என்ற புலவரைக் கொண்டு தொகுக்கச் செய்தான். இப் பாண்டியனிடம் காணப் பெற்றச் சிறப்பு சேர, சோழ நாடுகளில் அரசோச்சிய மாரிவெண்கோ, இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி ஆகிய இருபெரு வேந்தரொடும் பெரு நட்புடையோனாய் வாழ்ந்ததே. மூவருடன் காணப்பெற்ற நட்பினைக் கண்ணாரக் கண்டு களித்து நின்ற ஔவையார் அதனைப் பாராட்டி உரைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ்ப் புலவரோடிருந்து, தமிழை வளர்த்து, தமிழ்நாட்டின் நல்வாழ்விற்குத் துணைபுரிந்த பாண்டியன் கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதிதானும் ஒரு புலவனாவான். தன் காலத்துத் தமிழ் மகள் ஒருத்தியின் மனநலம் விளக்கும் அழகிய பாட்டொன்றைப் பாடினான். உழவுத் தொழில் வளர்வதற்குரிய உணர்வினை ஊட்டிய பெருமை பெருவழுதிக்கு உண்டு என்பது அவருடைய பாடலிலிருந்து அறியப்பெறும் செய்தியாகும்.

**அண்டர்மகன் குறுவழுதி:** வழுதியார் எனும் பெயர் பூண்டு விளங்கும் இவன் பாண்டியவழிவந்தவர் எனக் கருதப்படுகிறான். அண்டர்மகன் குறுவழுதி ஆண்ட நாடு எது, யார் அவன் என்பதெல்லாம் தெரியவில்லை. ஆனால் அவனோர் அருந்தமிழ்ப் புலவன் என்பது மட்டும் தெரிகிறது. குறுந்தொகை, நெடுந்தொகை, புறநானூறு ஆகிய மூன்றும் இவன் பெயரால் ஒவ்வொரு பாடல் இடம் பெற்றுள்ளது.

**இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன்:** இலவந்திகைப் பள்ளி என்பது நீரை வேண்டுமளவு நிறைக்கவும் போக்கவும் வல்ல பொறிகள் அமைந்த வாவியை நடுவிடத்தேபெற்று நறுமணம் நாறும் பல்வேறு மலர் நிறை மரங்கள் கொண்ட பூஞ்சோலை

யாகும். அரசர்கள் இத்தகைய இலவந்திகைப் பள்ளிகளில் முதுமைக் காலங்களில் தங்கினர். அவர்களுடைய வாழ்நாள் அங்கேயே முடிந்துபோதல் உண்டு. அத்தகைய இலவந்திகைப் பள்ளியொன்றில் இறந்தமையால் இவ்வரசன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன் என அழைக்கப்பெற்றுள்ளான் எனக் கருதலாம்.

நன்மாறன் காலத்தே நாடாண்டிருந்த மன்னர்களில் இவனே சிறந்தவனுவான். இதனை மதுரை மருதன் இளநாகனுரின் பாடல் வாயிலாக (புறம் 55) அறிகிறேம். புலவர்களைப் போற்றும் இயல்பு இம்மன்னனிடத்தில் குறைந்து காணப்பட்டமையால் பேரி சாத்தனர் எனும் பெரும் புலவர் அவன் மக்களை வாழ்த்து வதுபோல் பொருள் கொடா அவன் புன்மையைப் பழிக்கும் பாடல் ஒன்று புறநானூற்றில் (198) உள்ளது. ஈயேன் எனும் இயல்புடையோனுய் இவன் விளங்கியதை ஆவூர் மூலங்கிழார் எனும் மற்ருேர் அருந்தமிழ்ப் புலவரும் பழித்துக் கூறியுள்ளார் (புறம் 196).

**கருங்கை ஒள்வாள் பெரும் பெயர் வழுதி:** இவன் பெயர்க்கு முன்னுலே காணப்படும் கருங்கை ஒள்வாள் என்ற தொடருள் கருங்கை என்பது வாள் பிடித்துக் காழ்ப்பேறிய வலிய கை எனப் பொருள்படும். கொற்றத்தால் சிறந்த இக் கோவேந்தன் கொடை யாலும் சிறந்தோனுவான். தன்னை நாடிவந்தோர்க்கு அவர் கேட்கா முன்னமே, அவர் முகத்தை நோக்கி அவர் உள்ளத்து வேட்கையை உணர்ந்து அவர் விரும்புவது அளித்து அனுப்பும் அருளும் அறிவும் ஒருங்கே உடையவனுவான்.

**கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதி:** மாறன் வழுதி கூட காரம் எனும் இடத்தே உயிர் நீத்தமையால் கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதி என அழைக்கப்பெற்றுள்ளான். மாறன் வழுதி இறந்த கூடகாரம் எங்கு உள்ளது? அவன் அங்கு இறப்பதற்குக் காரணமான பகைவர் யார்? எனத் தெரியவில்லை. மாறன் வழுதியைப் பாடிய புலவர்களான ஐயூர் முடவனர், மருதன் இளநாகனர் ஆகிய இரு புலவர்களும் அவனுடைய போர் வன்மையினைப் பாராட்டிப் பாடியுள்ளார். எனவே, மாறன் வழுதி ஆற்றல் மிக்கோன் என்பதுமட்டும் அறியப்படுகிறது.

**சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன்:** சித்திரமாடம் ஓவியச் சாலை அல்லது ஓவியக் கூடமாகும். ஓவியங்களில் ஊறிய உணர்வினனுய் மகிழ்ந்து வாழ்ந்திருந்த காலத்தே மாண்ட

மையால், சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன் என அழைக்கப் பெற்றுள்ளான் எனக் கருதப்படுகிறது. ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியனின் மறைவிற்குப்பின் அரசு கட்டில் ஏறிய வெற்றிவேற் செழியனே சித்திரமாடத்துத் துஞ்சிய நன் மாறன் என்பர். நன்மாறன் என்ற இப் பெயர் அவன் அரசு கட்டில் ஏறிய பின்னர் மேற்கொண்ட பெயராகும் என்றும் கூறுவர். ஆனல் அதற்குச் சான்றேதும் இல்லை. வெற்றிவேற் செழியன் வேறு, சித்திர மாடத்துத் துஞ்சிய நன்மாறன் வேறு என்றே கருதப்படுகிறது கவின்மிகு தோற்றமும், கலையுள்ளமும், நீண்ட கைகளும் உடைய நன்மாறனை மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனுர் புகழ்ந்து பாடியுள்ளார்.

**பொற்கைப் பாண்டியன்:** பொற்கைப் பாண்டியன் என்ற பெயர் காரணப் பெயர் ஆகும். இயற் பெயர் யாது எனத் தெரியவில்லை ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனுக்கு முற் பட்டவன் இப் பொற்கைப் பாண்டியன் எனக் கருதலாம். சிலப்பதிகாரம் வாயிலாகப் பொற்கைப் பாண்டியனின் செய்தி அறியப்படுகிறது. தொல்காப்பியத்திலும் பொற்கைப் பாண்டி யனைக் குறித்துக் கூறப்பட்டுள்ள செய்தியினை அறிகிறோம்.

**முடத் திருமாறன்:** கடைச் சங்கத்தைத் தோற்றுவித்த தனிச் சிறப்புடையவன் முடத் திருமாறன் ஆவான். கபாட புரத்தைத் தலைநகராகக் கொண்ட அரசனிவன் எனக் கருதப் படுகிறன். கடைச் சங்கத்தை அமைத்துச் செந்தமிழ் வளரத் துணைபுரிந்தான். சங்கம் அமைத்துத் தமிழ் வளரத் துணை புரிந்ததோடு தானே ஒரு புலவனுய்ப் பாக்கள் பாடினுன் என் பதற்கு இரு பாக்கள் நற்றிணை வரிசையில் இடம் பெற்றுள்ளன.

**வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி:** வெள்ளியம்பலம் ஒன்றில் உயிர் நீத்தமையால் இப் பெருவழுதி வெள்ளியம் பலத்துத் துஞ்சிய பெருவழுதி எனப் பெயர் பெற்றுள் ளான். இவன் தன் குடிப் பெருமையினைக் காத்து நின்றுன் என்பதற்குப் புறப்பாடல் (58) ஒன்று சான்றுக அமைகிறது. புலவர் பாராட்டும் பெருங்குணம் ஒன்று அவனிடத்துக் காணப் பட்டது. பிற நாடுகளை வெல்லும் போர் ஆர்வத்தைவிடத் தமிழரசர் பிறருடன் கலந்து ஒன்றுபட்டு வாழ்வதையே அவன் விழைந்தான்.

வழுதி தன் காலத்தே சோணுட்டரசனுய் விளங்கிய குராப் பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவனுடன், பிரிதலறியாப்

பெருநட்புடையனாய் விளங்கினன். புலவர் இந்த ஒற்றுமையைப் போற்றிலர். காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனார் என்ற புலவர் தமிழ் வேந்தர்கள், தம்முள் ஒற்றுமையைக் கொண்டு விடுவாராயின் தமிழகம் தழைக்கும், தமிழரசு வாழும் என்று கூறிய அறிவுரைவழி நின்றவன் இம்மன்னனாவான்.

சங்க காலப் பாண்டியர்களுள் குறிப்பிடத்தக்கவர்களையும், நன்கு வரலாற்றறிஞர்களால் அறியப்பட்டவர்களையுமே இங்குக் கண்டோம். இன்னும் சிலர் பாண்டிய மன்னரா என ஐயத்திற்குரியவராக உள்ளனர். எனவே, அவர்களை இங்கு விடுத்துள்ளோம்.

## சங்க காலச் சோழர்கள்

சேர, சோழ, பாண்டியர் மூவரும் ஒரு தாய் வயிற்றில் பிறந்தார் எனவும், அவர்கள் தென்னாட்டில் தாமிரபரணி ஆற்றங்கரையில் கொற்கையினைத் தலைநகராகக் கொண்டு வாழ்ந்து வந்தனர் எனவும், பின்னர் அவர்கள் எதனாலோ பிரிந்தனர் எனவும், அவருள் பாண்டியர் அங்கேயே தங்கிவிட மற்ற இருவரும் முறையே மேற்கிலும், வடக்கிலும் சென்று தம் தம் பெயரால் தனியரசு அமைத்துக் கொண்டனர் எனவும் கதை கூறுவர்.

சோழர்கள் கிள்ளி வளவன், செம்பியன், சென்னி என்ற பிற சொற்களாலும் அழைக்கப் பெறுவர். சோழ அரசின் தோற்றமும் தொன்மையும் அறிய இயலாத ஒன்று.

தமிழ் வளர்த்த பெருமை சோழர்க்கும் உண்டு; பாடப்பட்டோர் வரிசையில் சோழ மன்னர் பலரும் இடம் பெற்றுள்ளனர். சோழர் தலைநகருள் பழையதாகிய உறையூர் புலவர் பலர் தோன்றிய இடமாகும்.

பண்டைத் தமிழ் நூல்களாலும், பிறநாட்டுப் பேரறிஞர் பலராலும் பாராட்டப்பட்ட சிறப்பினை உடைத்து சோணாடு. பெரிபுளூஸ், ஆசிரியர் தாலமி ஆகியோர் சோழநாட்டைக் குறிப்பிட்டுள்ளனர். காவிரிப்பூம்பட்டினமே 'கபெரீஸ்' எனவும், நாகப்பட்டினமே 'நிகாமா' எனவும், உறையூரே 'ஒர்துரா ரெகியா. சோர்நாடி' எனவும் வழங்கப்பட்டதாக அறியப்படுகிறது. 'மிலிந்தான் அரசனுடைய கேள்விகள்' என்ற கி.பி. முதல் நூற்றாண்டின் முற்பகுதியில் எழுதப்பட்ட புத்த நூல் அக் காலக் கடற்கரைப் பட்டினங்களுள் சிறந்தனவாகக் 'கேரள பட்டினம்'

என்ற ஒன்றைக் குறிப்பிடுகிறது. அக் கேரள பட்டினம் காவிரிப் பட்டினமே என்பர். 'சோழ வளநாடு சோறுடைத்து' என்ற சிறப்பினை அந் நாட்டிற்கு அளிப்பது காவிரிப் பேராறே. சோணுடு, 'காவிரி நாடு', 'காவிரி சூழ்நாடு' 'காவிரி புரக்கும் நாடு' என்றெல்லாம் அழைக்கப்படுகிறது. நீர்வளம் நிரம்பியது சோணுடு என்ற கருத்தில் அந் நாட்டை 'நீர்நாடு' எனவும், 'புனல்நாடு' எனவும் அழைப்பர்.

சோணுட்டு நகரங்கள் புகார், உறையூர், அழுந்தூர், ஆலூர், இடையாறு, குடந்தை முதலாயின ஆகும். சோணுட்டுத் தலைநக ரங்களாகச் சிறப்புப் பெற்றவை புகாரும் உறையூருமே. உறையூர், சோழர் தலைநகர்களுள் மிகப் பழைமையானதாகும். மூவேந்தர் தலைநகர்களைக் குறிப்பிடுகையில் 'வஞ்சியும் வறிதே' 'மதுரையும் வறிதே,' 'உறந்தையும் வறிதே எனச் சோழர் தலைநகராகிய உறந்தை ஒன்றையே குறிப்பிடுதல் காண்கிறோம். சிலப்பதிகாரக் காலத்தில் சோழர் இரண்டு தலைநகர்களைக் கொண்டிருந்தனர்; சோழர் தலைநகராகப் புகாரும், உறந்தையும் குறிப்பிடப்பட் டுள்ளன. பட்டினப்பாலை வாயிலாகக் கரிகாலன் காலத்தே உறந்தை புதுப்பிக்கப் பெற்றது என்பதனை அறிகிறோம். உறந் தைக்குக் கோழி என்றொரு பெயரும் உண்டு. 'சோழன் மூதூர்ப் பேராச் சிறப்பின் புகார்' என்ற சிலப்பதிகார அடிகளால் புகார் நகரின் பழைமையும் பெருமையும் புலப்படுகிறது. புகார் காவிரிப் பூம்பட்டினம்எனவும் வழங்கப்படும்.காவிரியாறு கடலொடு கலக்கு மிடத்தில் அமைந்திருப்பதால் கரிகாற் பெருவளத்தான் காலத்தே புகார் சோணுட்டுத் தலைநகராயிற்று.

இவ்வாறு சிறப்புடன் விளங்கிய தலைநகர்களிலே கோல் ஏந்திக் கோனாட்சி செய்து புலவர்கள் பலருக்கு வாழ்வளித்துப் புகழ்பெற்ற அரசர்கள் பலராவர். புலவர் புகழ்பெற்ற சோழ மன்னர்களைக் காண்போம்.

**உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னி:** சங்க நூல்களால் அறியப் பெற்ற சோழ அரசர்களுள் காலத்தால் முதலில் வைத்துச் சிறப்பிக்கப்பட்டவன் உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னியே. 'உருவப் பஃறேர் இளையோன் சிறுவன்' என முடத்தாமக் கண்ணியார் பொருநராற்றுப்படையில் கரிகாலனை அழைப்பதால் கரிகாலன் இளஞ்சேட் சென்னியின் மகன் என அறியப்படுகிறது. இளஞ்சேட்சென்னியின் மனைவி வேளிர் குடியில் பிறந்தவ ராவாள்.

இளஞ்சேட்சென்னி அழகிய பல தேர்களைக் கொண்டிருந்த மையை அவன் பெயரே காட்டும். உருவப் பஃறேர் இளஞ்சேட்

சென்னி நால்வகைப் படையுடையவனுவான். அவனுடைய படைப் பெருமையினைப் பரணர் பாராட்டிக் கூறியுள்ளார். உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னி, ஊன் பொதி பசுங்குடை யார் என்ற புலவர் பாராட்டிய நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னி, செருப்பாழி எறிந்த இளஞ்சேட் சென்னி, வம்ப வடுகரை ஓட்டிப் பாழியை அழித்த இளம் பெருஞ் சென்னி ஆகிய நால்வரும் ஒருவரே எனக் கருதப்படுகிறது. இளஞ்சேட் சென்னி தன்பால் வரும் இரவலரைப் பேணிப் புரத்தலிலும் வல்லவனுவான் எனப் பெருங்குன்றூர் கிழார் என்னும் புலவர் கூறுகிறுர்.

**கரிகாற் பெருவளத்தான்:** சங்க காலச் சோழரில் சிறப்புடை யோனும், தன் பெயர் இன்றுவரை நிலைத்திருக்கச் செய்தோனும் கரிகாற் பெருவளத்தானே ஆவன். அழுந்தூர் வேளிர் தலைவன் மகளும், உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னியும் கரிகாற் பெருவளத்தானின் தாயும் தந்தையுமாவர். இது பொருநராற்றுப் படை, தொல்காப்பிய நச்சினுர்க்கினியர் உரை, அகநானூறு ஆகிய வற்றினுல் உறுதிப்படுகிறது. கரிகாலனின் மனைவி நாங்கூர் வேளிர்குலச் செல்வி என்பதும் நச்சினுர்க்கினியர் உரையினு லேயே விளங்குகிறது. நாங்கூர் வேள்மகளே அன்றி வேறுபல மகளிரும் கரிகாலன் மனைவியராய் இருந்தனர் என்று எண்ண வேண்டியுள்ளது. கரிகாலன் இறந்த பின்னர் அவன் பிரிவாற்ருது வருந்தும் கருங்குழலாதனுர் என்ற புலவர் 'துகளிர் மகளிரொடு வேத வேள்வித் தொழில் முடித்தான்' எனவும், 'மகளிரும் இழை களைந்தனர்' எனவும் மகளிர் எனப் பன்மை வாய்பாட்டால் கூறுவதால் அவ்வாறு எண்ண வேண்டியுளது.

கரிகாலன் ஒருவனே அல்லன்; சங்க நூல்களில் கரிகாலன் என இருவர் கூறப்பட்டுள்ளனர் என்ற கருத்தினை ஆராய்வோம். 'பெருஞ்சேரலாதனைத் தோற்கடித்த கரிகாலன் முற்பட்டவன்: இமயம்வரை சென்ற கரிகாலன் பிற்பட்டவன்; சங்க நூல்களில் கரிகாலன் என இருவர் கூறப்பட்டுள்ளனர்; முதற் கரிகாலனைப் பற்றிய அகப்புறப் பாடல்களின் நடைக்கும், இரண்டாம் கரிகால னைப் பற்றிய பட்டினப்பாலை, பொருநராற்றுப்படை இவற்றின் நடைக்கும் இடையில் நிலவும் சிறிதளவு வேறுபாடு நுணுகி நோக்குவார்க்குப் புலனும்' எனக் கூறுவாரும் உளர்.

பரணர், நக்கீரர், மாமூலனுர், கருங் குழலாதனுர், கழாத் தலையார், வெண்ணிக் குயத்தியார் முதலானோரால் பாடப் பெற்றேனும் பெருஞ்சேரலாதனுடன் போரிட்டவனும் முதற் கரிகாலன் என்பர். கடியலூர் உருத்திரங்கண்ணனுர்,

முடத்தாக் கண்ணியார் ஆகியோர் கூறும் உருவப் பஃறேர் இளஞ்சேட்சென்னி சிறுவன் ஆகிய கரிகாலன் இரண்டாம் கரி காலன் என்றும், இவனே வடநாடு சென்றோன் என்றும் கூறுவர்.

இரண்டாம் கரிகாலனின் காலம் கி.மு. 60க்கும் கி.மு. 20க்கும் இடைபட்ட காலமே ஆகும் என்பர். இவ்வாறு முடிவு செய்தது; எப்படி எனக் காண்போம். 'இலங்கை வரலாற்றைக் கூறும் மகாவம்சம், கி.பி. 171-193-ல் ஒரு கயவாகுவையும், கி.பி. 12-ஆம நூற்றுண்டின் முற்பகுதியில் ஒரு கயவாகுவையும் குறிப்பிடுகிறது. இவ்விருவருள் செங்குட்டுவன் காலத்தில் வாழ்ந்தவன் முதற் கயவாகுவேயாதலின், அவன் காலம் இரண்டாம் நூற்றுண்டின் இறுதிக் காலமே. வடக்கே கங்கையாறு வரை பெயர் பெற்று இருந்த ஆந்திர சதகர்ணி அரசன் யக்ஞஸ்ரீ என்பவன் கி.பி 166-196-ல் அரசாண்டவனுவான்; இவனே சிலப்பதிகாரத்தில் சொல்லப்பட்ட செங்குட்டுவனின் நண்பன் நூற்றுவர் கன்னர் என்பவன்: இவன் காலம் கயவாகுவின் காலத்தோடு ஒற்றுமை யுடையது; ஆகவே செங்குட்டுவனின் காலம் அவ்விரண்டாம் நூற்றுண்டின் இறுதிக் காலமே ஆகும். கரிகாலன் செங்குட்டுவ னுக்கு முற்பட்டவன் ஆதலாலும், அவன் வடநாடு செல்ல ஏற்ற காலமாக விளங்கியது, புஷ்யமித்ர சுங்கனுக்குப் பிற்பட்ட காலமே ஆதலாலும், இக்காலம் இலங்கைமீது தமிழரசர் படையெடுத்துச் செல்ல ஏற்ற காலம் என்று மகாவம்சம் கூறுவதாலும்' இவ்வாறு முடிவு செய்கின்றனர்.

இரண்டாம் கரிகாலனுக்கும் செங்குட்டுவனுக்கும் வரையறுக் கப்பட்டுள்ள காலம் பொருந்தாது. அக்காலம் ஒன்றையே அடிப்படையாகக் கொண்டு கரிகாலன் இருவர் என்ற கூற்றுத் தவறு எனக் காட்டிவிடலாம். பரணர் முதற் கரிகாலனைப் பாடியவர். அவரே இரண்டாம் கரிகாலன் தந்தை உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னியையும், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் மகன் செங்குட்டுவனையும் பாடியுள்ளார். பரணர், கரிகாலனை அவன் ஆட்சிக் கால இறுதியில் அதாவது கி.மு. 20-லும், சேரன் செங்குட்டுவனை அவன் ஆட்சித் தொடக்கத்திலும், அஃதாவது கி.பி. 166-லும் பாடியதாகக் கொண்டாலும் பரணர் 186 ஆண்டுகள் (அதாவது கி.மு.20+கி.பி. 166=186) உயிர் வாழ்ந்தவராகிறுர். இம் முடிவு சரியன்று என்பது வெள்ளிடைமலை.

கரிகாலனுக்கும் செங்குட்டுவனுக்கும் இடைப்பட்ட காலமே இத்துணைப் பெரிது எனில், கரிகாலன் தந்தை உருவப் பஃறேர்

இளஞ்சேட் சென்னிக்கும் செங்குட்டுவனுக்கும் இடைப்பட்ட காலத்தைக் கருதி நோக்கினுல், பரணரின் வாழ்நாள் 186-க்கும் அதிகமாகும். இது கரிகாலன் ஒருவனே என்ற கருத்தில் மேற் கொள்ளப்பட்ட கருத்து. கரிகாலனை இருவராகவே கொண்டு பரணர் முதற் கரிகாலனைப் பாடியுள்ளார் என்பதை வைத்து நோக்கினுல் அவர் வாழ்நாள் எத்துணை நீளமுடையது என்பதை எண்ணிப் பார்க்கவே முடியாது. இதனுல் இரண்டாம் கரிகால னுக்கும் செங்குட்டுவனுக்கும் மேலே வரையறுத்த காலம் பொருந்தாது.

மேலும், அகச்சான்று ஒன்றின் வாயிலாகக் கரிகாலன் இருவர் அல்லர், ஒருவனே என்பதை மெய்ப்பிக்கலாம். எப்படி? முதற் கரிகாலனை பாராட்டிய பாக்கள் என்று கூறப் பெறும் பரணர், மாமூலனுர், வெண்ணிக் குயத்தியார் முதலியோரால் பாடப் பெற்ற அகப்பாடல்களில் எடுத்துக் கூறப்பெற்ற வெண்ணிப் பறந்தலை நிகழ்ச்சி, சிலரால் இரண்டாம் கரிகாலனைப் பற்றியது என்று கூறப்பட்ட பொருநராற்றுப் படையிலும் அப்பாட்டுடைத் தலைவன் செயலாகக் கூறப்பட்டுள்ளது; பரணர் கரிகாலனைப் பாடினுர் எனில் அவன் காலத்தில் வாழ்ந்தவர் என்று கொள்ள வேண்டுவதில்லை. கரிகாலனுக்குப் பிற்காலத்தே வாழ்ந்த அவர், இறந்த கால நிகழ்ச்சிகளையே பாடினுர் என்று கொள்ளுதல் வேண்டும்.

ஆகவே, வெண்ணி, வாகை நிகழ்ச்சிகளுக்கு உரியோன் எனக் கூறப்பட்ட கரிகாலன் இரண்டாம் கரிகாலன் அல்லன்; வெண்ணிப் போர் வெற்றி குறித்து, அழுந்தூரில் ஆர்ப்பு எழுந்தது எனப் பரணரால் குறிப்பிடப் பெற்றேன் உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னிக்கும், அழுந்தூர் வேள் மகளுக்கும் பிறந்த கரிகாலனே என்பது புலப்படுகிறது. பொருநராற்றுப் படையில் பாடப்பட்ட கரிகாலன் உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னியின் மகனே என அப்பாட்டுக் கூறுகிறது. இதனுல் அகம், புறம் ஆகியவற்றில் பாடப்பட்ட கரிகாலனைப் பெற்ரேரும், பொருநராற்றுப் படையில் பாராட்டப் பெற்ற கரிகாலனைப் பெற்ரேரும் ஒருவரே.

பரணரால் முதற் கரிகாலன்பால் ஏற்றிக் கூறும் அதே வெண்ணிப் போர், முடத்தாமக் கண்ணியரால் பாராட்டப் பெற்ற கரிகாலனுக்கும் ஏற்றிக் கூறப்பட்டுள்ளது. அது முன்னேர் செயலைப் பின்னுள்ளோர்க்கு ஏற்றிக் கூறும் முறைபோலன்றி அப்பாட்டுடைத் தலைவன் செயலாகவே கூறப்பட்டுள்ளது; ஆகவே

அச்செயல் இரண்டாம் கரிகாலனுடையதே ஆகும். ஆக அவன் செயலை முதற் கரிகாலனுக்கு ஏற்றிக் கூறுவது இயலாது; முன்னுள்ளோர் செயலை வேண்டுமாயின் பின் வந்தோர்க்கு ஏற்றிக் கூறுதல் இயலும். காலத்தால் பிற்பட்டோர் செயல் ஒன்றை அவருக்கு முற்பட்டோர்க்கு ஏற்றிக் கூற இயலாது. இவற்றையெல்லாம் கருதி நோக்குகின்றபோது அகப்புறப் பாடல் களால் பாடப்பெற்ற கரிகாலனும், பொருநராற்றுப் படையில், பாடப் பெற்ற கரிகாலனும் ஒருவரே; வேறுபட்ட இருவரல்லர் என்பது தெள்ளத் தெளிவாகிறது.

இனிக் கரிகாலன் என்ற பெயர் குறித்த சர்ச்சையைக் கண்ணுறுவோம்.

'முச்சக் கரமும் அளப்பதற்கு நீட்டிய கால்
இச்சக் கரமே அளந்ததால்;—செய்ச் செய்
அரிகால்மேல் தேன்தொடுக்கும் ஆய்புனல் நீர்நாடன்
கரிகாலன் கால்நெருப் புற்று.'

என்ற பாடல் வரிகள் இளமைக் காலத்தில் அவன் தாயத்தார் அவனைச் சிறைக் கோட்டத்து இட்டுச் சிறைச்சாலையைச் சூழத் தீ வைத்ததையும், மதிலைத்தாண்டி வெளி வர முயன்றபோது அவன் கால்கள் கரிந்து போனதையும், கால் கரிந்து போயின மையின், அவன், கரிகால் என்றே அழைக்கப் பெற்றதையும் அறிவிக்கின்றன.

கரிகாலன் என்ற பெயரைக் கரி-காலன் என வடமொழித் தொடர்புடையதாகப் பிரித்து, அவன் யானைகளுக்குக் காலன் என்றும், கரிகாலன் என்பதைக் கலிகாலன் என மாற்ற, அவன் கலிப்பகைக்குக் காலன் என்றும் பொருள் கொண்டுள்ளனர். ஆனல், இது பொருத்தமானதன்று. எவ்வாறெனில் கால் நெருப்புற்றமையால் உண்டான காரணப் பெயரே அப்பெயர் என்பதை அறிவிக்கும் சான்று பல உள்ளன. அவன் பெயர், அன் விகுதி பெறுமல் 'கரிகால்' என்றே பழந்தமிழ் இலக்கியங் களில் வழங்கப்பட்டுள்ளது.

'காய்சின மொய்ம்பிற் பெரும்பெயர்க் கரிகால்', 'பெருவளக் கரிகால்', 'கலிகொள் சுற்றமொடு கரிகால் காண' (அகம்) முதலியன சான்றுகளாகும். வளவன் என்ற பெயர் தொடர்ந்து 'கரிகால் வளவன்' என்றும் 'களியியல் யானைக் கரிகால் வளவ'

என்றும் வந்துள்ளது. கரிகால் என்பது தொடரப் பெருமல், 'வளவன்' எனத் தனித்தே வழங்கப் பெற்றுள்ளது. 'தேர் வளவ' என்பது எடுத்துக்காட்டு (புறம் 7).

கரிகாலனுக்கு மக்கள் பலர் இருந்தனர் என்பதற்குப் பட்டினப் பாலையின் 'பொன்தொடிப் புதல்வர் ஓடி ஆடவும்' என்ற தொடர் சான்று எனினும் அவர்கள் யார் என்பது தெரியவில்லை. பண்டித இராகவையங்கார் உறையூர் மணக்கிள்ளி, வேற்பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளி ஆகிய இருவரும் கரிகாலன் மக்கள் என்ற கூற்று, தக்க அகச் சான்றுகளால் அறிஞர்களால் மறுத் துரைக்கப்பட்டுள்ளது.

ஆதிமந்தி, கரிகாலனின் மகள் என்றும், ஆட்டனத்தி அவளுடைய கணவன் என்றும் அவன் சேர வேந்தன் மகன் என்றும் இளங்கோவடிகள் கூறுகிறார்.

கரிகாலன் தாய் அவனைக் கருவுற்றிருக்கும்போதே தந்தை இறந்து விட்டான், தந்தை இறக்கும்போது கரிகாலன் பிறக்கவே யில்லை; பிறப்பதற்கு முன்னே அரசுரிமையைப் பெற்றவனாயின் கரிகாலன் என்பதனைப் பொருநராற்றுப் படையின் 'தாய் வயிற்றி லிருந்து தாயம் எய்தி' என்ற தொடர் உணர்த்துகிறது. நச்சினார்க்கினியர் கூறும், 'தான் பிறக்கின்ற காலத்துப் பிறவாதே நல்ல முகூர்த்தம் வருமளவும் தாயுடைய வயிற்றிலே இருந்து பிறக்கையினாலே, அரச உரிமையைப் பெற்றுப் பிறந்தான்' என்ற விளக்கம் பொருத்தமாக இல்லை. பிறக்கு முன்னரே தந்தை இறந்து விட்டானாதலின் அப்பொழுதே—தாய் வயிற்றிலேயே கரிகாலன் அரசுரிமை அடைந்தான் என்பதே பொருத்தம்.

கரிகாலனைக் குறித்த சிக்கல் இன்னொன்றையும் காண வேண்டியுள்ளது. பட்டத்து யானை தெருவழியே அனுப்பப்பட்டு அது கரிகாலனை அரசனாக்கியது என்ற பழமொழிப் பாடலின் அடிப்படையே ஐயத்திற்குரியதாகும். ஆளும் அரசன் மகப் பேறு இன்றி இறந்துவிட்டால், அரசர் மரபில் வந்த ஆற்றல் மிக்க ஒருவனோ வேற்று நாட்டரசன் ஒருவனோ தன் முயற்சியால் நாட்டைக் கைப்பற்றி ஆளுதலே தமிழகத்தில் பண்டு நிலவிய அரசியல் முறை. ஐம்பெருங்குழு எண்பேராயம் என்ற அமைப்பு முறை வந்த பிற்காலத்தேதான் யானை வழி ஆள்வோரைத் தேர்தல் மேற்கொள்ளப்பட்டது. கரிகாற் பெருவளத்தான் காலத்தில் ஆளும் குழு ஏதுமிருந்ததாகத் தெரியவில்லை. நாட்டில் நிலவிய குழப்ப நிலையினைப் பயன்படுத்தி அவன் தாயத்தார்

ஆட்சியைக் கைப்பற்ற முயற்சி செய்ய முனைந்துவிட்டதால் யானையைக் கொண்டு தேர்வு செய்ய வேண்டிய தேவையில்லை. ஆகவே, பழமொழிக் கூற்று ஏற்கத்தக்கதன்று.

சோழர் தலைநகரிலிருந்து யானை விடப்படாமல் கழுமலம் என்ற சேரர் நகரிலிருந்து விடப்பட்டதேன்? இவ் வரலாற்றைக் கூறும் பழமொழிச் செய்யுளில் 'விழுமியோன்' என்றுதான் காணப்படுகிறதே ஒழியக் கரிகாலன் பெயரோ, சோழர் குலத்தான் என்ற குறிப்போ இல்லை. யானை தந்தது எனக்கூறும் பழமொழியே வேறு செய்யுள்களில் கரிகாலன், பகைவர் கையகப் பட்டுச் சிறை வைக்கப்பெற்றான் என்றும், பின்னர் இரும்பிடர்த் தலையார் துணைகொண்டு வெளிப்பட்டான் என்றும் கூறுகிறது. இவற்றையும் ஏற்றுக்கொள்வதாயின் பதிலிறுக்க வேண்டிய கேள்விகள் பல உள்ளன. யானையைக் கொண்டு அரசனைக்க முன் வந்தோர் யாவர்? அவனைச் சிறை செய்தோர் யானைத் தேர்வு செய்தபோது வாளா இருந்தனரா? கருவூரும் கழுமலமும் சேர நாட்டு நகரங்களாயிற்றே? இதையெல்லாம் கருதி நோக்குகையில் அப் பழமொழிப்பாடல் சேர நாட்டில் நடைபெற்ற அரசன் தேர்வு ஒன்றையே குறிப்பிடுகிறதேயன்றிச் சோணாட்டு அரசியலுடன் தொடர்புடையதன்று என்பது தெளிவு.

கரிகாலனுடைய போர்களில் வெண்ணிப் போரும், வாகைப் பறந்தலைப் போரும் குறிப்பிடத்தக்கன. முதலில் நடைபெற்ற போர் வெண்ணிப் போரேயாகும். அவன் பெற்ற வெற்றிகளில் பெருவெற்றியாகும் அது. சேரனும் பாண்டியனும் வேளிர் ஒன்பதின்மருடன் ஒன்று கூடி நீடாமங்கலத்திற்கு அண்மையில் கோயில் வெண்ணி என வழங்கப்படும் வெண்ணி வாயில் என்னுமிடத்தில் கரிகாலனை எதிர்த்தனர். கரிகாலன் தான் ஒருவனாகவே நின்று அத்தனை அரசர்களையும் அழித்தொழித்தான். கரிகாலனின் வெற்றியினைப் பரணர், முடத்தாமக் கண்ணியார், மாமூலனார், கழாத் தலையார், வெண்ணிக் குயத்தியார் முதலானவர்கள் பாராட்டியுள்ளனர். கரிகாலன் தாய் பிறந்த அழுந்தூரில் இவ் வெற்றி குறித்து வெற்றிவிழா கொண்டாடப் பட்டது.

வெண்ணியில் கரிகாலனுடன் போரிட்டுத் தோற்றவருள் உயிர் பிழைத்த ஒன்பது வேளிரும், மீண்டும் வாகைப் பறந்தலை என்னுமிடத்தில் எதிர்த்தனர். இப்போதும் கரிகாலனே வென்றான். அவ் வொன்பது பேரும் முரசு, குடை முதலான தம் விருதுகளைப் போர்க் களத்திலேயே விட்டுவிட்டு ஓடினர்.

கரிகாலன் காவிரிக்குக் கரை அமைத்து அணைகட்டி அரசாண்ட செய்தி சோழர் கல்வெட்டுகள், தெலுங்கச் சோழர் செப்பேடுகள், விக்கிரம சோழன் உலா, நவ சோழ சரிதம், மகாவம்சம் முதலியவற்றால் அறியப்படுகிறது. காவிரிக்குப் பகையரசர் துணைகொண்டு கரை அமைத்தான். மகாவம்சம் கரிகாலன் இலங்கை மீது படையெடுத்துச் சென்று, அங்குப் போரில் தோற்ற பல ஆயிரம் வீரர்களைக் கொணர்ந்து அவர்களைக் கொண்டு காவிரிக்குக் கரை அமைத்தான் என்று கூறுகிறது.

**திருமாவளவன்:** பட்டினப்பாலையில் பாடப்பட்டுள்ளவன் திருமாவளவன் என்று கூறப்படுகிறது. பட்டினப்பாலையிலிருந்தே திருமாவளவன் சிறையினில் அடைக்கப்பட்டிருந்தான் எனவும், அங்கிருந்து வெளிப்போந்து அரியணையைக் கைப்பற்றினான் எனவும் அறிகிறோம். அவ்வாறு அரியணையைக் கைப்பற்றியதும் ஒளியர், அருவாளர், வடவர், குடவர், தென்னவர், பொதுவர், இருங்கோவேள் முதலான தமிழகத்தில் ஆங்காங்கு இருந்த முடியுடைமன்னர், குறுநில மன்னர் முதலியோரை வென்றான்.

தமிழகத்தில் தன்னை எதிர்ப்போர் யாருமிலாமையால் வாள், குடை, முரசு முதலியவற்றை முன்னே அனுப்பி வடநாடு சென்றான். இமயத்தில் புலிப்பொறி பொறித்து மீண்டான். மீளுங்கால் வச்சிர நாட்டரசன் கொடுத்த முத்துப்பந்தல், மகத நாட்டரசன் கொடுத்த பட்டி மண்டபம், அவந்தி வேந்தன் கொடுத்த தோரண வாயில் முதலியவற்றைப் பெற்றுத் தமிழகம் வந்தான். இமயத்துக் கப்பாலும் செல்ல அவன் கருதியிருந்தான் எனவும், இமயம் தடுத்துவிட்டமையால் திரும்பினான் எனவும் இளங்கோ அடிகள் குறிப்பிட்டுள்ளார்.

திருமாவளவனும், சிலப்பதிகாரம் காட்டும் அரசனும் ஒருவரே என்றும், திருமாவளவனே கரிகாலன் எனவும் நச்சினார்க்கினியர் உரைக்கின்றார். சிலப்பதிகாரம் ஐந்தாம் காதையில் குறிப்பிடப்பட்டுள்ள திருமாவளவன் கரிகாலனே எனவும் அடியார்க்கு நல்லார் என்னும் சிலப்பதிகார உரைகாரர் உரைக்கிறார்.

எனினும் பட்டினப்பாலையின் குறிப்புகளுக்கும், பொருநராற்றுப் படையின் குறிப்புகளுக்கும் பெருத்த வேறுபாடு உளது. கரிகாலன் தன் தாய் வயிற்றிலேயே அரசுரிமை எய்தினான் எனப் பொருநராற்றுப்படை குறிப்பிடுகையில், பட்டினப்பாலையில் சிறை

வயப்பட்டு அங்கிருந்து வெளிப்போந்து அரசுரிமை பெற்றதாகச் செய்தி காணப்படுகிறது. பிறப்பிலிருந்தே அரசோச்சியவன் என்று பொருநராற்றுப்படை கூறுகிறது. கரிகாலனிடம் சேர, பாண்டியர் தோற்றனர் எனப் பொருநராற்றுப் படையில குறிப்பிடப்பட்டிருக்கிறது. பட்டினப்பாலை பாண்டியர் தம் தோல் வியை மட்டும் குறிப்பதாயிற்று. இவ்வாறான வேறுபாடுகள், இயல்பாகக் கரிகாலனும் திருமாவளவனும் வேறுபட்டவர்கள் என்பதைக் காட்டக்கூடியனவாக அமைகின்றன.

சிலப்பதிகாரத்தில் கரிகாலன் என்ற பெயரினை இரு இடங் களில் குறிப்பிடும் இளங்கோ அடிகள் திருமாவளவன் என்ற பெயரினை ஒரே இடத்தில்தான் குறிப்பிடுகிறார். கரிகாலனும் திருமாவளவனும் ஒரே பெயருக்குரியராக இருப்பின், 'கரிகாலன்' என்ற பெயரினை மட்டுமோ, 'திருமாவளவன்' என்ற பெயரினை மட்டுமோ பயன்படுத்தியிருப்பாரன்றி வேறு வேறு வகைகளில் இரு இடங்களில் இப்பெயர் பயன்படுத்தப்பட்டிருக்கமாட்டா. இரு பெயர்களும் வேறு வேறு என இதன் வாயிலாக அறியலாம்.

செயங்கொண்டாரின் கலிங்கத்துப்பரணியில் இமயத்தில் கரிகாலன் புலிப்பொறி பொறித்து மீண்டான் என்ற குறிப்பினைக் கூறியிருப்பதிலிருந்தே அடியார்க்கு நல்லார் திருமாவளவன், கரிகாலனே என்று கூறினர். செயங்கொண்டாரின் படைப்பு லெய்டன் பட்டயங்களுக்குக் காலத்தால் பிற்பட்டது. இந்த இரண்டிலும் கரிகாலன் காவிரிக்குக் கரைகண்டு, கல்லணை எழுப்பிய செய்தி காணப்படுகிறதே அன்றிக் கரிகாலனின் இமயப்படையெடுப்புக் குறிக்கப்படவில்லை. இச் சான்றுகளில் குறிப்பிடப்பட்ட யாரும் இமயம் சென்று திரும்பியதாக இல்லை. எனவே, முதலாம் இராசராசனுக்கும், முதலாம் இராசேந்திர னுக்கும் பிற்பட்டவரான செயங்கொண்டார் கரிகாலனின் இமயப்படையெடுப்பினை அறிந்திருந்தார் எனக் கூறுவது பொருத்தமாயில்லை. கரிகாலன் இமயம்வரை செல்லவில்லை எனவும், திருமாவளவனே அத்தகைய செயலைச் செய்தவன் எனவும் அடியார்க்கு நல்லாரின் திருமாவளவனே கரிகாலன் என்ற கூற்றுத் தவறு எனவும் அறிகிறோம்.

தன்னைப் பாராட்டிப் பாடிய கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்ற புலவர்க்குப் பதினாறு நூறாயிரம் பொன் பரிசளித்தான் என்றால் அது அவன் தமிழ்ப்பற்றிற்கு எடுத்துக்காட்டு எனலாம்.

கலிங்கத்துப்பரணி,

'தழுவு செந்தமிழ்ப் பரிசில் வாணர்பொன்
பத்தோ டாறுநூறு ஆயி ரம்பெறப்
பண்டு பட்டினப் பாலை கொண்டதும்'

என்று கூறுகிறது.

கரிகாலன்போல் திருமாவளவனும் நாட்டை வளமுடையதாக்கி விளைபொருள் வளர வழி வகைசெய்தான்; காவிரிப்பூம்பட்டினம் என்ற தலைநகரை உருவாக்கினன். கரிகாலனைப்பற்றிக் குறிப்பிடுகையில் உறையூரோ, காவிரிப்பூம்பட்டினமோ அவனுடைய பெயருடன் இணைத்துக் கூறப்படவில்லை. பரணர் கரிகாலனுடன் கழார் என்னுமிடத்தையே குறிப்பிடுகிறார். கழார் துறைமுகமாகவும், இடையாறு என்பது அவன் தலைநகராகவும் விளங்கின எனக் கருதப்படுவதால், திருமாவளவனை, உறையூர், காவிரிப்பூம்பட்டினம் இவற்றோடு தொடர்புபடுத்திக் கூறப்பட்டிருப்பதும் நம் கருத்தை வலியுறுத்தும்.

**குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவன்:** இவ்வேந்தன் குராப்பள்ளி என்னும் இடத்தே உயிர் துறந்தான். உறையூர் இவனுடைய தலைநகரமாக விளங்கிற்று. திருமாவளவன் ஆளும் இவ்வுறையூரில் வாழ்ந்த மருத்துவன் தாமோதரனார் என்னும் புலவர் தங்கள் அரசனிடத்துக் காணப்படும் பண்புகளை எடுத்துக் கூறிப் பாராட்டியுள்ளார். அவன் தன் காலத்தே பாண்டி நாடாண்டிருந்த வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியோடு நட்புப்பூண்டு ஒழுகினன். இவ்வாறு ஒற்றுமையுடன் பெருந் திருமாவளவனும் பெருவழுதியும் வாழ்வதைப் பட்டினத்துக் காரிக்கண்ணனார் என்ற புலவர் பாராட்டியுள்ளார். கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக்குமரனார் எனும் பரிசில் பெற வந்த புலவரை உடனே அழைத்துப் பரிசில் தராமையால், 'எம் பெருமையறிந்து பேணும் பண்புடையாளரே நம்மால் நயந்து பாராட்டத்தக்கவர்' என்று கூறி வெளியேறினர் என்ற செய்தியினைப் புறப்பாடலால் அறிகிறோம்.

**குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன்:** சோழ நாடு, திருமாவளவனுக்குப் பின்னர் இரு கூறுபட்டு இருதிறத்தவரால் ஆளப்பட்டு வந்தது. அவற்றுள் ஒன்றின் தலைநகர் புகார் ஆகும். மற்றொன்றின் தலைநகர் உறையூர் ஆகும். உறையூராண்ட சோழ அரசர்களுள் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் சிறந்தோனவான். ஆடுதுறை மாசாத்தனார், ஆலத்தூர் கிழார், ஆவூர் மூலங்கிழார், இடைக் காடனார், எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார்,

ஐயூர் முடவனுர், கோவூர்கிழார், நக்கீரர், நல்லிறையனுர், மாறோக்கத்து நப்பசலையார், வெள்ளைக்குடி நாகனுர் முதலிய புலவர்கள் இவன் கொற்றம், சிறப்பு முதலாயினவற்றை விளங்கப் பாடியுள்ளனர்.

கிள்ளிவளவன், எண்ணிய எண்ணியாங்கெய்தும் திண்ணியனுவான்; அவன் விரும்பினுல் ஞாயிறு, நிலவொளி வீசி மகிழ்வூட்டும்; திங்கள் வெறுப்புற்றுக் காய்ந்து வெந்துயர் தரும்; அவன் அருள் நோக்குப்பெற்றவர் பொன்னும் பொருளும் பெற்றுப் பொலிவுறுவர்; அவனுல் சினந்தோர் நாடு தீவாய்ப்பட்டுத் தீந்தொழியும் என்று கூறுகிருர் ஆவூர் மூலங்கிழார் (புறம் 38). பகையரசனின் பொன்னுலாய முடிகளைக் கைப்பற்றி அழித்து, அப்பொன்னுல் கழல் செய்து காலில் புனைந்து வாழ்ந்த பேராண்மை உடையவன் அவன் (புறம் 40). கிள்ளிவளவன் குட்டியைக் காக்கும் புலிபோல் தன் நாட்டினைக் காத்து நின்றவன் (புறம் 42).

வளவன் வெற்றிச் சிறப்புப் பெற விரும்பி, சேர நாட்டை ஆண்ட பேரரசனொருவனை வெல்ல எண்ணினுன். பெரும் படையுடன் கருவூர்க் கோட்டையை முற்றுகையிட்டான். கிள்ளிவளவன் கருவூர்க் கோட்டையை அழித்து, அதனை அடுத்த ஊரையும் அழித்து, இமயத்தே விற்பொறித்த வீரம் மிக்கோன் என வீற்றிருந்த இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனையும் வென்முன் என்பதனை மாறோக்கத்து நப்பசலையார் பாராட்டிக் கூறியுள்ளதிலிருந்து அறிகிறோம்.

கிள்ளிவளவனுடைய பெயருக்கு முன் உள்ள 'குள முற்றத்துத் துஞ்சிய' என்னும் அடைமொழி சேரனுடன் கிள்ளிவளவன் இறுதிக் காலத்தே செய்த போரில் உயிர் துறந்தான் என்பதைக் காட்டுகிறது எனலாம். குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் கொடையாலும் சிறந்து விளங்கினுன் என்பதற்கு ஆவூர் மூலங்கிழார் என்ற புலவர் பாடலும், இடைக் காடனுர் பாடலும், எருக்காட்டூர்த் தாயங்கண்ணனுர் பாடலும் சான்றுகள் எனலாம். வளவன்பால் கொடைப் பொருள் பெறும் நல்வாய்ப்பு நமக்கும் உண்டாமோ என்ற ஐயம் எவர்க்கும் வேண்டாம் எனக் கோவூர் கிழாரும், எமன் இரவலர் போலவே தானும் சென்று இரு கை கூப்பி வணங்கி இரப்புரை கூறி நின்றே அவன் உயிரைப் பறித்திருக்க வேண்டும் என அவன் இறந்தபோது மாறோக்கத்து நப்பசலையாரும் கூறுவனவற்றுல் வளவன் கொடைக்குணம் அறியப்படுகிறது.

சிலப்பதிகாரம் கூறும் வளவன் கிள்ளியும், மணிமேகலை கூறும் மாவண் கிள்ளியும், கோவூர் கிழார் முதலாம் புலவர் போற்றி வாழ்ந்த கிள்ளி வளவனே எனவும், மூவரும் ஒரு வரல்லர், வேறுவேறுபட்டவரேயாவர் எனவும் இரு வேறு கருத்துகள் நிலவுகின்றன. தகுந்த ஆதாரங்கள் இல்லாத நிலையில் முடிந்த முடிபாக எதனையும் கூறுதற்கில்லை.

தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள திருக்கோவலூரைத் தலைநகராய்க் கொண்ட மலையமானுடன் பகைகொண்டு அவ னுடைய முள்ளூர் மலையை அழித்தான். மலையமான் மக்கள் இரு வரையும் கைப்பற்றிக் கொணர்ந்து யானையின் காற் கீழிட்டுக் கொல்லத் துணிந்தான். கோவூர் கிழார் என்னும் புலவர் தலை யீட்டால் மலையமான் மக்களைக் கொல்லாது போக விடுத்தான்.

துளு நாட்டைச் சேர்ந்த கோசர் என்னும் போர் வீரர் கூட்டம் தமிழரசுகளுக்குத் தொல்லை பல விளைவித்து வந்ததால், அக் கோசரை ஒழித்திடல் வேண்டுமென எண்ணிப் புறப்பட்டுக் கோசர் தம் படை வலியைப் பாழ்செய்து அவர் பண்டு கைப் பற்றியிருந்த நாடுகளைக் கைக் கொள்ள முன்வந்தான் என்ற நிகழ்ச்சியினை நக்கீரர் குறிப்பிட்டுள்ளார்.

கிள்ளிவளவன் கோசரைத் துரத்தி வெற்றி பெற்றதோடு, பாண்டியன் பழையன் மாறன் என்பவனுக்கு எதிராகப் படை திரட்டிச் சென்று, பழையனை எதிர்த்துப் போரிட்டு வென்றான். தன் பகைவன் பழையன் தோற்றான் என்பதறிந்து கோக்கோதை மார்பன் எனும் சேரன் பெரு மகிழ்வு எய்தினன் என்பது அக நானூற்றுப் பாடலால் (346) அறிகிறோம்.

**சோழன் செங்கணான்:** 'சேரமான் கணைக்காலிரும்பொறை சோழன் செங்கணானோடு திருப்போர்ப் புறத்துப் பொருது, பற்றுக் கோட்பட்டுக் குடவாயிற் கோட்டத்துச் சிறையிற் கிடந்து தண்ணீர் தா வென்று பெறாது பெயர்த்துப் பெற்றுக் கைக் கொண்டிருந்து உண்ணான் சொல்லித் துஞ்சிய பாட்டு' என்ற புறப்பாடலின் வாயிலாக அவன் வரலாற்றின் ஒருபகுதியை அறிகிறோம். சோழன் செங்கணான் கணைக்காலிரும்பொறையினைச் சிறை வைத்ததையும், புலவரின் 'களவழி நாற்பது' பாடல்களால் விடுவித்தமையும் சேரர் வரலாற்றினைக் கண்ணுற்றபோது விளக்கமாகக் கண்டோம்.

அம்பர், வைகல், நன்னிலம் முதலாய இடங்களில் அமைந் துள்ள சிவன் கோயில்கள் எல்லாம், கோச்செங்கட் சோழன்

திருப்பணியே என்றும் கூறுவர். முற்பிறவியிற் சிலந்தியாய்ப் பிறந்தவன் அடுத்த பிறவியில் சிவனுறையும் தலந்தோறும் கோயில் அமைத்து வழிபட்டான் என்பதைச் சேக்கிழார் கூறும் கதை வாயிலாக அறியலாம்.

**செருப்பாழி எறிந்த இளஞ்சேட்சென்னி:** வேளிர்க்குரிய ஊர்களுள் பாழி என்பதும் ஒன்று. தன்னாட்டின் வடபகுதியில் இருந்து தொல்லை விளைத்து வந்த வடுகரை அழித்து, அச்சிறப்புத் தோன்ற 'செருப்பாழி எறிந்த இளஞ்சேட்சென்னி' எனும் சிறப்புப் பெயர் பெற்ற சென்னி, தென்னாட்டுக் கடற்கரைகளில் வாழ்ந்து சோழ பாண்டிய நாடுகளுட் புகுந்து பாழ் விளைத்துக் குறும்பு செய்த குறுநில மன்னர் குழுவாகிய பரதவர் என்பார் தம் ஆற்றலையும் அழித்து அமைதி நிலைநாட்டினன். இளஞ்சேட் சென்னியின் கொடைச் சிறப்பினைப் பாடிய புலவர், தன்னைப் பாடிவரும் இரவலர் தமக்கு அணி பல அளிக்கும் அருட்கொடைத் திறத்தை அழகொழுகப் பாடியுள்ளார்.

**கோப்பெருஞ்சோழன்:** கோப்பெருஞ்சோழன் உறையூரைத் தலைநகராகக் கொண்டு அரசோச்சினன். புலவர் பலர் கோப் பெருஞ்சோழனைக் குறித்துப் பாடியபோதிலும், எவரும் அவன் அரசியல் வாழ்வு பற்றிய எதனையும் கூறவில்லை. அவன் பாக் களும், அவனைப் பாடிய புலவர் பாக்களும், நண்பனைப் பழகுதற் குரிய நல்லோன், மானம் இழந்த பின் வாழா மாண்புடையான் என்று அவன் பண்புடைமைகளையே பாராட்டுகின்றன. அரசனை அறிவுடைப் புலவனை வாழ்ந்த சோழன் நண்பர் உலகிற்கோர் எடுத்துக்காட்டாய் விளங்கினன். உண்மை நட்புக்குப் பிசிராந்தை யார் கோப்பெருஞ்சோழன் நட்பே எடுத்துக்காட்டாகும்.

கோப்பெருஞ்சோழனை அவன் மக்களே போருக்கு விளித் தனர். சேர, பாண்டியர் செவியுட் சென்றுபுகு முன்னரே உலக வாழ்வினின்றும் விடைபெற்றுக் கொள்ள விரும்பி வடக்கிருந்து உயிர் துறக்கத் துணிந்தபோது, பிசிராந்தையாரும் உடன் வந்து வடக்கிருந்தார். கோப்பெருஞ் சோழனின் புலமையும் பண் பாடும் நிறைந்த பேருள்ளம் விளங்கும் பாடல்கள் பல உள்ளன. தன் பாடல் ஒன்றில் பொருள் பெறும் வழி அறநெறிப்பட்டதாக இருத்தல் வேண்டும்; பொருள் ஒன்றையே குறிக்கோளாகக் கொள்ளுதல் கூடாது, அன்பு நெறியினின்றும், அருள் நெறியினின் றும் நீங்காது பொருள் தேடுதல் வேண்டும் என அறிவுரை கூறி யுள்ளான் இம்மன்னன். குறுந்தொகையில் (20) காணப்படும்

இப்பாட்டினுல் கோப்பெருஞ் சோழனின் உள்ளம் வெளிப் படுகிறது.

**நெடுங்கிள்ளி:** நலங்கிள்ளி, நெடுங்கிள்ளியின் பகை குறிப் பிடத்தக்கது, நலங்கிள்ளி, நெடுங்கிள்ளியின் பகை உறவு குறித்த தகவல்கள் ஏராளமாக உள்ளன.

நெடுங்கிள்ளி உறையூர் ஆட்சி உரிமையைப் பெற வேண்டி, நலங்கிள்ளியுடன் பகை கொண்டான். நலங்கிள்ளியின் பெரும் படையினை எதிர்த்துத் துரத்தும் வன்மை இன்மையால் ஆவூர்க் கோட்டையினுள் அடங்கியிருந்தவன் கோவூர் கிழார் எனும் புலவர் உரை கேட்டு ஆவூர்க் கோட்டையைக் கைவிட்டான். நலங்கிள்ளி ஆவூர்க் கோட்டையினுள் இருந்தபோது நெடுங் கிள்ளி உறையூரைக் கைப்பற்றினுன். பரிசில் பெற வந்த புலவரை ஒற்றர் எனச் சிறை வைத்துக் கொல்ல முயன்ற நெடுங்கிள்ளி, கோவூர் கிழார் என்ற புலவர் பொருட்டுப் புலவரை விடுதலை செய்தான். நெடுங்கிள்ளி காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி எனவும் அழைக்கப்பெறுதலால் இவன் காரியாறு எனும் இடத்தே நிகழ்ந்த போரில் உயிர் துறந்திருக்க வேண்டுமெனக் கருதப் படுகிறது.

**நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னி:** இவ்வரசன் பாமுளூர் எறிந்த, நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னி எனவும் அழைக்கப் படுவதால், பாமுளூரை வென்று அழித்தான் என அறியலாம். நெய்தலங்கானல் என்பது கடற்கரையைச் சார்ந்த ஓர் ஊர்; அவ்வூரோடு யாதோ ஒருவகையில் தொடர்பு கொண்டிருந்தமை யால் இவ்விளஞ்சேட்சென்னி நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னி எனப்பட்டான். ஊன்பொதி பசுங்குடையார் என்ற புலவர் இவனைப் பாடியுள்ளார்.

**நலங்கிள்ளி:** புகார்ப்பெருநகரைத் தலைநகராகக் கொண்டு சோணுடாண்ட அரசர்களுள் சிறந்தவன் நலங்கிள்ளி ஆவான். 'என் பகைவர், அரசைப்பெற விரும்பி மெல்லவந்து என் அடி பணிந்து நின் அரசுரிமையினைத் தந்தருள்க எனக்கூறி இரந்து நிற்பாராயின் அவர்க்கு இவ்வரசையேயன்றி என் உயிரை யும் தருகுவன்' என்று கூறியவன் ஆவான். நலங்கிள்ளி, சேர, பாண்டிய மன்னர்களின் இரு குடைகளும் பின்நிற்கத் தன்குடை மட்டுமே உயர்ந்து முன்னே விளங்குதல் வேண்டும் என்ற ஆர்வமுடையவன். நலங்கிள்ளியின் இயல்பும் அவன் படை இயல்பும் உணர்ந்த வடநாட்டரசர் நலங்கிள்ளியின்

பெரும் படை எந்த நேரத்தில் தம் நாட்டுட் புகுந்து விடுமோ என்ற அச்சத்தால் உறக்கம் பெறாது துயர் உறுவர் எனக் கூறப்படுகிறது.

**தித்தன்:** சோழர்க்கு உரிய பழைய தலைநகரான உறையூரி லிருந்து அரசாண்டவன் இவன். தித்தன் பெருங் கொடை வள்ளலாக விளங்கினன். ஐயை என்னும் பொற்புடைய மகள் இருந்தமையால் தித்தன் மகள் ஐயை என்று கூறுதற்குப் பதிலாக ஐயை தந்தை தித்தன் என்றே புலவர் கூறினர். ஆனால் தித்தனுடைய மகன் கோப்பெருநற்கிள்ளி தந்தையைப் பிரிந்து வாழ்ந்தான்.

**தூங்கெயில் எறிந்தோன்:** மாறோக்கத்து நப்பசலையார், இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனர், இளங்கோவடிகள், மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனர் முதலிய நால்வ ராலும் உயர்த்திக் கூறப்பட்டவன் சோழர் குலத்திற்குப் பெருமை யளித்து நின்றவனை பேரரசன் தூங்கெயில் எறிந்தோன் ஆவான். இவன் கிள்ளி வளவன் முன்னோருள் ஒருவன் எனவும், பகைவரும் கண்டு அஞ்சத்தக்க அரிய காவலையுடைய தூங்கெயிலை அழித்தவன் எனவும் மாறோக்கத்து நப்பசலையார் கூறுகிறார்.

**போர்வைக் கோப்பெருநற்கிள்ளி:** உறையூரைத் தலைநக ராகக் கொண்டு ஆண்ட சோழ அரசனை தித்தன் என்னும் வேந்தனின் மகன் இவன். இதனைச் சாத் தந்தையார் எனும் புலவர் பாராட்டிப் பாடிய பாட்டின் துணையால் அறிகிறோம். தன் தந்தையோடு மாறுபட்டு, ஆமூர் சென்று தனித்து வாழ்ந் திருந்தான். பேரழகும் பேராண்மையும் நிறைந்த பெருந்திறல் இளைஞனவான். மற்போரில் வல்லவனும் ஆவான்.

**இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி:** இவன் சங்க காலச் சோழ வேந்தர்களுள், காலத்தால் பிற்பட்டோனவான். இவன் வேந்தன் பலரை வென்று, நாற்பெரும் படைகளை நனிமிகப் பெற் றிருந்தவன் ஆவான். இவனுடைய படைச் சிறப்பினை உலோச் சனர் என்ற புலவர் பாராட்டுகிறார். சேரன் மாந்தரஞ் சேரல் இரும்பொறை என்னும் சேர வேந்தனைத் தேர்வண் மலையன் எனும் முள்ளூர் மன்னனின் துணையுடன் வென்றான். ஈடிலாக் கொடைக் குணமுடையவன் இவன். இவனது கொடைச் சிறப்பினை உலோச்சனர் பாராட்டிக் கூறியுள்ளார். இராசசூயம் வேட்டோன் சேரமான் மாரி வெண்கோவொடும், பாண்டியன்

கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதியொடும் நட்புறவு பூண்டு நல்லோர் போற்ற வாழ்ந்தான். ஔவையார் இம் மூவரின் நட்பினைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

மாவளத்தான், முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளி, வேற் பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளி முதலான சோழர்களைக் குறித்தும் சங்கப் பாடல்கள் வாயிலாக ஒன்றிரண்டு செய்திகளை அறிகிறோம்.

சங்க காலத்திய சேரர், பாண்டியர், சோழப்பேரரசர்களைக் குறித்த செய்திகளைக் கண்டநாம் இனி அவர் தம் ஆட்சிக்குக் கீழ் இருந்த குறுநில மன்னர்களைக் காண்போம்.

# 5. சங்க கால ஆட்சி முறை

தமிழகம் தொன்றுதொட்டு முடியுடை மன்னர்களாலேயே ஆளப்பட்டு வந்துள்ளது. தமிழகத்தில் முடியாட்சி தவிர வேறு வகையான ஆட்சி நடைபெற்றது என்று கூறுவதற்கான ஆதாரம் ஏதுமில்லை. பண்டைய நாளிலிருந்து சேர, சோழ, பாண்டியர்களாகிய மூவேந்தர்களைப் பற்றியே தமிழகம் அறிந்து வந்துள்ளது.

தமிழகம் பரந்த ஒரு நிலப்பரப்பினைக் கொண்டதாக விளங்கிற்று. தமிழகத்திற்கென நிலையான எல்லை கூறுதல் கடினமான பணியாகும். மன்னர்கள் அடிக்கடி அருகிலிருந்து மற்றைய மன்னர்களோடு போர் செய்து தமது எல்லைகளை விரிவுபடுத்திக் கொண்டிருந்தனர்.

சங்க காலத் தமிழக ஆட்சி என்பது, ஒன்றிற்கு மேற்பட்ட முடியரசுகளைக் கொண்டு உருவானது. சங்க காலத் தமிழகத்தில் முடியுடை மூவேந்தர் தவிரச் சிற்றரசர்கள் பலர் வாழ்ந்தனர். அவ்வப்போது, மேற்சொன்ன முடியுடைய மூவேந்தர்களில் யாரேனும் ஓரிருவர் வலுவற்றவர்களாக விளங்கினால் இச் சிற்றரசர்கள் தங்கள் தனித் தன்மையை வெளிப்படுத்தத் தயங்கினார்களில்லை.

தமிழகம் என்று அன்றைய நாளில் வழங்கப்பட்ட பகுதியின் தென்மேற்குப் பகுதியில் சேரர்கள் அரசாண்டனர். வடகிழக்குப் பகுதியில் சோழர்களும், தெற்கு, தென்கிழக்குப் பகுதிகளில் பாண்டியர்களும் அரசாண்டனர்.

இன்றைய சித்தூர், வடஆர்க்காடு, சென்னை, செங்கற்பட்டு, தென்ஆர்க்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்கள் அன்றைய சோழ நாட்டைச் சார்ந்தவை. அதில் சித்தூர், வடஆர்க்காடு, சென்னை, செங்கற்பட்டு ஆகியவை தொண்டை மண்டலத்தைச் சேர்ந்தவையாகும். காவிரிக்குத் தெற்கே,

ஆனைமலைக்குக் கிழக்கே கீழைக்கடல் வரையிலும், தென்குமரி முனைவரை பரவிக் கிடந்த நிலப்பகுதி, பாண்டிய நாடு எனக் கருதப்படுகிறது. சேர நாடு என அழைக்கப்பட்ட பகுதி இன்றைய கேரளம், வேளிர்களால் ஆட்சி செலுத்தப்பட்ட கொங்கு நாடு (கோயம்புத்தூர், சேலம், தர்மபுரி மாவட்டங்கள் வரை பரவியிருந்தது. சேர மன்னர்களான நெடுஞ்சேரலாதன், செங்குட்டுவன் முதலானோர் காலத்தில் நீலகிரி, தெற்குக் கன்னடம் ஆகியவை சேர நாட்டில் அடங்கியிருந்தன. மைசூரின் தெற்கு மையப்பகுதிகள் கங்கர்களால் ஆளப்பட்டனவெனினும் சேர சோழ, பாண்டியரே அன்று முன்நின்றவர்கள் ஆவர்.

## தொன்மைச் சிறப்பு

திருக்குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகர் தமிழக மூவேந்தர்களும், உலகம் தோன்றிய நாள் முதலாக ஆண்டு வருவதால் பழைமையான தோற்றத்தினை அவர்கள் கொண்டிருந்தனர் எனக் குறிப்பிட்டு உள்ளார். தமிழக மூவேந்தர்களின் பழைமையை எடுத்துக்காட்ட ஏராளமான ஆதாரங்களைக் காட்டிட இயலும். இராமாயணம், மகாபாரதம், அர்த்தசாத்திரம், காத்தியாயனம், அசோகரின் கல்வெட்டுகள் ஆகியவற்றிலும் குறிப்புகள் உள்ளன. தமிழ் இலக்கியங்களில் காணப்படும் குறிப்புகளில் காணப்படுவதைப் போன்ற குறிப்புகளை ஸ்டிராபோ, பிளினி, பெரிபுளுஸின் எரித்ரேயன்சீயில் காணப்படும் குறிப்புகளோடு ஒப்பிட்டு நோக்கினால், இரண்டுக்கும் இடையே ஒற்றுமையைக் காணலாம். எனவே, இதுகாறும் கண்ட குறிப்புகள் தமிழக மூவேந்தர்களின் தொன்மையை எடுத்துக்காட்ட வல்லன எனலாம்.

## அரச பதவியின் தோற்றம்

தமிழர்களுடைய வரலாற்றினை எழுதிய பி.டி. சீனிவாச அய்யங்கார், தம்முடைய நூலில் தமிழகத்தில் அரசபதவி, காட்டைச் சார்ந்த முல்லை நிலத்தில் இருந்தே தோன்றியிருக்க வேண்டும் என்று குறிப்பிடுகின்றார் (P.T. சீனிவாச அய்யங்கார், The Tamils, P.10). தமது கொள்கையினை விளக்கிட அவர், 'தமிழ் மொழியில் அரசன் கோன் எனப்படுகிறான். கோன் என்றால் இடையன் என்று பொருளாகும்' என்கிறார்.

'கோ என அரசனைக் குறிப்பிடுவது கோன் என்பதன் சுருக்கமான வடிவமே ஆகும். இடையனின் பணிக்கும், அரசனின் பணிக்கும் இடையே ஒத்த உறவு உள்ளது என்பது தெளிவு.

இரண்டு எண்ணங்களையும் வெளிப்படுத்த ஒரே சொல் ஆளப் பட்டதிலிருந்து அரசபதவி, முல்லை நிலத்திலிருந்து தோன்றி யிருக்க வேண்டுமென்று பொருளாகிறது' எனவும் குறிப்பிடுகிறார்.

இக் கருத்தினையே பேராசிரியர் டி.வி.மகாலிங்கம் தம் முடைய நூலில் எடுத்துக் காட்டுகிறார். பி.டி. சீனிவாச அய்யங் காருடைய கருத்துக்கேற்ப, அரச பதவியின் தோற்றம் இவ்வாறே ஏற்பட்டிருக்க வேண்டுமென டாக்டர். என். சுப்பிரமணியம் குறிப் பிடுகிறார், (N. சுப்பிரமணியம், Sangam polity. P. 35). 'முல்லை, நிலத்தைச் சார்ந்த, ஆற்றல் வாய்ந்த முதன்மையான இடையன் தன் நண்பர்களை அருகிலிருந்த பண்ணையில் இருந்து, விலங்கு களைக் கவரத் தூண்டியதும், அதற்குத் தானே போதிய தலைமையை அளித்ததும் போருக்கு வழி வகுத்திருக்கக்கூடும். போரின் விளைவாய் இருதரப்பினரும் தங்கள் தலைவர்களைத் தேர்ந்தெடுத்தனர் எனலாம். வெற்றி பெற்ற தரப்பின் தலைவன் 'கோன்' அதாவது எண்ணிறந்த இடையர்களின் பிரச்சினைக்கு இடமில்லாத தலைவனாகி இருக்கிறான்' என்கிறார்.

ஆனால், நாம் மேலே கண்ட கருத்துக்கள் அத்துணைப் பொருத்தமானவையாகப் படவில்லை. முல்லை நிலத்திலிருந்துதான் அரச பதவி தோன்றியது என்பதோ அல்லது கோன் என்பது இடையனின் பணியினை ஒத்தது என்பதோ பொருத்தமானதாகப் படவில்லை.

அரச பதவி எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியான அடிப் படையில் தோன்றியிருக்க இயலாது. ஒவ்வோர் இடத்திலும், ஒவ்வோர் அடிப்படையில் தோன்றியிருக்கக்கூடும்.

தமிழ் மூவேந்தர்களையும், சேர, சோழ, பாண்டியர் என்ற ஒரு சொல்லிலேயே குறிப்பிடுவதைக் கொண்டு சேரரே மூத்தக் குடி யினர் என்று கூறுவர். புறநானூற்றுப் பாடல்களைத் தொகுத்த வர்கள் சேரர்களைப் பற்றிய பாடல்களை முதலிலும், பிறகு பாண்டியர்களுடையவற்றையும், பின்னர் சோழர்களுடையவற்றை யும் தொகுத்து உள்ளனர். ஆனால், இவ் வரிசை முறை இறுதி வரை பின்பற்றப்படவில்லை என்பதையும் ஈண்டு குறிப்பிடுதல் அவசியமெனலாம்.

அரசர்களின் பரம்பரைச் சின்னமான மாலைகளைக் குறிப்பிடும் போது, தொல்காப்பியம் 'போந்தை வேம்பே ஆரென வருஉம்' (தொல்காப்பியம், பொருளதிகாரம் 60) என பனைமாலையையே முதலில் குறிப்பிடுகிறது. இவ்வாறு வரிசை முறை வைப்பதில்

ஏதேனும் உறுதியான முறை பின்பற்றப்பட்டதா என ஆராய்ந்தால், அத்தகைய உறுதியான வரிசை முறையும் இல்லை என்பது புலப்படுகிறது. தொல்காப்பியத்திலும், புறநானூற்றிலும் சேரர், பாண்டியர். சோழர் என்ற வரிசை முறை காணப்படுகிறது. ஆனால், பின்னர் நன்கு அறியப்பட்ட முறையே சேரர், சோழர், பாண்டியர் என்பதாகும்.

சேர, சோழ, பாண்டிய அரசுகள் மூன்றினுள்ளும் பழைமையானது எது என்று அறிந்து கூறுதல் கடுமையான பணியாகும். ஏனெனில், சேரர் குடி பழங்குடி என்று குறிப்பிடுவதைப் போன்று பாண்டியரும் பழங்குடியினரே என்று வாதிப்பர். இராமாயணத்தில் கிஷ்கிந்தா காண்டத்திலும், மகாபாரதத்திலும் பாண்டிய அரசைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பதையும் கௌடில்யரின் அர்த்த சாத்திரம், 'பாண்டியக் கவாடகம்' என்றும், 'மதுரம்' என்று குறிப்பிடுவதையும், மெகஸ்தனிஸ் 'ஹிராக்கிளீசின் மகள் பாண்டையாவின் நாடு' என்று குறிப்பிடுவதையும் சான்றாகக் காட்டுவர். ஆனால், அசோகரின் பட்டயங்களில் மூவரசுகளைப் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**பெயர்க்காரணம்**

சேரர்கள், சோழர்கள், பாண்டியர்கள் என்று கூறப்படுவதன் பொருள் என்ன? சேரர்கள், வானவர், வில்லர், குடவர், குட்டுவர், பொறையர், மலையர் ஆகிய சிறப்புப் பெயர்களால் அறியப்பட்டிருந்தனர். சேரர்கள் பூழியர் எனவும் அழைக்கப்பட்டனர். கேரளா என்பதினின்று 'சேரர்' என்பது வேறுபட்டது எனத் தம்முடைய நூலில் ஸ்மித் குறிப்பிடுகின்றார்.[1] திரு. சௌரிராஜன் கேரளம் என்றால் மலைப்பகுதி; எனவே, அது மலபார் என்பதற்குச் சமமானது என்கிறார்.[2]

சென்னி, செம்பியன், வளவன், கிள்ளி எனச் சோழ மன்னர்கள் அறியப்பட்டனர். செம்மையன் என்பதன் திரிபே செம்பியன் எனவும் கூறுவர். சோழ நாடு, சோழ வளநாடு என அழைக்கப்பட்டது. சோழர் என்பதனைச் சிலர் சோளம் என்ற புஞ்சைப் பயிரோடு பொருத்திப் பேசினர். அதாவது 'சோளம்' என்ற தானியம் நன்கு விளைந்தமையால் அவ்வாறு சோழ நாடு என அழைக்கப்பட்டது என்று கூறுவது பொருத்தமானதாக இல்லை. ஏனென்றால், நெல் போன்ற நன்செய் நிலப்பயிருக்குச் சோழ நாடு

1. V.A. Smith. Early History of India, P. 185
2. Tamilian Antiquary, No. 1. PP. 69-71

பெயர் பெற்றது. ஆர்.சி.பண்டார்க்கர் திருடன் என்ற பொருளை உடைய சோரா என்பதிலிருந்தே சோழர் என்பது தோன்றியிருக்க வேண்டுமெனக் கருத்தறிவித்தார். ஆனால், அது சிறிதும் பொருந்துமாறு இல்லை.

பாண்டியர்கள், மீனவர், பஞ்சவர், தென்னவர், செழியர், மாறர், வழுதி ஆகிய பெயர்களால் அறியப்பட்டனர்.

பாண்டியர்கள் என்ற சொல்லுக்கும், யாது பொருள் என்பது குறித்துத் தெளிவுற விளக்கிட இயலவில்லை. செயல், பணி என்கின்ற பொருளைத் தருகின்ற 'பாண்டயம்' என்பதிலிருந்தே பாண்டியன் தோன்றியிருக்கக்கூடும். கலித்தொகையில் பாண்டியர்கள், செயல் வீரர்கள் என்று குறிப்பிடப்படுதலை ஈண்டுக் குறிப்பிடுதல் இன்றியமையாதது எனலாம்.

**குறுநில மன்னர்கள்**

சங்க காலத்தில் முடியுடை மூவேந்தர்களைத் தவிர ஏராளமான குறுநிலத் தலைவர்கள் நாட்டின் அரசியலில் பங்கேற்றிருந்தனர். இக் குறுநில மன்னர்கள் சுயேச்சையாகச் செயல்பட்டனர். ஆயினும் முடியுடை மன்னர் ஒருவர்க்கோ மற்றவர்க்கோ அடங்கியவர்களாக விளங்கினர். டாக்டர். வின்சென்ட் ஸ்மித், சங்க காலத்தில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் ஆண்டு வந்த குறுநில மன்னர்களின் எண்ணிக்கை 120 எனக் குறிப்பிடுகின்றார்.[1]

அரசனே, ஆட்சித் துறையின் மையமாக விளங்கினன். அரசனை கோ, மன்னன், வேந்தன், கொற்றவன், இறைவன் என்ற பெயர்களால் அழைத்தனர். மன்னன் என்பது, சிறிய அரசனையும், வேந்தன் என்பது பேரரசனையும் குறிக்கக்கூடிய சொல் எனச் சிலர் கருதுகின்றனர். ஆயின், மன்னன் என்பதற்கும், வேந்தன் என்பதற்கும் பொருள் வேறுபாடு இல்லை என்றே தோன்றுகிறது. ஏனெனில் ஔவையார் 'என்னை விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்து உண்டோ' என்று கேட்பது நாம் மேற்கூறிய கருத்துக்கு ஆதாரமாக அமைகிறது. தொல்காப்பியம் சேர, சோழ, பாண்டியப் பெருமன்னர்களை 'வேந்தர்' என்றே குறிப்பிடுகிறது.[2] இறைவன் என்பது அரசனையும் கடவுளையும் குறிக்கும். 'இறைமாட்சி' என்னும் அதிகாரத்தில் வள்ளுவர், 'இறை' என்பதனை அரசனைக் குறிக்கப் பயன்படுத்துகிறார்.

1. V.A. Smith, Early History of India, p. 439

2. தொல்காப்பியம், பொருளதிகாரம் 60

### மரபு வழி அரசு

சங்க காலத்தில் மரபுவழிப்பட்ட முடியாட்சியே பொதுவாகக் காணப்பட்டது. மூத்த மகனே வாரிசாகும் உரிமை பெற்றிருந்தான் எனத் தெரிகிறது. மூத்த மகனுக்கு இளமையிலேயே ஆட்சித் துறையில் போதிய பயிற்சி அளிக்கப்பட்டது போலும். அரசனாகப் பதவியேற்கும் வரை மன்னனின் புதல்வர்கள் இளஞ்செழியன், இளஞ்சேரல், இளங்கோசர், இளவெளிமான், இளவிச்சிக்கோன் என்று பட்டங்களால் அழைக்கப் பட்டனர்.

மூத்தவனிருக்க, இளையவன் பட்டத்திற்கு வந்தால், அது தகாத செயலெனக் கருதப்பட்டது. இளங்குமணன் என்பான், தன் அண்ணன் குமணனைத் துரத்திவிட்டுப் பதவியைத் தனக்கெனக் கொண்டது, தகாத வழியில் உரிமையைக் கைப் பற்றியமைக்கு கூறத்தக்க சான்று எனலாம். வாரிசு உரிமைக்குத் 'தாயம்' என்ற பெயர் இருந்தது.

பிறநாடுகளில் காணப்பட்டதுபோல இணை ஆட்சி, தமிழகத்திலும், காணப்பட்டது என்று சிலர் கருதுவர். அதாவது, தந்தையும் மகனும் இணைந்து ஆட்சி செலுத்துவது அல்லது அண்ணனும் தம்பியும் இணைந்து ஆட்சி செலுத்துவது. இவ்வாறு இணையாட்சி தமிழகத்திலிருந்தது என்று கருத நேர்ந்தது எதனால்?

கோப்பெருஞ் சோழன் என்ற சங்க காலச் சோழ மன்னன் தன் மைந்தர்களுக்கு எதிராகப் போரிட்டபோது, புல்லாற்றூர் எயிற்றியனார் என்ற புலவர் தம் மக்களுக்கு எதிராகப் போரிடுவது அறிவுடைமையாகாது என்று அரசனுக்கு அறிவுறுத்தி, 'அரசுரிமை அவர்க்கு உரித்து' என்று பன்மையில் கூறியமையால் இணையாட்சியாக விளங்கியிருக்கக் கூடுமோ என்ற ஐயம் ஏற்பட்டது. ஆனால், அத்தகைய ஐயம் ஏற்படத் தேவை இல்லை. ஏனென்றால், மூத்தவன் வாரிசின்றி இறந்தால் இளையவனே அரசுரிமை பெற்றவனாவான். எனவே, இணையாட்சி என்ற கருத்திற்கு இடமில்லை எனலாம்.

### வாரிசுரிமை

இக்கால வாரிசுரிமை தாய்வழிச் சார்ந்ததா, தந்தை வழிச் சார்ந்ததா என ஆராய்தல் அவசியமாகும். ஏனெனில், அறிஞர்களில் சிலர் சேர நாட்டில் வாரிசுரிமை தாய்வழிச் சார்ந்தது எனவும், சோழ நாட்டிலும் பாண்டிய நாட்டிலும்

தந்தைவழிச் சார்ந்தது எனவும் உரைத்தனர். இவ்வாறு கூறப்படும் கருத்து தவறெனவே படுகிறது. மூவரசுகளிலும் ஒரே மாதிரியான வாரிசுரிமையே நிலவியிருக்க வேண்டும் என்பதே நம் கருத்து. ஏனெனில் சோழ, பாண்டியர்களின் வழக்கத்தை மட்டுமன்றித் தமிழக முழுவதுக்குமான வழக்கத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்ற தொல்காப்பியர் 'தாயத்தின் அடையாத் தாயம்'[1] என்கிறார். தொல்காப்பிய உரைகாரரான நச்சினார்க்கினியர் தந்தையின் சொத்துகளை மக்கள் வழிவழியாக அடைந்தனர் என்று விளக்குகிறார். தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை என்ற அரசனுக்குப் பதிற்றுப்பத்தில்[2] அரிசில் கிழார் என்ற புலவர் 'இந் நிலவுலகத்து வாழ்வார் பொருட்டுச் சால்பும் நடுவுநிலையும் உள்ளிட்ட பிற நற்பண்புகளும், நாடு காத்தற்கு வேண்டும் அரசியலறிவு வகை பலவும் முற்றும் கற்றுத் துறை போகிய சிறப்பும் நிறைந்த நன் மகனைப் பெற்றுள்ளார்' என்று உரைப்பது மற்றொரு எடுத்துக்காட்டு எனலாம். இவ்விரு விளக்கங்களே மரபுரிமை தந்தைவழிச் சார்ந்தது என்பதனை எடுத்துக்காட்டப் போதுமானவை எனலாம். சங்க காலத்தில் தமிழக முழுவதும் ஒருமித்த முறையே காணப்பட்டது. வாரிசுரிமை மூத்த மகனுக்கே உரித்தாயிற்று. அப்படி இல்லையெனில் தந்தை வழிச் சார்ந்தவர்க்கே வழக்கமாக உரித்தாயிற்று.

### பெண் உரிமை

பெண்கள் அரச பதவியினைப் பெறுகின்ற வாய்ப்பினைப் பெற்றிருந்தார்களா என ஆராய்வோமேயானால், சங்க காலத்தில் அரசுரிமை பெற்ற பெண்டிர் யாரைக் குறித்தும் நாம் செய்திகள் ஏதும் பெறவில்லை. மெகஸ்தனிஸ் என்பவர் 'பண்டையா' என்பவள் ஹீராக்கிளிஸின் மகள் எனக் குறிப்பிடுகின்றார். இது நம்புதற்குரியதன்று. திருவிளையாடற் புராணத்தில் தடாதகைப் பிராட்டியார் மதுரையை ஆண்டதாகக் குறிப்பிடப்படும் குறிப்பு, புராண அடிப்படையைக் கொண்டதே தவிர வரலாற்று அடிப்படையினைக் கொண்டதன்று.

### வம்சமும் கோத்திரமும்

மன்னர்கள் தங்களைச் சூரிய குலத்தினர் என்றோ, சந்திர குலத்தினர் என்றோ கூறிக்கொள்வது மரபு. சோழர்கள் சூரியக் குலத்தைச் சேர்ந்தவர்கள் என்று அவர்களது செப்பேடுகளும், கல்வெட்டுகளும் எடுத்தியம்புகின்றன. வீரராசேந்திரனின் கல்

1 தொல்காப்பியம், பொருளதிகாரம், 17.

2 பதிற்றுப்பத்து, 74.

வெட்டு, தங்கள் குலமுதல் பரிதி என்றுகூறும் சோழ மன்னர்கள், காசியப கோத்திரத்தைச் சேர்ந்தவர்களென்று அவர்களது செப்பேடுகளால் அறியலாம். காசியபர், அத்திரி ஆகிய இருவரும் அவர்களது குடி முதல்வர்களாகக் குறிக்கப்பட்டுள்ளனர்.

சோழ மன்னர்கள் திலீபன், அரிச்சந்திரன், முசுகுந்தன், காகுத்தன், பகீரதன், தசரதன், இராமன் முதலியோர் தங்கள் குலத்தோர் எனக் கூறிக் கொள்வதைக் கன்னியாகுமரிக் கல்வெட்டு, திருவாலங்காட்டுச் செப்பேடு, கலிங்கத்துப்பரணி, மூவர் உலா ஆகியவற்றில் காணலாம்.

### அரசனைத் தேர்ந்தெடுத்தல்

வாரிசின்றி அரசர்கள் மறைந்துவிட்டால் புதுமையான முறையில் அரசனைத் தேர்ந்தெடுத்திடும் பணியினை, அரசில் முதன்மை நிலைவகித்த பெருமக்களும், அமைச்சர்களும் மேற்கொண்டனர். பட்டத்து யானை ஒன்றினிடத்து மாலையை அளித்துத் தெருவினில் அதை உலாவச் செய்து, யாருக்கு அது மாலையிடுகிறதோ, அவரையே அரண்மனைக்கு அழைத்து வந்தனர். இவ்வாறு அரசனாகத் தேர்ந்தெடுக்கப் பட்டவன் கரிகால் சோழன் எனக் கூறப்படுகிறது[1]. இவ்வாறு கரிகாற்சோழனைத் தவிர வேறு யாரும் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கான குறிப்பேதுமில்லை.

சங்க கால அரசுரிமை மரபு வழிப்பட்டதாக விளங்கினமையால், பொதுமக்களின் இசைவையோ, அனுமதியையோ பெற வேண்டுமென்ற நிலை இல்லை. அரசன் தேர்ந்தெடுக்கப்பட்டான் என்பதற்கோ, தேர்வு செய்யப்பட்டான் என்பதற்கோ, அரியணை ஏற மக்களின் அனுமதியைத் தனி முறையாகக் கூடிய மக்களின் கூட்டத்தில் பெற்றான் என்பதற்கோ, நிச்சயமாக இலக்கிய ஆதாரமோ, வேறு ஆதாரங்களோ இல்லை.

### வயது வரம்பு

அரசனாக அரியணையேறிட, மன்னனாக மணிமுடி தரித்திட வயது வரம்பு ஏதும் விதிக்கப்படவில்லை. அரியணை காலியாக இருப்பின், எந்த வயதிலும் அரியணை ஏறினர். கரிகாற் சோழன், தாய் வயிற்றிலிருந்தபோதே தாயம் எய்தினன்.[2] புறநானூற்றில், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்

[1] பழமொழி, 62.

[2] பொருநராற்றுப்படை, 132.

செழியன், எதிரிகளின் படையை முறியடித்திடப் படை நடத்திச் சென்றபோது, மிக இளவயதினனாக விளங்கினான் என அறிகிறோம். இளவயதில் அரியணை ஏறியவன் தக்க பருவம் வரும்வரை யாரேனும் காப்பாளராக இருந்து துணை புரிந்திருக்க வேண்டும். ஆனால், அப்படிக் காப்பாளராக இருந்தவர்களைக் குறித்த செய்திகள் ஏதுமில்லை.

### முடிசூட்டு விழா

அரசன் அரியணை ஏறிய விழாவினை அரசு கட்டில் ஏறுதல் அல்லது முடிசூட்டு விழா என அழைத்தனர். எனினும், முடிசூட்டு விழா நடைபெற்றது எங்ஙனம் என்பது குறித்து விளக்கிட ஆதாரங்கள் ஏதுமில்லை. அரசனின் வம்சத்திற்கேற்ப முடிசூட்டும் விழாக்களில் பயன்படுத்தப்படும் அரசுரிமைச் சின்னங்கள் அரச குடும்பத்தின் மூத்தோர், வயதானோர், பரம்பரை ஆலோசகர்கள் ஆகியோரால் அரசனிடத்து அப்போது அளிக்கப்பட்டன. பதிற்றுப்பத்து என்னும் நூலின் பாடலின் விளக்க உரையில் முடிசூட்டு விழாவின்போது, சில காரணங்களால் முறையான முடியையும் குறித்த ஆரத்தையும் அணியாமல் அலங்கரிக்கப்படாத நார்முடியையும், கறுப்பு மணிகளாலான ஆரத்தையும் அணிந்ததாகக் கூறப்பட்டுள்ளது. முடிசூட்டப்பட்ட நாளிலிருந்தே, ஆட்சி செலுத்திய ஆண்டுகள் கணக்கிடப்பட்டன. பதிற்றுப்பத்து என்னும் நூலின் பதிகங்களில் சேர மன்னர்கள் ஆட்சி செலுத்திய ஆண்டுகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

அரசனுடைய பிறந்த நாள் விழாச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டதுபோல முடிசூட்டு விழாநாளும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சிலர் ஒவ்வோர் ஆண்டும் புதிதாக முடிசூட்டப்பட்டது எனவும், அவ்விழா 'சிறந்த மண்ணு மங்கலம்' எனப்பட்டது எனவும் கூறுவர். முடியுடை வேந்தர்கள் மட்டுமன்றிச் சிற்றரசர்களும் இவ் விழாவினைக் கொண்டாடினர்.

### அரசவை

சங்க காலத் தமிழக முடியுடை வேந்தர்களும் சிற்றரசர்களும் தங்களுக்கெனத் தனித்தனி அவைகளைக் கொண்டிருந்தனர் என்பதனை எடுத்துக்காட்டும் குறிப்புகள் ஏராளமாக உள்ளன. தொல்காப்பியத்தின் பாயிரத்தில் அவையம் என்ற சொற்கூறு காணப்படுகிறது. அரசனின் மன்றமானது அரசவை, ஓலக்கம், இருக்கை ஆகிய பெயர்களால் அழைக்கப்பட்டது. அரசவையில் அரசக் குடும்பத்தவர் மட்டுமன்றி, அரசு

அலுவலர், பொதுமக்கள் ஆகியோரும் பங்கேற்றனர். இது, அரசனுடைய தனிப்பட்ட ஆலோசனைச் சபையாக விளங்கவில்லை. அரசவை, பெரும்பாலும் காலையில்தான் கூடியதெனலாம். இது நாளிருக்கை[1] அல்லது நாளவை,[2] நாள் மகிழிருக்கை[3] என்று அழைக்கப்பட்டது. நடுவுநிலைமை தவறாத சிறப்புத் தன்மை கொண்டதாகப் பாராட்டப்பட்டது உறையூர் அவை ஆகும்.[4] அரசவையில் அரசனுடன், அரசியும் வீற்றிருந்திருக்கக் கூடுமென அறிகிறோம்.

**அரியணை**

அரசன் வீற்றிருந்த இருக்கை, 'அரியணை' எனப் பட்டது. அரசனைச் சுற்றி அரசு அலுவலர், அவைப் புலவர்கள் முதலானோர் இருந்தனர். அரசனைச் சந்திக்க வந்திருந்த சிறப்பு விருந்தினர்களான தூதுவர்கள், அயல் நாட்டுத் தலைவர்கள் போன்றோர் மன்னனுக்கு வலப்புறமிருந்தனர்.

**புலவர்கள்:** சங்க கால மன்னர்கள் புலவர்களைப் போற்றும் இயல்பினர். புலவர்களால் புகழ்ந்து பாராட்டப்படுவதைப் பெரிதும் சிறப்புடையதாகக் கருதியவர்கள். பாரியால் கபிலரும், அதியமானால் ஔவையும், நெடுஞ்செழியனால் மாங்குடி மருதனாரும் போற்றி ஆதரிக்கப்பட்டனர். அரசர்கள் கற்றுணர்ந்த புலமையைப் போற்றினர் என்பதே அவர்தம் பெருமையை உயர்த்துவதன்றோ? அரசியல் பணிகள் அதிகம் இல்லாதபோது, புலவர்களுடன் அரசர்கள் இலக்கியச் சிந்தனையில் மூழ்கினரெனலாம். புலவர்களுக்குச் சமமான புலமையினை அரசர்களும் பெற்றிருந்தனர். புலவர்கள் மட்டுமன்றி, பாணர் முதலானோரும் அரசவையில் இருந்தனர்.

**அவையத்தின் தன்மைகள்:** அரசவையின் தலையாய பணி, அரசனுக்கு அறிவுரை கூறிச் சிறந்த முறையில் ஆட்சி நடத்திட வழிப்படுத்துவதாகும். அவையத்தின் எண் வகைச் சிறப்புகள் குறித்துத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.[5] (1) நற் குடிப் பிறப்பு, (2) நற்கல்வி, (3) நல்லொழுக்கம், (4) வாய்மை,

1 மதுரைக் காஞ்சி, 25.

2 புறநானூறு, 54, 123, 129.

3 மதுரைக் காஞ்சி, 443.

4 நற்றிணை, 400, புறநானூறு, 39.

5 தொல்காப்பியம், பொருளதிகாரம், 75.

(5) தூய்மை, (6) நடுவுநிலைமை, (7) அழுக்காறாமை, (8) அவா வின்மை ஆகியவையே அந்த எண்வகைச் சிறப்புகள் என நச்சினார்க்கினியர் விளக்குகிறார்.

வயது முதிர்ந்தோர், கற்றறிந்தோர், அனுபவசாலிகள் ஆகியோர் அரசனிடத்துச் சென்று, உலக இன்பத்திற்கு வசதி காணப் பொருள்களையும், வசதிகளையும் தேடித் திரிவது மட்டும் வாழ்க்கையன்று. அமைதி, கொடை, அன்பு, இறைவழிபாடு ஆகியவற்றிற்கு நிலையில்லா இவ்வுலகில் சிறப்புத் தன்மையளித்து, வானுலகில் நிலைபெற முயல வேண்டும் என்று அறிவுரை கூறத் துணிவு பெற்றிருந்தனர். ஆனால், அதைப் பக்குவமாக எடுத்துரைத்தனர். ஏனென்றால், அக் காலத்திலும் கோபம் கொண்ட அரசன் அறிவுத் திறமின்றி விரும்பத் தகாதவற்றைச் செய்வதோடல்லாமல், அற்பத்தனமாகக் கடந்தகால உதவிகளை மறந்து, நன்றியில்லாமல் நடந்திடவும் கூடும்.[1]

**கொடுங்கோன்மை**

பெரும்பாலும் மன்னர்கள் மனிதாபிமான உணர்வுடையவர்களாய்ப் பிறரின் அறிவுரைகளைக் கேட்டே செயல்பட்டனர். அவ்வாறில்லாது, கொடுங்கோலர்களாய் தான்தோன்றித்தனமாகச் செயல்பட்டவர்கள் மிகக் குறைவான எண்ணிக்கையுடைய அரசர்களே எனலாம்.

**அன்றாட நடவடிக்கைகள்**

காலையில் அரசனைத் துயிலெழுப்பத் தனிமுரசு ஒலிக்கப்பட்டதோடு, பாணர்களும் பாடல் இசைத்தனர். மன்னன் காலையில் இனிது எழுந்து, நாட்கடன் கழித்து, மார்பில் சந்தனம் பூசி, முத்தாரங்களைத் தரித்து, கரத்தில் வீரவளை பூண்டு, கஞ்சி போடப்பட்ட துகிலை இடையில் அணிந்து, தெய்வத்தை வழிப்பட்டுப் பின்னர்ப் படைத்தலைவர்களைக் கண்டானென மதுரைக்காஞ்சி[2] குறிக்கிறது. தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன், தன் பழைய நகரின் வாயிற்புறத்தில் இருந்த குளிர்ந்த பொய்கையில் குளித்து, மன்றத்தில் வளர்ந்த வேப்பந்தளிரை அணிந்து, முன்னே பறை ஒலித்துக்கொண்டு செல்ல, களிறுபோல் நடந்து வந்தானென்று கூறப்பட்டு உள்ளதை அறிகிறோம்.[3] பின்னர், அரசன் அன்றைய நடவடிக்கைகளைத்

1 கலித்தொகை, 8.15-18.
2 மதுரைக் காஞ்சி, (715-740.)
3 புறநானூறு 79.

திட்டமிட்டான். விருந்தினர்களை விரும்பிப் போற்றி உபசரித்தல் அரசர்களின் கடமையாயிருந்தது. வந்த விருந்தினர்களை எவ்வித வேறுபாடுமின்றி நடத்தி அவர்களுடன் ஊனும் தேறலும் உண்டு மகிழ்ந்தனர்; இரவுப்பொழுதை இனிமையாகக் கழித்தனர். காட்டு விலங்குகளை வேட்டையாடுதல். அரசர்களின் சிறந்த பொழுதுபோக்காக இருந்தது. வேட்டையின்போது வில், அம்பு, கவண் ஆகியவைகளைப் பயன்படுத்தினர். சிறந்த வில் ஒன்றினைக் கொண்டிருந்தமையினால், ஓரி என்ற குறுநிலத் தலைவன் வல்வில் ஓரி எனப்பட்டான். புறநானூற்றில், அம்மன்னன் யானை, புலி, மான், பன்றி ஆகியவற்றை ஒரே அம்பினால் கொல்லும் ஆற்றல் பெற்றவனென்று குறிப்பிடப்படுகிறான். அரசர்கள் பொதுவாகக் குதிரையேற்றம் அறிந்தவர்கள் என்ற போதிலும் போர்க் காலங்களில் யானை மீதமர்ந்து போர் செய்தனர். அரச குடும்பத்தைச் சேர்ந்த இளவரசர்களுக்குக் குதிரையேற்றம் சிறந்த பயிற்சியாக அமைந்தது.

### தமிழர் பழக்கமே

வேட்டையாடுதல் தமிழ் இலக்கியங்களில் கண்டித்துக் கூறப் பட்டுள்ளது. திருக்குறளிலும் அவ்வாறு கண்டித்துக் கூறப்படும் கருத்தினைக் காண்கிறோம். இவ்வாறெல்லாம் வேட்டையாடுதலைக் கண்டித்தல் கௌடில்யரின் கருத்தின் பிரதிபலிப்பே என்று கூறப் படுகிறது. ஆயின் வேட்டையாடுதலைக் கண்டித்தல் என்பது கொல்லாமை உணர்வினால் வெளிப்படுவதே ஆகும். கௌடில்ய ருடைய கருத்துகளைக் கேட்டுத்தான் அற உணர்வு பெற வேண்டு மென்ற நிலையில் தமிழகமில்லை. வீரத்தில் சிறந்தவர்களாக விளங்கிய மன்னர்கள், நெஞ்சில் ஈர உணர்வும் மிகுந்தவர்களா கவே இருந்துள்ளனர். பொதுவாக வேட்டையாடுதல் என்பது அரச மரபாக இருந்து வந்தபோதிலும், சமண சமய வரவு கொல்லாமையை மேலும் வற்புறுத்தி இருக்கலாம்.

### அரசர்தம் திறமை

சங்க காலத் தமிழக மன்னர்கள் இலக்கியப் புலமையும் நுகரும் நுண்ணறிவும், இலக்கியத்தைப் பேணுகின்ற பேரவாவும் கொண்டவர்களாக விளங்கினர். கரிகாற் பெருவளத்தான், பாண் டியன் அறிவுடை நம்பி, தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் போன்றோரின், ஆற்றலைப் புறப் பாடல்கள் திறம்பட எடுத்துக் காட்டுகின்றன.

ஏராளமான கலைஞர்களுக்கு, அரசர்கள் பரிசில்கள் வழங்கி சிறப்புச் செய்தனர். அரசர்கள் பெருமனப்பான்மையுடனே

செயல்பட்ட போதிலும், ஓரிருவர் சிக்கனக்காரர்களாக விளங்கினர் போலும். புலவர்கள் தம் சிறப்பிற்கு இழிவைத் தருகின்ற பரிசில்களை ஏற்பதில்லை. அரசர்கள் தாமே வழங்காது, பிறர் மூலம் வழங்கினுல்கூட ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். 'வரிசை யறிந்து ஈதல் வேண்டும்' என்று எதிர்பார்த்தனர். ஈயென இரத்தல் இழிந்தது. அதனினும் ஈயேன் எனல் இழிந்ததெனப் புலவர் அரசர்களுக்கு உணர்த்தினர்.

**கொடைத் தன்மை**

அரசர்கள் வழங்கிய கொடைச் சிறப்புகள் குறித்து ஏராளமாகக் கூறலாம். இருப்பினும், குறிப்பிடத்தக்க சங்க கால அரசர்கள் எழுவர்மட்டும், தம் கொடையால் இன்றுவரை சிறப்பித்துப் பேசப்படுகின்றனர்.

பட்டினப்பாலையைப் பாடிய கடியலூர் உருத்திரங்கண்ணனுருக்கு 16 நூருயிரம் பொன், கரிகாலனுல் அளிக்கப்பட்டது. பதிற்றுப்பத்தில் அமைந்துள்ள பதிகங்களில் அரசர்கள் வழங்கிய பரிசும், அவர்களின் ஈகைத் திறனும் புகழப்பட்டுள்ளன.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் குமட்டூர்க் கண்ணனர் என்ற புலவர்க்கு உம்பற்காடு (சேர நாட்டு யானைக்காடு) மாவட்டத்திலுள்ள 500 சிற்றூர்களை அளித்தான். பல்யானை செல்கெழு குட்டுவனிடமிருந்து பாலைக் கௌதமனர், ஒன்பது பெருவேள்வி செய்யப் போதிய உதவியும் வசதியும் பெற்றார். களங்காய்க்கண்ணி நார் முடிச் சேரல், காப்பியாற்று காப்பியனருக்கு நாற்பது நூருயிரம் பொன் ஒருங்கு கொடுத்து, தான் ஆள்வதில் பாகமும் கொடுத்தான்.

உம்பற்காட்டு வாரியையும், மகன் குட்டுவன் சேரலையும் செங்குட்டுவன் பரணருக்கு அளித்தான். காக்கைபாடினியார் நச்செள்ளையார் என்ற பெண்பாற்புலவர் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனிடமிருந்து ஒன்பது காப்பொன்னும் நூருயிரம் காணமும் பெற்றதோடு, அரசவைடருகிலமரும் உரிமையும் பெற்ருர். செல்வக் கடுங்கோ வாழியாதன் என்பான் கபிலருக்கு நூருயிரம் காணங் கொடுத்து, நன்ரு என்னும் குன்றேறி நின்று, தன் கண்ணில் கண்ட நாடெல்லாம் காண்பித்தளித்தான். பெருஞ்சேரலிரும்பொறை தானும், அரசியும் வெளியே வந்து நின்று அரிசில்கிழாருக்குக் கோயிலுள்ள (அரண்மனை) எல்லாம் கொண்மின் என்று காணம் ஒன்பது நூருயிரத்தோடு அரசு கட்டிற் கொடுக்க, அவர் அதனை வேண்டாமென்று கூறி அவ் வேந்தர்க்கு அமைச்சர் ஆயினர். குடக்கோ இளஞ்சேரலிரும்பொறை என்பான், பெருங்

குன்றூர்க் கிழாருக்கு முப்பதாயிரம் காணங் கொடுத்து அவரறியாத வகையில் ஊரும் மனையும் வளமிகப் படைத்தளித்தான். கடையெழு வள்ளல்கள் எனப்பட்டோரில், சிலர் அளித்த கொடைகள், அறிவிற்குப் பொருந்தாதவைகளாக உள்ளன. கொடைத்தன்மை ஒன்றே, அவர்கள் உள்ளங்களில் மேலோங்கி நின்றமையே இதற்குக் காரணம். முன்னூறு கிராமங்களைக் கொண்ட பறம்பு நாட்டின் தலைவன் பாரி பற்றிப் படரக் கொழு கொம்பைப் பற்றியிருந்த முல்லைக் கொடிக்குத் தேரீந்தமை, கபிலர் என்னும் புலவரால் சிறப்பித்துப் பேசப்பட்டுள்ளது. அங்ஙனமே பேகன் என்பான், மேகத்தைக் கண்டு மெய்சிலிர்த்தாடிய மயிலுக்குத் தன் போர்வையை அளித்துள்ளான். இவர்களைப் போலவே, ஓரி, காரி, அதியமான் நெடுமானஞ்சி, ஆய், நள்ளி ஆகியோரும் தத்தம் கொடைத் தன்மையால் புகழப்படுகின்றனர். இவர்களைத் தவிரக் கொடைச் சிறப்பினால் புகழ் பெற்றவர்களில் குமணன் என்பானும் ஒருவனாவான்.

பார்ப்பனர்களுக்கும் பாணர்களுக்கும் பொற்றாமரை மலர்கள் வழக்கமாக வழங்கப்பட்டன எனப் புறநானூறு வாயிலாக அறிகிறோம். சில அரசர்கள் வழக்கமாக அளிக்கின்ற பரிசுகளை உடனடியாக அளித்திடாது, காலம் தாழ்த்திப் புலவர்களை மனம் வருந்தச் செய்தனர். அங்ஙனம், காலம் தாழ்த்தியமைக்குத் தக்க காரணமிருந்தது. பரிசில் கொடுத்துவிடின், அப் புலவர் தம்மை விட்டு நீங்கி விடுவாரோ என்ற அச்சத்தினால்தான் பெரும்பாலும் அங்ஙனம் செய்தனர்.

நடனமாடுவோர்க்கு, அரங்கேற்றத்தின்போது பரிசுகள் அளிக்கப்பட்டன. பார்ப்பனர்களுக்கு நிலக்கொடை வழங்குதலும் உண்டு.[1] அரசர்கள் தம்மை நாடி வந்தோரின் நலிவைப் போக்கினர். அவர்களுக்கு வேண்டிய புத்தாடைகள், உணவு முதலானவற்றை வழங்கினர். பொருநராற்றுப்படையில் கரிகாலன் செய்த சிறப்புகள் குறித்துக் கூறப்பட்டுள்ளவற்றை எடுத்துக்காட்டாகக் கூறலாம். ஆலயங்களுக்கு அரசர்கள் அன்பளிப்புகளை வழங்கினரென்பது செல்வக் கடுங்கோ வாழி ஆதன் என்னும் மன்னன், உகந்தூர் என்னும் ஊரினைத் திருமாலின் கோயிலுக்கு அளித்தான் என்ற செய்தியினால் அறிகிறோம்.

**அரசன் கடமை**

மக்களைக் காத்து முறையாக நீதி வழங்குகின்ற அரசன் இறைவனுக்குச் சமம் என்று கருதப்பட்டான். அரச

[1] பதிற்றுப்பத்து, 64: 2-5

தர்மத்தைக் காப்பது மட்டும் அரசனுடைய கடமையில்லை. பொருளுதவி வேண்டி நிற்போர்க்குப் பொருளுதவி அளித்தலும், தன் பாதுகாப்பின் கீழ் இருப்போரை அன்புடன் நடத்தலும், பாகுபாடின்றி நீதி வழங்குதலும், மக்களுக்குத் தக்க பாதுகாப்பு அளித்தலும் அரசர்களின் தலையாய கடமைகள் எனக் குறிப்பிடும் திருவள்ளுவர், அவ்வாறு கடமைகளை நிறைவேற்றுவோனை மிகச் சிறந்த அரசனாகவும் கருதுகிறார்.

ஒருவனைச் சிறந்த அரசனாகக் கருத வேண்டுமாயின் அவன் சிறந்த படையினையும், வளம் மிக்க மக்களையும், பெருகுகின்ற செல்வத்தையும், நம்பிக்கைக்குரிய அமைச்சர்களையும், சிறந்த நண்பர்களையும் பெற்றிருக்க வேண்டும். சமுதாயத்தின் காவலன் அரசன், ஆகையால் அதற்குரிய விதி முறையிலிருந்து வழுவாமல் நடப்பதே அரசனின் முக்கியப் பணியாயிற்று. சமுதாயத்தைக் காக்கின்ற பணியில் ஈடுபட்டுள்ளபோது ஏற்படுகின்ற இடையூறுகள், தொல்லைகள், துன்பங்கள் ஆகியவற்றை அரசன் மிகவும் கவனமாக நோக்கி ஆவன செய்தல் வேண்டும். அரசனுடைய கடமை அரச தர்மத்தை நிலைநிறுத்துவது. இக் கருத்தினைத் திருக்குறள் மட்டுமன்றி எல்லா இலக்கியங்களும் வலியுறுத்துகின்றன. அரசனைக் குறித்தும், அரசனுடைய கடமைகளைக் குறித்தும் திருக்குறளில் ஏராளமான கருத்துகள் காணப்படுகின்றன.

சட்டங்களை உருவாக்குவது அரசனின் பணியில்லை. ஏனென்றால், அவை நாட்டில் பண்டுதொட்டு வழக்கிலிருந்தன. அவ்வாறு இருந்திட்ட அவற்றைப் பாதுகாத்து அனைவரும், அதன் பயனைப் அனுபவிக்கச் செய்வது அரசனின் கடமையாக இருந்தது. இருப்பினும், அவ்வப்போது முரசறிவித்து, அரசு ஆணைகள் வெளியிடப் பட்டன. இந்த ஆணைகளை எவரும் எதிர்த்துக் கேட்கவோ, இதற்கு எதிரான ஆணைகளை வெளியிடவோ இயலாது. பி. டி. சீனிவாச அய்யங்கார், 'அரசனுக்கு ஆட்சித் துறைச் செயல்கள் ஏதுமில்லை. ஆட்சித்துறைப் பணிகளைத் தொன்று தொட்டு வந்த வழக்கப்படி, கிராம அவைகள் அவற்றை நிறைவேற்றி வந்தன' என்று கூறும் கூற்று ஈண்டு உற்றுநோக்கத் தக்கதே.

அரசன் எல்லா அதிகாரங்களும் உடையவனாக விளங்கினான். எனவே, நாட்டில் ஏற்படுகின்ற விளைவுகள் அனைத்திற்கும் அவனே பொறுப்பேற்க வேண்டியிருந்தது. திருக்குறளில் மழை, முனிவர்களின் தவம் ஆகியவை மன்னனின்முறையான ஆட்சியைப்

பொறுத்தே அமையும் என்று குறிப்பிடப்பட்டு உள்ளது (திருக்குறள், 559, 560).

### பிறந்த நாள் விழா

அரசனின் பிறந்த நாள் 'பெருநாள்' என அழைக்கப்பட்டு ஒவ்வோர் ஆண்டும், சிறப்புடன் கொண்டாடப்பட்டது. இந்நாளில் சிறை வைக்கப்பட்டிருந்த கைதிகள் விடுவிக்கப்பட்டனர். வறியவர்களுக்கும் புலவர்களுக்கும் ஏராளமான கொடை வழங்கப்பட்டது. படை வீரர்களுக்குப் படை விருதுகள் வழங்கப்பட்டன. சங்க காலத்தில் அரசர்கள் தங்கள் எடையைப் பொன்னால் கணக்கிட்டனர். அப்பொன்னைத் தகுந்தவர்களுக்கு, அரசர்கள் தம் விருப்பம்போல் அளித்தனர். செங்குட்டுவன் அவ்வாறே எடை பார்க்கப்பட்டதாகவும், அவன் ஐம்பது துலாம் எடையிருந்ததாகவும் சிலப்பதிகாரம் கூறுகிறது.

### வேள்விகள்

சோழ அரசன் ஒருவனுடைய பெயர், இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்பதாகும். எனவே, இராசசூயம் என்னும் வேள்வியும் நிகழ்த்தப்பட்டதாக அறிகிறோம். பட்டினப்பாலையில், கரிகாற் சோழன் பல வேத வேள்விகளை நிகழ்த்தியதாகக் கூறப்படுகிறது. பாண்டிய மன்னன் ஒருவனுடைய பெயர் பாண்டியன் பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி என்பதாகும். அம் மன்னனுடைய பெயரே அவன் பல வேள்விகளை நிகழ்த்தியதையும், ஏராளமான வேள்விக் கூடங்களைக் கட்டினன் என்பதையும் அறிவிக்கிறது. சேரன் பல்யானை செல்கெழு குட்டுவன், சிறந்த பத்து வேள்விகளை நிகழ்த்தியதாகவும், அதன் விளைவாகப் பாலைக் கௌதமனார்[1] என்னும் புலவரும், அவர் மனைவியும் சொர்க்கம் பெற்றனர் எனவும், பதிற்றுப்பத்து வாயிலாக அறிகிறோம். புறநானூற்றுப் பாடலின் வாயிலாகத் தலையாலங்கானத்து நெடுஞ்செழியன் பல வேள்விகளை நிகழ்தியதாக அறிகிறோம்.[2] சங்க கால மன்னர்கள் மகவு வேண்டி வேள்வி நடத்தியதும் உண்டு.

### முடிதுறப்பு

தமிழக அரசர்கள் யாரும் மக்களால் கிளர்ச்சி செய்யப்பட்டுப் பதவியிலிருந்து துரத்தப்பட்டதாக நாம் அறியவில்லை. முடிதுறத்தலைக் குறித்துத் தொல்காப்பியர் வாயிலாக

[1] பதிற்றுப்பத்து, III பத்து, பதிகம்.

[2] புறநானூறு, 26.

அறிகிறோம். தொல்காப்பியர் முடிதுறத்தலை 'கட்டில் நீத்த பால்' என்று குறிப்பிடுகின்றார். அரசர்கள் முடிதுறந்த சந்தர்ப்பங்கள் யாவை எனக் காண்போம். போரில் தோல்வியுற்ற அரசர்கள் மானம் பொறாது முடிதுறந்தனர். வெண்ணிப் போரில் கரிகாலனுடன் போர் செய்த சேரமான் பெருஞ் சேரலிரும்பொறை[1] முதுகில் புண் ஏற்பட்டமையால், பெருத்த அவமானம் கொண்டு, வடக்கிருந்து உயிர் துறந்தான். போரில் சிறைப் படுத்தப்பட்ட கணைக்காலிரும்பொறை, சோழன் கோச்செங்கணனின் காவலர் முறை தவறி நடத்திடவே மானம் பொறாது உயிர் துறந்தான். கோப்பெருஞ் சோழனின் மக்கள் அறிவு பேதுற்று, அவன்பால் பகைகொண்டு, போருக்கெழுந்தமையால் தான் பெற்ற மக்களுக்கு எதிராகப் போர் செய்ய எண்ணம் கொண்ட அவனை நண்பர்கள் போர் முயற்சியைக் கைவிடுமாறு வேண்டினர். எனவே, மக்கட் செயலால் விளைந்த மானம் பொறாது, வடக்கிருந்து[2] உயிர்துறந்தான்.

**வடக்கிருத்தல்**

வடக்கிருத்தல் என்றால் வடதிசை நோக்கி அமர்தல் என்று பொருள்படும். போரில் தோற்ற அரசர்களே பொதுவாக வடதிசை சென்று, ஓரிடத்தில் அமர்ந்து, உண்ணா நோன்பிருந்து உயிர்துறந்தனர். வேறொரு வகையான வடக்கிருத்தலுக்கு 'வாள் வடக்கிருத்தல்' என்பது பெயராகும். வாள் வடக்கிருத்தல் என்றால் வாளினால் தம் தலையைக் கொய்து இறத்தல் என்று கருதினர் சிலர். சிலர், தமது தோல்விக்குக் காரணமான வாளுடன் அமர்ந்து உயிர்துறத்தல் என்று கூறுவாராயினர். அரசர்கள் வெற்றி அல்லது வீரமரணம் என்றே கருதி வாழ்ந்தனர். போர்க்களத்தில் வீரமரணம் எய்திடாது இறந்தவர்களைக் கிடத்தி, வாளால் அவர்களை வெட்டி வீரராக்கினர். புறநானூற்றுப் பாடலில் இது குறித்த விளக்கத்தினைக் காணலாம். வடக்கிருந்து, உயிர்விடுவதைப் போரில் தோற்றவர்களே மேற்கொண்டனர் என்பதனை இலக்கியங்கள் வாயிலாக அறிகிறோம்.

சங்க கால மன்னர்கள் வாழ்க்கையின் இறுதி நாட்களைத் தவத்திலும், வழிபாட்டிலும் கழித்திட வேண்டி முடிதுறந்ததாக நாம் எண்ணுவதற்கு வாய்ப்பில்லை. அத்தகைய துறவினை எந்த மன்னனும் மேற்கொள்ளவில்லை என்றே கூற வேண்டும். இறுதிவரை வாழ்ந்து மறைந்ததற்கான குறிப்புகள் உள்ளனவே

[1] புறநானூறு, 65.

[2] புறநானூறு 217.

அல்லாமல், மேற்கூறிய நிலையினை மேற்கொண்டனர் என்பதற்கான சான்றுகளில்லை. ஆனால், தீட்சிதர் என்பார் தமது நூலில்[1] 'தொல்காப்பியப் பொருளதிகாரச் சூத்திரம், மற்றொரு பெருஞ் சிறப்புள்ள உண்மைக்குச் சான்று பகர்கின்றது. அரியணை நீங்குவது கட்டில் எனப்பட்டது. முறைப்படுத்தப்பட்ட சட்ட திட்டங்களின்படி ஆட்சி நடத்திய பின்னர் ஓய்வுபெறும் நிலையில் நோன்பும், வழிபாடும் மிக்க வாழ்க்கையை நடாத்திடவேண்டி ஆட்சியை விட்டு நீங்கிச் செல்லுதல் ஆகும்' என்று குறிப்பிடுகின்றார். புறநானூற்றுப் பாடல்கள் சிலவற்றில்[2] தமிழ் வேந்தர்கள் தவமும், வழிபாடும் கொண்ட வாழ்க்கையை மேற்கொள்ள முடிதுறந்தனர் என்று எண்ணத்தக்க சில கருத்துக்கள் காணப்படுகின்றன. ஆட்சி நடத்திய அரசன் இறந்த உடனேயே அவனுடைய வாரிசு உடனடியாக ஆட்சிப் பொறுப்பினை மேற்கொண்டனரென அறிகிறோம். உரையாசிரியரான நச்சினார்க்கினியரால் முடித்துறக்தலுக்கு எடுத்துக்காட்டாகத் தமிழ் மன்னர் யாவரும் காட்டப்படவில்லை என்பதையும் நினைவு கூர்தல் நலமாகும்.

அரசன் மறைந்த பின்னர் அடுத்த பதவியேற்கும் வரை ஆட்சிப் பொறுப்பினைக் கவனித்திட ஆட்சியாளர் குழு ஏதேனும் காணப்பட்டதா என்பதனை ஆராய்வோம். கரிகாலன் பதவி யேற்றபோது, ஐந்து வயது சிறுவன். அச் சிறுவனுக்குத் துணை புரிந்தவர் இரும்பிடர்த்தலையார் எனப்பட்ட கரிகாலனின் தாய்மாமன் ஆவார். ஆயின், அவர் சட்டபூர்வமான ஆட்சிப் பாதுகாவலர் என்ற நிலை ஒன்றினை மேற்கொண்டு உதவிடவில்லை என்று குறிப்பிடப்படுகின்றது. உறவின் அடிப்படையிலேயே தான் செயல்பட்டார் என்பர்.

டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார், ஆசான், பெருங்கணி, அறக்களத்து அந்தணர், காவிதி, மந்திரக்கணக்கர் எனப்பட்ட ஐவர் ஆட்சியின் பாதுகாவலர்களாக விளங்கினர் என்ற கருத்தினைத் தமது நூலில்[3] எடுத்துக்காட்டுகின்றார். இக் கருத்தினைப் பேராசிரியர் டி.வி.மகாலிங்கமும் ஏற்றுக்கொண்டு, சங்கம் மருவிய காலமான சிலப்பதிகாரக் காலத்திலும் இப் பழக்கம் தொடர்ந்தது என்று குறிப்பிட்டு உள்ளார்.[4]

[1] V.R. Ramachandra Dikshitar, The Studies in Tamil literature. p 182.

[2] புறநானூறு, 251-252.

[3] S. Krishnaswamy Aiyangar, Hindu Administrative Institution of South India.

[4] T.V. Mahalingam, South Indian Polity. P. 102.

**அரசி**

அரசனுடைய மனைவி அரசி எனவும், கோயிலாள்[1] எனவும் அழைக்கப்பட்டாள். அரசனுடைய இல்லம் கோயில் என்பட்டமையால் அரசியும் கோயிலாள் எனப்பட்டாள். இல்லாளை, இல்லத்தரசி என்று குறிப்பிடுவதைப் போன்றதே இது எனலாம் ஆனல், அரச குடும்பத்தைப் பொறுத்தமட்டில் கோயிலாள் என்பது பட்டத்தரசியருள் யாருக்கு வாரிசுரிமை பெறத்தக்க மகவு உள்ளதோ, அவளையே குறிப்பதாயிற்று எனலாம்.

தமிழகப் பெண்டிர் தொன்றுதொட்டுச் சில நற்குணங்களின் உறைவிடமாகத் திகழ்ந்து வந்துள்ளனர். அக்காலப் பெண்கள், அச்சம், நாணம், மடம் முதலான தங்கள் இயற்குணங்களின் காரணமாக, அரசர்களுடன் ஆட்சிப் பொறுப்பில் பங்குகொள்ள வில்லையென்பதால், குடிமக்களின் அன்பைப் பெருதவர்களென்று கருதிவிடக் கூடாது. மன்னனின் மனைவியானமையால் மக்களிடத்து அரசிக்கு மதிப்பிருந்தது.

அரசி என்பதால், ஆட்சித் துறையில் ஏதும் சிறப்புத் தன்மைகள் இருந்ததா எனத் தெரியவில்லை. அரசியினுடைய தனி வாழ்க்கையும், சாதாரணக் குடிமக்களின் வாழ்க்கையினை ஒத்ததாகவே விளங்கிற்று. கடையெழு வள்ளல்களில், ஒருவனுகப் போற்றப்படும் பேகன் தன் துணைவியான கண்ணகி என்பாளை விடுத்து நீங்கி, வேறொரு மங்கையின்பால் மனம் வைத்து வாழ்ந்திருந்தான். ஆனல், பேகனின் வள்ளல் தன்மையைப் பாராட்டிய புலவர்கள் வாளாவிருக்கவில்லை. கபிலர், பரணர், அரிசில்கிழார், பெருங்குன்றூர்கிழார் ஆகியோர் பேகனிடத்துச் சென்று கண்ணகிக்காக வாதாடினர்.[2] மணம் செய்து கொண்ட மங்கையைக் கொடுமைப்படுத்துவது புலவர்களால் இழிந்ததாகக் கருதப்பட்டது என்பதனையே இது எடுத்துக் காட்டுகிறது.

**மண உறவு**

மூவேந்தர்களும், தம்முள் கொள்ளல், கொடுத்தல் ஆகிய உறவுகளைத் திருமண விஷயத்தில் மேற்கொண்டிருந்தனர். சோழர்கள், சேரர்கள் ஆகியோரிடையே அமைந்திருந்த உறவு முறை, பாண்டியர்கள் மற்றவர்களிடம் கொண்டதைக் காட்டிலும் அதிகமாக இருந்தது. 'வேள்' எனப்

[1] பதிற்றுப்பத்து, எட்டாம் பத்து, பதிகம்

[2] புறநானூறு, 143-147.

பட்ட குறுநிலத் தலைவர்களும், வேந்தர்களுடன் மண உறவினை மேற்கொண்டிருந்தனர். இவர்கள் மட்டுமன்றி உயர் குடும்பத்தைச்சார்ந்த வேளாளர்களும் அரச குடும்பத்துடன் மண உறவு கொண்டிருந்தனர் எனத் தெரிகிறது.

### அந்தப்புரம்

பெருந்தொகையில் 'உரிமைச் சுற்றம்' என்ற சொல்லுக்கு 'அந்தப்புர மகளிர்' என்று பொருள் விளக்கப்பட்டுள்ளது.[1] ரோம் நாட்டு வாணிகர்கள் ஒவ்வோராண்டும், அழகிய பெண்களை இந்திய அரசர்களின் அந்தப்புரத்திற்கு அனுப்பி வைத்ததாகப் பெரிபுளூஸ் நூலாசிரியர் குறிப்பிடுகின்றார்.[2] இந்த உண்மையைக் குறித்துச் சங்க இலக்கியங்களில் சான்று ஏதுமில்லை. பெரிபுளூஸ் குறிப்பிட்டதைப் போன்று, அழகிய நங்கையர் அந்தப்புரங்களில் இருந்தனர் என்பது இயலக் கூடியதே எனலாம். மௌரியர்களுடைய ஆட்சியமைப்பினை நோக்குகின்றபோது, அழகிய நங்கையர் அந்தப்புரங்களில் இருந்தனரென்பது இயலக் கூடியதே எனலாம். மௌரியர்களுடைய ஆட்சியமைப்பினை நோக்குகின்றபோது, அத்தகைய பெண்டிர், சந்திரகுப்தரின் அரண்மனையிலிருந்த தக்காணக் குறிப்புகளில் உள்ளன எனில், தமிழகத்திலும் அவ்வாறு இருந்திட வாய்ப்பு உள்ளது எனக் கருதலாமன்றோ?

சங்க இலக்கியங்கள் வாயிலாக அந்தப்புரத்திலிருந்த மகளிர் 'உரிமை மகளிர்' என அழைக்கப்பட்டதனை அறிகிறோம். போரின் போது சிறைப் பிடிக்கப்பட்ட பெண்டிரும் அந்தப்புரத்தில் இருந்தனர். பட்டினப்பாலையில் அத்தகு மகளிர்பற்றிய செய்திகளைக் காண்கிறோம்.[3] ஆனால், இவ்வுரிமை மகளிரின் நிலை, அடிமைகளின் நிலையினைவிட மோசமாகக் காணப்பட்டது எனலாம். இம் மகளிர் பொதுக் குளங்களில் குளித்தனர். கடவுட்டறி அல்லது கந்து நடப்பட்ட திருக்கோயில்கள் இருந்த பொதியில் அல்லது மன்றம் எனப்பட்டவற்றில் 'மெழுகிடுதல்' போன்ற பணிகளைச் செய்து வந்தனர் எனவும் அறிகிறோம்.

### அரண்மனை

அரசனைக் 'கோ' என அழைத்தனரென்று கண்டோம். எனவே, அந்தக் கோ இருந்த இல், கோயிலென அழைக்கப்

[1] பெருந்தொகை, III : 13, 16.

[2] The Periplus of Erythraean sea, P.40-47. Schroff Edition.

[3] பட்டினப்பாலை 246-249.

பட்டது.[1] அரண்மனை வாயில்களில் அதற்கென அமர்த்தப் பட்ட காவலர்கள் காவற்பணி புரிந்தனர். காவலர்கள் கையில் வேல் இருந்தது போலும். காவலர்கள் வேலைச் சாத்தி வைத்துக் காவல்பணி புரிந்தமையை மலைபடுகடாம் வாயிலாகக் காண்கிறோம்.[2]

கோப்பெருஞ்சோழனிடத்து நட்புத் தூதாக அன்னத்தினை அனுப்பிய பிசிராந்தையார், காவலர்கள் எப்படிப்பட்ட தோற்றம் கொண்டவர்கள் என்ற படப்பிடிப்பினைக் காட்டுகின்றார். காவலர்களின் தோற்றத்தைக் கண்டு அஞ்சிவிடாதே என்று எடுத்துரைத்தார்.[3] பொருநர், புலவர், பாணர், அந்தணர் முதலியோருக்கு உட்செல்ல அனுமதி இருந்ததுபோலவே, அரண்மனைக்குள் தடையின்றிச் செல்லத் தூதுவரும் அனுமதி பெற்றிருந்தனர். அரச குடும்பத்தவர் தவிர வேறு யாரும் அரசியின் இருப்பிடத்திற்குச் செல்ல இயலாது என்பதனை 'ஆடவர் குறுகா அருங்கடி வரைப்பின்' என்னும் நெடுநல்வாடைக் குறிப்பு(107) சான்று பகர்கின்றது.

சோழர்களின் அரண்மனை வெளிவாயிலில் புலிச் சின்னமும், சேரர்களின் அரண்மனை வெளிவாயிலில் வில்லும், பாண்டியர்களின் அரண்மனை வெளிவாயிலில் மீனும் பொறிக்கப்பட்டிருந்தன. அரண்மனை வாயிற்கதவுகளில் இறை வடிவங்கள் செதுக்கப்பட்டிருந்தன. எனவே, அரண்மனைப் பணியாளர் அவ் வடிவங்களைத் தமது இறை வடிவங்களாகக் கருதி, எண்ணெய், வெண்ணெய் முதலானவற்றை அவற்றின்மீது தடவி வழிபாடு நிகழ்த்தினர். இதன் விளைவாகக் கதவுகள் கறுப்பாகத் தோற்றமளித்தன. அரண்மனைக்கு வெளியே ஆராய்ச்சி மணி கட்டப்பட்டிருத்தல் அக்கால வழக்கம் என்பதற்குப் புறப்பாடல்கள் சான்று பகர்கின்றன.[4]

### சின்னங்கள்

கொடி, குடை, முரசு, குதிரை, யானை, தேர், மாலை, முடி முதலியவைகளை அரசர்க்குரிய இன்றியமையாத சின்னங்களெனத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். எனவே, அரசன் என்றாலே மேலே குறிப்பிட்ட வகைகளும் இருந்திட வேண்டுமென்பது போன்ற நிலைகாணப்பட்டது. தொல்காப்பியர் வரிசைப்படுத்துகையில் படைக்கு முதலிடம் கொடுத்

[1] புறநானூறு, 378.
[2] மலைபடுகடாம், 490-91.
[3] புறநானூறு, 67.
[4] புறநானூறு, 388 : 13

துள்ளார். படை என்றால் 'தானை' என்று சிலரும், படை என்றால் 'வாள்' என்று சிலரும் கருதுகின்றனர். படை என்றால் தானை என்ற பொருள் எனில், ஏன் அரசுரிமைச் சின்னங்களில் ஒன்றாகச் சேர்க்கப்பட்டது என்ற வியப்பு ஏற்படுகிறது. முரசு, குடை ஆகியவற்றோடு வாளினைத் தொல்காப்பியர் குறிப்பிடுவதால் படை எனத் தொல்காப்பியர் வாளினையே குறிப்பிடுகின்றார் என்பர். அரசுரிமைச் சின்னங்களான 21 பொருள்கள் பிற்காலப் படைப்பான சூடாமணி நிகண்டில் குறிப்பிடப்பட்டுள்ளன. அவை முடி, குடை, வெண்சாமரம், தார்க்கோல், முரசு, அரசச் சக்கரம், பட்டத்து யானை, கொடி, அரண், அழகிய தோரணம், புனித நீர்ப் பானை, மாலை, சங்கு, கடல், மீன், ஆமை, இரட்டை மீன் இலச்சினை, சிங்கம், விளக்கு, காளை, அரியாசனம் ஆகும். இப் பட்டியலில் அரச அதிகாரத்தைக் காட்டாத சிலவற்றையும் சேர்த்தது ஏன் எனப் புரியவில்லை. மாறாக, அரசுரிமையைக் காட்டக் கூடியதான அரியணை அரசுரிமைச் 'சின்னங்களில் ஒன்றாகச் சேர்க்கப்படவில்லை.

தொன்றுதொட்டு சேர, சோழ, பாண்டியர் மூவேந்தர்கள் என அழைக்கப்பட்டனர். அரசர்கள் என்றால் 'முடி' (மகுடம்) தரித்தவர்கள் என்றுதான் கருதப்படுகிறது. குறுநிலத் தலைவர் களும், சிற்றரசர்களும் முடிஅணிந்தனரா என்ற வினா எழுகின்றது. உயர்ந்த அரசர்கள், முடி அணிந்தமையால் வேந்தர் எனவும், சிற்றரசர்கள் முடி அணியாமையாலோ, குறைந்த தகுதி வாய்ந்த முடி அணிந்தமையாலோ மன்னரெனப்பட்டனராவென ஆராய்தல் வேண்டும்.

### முடிசூட்டு விழா

முடி அணியும் விழா முடி சூட்டல் அல்லது முடி கவித்தல் என அழைக்கப்பட்டது, நாரால் செய்யப்பட்ட முடி சூட்டிக் கொண்டமையால் போலும். சேர அரசன் களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரல் எனப் பெயர் பெற்றான். பதிற்றுப் பத்தின் உரைகாரர் தான் முடி சூடுகின்ற காலத்து ஒரு காரணத்தால் முடித்தற்குத் தக்க கண்ணியும் முடியும் உதவா மையின், களங்காயாற் கண்ணியும் நாரால் முடியும் செய்து கொள்ளப்பட்டன என உரைக்கின்றார். சேரர்களைப் பற்றிக் குறிப்பிடுகையில் ஏழு முடி ஆரம் எனப்படும் மாலை அணிந்த தாகப் பதிற்றுப்பத்து வாயிலாக அறிகிறோம். இமயவரம்பனும் அவன் மகன் செங்குட்டுவனும் 'எழுமுடி மார்பன்' என்ற அடை மொழியால் அழைக்கப்படுகின்றனர். சிலர் ஏழு முடிச்சுகளைக் கொண்ட மாலை அணிந்ததால் அவ்வாறு அழைக்கப்பட்டனர் என்பர்.

**செங்கோல்:** அரசனின் சின்னங்களில் தெளிவாகத் தோற்ற மளிப்பவை செங்கோல், அரியாசனம், முடி, வெண்கொற்றக் குடை ஆகியவையே ஆகும். வெண்கொற்றக் குடை மக்கள் அரசனிடத்துப் பெற்ற பாதுகாப்பினையும், முடி அரசனின் மேலாண்மையையும், செங்கோல் அரச நீதியையும் எடுத்துக் காட்டும் என்பர்.[1]

கோல் என்பது அரச அதிகாரம் என்ற பொதுப் பொருளில் எப்போதாவதுதான் பயன்படுத்தப்பட்டது. சிறந்த ஓர் அரச னுக்கு இயல்பானவற்றை எடுத்துக் கூறுகின்றபோது, குறள் அவ் வதிகாரம் முழுமையும் 'செங்கோல்' எனவும் இடர்களைக் குறித்து எச்சரிக்கும்போது, 'கொடுங்கோல்' எனவும் விரிவாக விளக்கு கிறது.

அரசன் குடிகளை அன்போடு அணைத்துக் கொண்டு செங் கோல் செலுத்திடல் வேண்டும். அத்தகைய அரசனுடைய அடி களைப் பொருந்தி, உலகம் முழுவதும் நிலைபெறும். ஓர் அரசனுக்கு வெற்றியைத் தேடித்தருவது வேல் அன்று. அதாவது போர்க் களத்திலே பெறுகின்ற வெற்றி மட்டுமில்லை, அரசனுடைய செங் கோலும் ஆகும். அரசன் காட்சிக்கு எளியனுகவும், கடுஞ் சொல்லன் அல்லனுகவும், ஆராய்ந்து நீதிமுறை செய்பவனுயும் இருத்தல் வேண்டும். நீதி முறைப்படி செங்கோல் செலுத்தும் அரசனுடைய நாட்டில் பருவ மழையும், நிறைந்த விளைவும் ஒரு சேர ஏற்படுமென்ற கருத்துகளும், செங்கோல் என்ற தலைப்பில் காட்டப் படுவதோடு நீதி முறை வழுவாத ஆட்சியை வலியுறுத்தி அரசனை மழை பெய்தலுக்குக் கூடக் காரணமாகக் காட்டுகிறது. மழையினுல் உலகம் நலம் பெறுகிறது. அதைப்போல் நல்லாட்சி யினுல் மக்கள் நலம் பெறுகின்றனர். அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம், தூங்காமை, கல்வி, துணிவுடைமை ஆகியவை அரச னிடத்து எதிர்பார்க்கப்பட்டன. அரசன், தன் பணியாளர்களைக் கவனித்துக்கொள்ள வேண்டி இருந்தது. கொடுங்கோன்மை யான முறையற்ற ஆட்சி நடத்தும் அரசன் பாவியெனப்பட்டான். இக் கருத்துகள் அனைத்தும், குறளில் விரிவாகக் காணப்படு கின்றன. பண்டைத்தமிழ் மன்னர்கள் நேர்மையும் நல்லாட்சியும் நடைபெற வேண்டுமென்று விரும்பினர். வேண்டுமென்றே அநீதியாக நடைபெற்ற சம்பவங்கள் சங்க காலத்தில் இல்லா மலில்லை. ஆனுல், அவை எப்போதோ நடைபெற்றவையே தவிர எப்போதும் நடைபெற்றவை ஆகா. செங்கோல் கோட்பாடு

[1] புறநானூறு, 357.

சங்க அரசர்களின் நடுவுநிலைமையை எடுத்துக்காட்டுவதாயிற்று எனலாம்.

குடை: சங்க கால அரசர்களின் அரசுரிமைச் சின்னங்களில் ஒன்றாகத் திகழ்ந்த குடை வட்ட வடிவமாகப் பெரிதாக வெண்ணிறத்தில் நிலவு போன்று தோற்றமளித்தது. குடை வெண்மையாக இருந்தமையால் வெண்குடை எனப்பட்டது. பொற்றொழில் அமைந்த கைப்பிடியினை அது கொண்டிருந்தது என்பதனையறிகிறோம். அரசன் பார்வையாளர் கூடத்திலிருந்தபோது, ஆண் அல்லது பெண் பணியாளர்கள் அரசனின் தலைக்குமேல் அதனைப் பிடித்திருந்தனர். சூரிய ஒளியிலிருந்தும், மழையிலிருந்தும் பாதுகாப்புப் பெறப் பயன்படுத்தப்பட்ட பழக்கத்தின் தொடர்ச்சியே இக் குடை பிடிக்கும் பழக்கமென்பர். இது ஆற்றல், வெற்றி, வெல்ல முடியாத தன்மை ஆகியவற்றையும், குடிமக்களுக்கு இடையூறுகளிலிருந்து பாதுகாப்பு அளிக்க வல்லது என்பவற்றையும் எடுத்துக்காட்டியது என்பதனைப் புறப்பாடல் வாயிலாக[1] அறிகிறோம். இக் குடை பொதுவாக வெண்கொற்றக் குடை எனப்பட்டது. சிறுபாணாற்றுப்படை வாயிலாக, அரசனின் தனிச்சிறப்பு உரிமையையும், வேறு சில உரிமைகளையும் எடுத்துக்காட்டுவதாக, இச் சின்னம் அமைந்ததென எண்ணலாம். குறுநில மன்னர்களும், பேரரசர்களைப் போலக் குடையினைக் கொண்டிருந்தனர். ஆனால், அவர்கள் கொண்டிருந்த குடையோ சிறியது. பேரரசர்களிடத்துச் சிற்றரசர்கள் வந்தபோது, சிற்றரசர்களின் குடைகள் தாழ்த்திப் பிடிக்கப்பட்டன. இது சிற்றரசர்களின் பணிவான நிலையை எடுத்துக் காட்டியது எனலாம்.

அரசர்கள் செல்லுமிடத்திற்கெல்லாம், பணியாளர் உடன் சென்று குடை பிடித்தனர். ஆலயங்களில், ஆண்டவனுக்கும் இத்தகு குடையே பிடிக்கப்பட்டது. அரசன் ஆலயத்திற்கு வழிபடச் சென்றபோது, இறைவனுக்கு அரசன் கட்டுப்பட்டவன் என்பதைக் காட்ட அரசனின் குடை தாழ்த்திப் பிடிக்கப்பட்டது என்பதனைப் புறப்பாடல் வாயிலாக அறிகிறோம்.[2] அரசன் போர் முற்றுகைக்கு வெளிப் போந்தபோது, குடையினை அரசன் வணங்கினான் என்பதால் அக் குடை, அரசனின் தூயச் சின்னங்களுள் ஒன்றாகக் கருதப்பட்டதெனலாம். நல்ல நாளில் அரண்மனையிலிருந்து குடையினைப் போர்க்களத்திற்கு எடுத்துச் சென்ற

[1] புறநானூறு, 35.

[2] புறநானூறு, 6.

விழாவினை 'குடைநாட் கொளல்' என அழைத்தனர். போர் நடவடிக்கை மேற்கொண்ட வேந்தனுக்கு இவ் விழா பயனை விளைவிக்கும் என்று எண்ணப்பட்டது.

போர்க்களத்திற்கும் அரசனின் குடை எடுத்துச் செல்லப் பட்டது. அவ்வாறு எடுத்துச் செல்லப்பட்ட குடைகள் யானைகளினால் சேதப்படுத்தப்பட்டது குறித்துக் 'களவழி நாற்பது' என்ற நூலில் எண்ணிறந்த குறிப்புகள் உள்ளன. போரில் கலந்துகொண்ட அரசன், எதிரியின் குடை, கொடி ஆகியவற்றை அழிப்பதையே குறிக்கோளாகக் கொண்டிருந்தான். ஓர் அரசனின் குடை தாழ்ந்தால் அவ்வரசன் அவமானப்படுத்தப் பட்டதாகவும், சிதைக்கப்பட்டால் தோல்வியை எடுத்துக் காட்டுவதாகவும் கருதப்பட்டன. அரசனின் பெருமையினைக் குடையோடு பொருத்திப் பேசினர். அரசனின் குடைக்கு, ஏதேனும் ஒன்று நேர்ந்தால், அது, மக்களிடத்து இருந்த அமைதியான வாழ்க்கைக்கும், பாதுகாப்பிற்குமேற்பட்ட குறையாகக் கருதப் பட்டது. அரசன் ஒருவன் புதிய பகுதி ஒன்றினைக் கைப்பற்றித் தன் ஆட்சியின் கீழ்க் கொண்டுவருதல், குடைக்கீழ்க் கொண்டுவந்தான் என உருவகப்படுத்தப்பட்டது. எனவே, சிறந்த அரசர்களைத் 'தன் ஒரு குடையாலே தன் ஆணையை உலகம் கூறும்படி செய்தவன்' என்று குறிப்பிட்டனர்.

**அரியணை:** அரியணை என்பது அரசர்களின் இருக்கையினைக் குறிக்கக் கூடியது. அரியணையைப் பொருநராற்றுப்படை 'அரிமா சுமந்த அமளி' என்று குறிப்பிடுகின்றது. அரசர்களின் அரியணைகள், சிங்கங்களால் தாங்கியிருப்பவை போன்று அமைக்கப் பட்டிருந்தமையே இதற்குக் காரணம். அரியணையினை அரசு கட்டில் எனவும் அழைத்தனர். அரியணை ஏறுதல் அல்லது அரசு கட்டில் ஏறுதல் என்பது முடியணிதலைப் போன்று அரச பதவிக்கு வருதற்கு ஒப்பான செயலாகும். கட்டில் என்பது படுக்கக் கூடிய ஒன்றைக் குறிப்பிடக் கூடியது என்றபோதிலும், 'ஆசனம்' நிலை என்றும் பொருள்படும். கட்டில் என்பதன் முன்னுள்ள சொல்லான அரசு என்பது, அரியணை என்பதனை எடுத்துக் காட்டுகிறது. சில இடங்களில் அரசு என்ற சொல்லின்றிக் 'கட்டில்' என்ற சொல்லே பயன்படுத்தப்பட்டிருப்பினும், இடமறிந்து அரியணையையே அது குறிக்கிறது என அறிகிறோம்.[1] அரசனின் முரசு வைக்கப்பட்டிருந்த இடம் முரசு கட்டில்

[1] புறநானூறு, 17.

எனவும்[1] உறங்குவதற்குப் பயன்பட்டது தூங்கு கட்டில்[2] எனவும் அழைக்கப்பட்டன. போரில் பிடிபட்ட யானைகளின் தந்தங்கள் அரியணையில் நான்கு கால்களாகச் செய்திடப் பயன்பட்டன என்பதற்குப் பதிற்றுப்பத்து ஆதாரமாகிறது.[3]

**முரசு:** சங்க காலத்தில் போரின்போதும், அமைதிக் காலத்திலும் முரசினைப் பயன்படுத்தினர். முரசு வைக்கப்பட்டிருந்த இருக்கை 'முரசு கட்டில்' எனப்பட்டது என்று கண்டோம். முரசு கட்டில் அரசனுடைய அரண்மனையில் இருந்தது. முரசுக்குத் தெய்விக இயல்புகள் இருப்பதாகக் கருதிய சங்க காலத் தமிழர்கள் அதனை புனித நீராட்டி, மாலையிட்டு வணங்கினர். விழாக்கள் போன்றவற்றை அறிவிக்கவும் முரசறைவித்தனர். அச் சந்தர்ப்பங்களில் முரசினை யானைமீது ஏற்றி, நகர்வலம் வரச் செய்து விழாவினை அனைவரும் அறியச் செய்தனர் என்பதனை மதுரைக் காஞ்சி அறிவிக்கின்றது. பட்டத்து யானை மதம்பிடித்து, அலைந்தபோது மக்களை ஆபத்துகளிலிருந்து காத்திடவும் முரசறைவிக்கப்பட்டது. அவ்வாறு வருமுன் செய்யாத மன்னர் தம் கடமையிலிருந்து வழுவியராகக் கருதப்பட்டார்.

**முரசு வகைகள்:** முரசு பாதுகாப்பின் அடையாளமாக விளங்கியமையால், காவல் முரசு அல்லது ஏம முரசு எனப்பட்டது. காலையில் ஒலித்த முரசு காலை முரசு எனப்பட்டது. வீர முரசம் எனப்படுவது 'கொல்லேற்றுப் பைந்தோல் சீவாது போர்த்த மாக் கண் முரச'மாகும். போர்ப் பாசறைகளிலும், கூடாரங்களிலும்கூட அறிவிப்புகளைத் தெரிவிக்க முரசறையப்பட்டது. முரசொலிக்கு இடி முழக்கினை உவமையாகக் காட்டுவர். குடையைப் போன்றுமுரசும் போர்க்களத்தில் கைப்பற்றப்பட்டமையால், அதனைக் கைப்பற்றியவர் சிறந்த வீரராகக் கருதப்பட்டார். போர் முரசின் மரச் சட்டத்தினை எதிரியின் காவல் மரத்தின் கட்டையினால் செய்தல் உண்டு.

அரசின் முரசு வீர முரசு, தியாக முரசு, நியாய முரசு என மூவகைப்படும் என்பர். அவை முறையே வெற்றி முரசு, கொடை முரசு, நீதி முரசு எனப்படும். அதிகாலையில் அரண்மனையிலிருந்து முரசறைவித்துப் பொழுதின் விடிவை அறிவித்தனரென்றும் கருதலாம். இதனை இன்றைய நாளில் மின் சங்குகள் ஒலிப்பதற்கு ஒப்பாகக் கருதலாம்.

1 புறநானூறு, 50.

2 கலித்தொகை, 13 : 15, 16.

3 பதிற்றுப்பத்து, 79: 13, 14.

**வாள்:** சங்க காலத் தமிழ் மன்னர்கள் வாள் வலிமையால் சிறந்து விளங்கினார்கள். உறையில் இடப்பட்ட வாளினை எப்போதும் உடையோடு இணைத்துக் கட்டியிருந்தனர். இன்றியமையாத நேரங்களில் உடை வாளினை உருவிட அவர்கள் தயங்கினார்கள் அல்லர். எவ்வாறு வீர முரசினை மலர் சூட்டி வணங்கினார்களோ அதைப் போலவே வாளினையும் வணங்கினர். போர்க்களத்திற்கு முரசு, குடை ஆகியவற்றுடன் வாளும் எடுத்துச் செல்லப்பட்டது. குடை எவ்வாறு குடிமக்களுக்குப் பாது காப்பினை அளிப்பதாகக் கருதப்பட்டதோ, அதைப் போலவே ஆட்சிக்கு எதிரான பகைவர்களை அழிப்பதையும், அரசனின் வீரத்தைக் காட்டுவதையும் வாள் கொண்டிருந்தது எனக் கருதப் படுகிறது. புறநானூற்றுப் பாடலொன்றில்[1] 'கலப்பையினைக் கொண்டு நெல் வயல்களை உழவர் உழுவதைப் போன்று, அரசன் வாள் கொண்டு போர்க்களத்தை உழுதான்' என்று சொல்லப் படுகிறது. வாள் அரசனுடைய தனி ஆயுதமாக விளங்கியது. எனினும், நாளடைவில் மற்ற அரசுரிமைச் சின்னங்களோடு வாளும் சேர்த்துக் கருதப்பட்டது.

**கொடியும் கொடிச் சின்னமும்:** எல்லாக் காலங்களிலும் அரச பரிவாரங்களில் ஒன்றாகக் கொடியினைக் கருதுவது பொதுவான கூறுபாடாக உள்ளது. சங்க கால அரசர்கள் தமக்கெனத் தனிக் கொடியினைக் கொண்டிருந்தனர். இக் கொடிகள் அவ்வவ்வரசர்களின்மரபினை, தனிப்பட்ட கோட்பாட்டினை எடுத்துக்காட்டுவதாக அமைந்திருந்தது எனலாம். பொதுவாகப் பட்டு அல்லது பருத்தித் துணியாலேயே கொடிகள் செய்யப்பட்டிருந்தன. அவ்வாறு செய்யப்பட்ட கொடிகளில் அரசர்களின் தனிச் சின்னங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. கொடிகளுக்கு இன்றைய நாளில் உள்ளதுபோல் அன்றைய நாளில் அளவு முறைகள் ஏதும் விதிக் கப்படவில்லை. பண்டைய தமிழ் மன்னர்களில் சேரர் தம் கொடியில் வில்லினையும், சோழர் புலியினையும், பாண்டியர் மீனையும் சின்னமாகக் கொண்டிருந்தனர். இம் மன்னர்களின் சின்னங்கள் குல மரபு சின்னங்களாகும். அந்தந்த மரபினைச் சேர்ந்தவர்கள் தம் குல மரபு சின்னங்களைக் கொடிகளில் பொருத்தித் தம் சின்னங்களாகப் பயன்படுத்தினர். பனை அல்லது பனை ஓலைச் சின்னத்தைச் சேரரும், அவர்தம் திறையரசர்களும் தேர்ந்தெடுத்தனர் போலும்! அதியமான் நெடுமான் அஞ்சி பனம் பூவாலான தாரினை அணிந்திருந்ததாகக் கருதப்படு

1. புறநானூறு, 368.

கிறது.[1] கொடி என்று நாம் குறிப்பிடுவது அதில் உள்ள சின்னத்தையும் சேர்த்துக் குறிப்பதாகும். படை வீரர் போர்க்களத்தில் தமது கொடியை உயர்த்திப் பிடித்து எந்தப் படைப் பிரிவைச் சேர்ந்தவர் என்பதனை எடுத்துக்காட்டினர். கொடியைப் பறித்துப் பிறர் எடுத்துச் சென்றால் அல்லது அழித்தால் அக் கொடியினைப் பற்றியிருந்தவர்க்கு அவமானத்தையும் அழித்தவர்க்கு வெற்றியையும் தருவதாகக் கருதப்பட்டது. பதிற்றுப்பத்தில் கொடி என்பது வெல்கொடி அதாவது வெற்றிக்கொடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது.[2] கொடியினை அழிப்பதும் போரின் குறிக்கோள்களில் ஒன்று ஆயிற்று. யானைகளின்மீது கொடியினைக் கொண்டு செல்லுதலும் உண்டு. அவ்வாறு யானைகள் கொடி சுமந்து வரும்போது வாயில்களில் அக் கொடிகள் தடுக்கப் படாமல் இருந்திட வேண்டி, வாயில்களை உயரமாக அமைத்து இருந்தனர். போர் முடிந்த பின்னர்ப் புலவர்கள் வெற்றிபெற்ற அரசனின் வெற்றிக் கொடியினை வாழ்த்திப் பாடினர். அவ்வாறு வாழ்த்திப் பாடுவதைக் கொடிநிலை என்று குறிப்பிட்டனர்.[3] அரசருக்கும் இராணுவத் துறைக்கும் உரிய கொடிகள் ஒன்றான போதிலும், ஆலயங்களில் இருந்த இறைவர்களுக்குத் தனிக் கொடிகள் இருந்தன என்பதற்குத் திருமுருகாற்றுப்படை சான்று பகர்கின்றது. திருமுருகாற்றுப்படையில் முருகனுடைய சேவல் சின்னம் கொடிகளில் காணப்பட்டது குறித்து அறிகின்றோம். மூவரசர்களின் தலைநகரங்களிலிருந்த தெருக்களின் இருமருங்கிலும் கொடிகளை வரிசையாகக் கட்டி வைத்தனர். கொடிகளைக் கோயில்கள், இல்லங்கள், பாசறைகள், அரண்மனைகள், யானைகள், தேர்கள் ஆகியவற்றின்மீது எல்லாம் அக்காலத்தே பறக்கச் செய்தனர்.

## முத்திரைகள்

கொடிகளில் காணப்பட்ட சின்னங்கள் முத்திரைகள் ஆகவும் பயன்படுத்தப்பட்டன. ஏற்றுமதி இறக்குமதி செய்தற்பொருட்டுத் துறைமுகக் கிடங்குகளில் இருந்த பொருள்களின் பைகளில் முத்திரையிடப்பட்டது. அவ்வாறு அரச முத்திரையினை இடுவதற்கு ஈரக்களிமண்ணைப் பயன்படுத்தினர். இக் களிமண் உலர்ந்ததும் அரக்கு முத்திரைபோல் ஆயிற்று எனலாம். புகார் நகர்க் கோட்டை வாயிலில் புலிச் சின்னம் பொறிக்கப்பட்டு அங்

1 புறம், 99.

2 பதிற்றுப்பத்து, 44.

3 புறப்பொருள் வெண்பா மாலை, பாடாண்திணை, 39

நகரம் சோழர்களால் ஆளப்பட்டது என எடுத்துக்காட்டப் பட்டது. மதுரைக்காஞ்சியில் மதுக்கடைகளில் காணப்பட்ட கொடிகள், மற்றக் கடைகளினின்றும் இக் கடைகள் மாறுபட்டன என்பதனை எடுத்துக்காட்டின எனலாம்.

அரசனின் தளபதிகள், கடினமாக உழைத்துப் போரிட்டுக் கொடியினைக் கைப்பற்றி வந்தவர்களின் பெயர்கள், கொடிகளில் எழுதப்பட்டன போலும்! சோழ வேந்தனின் திறையரசனான சோழிய ஏனாதி மலையமான் தன்னுடைய காவல் கோட்டை வாயிலில் புலிச் சின்னத்தைப் பொறித்து வைத்திருந்தான்.

**மாலை:** சங்க காலத் தமிழக ஆட்சியாளர்கள் தனித் தனியாக மாலைகளை அணிந்திருந்தனர். சங்கம் மருவிய கால இலக்கியங் களில் சேரர்கள் பனம்பூ மாலையையும், சோழர்கள் ஆத்தி மாலை யையும், பாண்டியர்கள் வேம்பு மாலையையும் அணிந்திருந்தமை குறிப்பிடப்பட்டுள்ளது. ஏன் இவற்றைப் போய் மாலையாகத் தேர்ந்தெடுத்தனர் என்பது தெரியவில்லை. எனினும் அவ்வப் பகுதிகளில் இவ் வகை மரங்கள் அதிகம் காணப்பட்டமையால் அவற்றினைத் தெரிந்தெடுத்து இருக்கக்கூடும் எனலாம். போர்க் களத்தில் எளிதாக அடையாளம் கண்டுகொள்ளவே அரசர்கள் மாறுபட்ட மாலைகளைத் தேர்ந்தெடுத்தனர் எனத் தொல்காப்பியம் கூறுகின்றது. ஆனால், பண்டைய நூல்கள் எவ்விடத்திலும் எந்த அரசன் எந்த மாலையை அணிந்திருந்தான் என்பது குறிப்பிட வில்லை. கழுத்தில் மட்டுமன்றி தோள்களிலும், தலையிலும் மாலை அணிந்தனர். கழுத்தில் அணிந்த மாலையைத் தார் எனவும், தலையில் அணிந்த மாலையைக் கண்ணி எனவும் கூறினர்.

போர்க்களங்களில் இம் மாலைகள் எளிதில் கண்டு அறியத் தக்க விதத்தில் அணியப்பட்டன. போருக்குச் செல்லுகையில் அரசன் அணிந்துகொள்ளும் மாலைகள் வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை ஆகிய மலர்களி னின்றும் பெறப்பட்டன. அரசனின் தளபதிகளுக்கும், பட்டத்து யானைகளுக்கும் கூட இத்தகைய மாலைகள் அணிவிக்கப்பட்டன. மரபு உரிமையைக் காட்டும் வகையில் மலர்கள் அணிந்து கொள் ளுதல் மன்னர்க்குப் புதியது அன்று. மன்னர்கள் மட்டுமன்றி இறை வர்களுக்கும் குறித்த மலர்கள் உண்டு. சிவனுக்கு உகந்ததாகக் கொன்றை மலரும், முருகனுக்குக் கடம்பும், திருமாலுக்குக் காயா மலரும்[1] குறிப்பிடப்படுகின்றன.

[1] திருமால் நிறத்திற்கு உவமையாகக் கூறப்படும் மலர் பட்டுப்போல் மிருது வாய் அடர் நீல நிறமுடையது. தற்பொழுது புதுக்கோட்டைக்கு அருகில் ஏராளமாகக் காணப்படுகின்றது.

குறுநில மன்னர்களும் மாறுபட்ட மலர்களை அணிந்திருந்தனர் என்று அறிந்திடக் குறிப்புகள் உள்ளன. ஆய் அண்டிரன் என்பவன் சுரபுன்னை மலர்களையும்[1] ஏறைக்கோன் என்பான் காந்தள் மலரையும்[2] அணிந்து இருந்தனர். தொல்காப்பியக் காலத்தில் திறை அரசர்கள் மாலை அணிந்து இருந்தனர் என்று காட்டுவதற்குக் குறிப்புகள் இல்லாமையால் திறை அரசர்கள் இத்தகைய மாலைகளை அணியவில்லை என்று கூறிவிட முடியாது.

**வெண்சாமரம்:** கீழை நாடுகளில் அரச பாரம்பரியத்திற்கு உரிய சிறப்பு அம்சங்களில் ஒன்றாக வெண்சாமரம் கருதப்பட்டு வருகின்றது. இந்தியாவின் மற்றைய பகுதிகளில் வாழ்ந்த அரசர்களைப் போலவே சங்க காலத் தமிழக அரசர்களும் தமக்கு இரு பக்கங்களிலும் சாமரம் வீசிட ஆள்களை நிறுத்தி வைத்திருந்தனர். வெண்கொற்றக் குடையின் நிறத்திற்குப் பொருத்தமான கறையில்லாத கவரி மானின் வால் முடிகொண்டு ஒன்று சேர்த்து வெண்சாமரம் செய்யப்பட்டது. சங்க காலத்தில் சாமரங்கள் ஏராளமாக உற்பத்தி செய்யப்பட்டு மதுரைப் பேரங்காடியில் பெருமளவில் விற்கப்பட்டன. எனவே, அரசர்கள் மட்டுமன்றி உயர்குடியினரும் இதனைப் பயன்படுத்தியிருக்கக் கூடும் என்று கருதலாம். சேர அரசன் பெருஞ்சேரலிரும்பொறையின் அரண்மனையில் இருந்த முரசு கட்டிலில் மோசிகீரனார் என்ற புலவர் அறியாது உறங்கிவிட்டபோது அரசன் அப் புலவரைக் கொல்வதற்குத் தனக்கு உரிமை இருந்தபோதும் அவ்வாறு செய்யாது வெண்சாமரம் கொண்டு, விழித்து எழும்வரைப் புலவர்க்கு வீசிக் கொண்டிருந்தான் என இலக்கியம் எடுத்தியம்புகின்றது.[3] அரச அதிகாரத்தின் சின்னமாக விளங்கிய சாமரம் முரசு, குடை, கொடி, வாள், கண்ணி ஆகியவற்றுடன் சேர்த்துக் கருதப்பட்டது எனலாம்.

**அரசு சக்கரம்:** வடமொழியாளர்களால் ஆக்ஞாசக்கரம் என்று கூறப்படும் அரசு சக்கரம் சங்க காலத் தமிழர்களால் ஆழி என அழைக்கப்பட்டது. திருமாலின் கையில் உள்ள சக்கரமானது அடியார்களைக் காத்தல் போன்று அரசனின் சக்கரம் அரசனின் நிழலில் வாழ்வோரைக் காக்கும் என்பர். அரசனின் கடமையாவது அற ஆழி அல்லது தர்மச் சக்கரத்தை நிலைநிறுத்துதல்

[1] புறம், 131.
[2] புறம், 157.
[3] புறம், 50.

ஆகும் எனப் புறப்பாடல் வாயிலாக அறிகின்றோம்.[1] சங்க காலத்தில் வெளிப்படையான அரசனின் சின்னம் அல்லது சக்கரம் போன்ற உருவ அமைப்பு ஏதும் இருந்ததாகத் தெரிய வில்லை. எனவே, ஆழி என்பது ஒரு கோட்பாடு எனலாம்.

**பட்டத்து யானை:** பட்டத்து யானை அரசனின் விருப்பத்திற்கு உரிய ஊர்தியாகும். தலைநகரினை வலம் வந்தபோது அரசன் அதன் மீது அமர்ந்து வந்தான். யானையின் இருபக்கமும் கயிற்றிற் கட்டப்பட்டிருந்த மணி அசைந்து ஆடி யானையின் வருகையினைப் புலப்படுத்தியது. அரசனின் யானைக்கு அது தேவையான தொன்று எனலாம். மணியோசை இல்லாத யானையின்மீது அரசன் பயணம் செய்வது முறையன்று எனவும் கருதப்பட்டது. அரசன் யானையினின்று கீழிறங்கியதும் மணிகள் அகற்றப்பட்டன.

**குதிரை:** யானைக்கு அடுத்தபடியாக அரசர்களால் பயன் படுத்தப்பட்ட ஊர்தியாகக் குதிரையே விளங்கிற்று எனலாம். மலையமான் திருமுடிக்காரி வைத்திருந்த குதிரை காரி[2] என, அந்த அரசனின் பெயராலேயே அழைக்கப்பட்டது. எனவே, அரசர்களால் பயன்படுத்தப்பட்ட குதிரைகளுக்கு அரசர்களின் பெயர்களே விளங்குகின்ற முறை இருந்தமையை அறிகிறோம். அரசன் ஏறிச் செல்லும் குதிரைக்கு மாலை அணிவிக்கப்பட்டு, நெய் கலந்த உணவு வழங்கப்பட்டது. அதனுடைய தோற்றம் எடுப்பாகத் தோன்றும் வண்ணம் பிடரி மயிர் அழகாகக் கத்த ரித்து விடப்பட்டது[3].

**தேர்:** இரண்டு சக்கரங்கள் கொண்டு குதிரைகள் பூட்டப் பட்ட தேர் எனப்படும் ஊர்தியைச் சங்க கால அரசர்கள் பயன் படுத்தினர். தேர்களின் புறங்களில் மணிகள் கட்டப்பட்டு, அரசர் களின் வருகை உணர்த்தப்பட்டது.[4] பெரும்பாணாற்றுப்படையில் நான்கு குதிரைகள் பூட்டப்பெற்ற தேர்கள்[5] பற்றிய குறிப்பினைக் காண்கிறோம்.

**காவல் மரம்:** சங்க காலச் சமுதாயத்திற்கு மட்டுமே உரிய தான காவல் மரம் என்பது குறித்துக் காண்போம். சங்க கால அரசர்கள் ஒவ்வொருவரும் தமக்கும் தம் மரபிற்கும் அரசிற்கும் உரியதாகக் கொண்டு இருந்த புனிதமான மரம் ஒன்றினைக்

[1] புறம், 3.
[2] புறம், 158.
[3] புறம், 299.
[4] அகம், 4.
[5] பெரும்பாணாற்றுப்படை, 488-490.

கடிமரம்[1] அல்லது காவல் மரம் என அழைத்தனர். இம்மரம் தெய்விகத் தன்மை உடையதாகக் கருதப்பட்டது. இம்மரம் வெட்டப்பட்டால் நகரம் அழிந்துவிடும் என எண்ணினர். செங் குட்டுவனால், மோகூர்ப் பழையன் என்பான் தோற்கடிக்கப் பட்டான். அவ்வாறு தோற்கடிக்கப்பட்ட மோகூர்ப் பழையனின் வேப்ப மரம் வேரோடு சாய்க்கப்பட்டது.[2] அரசன் ஒருவன் தன் யானையினை எதிரியின் காவல் மரத்தில் கட்டிவிட்டால், அம் மரத்தை அவன் வெட்டுவதைவிட அவமானத்தைத் தரும் ஒன் றாகக் கருதப்பட்டது.[3]

**சிறப்புப் பட்டங்கள்**

அரசர்களால் சிறப்புப் பட்டங்களும், விருதுகளும் கடமை யைச் சிறப்புடன் செய்து முடித்த அரசு அலுவலர்களுக்கு வழங்கப் பட்டன. அரசனால் வழங்கப்பட்ட அவ் விருதுகள் மாராயம் எனப்பட்டன. இலக்கியங்கள் வாயிலாக மூவகைப்பட்ட மாராயங்களைப்பற்றி அறிகின்றோம். எட்டி, காவிதி, ஏனாதி ஆகிய இம் மூன்று விருதுகளில் எட்டி, காவிதி ஆகிய இரண்டும் சாதாரணமான விருதுகளாகும்.[4] உள்ளாட்சித்துறை, இராணுவத் துறையைச் சேர்ந்த உயர் அதிகாரிகளுக்கு ஏனாதி என்னும் விருது வழங்கப்பட்டது. வாணிகத்தில் சிறந்து விளங்கியோர்க்கு எட்டி என்னும் விருது வழங்கப்பட்டதாக அறிகிறோம்.[5] திரு. டி. வி. மகாலிங்கம் தமது நூலில் காவிதிகளை வரி வசூலிப் பவர்கள்[6] என்று குறிப்பிடுகின்றார். காவிதி எனும் விருது பெற்றவர்கள் அமைச்சர் நிலைக்கு உயர்த்தப்பட்டு அரசனுக்கு ஆலோசனை கூறுகின்ற அளவிற்கு உரிமை பெற்றவர்களாகத் திகழ்ந்தனர்.[7] நச்சினார்க்கினியர் தொல். எழுத்ததிகாரத்திற்கு உரை செய்கையில் பாண்டியநாட்டுக் காவிதிகளை வெள்ளாளர் எனவும், அவர்களே தமிழகத்தில் இருந்த சிறப்புவாய்ந்த அரச குடும்பத்தவரோடு மண உறவு கொள்ளும் தகுதி பெற்றிருந்தனர் என்றும் குறிப்பிட்டுள்ளார். சங்க காலத்தில் பெண்களும்கூட எட்டி, காவிதி ஆகிய விருதுகள் பெற்றிருந்ததாக[8] அறிகின்றோம். பொதுவாகத் தனிச்சிறப்புப் பெற்ற படைவீரர்களுக்கே ஏனாதி

1 புறம், 57, 162, 336.
2 பதிற்றுப்பத்து, 44.
3 புறம், 162.
4 தொல். பொருளதிகாரம், 14, நச்சினார்க்கினியர் உரை.
5 தொல். சொல்லதிகாரம், 16:3.
6 South Indian polity, T.V. Mahalingam. p. 150.
7 தொல். பொருளதிகாரம், 30.
8 Hindu Administrative Institutions of South India, S. Krishnasamy Aiyangar, p. 18.

எனப்பட்ட சிறப்பு விருது வழங்கப்பட்டது. சேனதிபதி எனப் பட்டதன் திரிபே ஏனதி என்பதாகுமென்று டாக்டர் டி. வி. மகாலிங்கம் கூறுகின்றார். எட்டி, காவிதி ஆகிய விருதுகள் மலர் வடிவில் இருந்தது போல், ஏனதி விருது கணையாழி வடிவில் இருந்தது.

பாண்டியர்களும், சோழர்களும் ஏனதிப் பட்டங்களை வழங்கிய போதிலும், சோழர் அதனை வேறுபடுத்திக் காட்டும் வகையில் சோழிய ஏனதி என அழைத்தனர்.[1]

தொடக்கக் காலத்தில் வழங்கப்பட்ட இராணுவம் சேர்ந்த அல்லது இராணுவம் சேராத விருதுகள் பிற்காலத்தில் சாதி களாக உருவாயின. உதாரணமாகத் தானைத் தலைவர் என்ப தனைக் காட்டும் அபராய முதலி, அல்லது சேனை முதலி என்பது பின்னர்ச் சாதிப் பெயராக நிலைபெறலாயிற்று. முதலியார் என்பது பின்னர்ப் பல துணைச் சாதியாகப் பிரிய வழி வகுத்தது எனத் திரு எம். சீனிவாச அய்யங்கார் கூறுகின்றார்.[2]

**ஐம்பெருங்குழு, எண்பேராயம்**

சங்க கால ஆட்சி அமைப்பில் ஐம்பெருங்குழு, எண்பேராயம் ஆகியவைபற்றிப் பெரிதும் விவாதிக்கப்பட்டது. சங்க கால இலக்கியமான மதுரைக்காஞ்சியிலும் சங்கம் மருவிய கால இலக்கியமான சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய இலக் கியங்களிலும் இவை குறிப்பிடப்பட்டுள்ளன. ஐம்பெருங்குழு, எண்பேராயம் குறித்துத் திருக்குறளில் ஏதும் குறிப்பிடப்பட வில்லை. அதுமட்டுமன்றி, எட்டுத்தொகை நூல்களிலும் தொல்காப் பியமும்கூட இது குறித்து ஏதும் கூறவில்லை என்பது குறிப் பிடத்தக்கதாகும். மதுரைக்காஞ்சியில் நாற்பெருங்குழு அதாவது நான்கு பெரிய குழுக்களைப்பற்றிய குறிப்பே காணப்படுகிறது. ஆனல், உரைகாரர் நச்சினர்க்கினியர் 499ஆவது வரியில் 'அமைச் சர்பற்றி ஏற்கெனவே குறிப்பிடப்பட்டமையால் மற்ற நால்வர் பற்றியே ஈண்டுக் குறிப்பிடப்பட்டது' என்று கூறுகிறார்.

வி. கனகசபைப்பிள்ளை என்பார் சங்க கால அரசு முறை வல் லாட்சியினின்றும் மாறுபட்டது எனவும், அரசனுடைய அதிகாரம் ஐந்து பெரும் அவையான ஐம்பெருங்குழுவினலே கட்டுப்படுத்தப் பட்டது எனவும் குறிப்பிடுகின்றார். 'மக்கள், பிரதிநிதிகள், ஆசான்,

[1] புறநானூறு, 394.

[2] Tamil Studies, M. Sreenivasa Aiyangar, p. 66.

மருத்துவர், நிமித்திகர், அமைச்சர்கள் ஆகியோர் அவற்றில் இருந்தனர். மக்கள் பிரதிநிதிகள் குழு மக்களின் உரிமைகள், தனி உரிமைகள் ஆகியவற்றைக் காத்தது...இவ்வவைகளுக்குத் தனி யிடங்கள், கூட்டங்கள் கூட்டவும், அவைகள் நடத்திடவும் ஒதுக்கப்பட்டன' எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.[1]

டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார் ஐம்பெருங்குழுவினை மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அமைப்பு என்று கூறுகின்றார்.[2] அவர் 'சிறப்புத் தன்மை வாய்ந்த சந்தர்ப்பங்களில் இங்கிலையான அமைப்பினுடைய ஆலோசனைகளைக் கேட்டிட அரசன் கடமைப் பட்டவன்' என்று குறிப்பிடுகின்றார். தம்முடைய கருத்தினை விளக்குகின்றபோது 'அரசன் மிக இன்றியமையாத அலுவலர் களைத் தேர்ந்தெடுத்து இருக்கக் கூடும் அல்லது மரபு வழி முறை ஏதும் இருந்திருக்கவேண்டும். அரசனல் ஆலோசனை வேண்டப் பட்டபோதே அவர்கள் தம் அறிவுரைகளை வழங்கினர்' என்றும் குறிப்பிடுகின்றார். வி. கனகசபையின் கருத்தினை ஏற்றுக்கொண்ட வின்சென்ட் ஸ்மித்து 'மக்கள், புரோகிதர்கள், நிமித்திகர்கள், மருத்துவர்கள், அமைச்சர்கள் ஆகியோரைக் கொண்ட ஐம்பெரும் அவைகள் தமிழ் மன்னர்களின் வல்லாட்சிக்குத் தடையாக விளங்கின'[3] என்று குறிப்பிடுகின்றார்.

ஐம்பெருங்குழு, எண்பேராயம் என்பதில் இருந்தவர்கள் யார் என்பது குறித்து இலக்கியங்களில் எவ்வித விளக்கமும் காணப்படவில்லை. ஆனல், பிற்காலத்தைச் சேர்ந்தவர்களாக நச்சினர்க்கினியர், அடியார்க்கு நல்லார் போன்றவர்கள் கொடுத்துள்ள விளக்கத்தின் அடிப்படையில் ஐம்பெருங்குழு, எண்பேராயம் ஆகியவற்றில் இருந்தவர்களாகச் சிலர் காட்டப்படுகின்றனர். ஐம்பெருங்குழு, எண்பேராயம் குறித்து திருக்குறளோ, எட்டுத்தொகை நூல்களோ, தொல்காப்பியமோ ஏதும் குறிப்பிடவில்லை என்ற போதிலும்கூட இப்பெரும் நிறுவனங்களில் குறிப்பிடப்படுகின்ற அமைச்சு, படை ஆகியவை குறித்துத் திருக்குறளில் விளக்கமாக உரைக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம். அக் குழுவினர் அரசனுக்குக் கட்டுப்பட்டு நடந்தவர்கள் தாம் என்று கருதப்படுகிறது. பிற்கால நூல்களில் காண்கின்ற அக் குழுக்கள்பற்றிய குறிப்புகள் உண்மையானவை என்பதை ஆராய்ந்தறிதல் வேண்டும்.

1 'Tamils 1800 years Ago', V. Kanakasabai Pillai, p. 109.

2 Hindu Administrative Institutions of South India, S. Krishnaswamy Aiyangar, p. I9.

3 Early History of India, Vincent Smith, p. 442.

**அமைச்சர்கள்**

சங்க கால அரசர்கள் ஏராளமான அமைச்சர்களைக் கொண்டு இருந்தனர். அமைச்சர் என்ற சொல் அமாத்தியார் என்ற வடசொல்லின் அடிப்படையாகத் தோன்றியது என்று சிலர் வலிந்து, அத் தமிழ்ச் சொல்லுக்கு வடமொழிச் சொல்லைத் தேடித் தருவாராயினர். எனினும் மந்திரி என்பது வடமொழிச் சொல்லே யாகும். அமைச்சர்களைத் திருக்குறளில் திருவள்ளுவர் உழை இருந்தார்[1] என அழைக்கின்றார். உழை இருந்தார் என்ற சொல்லுக்கு அறிவுரை கூறுதற்காக எப்போதும் அருகில் இருந்தவர் என்பது பொருளாகும். கடியலூர் உருத்திரங்கண்ணனார் பெரும்பாணாற்றுப்படையில் அமைச்சர்களைச் 'சுற்றம்'[2] என்று அழைக்கின்றார். அரசனுக்கு வழி காட்டவும், அரசன் முறை கெட்டவனாக விளங்கினால், அவனை நேர் வழியிலே செல்லுமாறு அவனைத் திருத்தவும் வேண்டுவது அமைச்சனின் கடமையாகும்.[3] அமைச்சு என்பது குறித்துக் குறளில் தனி இயலும், அதைத் தொடர்ந்து 9 இயல்களும் உள்ளன. அமைச்சர்களுடைய செயல் என்று கருதிடப்பட்ட தூது என்பது பற்றி 69 ஆம் இயல் விளக்குகின்றது. எனவே, அமைச்சர்கள் தூது செல்லுகின்ற பணியினை மேற்கொண்டனர் எனலாம். குறளில் 64 ஆவது இயல் அமைச்சர்களின் பொதுவான தகுதிகளை எடுத்து விளக்குகிறது. கருவியும், காலமும், செய்கையும், செய்யும் வினையும், வாய்ப்ப எண்ணும் திறனும், குடிகளைக் காத்தல், நீதி நூல்களைக் கற்றுத் தீவினைகளை அகற்றுதல், முயற்சி செய்தலின்கண் அசைவின்மை ஆகிய அங்கங்களும் உடையவனே அமைச்சனாவான். பகைவர்க்குத் துணையாக இருந்தவர்களைப் பிரிக்க வேண்டியிருந்தால் பிரித்தலும், அவர்களை இனிய சொற்களால் தம்பால் பேணிக் கொள்வதும், தம்மை விட்டுப் பிரிந்தாரை மீண்டும் சேர்த்துக்கொள்ள வேண்டி இருந்தால் சேர்த்துக்கொள்வதும் அமைச்சரின் பணியாகும். அரசனிடத்துத் தீய செயல் புலப்படுமிடத்து அதனைத் துணிவுடன் அமைச்சன் கூறிட வேண்டும். ஆன்றமைந்த சொற்களைக் கூறுவதோடு பயிற்சித் திறனும் பெற்றிருத்தல் வேண்டும். அரசனுக்கு நல்லனவற்றைக் கூறுதல் அமைச்சனுக்கு உரிமையாகும். பக்கத்திலிருந்து பிழை எண்ணும் அமைச்சன் ஒருவனைக் காட்டிலும், எதிர்த்து நிற்கும் எழுபது கோடி பகைவர்களே மேலானவர் ஆவர் என வள்ளுவர், உட்பகையின் கொடுமையைக் கூறுகின்

1 திருக்குறள், 638.

2 பெரும்பாணாற்றுப்படை, 447.

3 பழமொழி, 323.

ளூர்[1]. வினைத்தூய்மை, வினைத்திட்பம், வினைசெயல்வகை, எண்ணியவற்றை உருவாக்கிடல், அரசன் கடினமான முடிவுகளை நிறைவேற்ற வழிவகை காணும் தன்மை, வீரத்துடன் செயல்படுதல் ஆகியவையே அமைச்சருக்குரிய அருங்குணங்கள் என வள்ளுவர் எடுத்துக்காட்டுகின்றூர்.

தீத்திறம் அறியாதவர்கள் என அமைச்சர்கள் புகழப்பட்டனர்.[2] சிறந்த அறிவோடு, திறமிக்க நல்லுரைகளை வழங்குதலே அமைச்சர்களின் இயல்பாயிற்று. அவர்கள் அறிவு உடையோராயும், நன்மை தீமைகளைப் பகுத்து உணரும் அறிவு நிரம்பியவராயும் விளங்கினர். அவர்களுக்குக் காவிதி என்னும் விருது வழங்கப்பட்டது. சங்க காலத்தில், அமைச்சர்கள் இன்ன சாதியில்தான் தேர்ந்து எடுக்கப்பட வேண்டும் என்ற விதி முறை இல்லாது எச்சாதியிலிருந்தும் தேர்ந்து எடுக்கப்பட்டனர் எனலாம். அமைச்சரான யாவர்க்கும் காவிதி விருது வழங்கப்பட்டது எனலாம். கொடிய அமைச்சர்கள் கண்டிக்கப்பட்டனர். அரசர்களிடத்து அமைச்சர்கள் செல்வாக்குப் பெற்றிருந்தனர்.

**தூதர்கள்**

சங்க கால அரசர்கள் தூதுவர்களைக் கொண்டிருந்தனர். ஓர் அரசனின் பிரதிநிதியாக மற்றவர் அவையில் செயல்பட்டவர்களே தூதர்கள் ஆவர். தொல்காப்பியம் அரசர்கள் கல்வி கற்றற் பொருட்டு, போர் செய்தற் பொருட்டு, தூது செல்தற் பொருட்டுத் தலைநகர் நீங்கிச் சென்றனர் என்று குறிப்பிடுகின்றது. தூதுவர்கள் நடுநிலையாளர்களாக விளங்கினர். தூது குறித்துத் திருக்குறளில் ஓர் அதிகாரமே உள்ளது. அவ்வதிகாரத்தில் தூதர்களின் தகுதிகள் யாவை என விளக்கப்பட்டுள்ளன. திருக்குறள் உரையாசிரியரான பரிமேலழகர் இருவகைத் தூதர்களைப் பற்றி உரைக்கின்றூர். முதல் வகையினர் அமைச்சர்களின் நிலையினைப் பெற்றிருந்தனர். இவர்கள் தாம் சரியெனக் கருதுபவைகளை தம் நாட்டின் பொருட்டு அயலார் அவையில் சொல்லுவதற்கு அனுமதி பெற்றிருந்தவர்கள் ஆவர். இரண்டாவது வகையினர் அயலார் அவையில் சென்று யாது கூறுமாறு பணிக்கப் பெற்றனரோ அவற்றை மட்டுமே கூறுவதற்கு அனுமதி பெற்றிருந்தனர். எதிர்பாராத சந்தர்ப்பங்களில் கூட அவர்கள் தம் விருப்பப்படி செயல்பட முடியாதெனப் பரிமேலழகர் குறிப்பிடுகின்றூர். தவிர, திருக்குறளில் அத்தகைய பிரிவு இருந்தது என்பதற்கான

[1] திருக்குறள், 639.

[2] கலித்தொகை, 68. மதுரைக்காஞ்சி, 19-20.

சான்று ஏதுமில்லை. சங்க காலத் தமிழர்கள் தூதுவர்களிடையே ஏதேனும் பிரிவுகளை வைத்திருந்தனரா என்பது தெரியவில்லை. 'தம் கடமையை யுணர்ந்து பொருத்தமான காலத்தை எண்ணி எதிரிகளை உணர்ந்து செய்திகளை உரைப்பவர்கள் தூதர்களிலே முதன்மையானவர்' என்று குறிப்பிடுகின்றார், திருவள்ளுவர். சங்க காலத்தில் தூதுவர்கள் இருந்தனர்; ஆனால், தூதுவர்களின் வகையைப்பற்றி அறிதற்குப் போதிய ஆதாரங்கள் இல்லை. சங்க காலத்தில் நடைபெற்ற தூது பற்றி நன்கு அறியப்பட்ட நிகழ்ச்சி அதியமான் நெடுமான் அஞ்சியின் அவைப் புலவரான ஔவைப்பிராட்டி தொண்டைமானிடம் தூது சென்றதேயாகும்.

புறநானூற்று 95ஆவது பாடலின் பின்னுரையில், 'அவன் தூதுவிடத் தொண்டைமான் உழைச் சென்ற ஔவைக்கு அவன் படைக்கலக் கொட்டில் காட்ட அவர் பாடியது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. படைத் தூதுவராகத் தொண்டைமானிடம் ஔவையை நெடுமான் அஞ்சி அனுப்பினான். தொண்டைமான் தன் படைக்கலக் கொட்டிலுக்கு ஔவையை அழைத்துச் சென்று தன் படைப் பெருமையைக் காட்டினான். ஔவையார் அழகிய ஒளி வீசுகின்ற படைக் கலங்களைக் கண்டபோது வசைப் பாங்குடைய சொற்களால் 'என் புரவலன் அஞ்சியினுடைய படைக் கலங்களின்றி படைக்கலக் கொட்டில் காணப்படுகின்றது. அவை உடைபட்டு உள்ளமையால் செப்பனிடுதற்பொருட்டுக் கொல்லனிடத்து அளிக்கப்பட்டுள்ளன. ஆனால், உன் படைக் கலங்கள் எவ்விதச் சேதமுமின்றி மின்னுகின்றன என்று பாடியுள்ளார்.

இதன் வாயிலாக நெடுமான் அஞ்சி படைக்கலங்களைப் பயன் படுத்திய சிறந்த போர் வீரன் என்றும், தொண்டைமான் போரினையே செய்யாத கோழை என்றும் கூறுகின்றார். அக் காலத்தில் தூதருடைய துடுக்குத்தனம் பொறுத்துக் கொள்ளப் பட்டது என்றும் தோன்றுகிறது. ஔவையாரைப் பொறுத்த மட்டில் அவர் அஞ்சியின் அமைச்சர் அல்லர். அஞ்சியினுடைய நண்பர் என்பதோடு சிறந்த அறிவுத் திறம் வாய்ந்த புலவர் என்பது குறிப்பிடற்பாலது ஆகும்

ஔவையாரைப் போலவே தூதுசென்ற மற்றொரு புலவர் கோவூர் கிழார் ஆவார்.[1] கோவூர் கிழார் அறிவும் ஆற்றலும் நிரம்பியவர். போரையும் பகையையும் வெறுத்து அமைதியும்

[1] புறம், 44 — 47.

நல்லெண்ணமும் பரவிடச் செய்ய முயன்றவர். அவர் அரசனுடைய கோபத்தைத் தணித்து அமைதியை நிலைநாட்டினர் என்பதற்குப் புறநானூற்றில் ஏராளமான நிகழ்ச்சிகள் குறிப்பிடப் பட்டுள்ளன அவர் ஓர் அரசனிடத்து மற்ருெரு அரசனல் அனுப்பப்படாமல் தாமே விரும்பி, தம் எண்ணப்படியே தூது சென்றமையால் அவர் தூதுவராகமாட்டார் என்பர். ஆனல் தூதுவரிடத்துக் காணப்பட வேண்டிய மேற்பட்ட தகுதிகள் அவரிடத்தே காணப்பட்டன எனலாம்.

**இரகசியப் பணி**

பழங்காலத் தமிழ் மன்னர்களால் ஏராள்மான உளவாளிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். உளவாளிகள் எனப்பட்டோர் 'ஒற்றர்' எனவும், வேவு பார்த்தல் வேய் அல்லது ஒற்று எனவும் அழைக் கப்பட்டது.[1] இது மிக விரிந்த வகையில் அமைக்கப்பட்ட விளக்கிடத் தக்க முறையாகும். சங்க கால ஆட்சி அமைப்பில் வேவு பார்த்தல் நிலையான நிறுவனமாக விளங்கிற்று. அமைதிக் காலத்தில் நிறுத்தப்படாமலும், போர்க் காலத்தில் தீவிரமாகவும் இருந்தது.

சங்கேத குறிப்புகளாக ஏற்றுக்கொண்ட மாறுபட்ட ஒலிகளை எழுப்பி ஒற்றர்கள் தம் செய்தியினை அறிவித்தனர். எதிரிப்படை யிலிருந்து செய்திகளைக் கொணர்ந்தபோது அவர்களுக்குத் தாராளமாக வழங்கப்பட்டது என நச்சினர்க்கினியர் என்னும் உரைகாரர் குறிப்பிடுகின்ருர்.[2]

நச்சினர்க்கினியர் மதுரைக் காஞ்சியின் விளக்க உரையில் தூதர்களைப் போல ஒற்றர்களும் ஐந்து சிறந்த ஆலோசகர் களில் ஒருவர் ஆவர் எனக் கூறுகிருர்.[3]

சங்க காலத் தூதுவர்களின் நிலை, செயல்கள் ஆகியவை குறித்து விளக்கமான குறிப்பினைக் குறள் அளிக்கின்றது.[4] உள் நாட்டுப் பணிகளுக்கும் அயல்நாட்டுப் பணிகளுக்கும் ஒற்றர்கள் தேவைப்பட்டனர். அவர்கள் உள்ளூர் ஆள்களையும் அயலாரையும் வேவு பார்க்க வேண்டியிருந்தது. அவர்கள் யார் அரசனுக்கு

[1] தொல் பொருள். 58. 'ஒற்றிருகிய வேயே' 'வேய்' என்பது, உளவாளி களின் தகவலையும் ஒற்று என்பது உளவுத் தொழிலையும் குறிக்கும். இதுவே இவ்விரண்டுக்குமிடையே உள்ள வேறுபாடு ஆகும்.

[2] தொல். பொருள். 58. நச்சி. விளக்க உரை.

[3] மதுரை: 510 நச்சி. விளக்க உரை.

[4] குறள்: அதிகாரம் 59.

நண்பன், யார் எதிரி என்பதைத் தீர்மானம் செய்ய வேண்டியிருந்தது. இது மிகக் கடினமான பணியாக மட்டுமன்றி ஆபத்தானதாகவும் விளங்கிற்று.

'ஒற்று தன் கண் செல்லமாட்டாத பரப்பெலாம் சென்றுகண்டு, ஆண்டு நிகழ்ந்தன எல்லாம் உணர்த்தலால் ஒற்றர்கள் அரசரின் கண்கள் எனப்பட்டனர்' என்று குறள் கூறுகிறது. அரசன் தன்னுடைய அவையிலும், மாற்றார் அவையிலும் நிகழ்வனவற்றை அறிய வேண்டி இருந்தமையால் ஒற்றர்கள் அவசியமான பணியாளர்கள் ஆவர். அமைச்சர்கள், மற்ற அலுவலர்கள், அரசகுடும்பத்தவர்கள், எதிரிகள் ஆகியோரை ஒற்றர்கள் வேவு பார்த்தனர். ஒற்றப்பட்டார் கண்டால் ஐயுறாத வடிவோடு பொருந்தி, அவர் ஐயுற்று அறியலுறின் செயிர்த்து நோக்கிய அவர் கண்ணிற்கு அஞ்சாது நின்று தம் மனத்துள் கொண்ட எந்தச் செய்தியையும் வெளியிடாமல் ஒற்றன் விளங்கினான். முற்றும் துறந்தாராயும் விரத ஒழுக்கினராயும் உள் புகுவதற்கு அரிய இடங்களெல்லாம் உள் புகுந்து ஆராயவேண்டுவன ஆராய்ந்து அறிந்துகொள்ள வேண்டி இருந்தது. பிறரறியாமல் மறைந்திருந்து உரைக்கப்பட்ட சொற்களைப் புரிந்துகொள்ளும் ஆற்றல் வேண்டி இருந்தது. ஓர் ஒற்றன் கூறியவை அப்படியே உண்மை என எடுத்துக்கொள்ளப் படவில்லை. மற்றும் ஓர் ஒற்றனால் அதனைச் சரியாவென அறிதலே விரும்பத்தகுந்தது. மூன்று ஒற்றர்களும் தனித் தனியாக ஒருவர் மற்றவரால் அறியப்படாது ஒற்றினைச் செய்தனர். மறைந்தவை அறிந்து கூறிய ஒற்றர்களுக்குப் பலர் முன்னிலையில் அவர்களை அறியச் செய்து பரிசு வழங்குதல் கூடாது.[1] உறையூரைச் சேர்ந்த நெடுங்கிள்ளி என்பான் இளந்தத்தன் என்ற புலவனைத் தவறாக ஒற்றன் எனக் கருதிக் கொலை செய்ய முயன்றபோது கிள்ளியிடம் உண்மையினை எடுத்துக் கூறிக் கோவூர்கிழார் புலவனை எவ்வாறு காத்தார் என்பதனைப் புறநானூறு வாயிலாக அறிகிறோம்.[2] இச் சம்பவம் ஒற்றன் பிடிபட்டால் கொலை செய்யப்படக்கூடும் என்பதனைக் காட்டுகின்றது.

அயல்நாட்டில் என்ன நடந்தது என்பதனை அறிய மட்டுமன்றி உள்நாட்டிலும் என்ன நடந்தது என்பதனை அறிய ஒற்றர்கள் பயன்படுத்தப்பட்டனர். வேவு பார்ப்பதன் முக்கிய நோக்கமே எதிரிகள் என்ன நோக்கம் கொண்டிருக்கிறார்கள்? என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள்? என்பதை அறிந்து அரசர் தம் நிலையைப் பலப்படுத்திக் கொள்வதற்கேயாகும்.

[1] குறள், 581–590

[2] புறம், 47.

குறளில் தனித்தனி அதிகாரங்களில் இருவரின் செயல்களும், இயல்புகளும் துல்லியமாக விளக்கப்பட்டுள்ளன. அலுவல் முறையில் தூதர்கள் ஒற்றரைவிட உயர்வானவராகக் கருதப்பட்டனர் என்பது ஓரளவிற்குச் சரியானதாகத் தோற்றமளிக்கின்றது. தூதர்கள் அமைச்சர்களுக்குச் சமமான நிலையில் அவையில் உறுப்புகளில் ஒன்ருகக் கருதப்பட்டபோது ஒற்றர்கள் அரசனல் தன் தனிக்காவலர்களாகவும், செய்தித்துறை உறுப்புகளில் ஒன்றெனவுமே கருதப்பட்டனர். குறளில் 'ஒற்று' என்பது அரசியல் அதிகாரத்திலும், 'தூது' அங்கவியல் அதிகாரத்திலும் கூறப்பட்டிருப்பதாக நாம் காண்பது மேற்கூறப்பட்டிருக்கிற உண்மைக்கு ஆதாரமாக அமைகிறது.

அரசியலில் அல்லது மற்றச் செய்திகளில் பொதுமக்களின் எண்ணம் அறியப்பட்டது என்று கொண்டாலும், இக்காலத்தைப் போன்றே அக்காலத்திலும் ஒற்றர்கள் பாதுகாப்பிற்கும் மற்ற வழிகளில் கிடைத்திடாச் செய்திகளைச் சேகரிப்பதற்கும் பயன் பட்டனர்.

### புரோகிதர்

அரசர்களின் அவையில் பார்ப்பனர்கள் மிகச் சிறப்பான பங்கு வகித்தனர் என்பது தமிழ் இலக்கியங்களினின்றும் அறியப்படுகிறது. அரசர்கள் பார்ப்பனர்களுக்கு மரியாதை தெரிவித்தனர். சோழ அரசன் மாவளத்தான் என்பவன் பார்ப்பனப் புலவர் ஒருவரை அறியாமல் வருந்தச் செய்துவிட்டான். ஆனல், தவற்றை உணர்ந்து உடனடியாக வருத்தம் தெரிவித்தான். புலவர் அவ்விளவரசனின் குணநலச் சிறப்பைப் பாராட்டிப் புகழ்ந்துள்ளார்.[1] பார்ப்பனர்களின் அறிவுரையை அரசர்கள் கேட்டு நடக்கவேண்டும் எனப் பொதுவாக அறிவுறுத்தப்பட்டது.[2]

### நாழிகைக் கணக்கர்

ஒரு நாளில் மணிகளை எண்ணிக் குறித்தவர்கள் நாழிகைக் கணக்கர் எனப்பட்ட சிறு அலுவலர் ஆவர். நாளின் மணியைக் குறித்திட நாழிகை வட்டில் என்பதனைப் பயன்படுத்தினர். நாளின் மணியை அரசனுக்குப் பாடல் வடிவில் இவ்வலுவலர் அறிவித்தனர். நாழிகைக் கணக்கினைத் தொடர்ந்திட அவர்கள் இரவும் பகலும் முறை வைத்துப் பணி புரிந்தனர்.

[1] புறநானூறு, 43.
[2] பதிற்றுப்பத்து, 24:8.

**தனி உதவியாளர்கள், கோமாளிகள், மன்னர் பரிவாரத்தினர்**

நிலையாகக் கண்ணுளர் எனப்பட்ட நடனக்காரர்கள், குயிலுவர், ஊது கொம்பு ஊதுவோர், நகைவேளம்பர் எனப்பட்ட கேலிக் கூத்தர் ஆகியோர் அவையில் அமர்த்தப்பட்டிருந்தனர். அரசன் எப்போதும் நகைப் புலவர்[1] எனப்பட்ட நகைச்சுவை யாளர்களையும்; கோமாளிகளையும் கொண்டிருந்தான். சூதர், மாகதர், வேதாளிகர் என்பார் அரசனின் பரிவாரத்தினர் ஆவர். சூதர் என்பார் அகவர் என்பாரே என எண்ணப்படுகின்றனர்.[2]

அரண்மனையில் இருந்த பணிப் பெண்டிர் கூளியர் எனப்பட்டனர். அரசன் இட்ட ஏவல்களை நிறைவேற்றினர்.[3] முன்னவர் அரசனை மகிழ்வித்தற் பொருட்டும், பின்னவர் அரண்மனைச் செய்திகளை வெளியே அறிவிக்க இயலாதவர் என்பதாலும் நியமிக்கப்பட்டனர். அரண்மனையில் உலா வந்தபோது அழகிய பணிமகளிர் தம் கையில் விளக்கை ஏந்தி நின்று வாழ்த்துரைத்தனர். விருந்தின்போது ஒண்டொடி மகளிர் பொற்கலத்தின் கண் ஏந்திய தூய தேறலை அல்லது மதுவை அளித்தனர்.[4]

## கிராம, நகர அரசுகள்

இந்தியாவில் பொதுவாக, கிராமமே அடிப்படை ஆட்சிப் பிரிவாய் விளங்கிற்று. ஒவ்வொரு கிராமமும், தன்னுடைய விவகாரங்களைக் கவனித்துக் கொள்ளும் நிலை பெற்றிருந்தது. 'சேர்' என்ற சொல்லினடியாகப் பிறந்ததே சேரியாகும். பார்ப்பனர் சேர்ந்து வாழ்ந்த இடம் பார்ப்பனச் சேரி எனப்பட்டது.

கிராம நிர்வாகப் பணிகள் குறித்துக் காணுகின்றபோது மன்றம், பொதியில், அம்பலம் ஆகிய சொற்களை இலக்கியங்களில் காண்கிறோம். மன்றம், பொதியில், அம்பலம் ஆகியவை ஒரே பொருளைக் கொண்ட சொற்களைப் போலத் தோற்றமளிக்கின்றன.

மதுரைக் காஞ்சியில்,

'அவையிருந்த பெரும்பொதியில்'

என்று குறிப்பிடுவதைக் கொண்டு கிராம அவை எனப்படும் நிர்வாக சபை, வேண்டும்போது கூடிற்று என அறிகிறோம்.

1 புறநானூறு, 387.
2 மதுரைக்காஞ்சி, 224.
3 மலைபடு. 422, நச்சி. விளக்க உரை.
4 புறம். 24.

ஆனால், திருமுருகாற்றுப்படையில் மன்றம், அம்பலம் ஆகியவை வெவ்வேறானவை போலத் தனித்தனியே குறிப்பிடப்பட்டுள்ளன.[1]

திருமுருகாற்றுப்படை உரைகாரர் 'மன்றம்' என்பது கிராமத்தின் நடுவில் எல்லா மக்களும் வந்தமர்ந்த மரத்தின் அடி என்று கூறுவதோடு, பொதியில் என்பது அம்பலத்திற்குச் சமமெனக் கொண்டு, அம்பலம் என்பது சிறிது உயர்த்தப்பட்ட மேடை எனவும் கூறுகிறார். ஔவையாரின் பாடலிலிருந்து[2] 'முன்னூர்ப் பொதியில்' என்பது பற்றிக் கேள்வியுறுகிறோம். பொதியில் என்பது என்ன? அதில் தங்கியிருந்தவர்கள் யார்? என்பது குறித்து நச்சினார்க்கினியர் விளக்கமளிக்கின்றார். அவர் பொதியில் என்பது ஊருக்கு வெளியே, அதாவது ஊரினுள் நுழையும் வழியில் இருந்தது என்று குறிப்பிடுகின்றார். பொதியிலில் இருந்த மரத்தில் யானைக் கன்றுகள் கட்டப்பட்ட செய்தியினைப் புறநானூறு பேசுகின்றது.[3] நாலடியாரில் 'வேதிகை' எனப்படும் ஒன்றினைப்பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. 'வேதிகை' எனப்படுவது மரங்களால் சூழப்பட்டு நடுவிலிருந்தது என உரையாசிரியரின் விளக்கத்தினைப் பெறுகிறோம்.[4]

பொதியில் சாணமிட்டு மெழுகப்பட்டது. பொதியிலைத் தூய்மையாக வைத்துக்கொள்ளும் பொறுப்புப் பெண்டிரிடம் விடப்பட்டது.[5] பொது+இல், என்பதிலிருந்தே பொதியில் தோன்றியதென்பர். எனவே, பொதியில் என்பது கிராமத்தில் ஒருபால் இருந்த பகுதியெனலாம்.

மன்றம், பொதியில் ஆகியவை கிராமங்களில் ஏற்பட்ட சிறுசிறு வழக்குகளைத் தீர்த்திடும் பணியினைச் செய்தன. இங்கு வழங்கப்பட்ட தீர்ப்பிற்கு எதிராக மேல்முறையீடு செய்வதற்கு ஏதேனும் அமைப்புகள் இருந்தனவா என்பது தெரியவில்லை. கிராமத்தில் முதியோராய் விளங்கியவர்கள் இந்த மன்றம், பொதியில் ஆகியவைகளில் அதிகாரம் செலுத்தினர் எனலாம்.

இன்றைய நாளில் உள்ளதுபோல் மாநிலங்கள், மாவட்டங்கள் முதலான பிரிவுகள் அரசியல் அடிப்படையில் ஒரு வரையறை

[1] திருமுருகாற்றுப்படை, 262.

[2] புறநானூறு, 39 .

[3] புறநானூறு, 390.

[4] நாலடியார், 96. நச்சினார்க்கினியர் உரை

[5] பட்டினப்பாலை, 246-249.

ட்டன், அந் நாளில் இருந்தனவா என்பது அறியப்படாவிடினும், அத்தகைய பிரிவுகள் இருந்திருக்க வேண்டும் என்றே உணரப் படுகிறது.

**நகரங்கள்**

சங்க இலக்கியங்களில் ஏராளமான நகரங்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன. எனினும் புகார், கொற்கை, மதுரை, முசிறி, வஞ்சி, காஞ்சி ஆகியவை குறிப்பிடத் தகுந்தவை ஆகும்.

நெடுவழிப் பாதைகளோ பெருவழிப் பாதைகளோ நாட்டில் அதிகமாக இல்லையென்றே தோன்றுகிறது. பெருநகரங்கள், சில முக்கியச் சாலைகளால் இணைக்கப்பட்டிருந்தன எனவும், அவற்றில் எயினர் போன்றோரின் தொல்லைகள் இருந்தன[1] எனவும் அறி கிறோம். அரசனின் தேர் வெற்றியுடன் போர்க்களத்திலிருந்து திரும்பி வருகையில் பல வயல்களைக் கடந்து வருவதாகக் குறுந்தொகையில் குறிப்பிடப்படுவதிலிருந்து நாட்டில் சாலைகள் புல இல்லையென அறிகிறோம். வணிகர்களும், பல இடையூறு களைக் கடந்தே வாணிகம் மேற்கொண்டனர். அவர்கள் கொள்ளைக் காரர்களின் தொல்லைகளை எதிர்நோக்க வேண்டி இருந்ததோடு, தமது விற்பனைப் பொருள்களுக்குச் சுங்கமும் செலுத்த வேண்டி யிருந்தது.

நகராட்சி முறை குறித்து விளக்கமாக ஏதும் அறியப்படா விடினும், அரசின் இருப்பிடமாக விளங்கிய பெரிய நகரங்கள் சிறப்பாகக் கவனித்துக் கொள்ளப்பட்டன என்பது பெறப் படுகின்றது. மதுரைத் திருநகரத் தெருக்களை அனுதினமும் துடைப்பம் கொண்டு தூய்மைப்படுத்திய பணியாளர்களைப் பற்றி இலக்கியங்கள் வாயிலாக அறிகிறோம்.[2] நகரங்கள் இரவு களில், அதற்கென அமர்த்தப்பட்டிருந்த காவலர்களான 'ஊர்க் காவலர்' என்போரால் முறையாகக் காவல் காக்கப்பட்டன. காவல் நாய்கள், அவர்களுக்குத் துணைபுரிந்தன. காவலர்கள் தூக்கம் தவிர்த்துக் கையில் விளக்கோடு நகரைச் சுற்றிவந்தனர்.[3] அவர்கள் திருடர்கள், கொள்ளையர்களைத் தண்டிப்பதற்காகக் கையில் வில், அம்புடன் சென்றனர்.[4] அரசனின் அரண்மனையே தலைநகரிலிருந்த மிக முக்கியமான கட்டடமாகும். அதைச்

1. குறுந்தொகை, 12 16.
2. கலித்தொகை, 96: 22, 23.
3. புறநானூறு, 37.
4. மதுரைக்காஞ்சி, 637-647

சுற்றிலும் சுவரிருந்தது. சோழ அரசனின் அரண்மனை வெளிச் சுவர் வெள்ளையடிக்கப்பட்டு, முழுநிலவைப் போல ஒளி வீசிய தென்று குறிப்பிடப்படுகின்றது. அரண்மனை உச்சியில் அவ்வவ் வரசர்களின் கொடி பறந்தது எனலாம்.

**படை**

சங்க காலத்திலும், 'வலிவுள்ளவன் வாழ்வான்' என்ற கொள்கையே காணப்பட்டது. சங்க காலத் தமிழர்கள், ஆற்றல் மிக்கோராயும், விரைந்து செயல்படும் இயல்புடையோராயும் விளங்கினர். போர் செய்வதில் விருப்புடையோராகத் திகழ்ந் தனர். சங்க கால இலக்கிய ஆதாரங்களை மிகக் கவனமாக ஆராய்கின்ற எவரும் மக்களின் முக்கியமான தொழிலாகப் போர்த்தொழில் விளங்கியதை உணர்வர்.

பல்வேறு காரணங்களால் பண்டைத் தமிழகத்தில் இடை விடாது போர்கள் நிகழ்ந்தன. வமிசப் பகைகள், வெற்றி பெற்றுப் பிற நாடுகளை இணைத்திட வேண்டும் என்ற தணியாத ஆர்வம், பொறாமை உணர்வு, போரின் விளைவால் தமது மரபின் பெருமை உயர்த்தப்படும் என்ற எண்ணம், போர்க்களத்து உயிர் துறப்போர் புண்ணிய உலகு செல்வர் என்ற நம்பிக்கை, அரசுரிமைச் சின்னங்களுக்கு ஏற்பட்ட அவமதிப்பு ஆகியவையே அடிக்கடி போர் நிகழக் காரணமாக இருந்தனவெனக் கூறலாம்.

சங்க காலத் தமிழர்கள் போர் நடவடிக்கைகளில் ஒருவகை யான ஒழுங்கியலைக் கொண்டிருந்தனர். புறமுதுகிட்டு ஓடுகின்ற எதிரியைச் சிறந்த வீரர்கள் பின்தொடர்ந்து சென்று தாக்குதல் என்பது எஞ்ஞான்றும் இருந்ததில்லை. ஆடை கழன்ற நிலையில் நின்றோரையும், மேய்ச்சல் நிலத்தில் வீழ்ந்தோரையும், நீரில் பாய்ந்தோரையும், படைக்கலங்களின்றி நிர்க்கதியாய் நின் றோரையும் தாக்குதல் இல்லை என்று சிறுபஞ்சமூலம் என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. வீரமில்லாதவர், புறமுதுகிட்டு ஓடியவர், காயம்பட்டோர், வயது முதிர்ந்தோர், இளையோர் ஆகியவர் களுக்கு எதிராகப் போர் மேற்கொள்ளப்படுதல் இல்லை. முற்றுகைப் போரில் முற்றுகையிடப்பட்டவன் உடனே வெளிப் போந்து எதிரிப்படையுடன் போரிடுதலே சிறப்பாகக் கருதப் படினும், சில சமயங்களில் கோட்டைக்குள்ளேயிருப்பதும் அனு மதிக்கப்பட்டது. அவ்வாறு முற்றுகையின்போது கோட்டைக் குள்ளிருப்பது கோழைத்தனமாகக் கருதப்படவில்லை. கோட்டைக்கு உள்ளே இருப்பதன் மூலம் தனக்கும் தன் மக்களுக்கும் எவ்வித மான ஊறும் நேராமல் எதிரியைத் தோல்வியடையச் செய்ய

முடியுமாயின் அதனைப் போர்த்திறத்தில் ஒருபகுதிஎனக்கருதினர். ஆனால், அப்படியில்லாது உள்ளே இருந்துகொண்டு வெளியில் இருந்து உதவிக்கு வரும் படைக்காகக் காத்திருப்பானேயாகில் அது கோழைத்தனமாகவே கருதப்பட்டது. உதவி செய்வார் யாருமின்றி, எதிர்த்துப் போரிடுவதற்கு வீரமுமின்றிக் கோட்டையின் உள்ளிருந்தால் அது முதல் தரமான கோழைத்தனமாகவும், ஒழுங்கீனமாகவும் அக்காலத்தே கருதப்பட்டது.

சங்க கால அரசர்கள் போருக்குத் தேவையான படையினையும் படைக்கலங்களையும் பராமரித்து வந்தனர். காலாட்படை குதிரைப்படை, யானைப்படை, தேர்ப்படை ஆகியவை நாற்பெரும் படை என அழைக்கப்பட்டது.[1]

திருக்குறளில் ஊறுபடுவதற்கு அஞ்சாது நின்று பகையை வெல்வதாய படையே அரசனுடைய செல்வங்கள் எல்லாவற்றிலும் தலையாய செல்வம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.[2] சிறிய படையாய் இருப்பினும், அது அஞ்சாது நின்று தாங்கும் வன்கண்மையுடையதாக இருத்தல் வேண்டும். அத்தகைய வீரம் அரசனின் மரபு படைக்கே உரியதாகும். தனிப்பட்ட போர் வீரரின் ஆற்றலைப் பொறுத்தே படையின் ஆற்றல் அமைந்தது. கோழைகள் அடங்கிய படை முழுதும் வீரன் ஒருவன் முன் ஆற்றல் அற்றதாகிவிடும். எலிப்படையே கூட நாகத்தின்முன் எளிதில் பலியாகிவிடும். கூற்றுவன் தானே வெகுண்டு மேல் வந்தாலும், கூடி எதிர்நிற்கும் ஆற்றலுடையதே படையாகும். தறுகண்மையும், மானமும், வீரர் சென்ற நன்னெறிக்கண் சேறலும், அரசனால் தேறப்படுதலும் ஆகிய இந் நான்கு குணமுமே படைக்கு அரண் ஆகும். போர்க்களத்தே தலைவன் இறந்தாலோ, ஓடிவிட்டாலோ தலைவனில்லாத படை செயலற்றுவிடும். படைபற்றி இவ்வாறு பல்வேறு கருத்துகளை வள்ளுவர் குறிப்பிடுவதைக் காணலாம்.[3]

படைத் தலைவனைத் தானைத் தலைவன் என அழைத்தனர். போர்க்களத்தில் அரசன் வீழ்ந்தால் அரசனின் கொடியின்கீழ்ப் படையினைச் சேர்த்துத் தன் தலைமையில் தானைத் தலைவன் படையினை நடத்திச் சென்று போர் செய்தான்.[4] பரதவர் எனப்

[1] புறம், 4.

[2] குறள், 761.

[3] குறள் — அதிகாரம் 77.

[4] புறநானூறு, 314.

படுவோர் வலிமை மிக்க படை வீரர் எனவும்,[1] அவர்கள் பல்வேறு படைகளில் பெரிதும் விரும்பிச் சேர்த்துக் கொள்ளப்பட்டன ரெனவும் அறிகிறோம்.

குதிரையேற்றம், குறிபார்த்துத் தாக்குதல் உள்ளிட்ட பயிற்சிகள் படைவீரர்களுக்கு அளிக்கப்பட்டன. கோசர், துளுப் படையினர் போன்றோர் ஒளி வீசுகின்ற படைக் கருவிகளைக் குறி பார்த்து எறிந்து பழகினர் என்று கூறப்படுகிறது.[2]

**படைவீரர் ஊதியம்**

படைவீரர்க்கு எவ்வளவு ஊதியம் வழங்கப்பட்டது என்பது குறித்துத் தனியான குறிப்புகள் ஏதுமில்லை. அரசர்கள் அவ்வப் போது பரிசுகளை வழங்கிப் படை வீரர்களை மகிழ்வித்தனர். படைச் செலவுக்கெனப் போதிய ஒதுக்கீடு செய்யப்படாவிடின், படையின் எண்ணிக்கை குறையும் எனப் பரிமேலழகர் குறிப்பிடு கின்றார். போர் தொடங்குவதற்கு முன்னர், அரசன் படைவீரர் களுக்கு வெகுமதிகள் அளித்ததோடு சிறப்பான விருந்தொன்றும் அளித்தான். போர் முடிந்த பின்னர், படைவீரர்களுக்கு, கவர்ந்துவரப்பட்ட கால்நடைகள் அளிக்கப்பட்டன.

போர் வீரர்கள் தம் காலில் அவர்தம் வீரச் சிறப்புகள் எழுதுவிக்கப்பட்ட வீரக் கழல்களை அணிந்திருந்தனர். படை வீரர் 'படம்', 'குப்பாயம்', 'மெய்ம்மறை' எனப்பட்ட மேலாடைகளை அணிந்திருந்தனர். கால்களில் மிதியடியும் அணிந்திருந்தனர்.

அரசர்கள் யானைமேல் பயணம் செய்து படையினை நடத்திச் சென்றனர். போருக்குச் செல்வதற்கு முன் அரசர்களும், படை வீரர்களும் சூளுரை மேற்கொண்டனர். அதனை 'வஞ்சினம்' அல்லது ஒன்றுமொழிதல் எனக் கூறினர்.

**படைப் பிரிவு**

படையின் முன்னணிப் பிரிவு, 'தூசி' எனவும் 'தார்' எனவும், பின்னால் அணி வகுத்து வந்த பாதுகாவற்படை 'கூழை' எனவும் அழைக்கப்பட்டன. யானைப்படை, படையின் மிக இன்றியமை யாத பிரிவு எனலாம். அரசனைத் தவிர, முதன்மையான படை மறவரும் யானையின்மீது சென்றனர். வலிமை மிக்க வாயில்களை

[1] மதுரைக்காஞ்சி,139-144.

[2] புறநானூறு, 169.

யானைப்படை கொண்டு தாக்கினர். சிறப்பு மிக்கவர்கள் யானை மீதே வந்தனராகையால் அவர்களைப் பாதுகாவலர் பாது காத்திட வேண்டியிருந்தது. யானைப்படை மொத்தப் படையின் அணிகலன்போல் விளங்கிற்று.

யானைக்கு, அடுத்த சிறப்புப் பெற்ற குதிரைப் படைகளைக் குறித்த குறிப்புகள் ஏராளமாக உள்ளன. யானைகளைவிடக் குதிரைகள் எண்ணிக்கையில் அதிகமிருந்தன. படையிலிருந்த குதிரைகள் கவர்ச்சியாகத் தோற்றமளித்திட அவற்றின் பிடரிமயிர் கத்தரித்து விடப்பட்டது.

தேர்ப் படையும் குறிப்பிடத் தகுந்தது எனலாம். தேரினைக் குதிரைகள் இழுத்துச் சென்றன. தேர்கள் எதிரிப் படையினுள் விரைவாக உட்புகுந்து ஓடிச் சேதம் விளைத்தன. சோழ அரசன் ஒருவன் போருக்கான தேர்களை ஏராளமாக வைத்திருந் தமையாலே 'உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னி' என்றழைக் கப்பட்டான் போலும்.

பண்டைத் தமிழர்கள் சிறந்த கடற்படையொன்றினைக் கொண் டிருந்திருக்க வேண்டுமென்று கருத இடமுள்ளது. வாணிகத் திற்குக் கடல்வழிச் செல்லும் கலங்களைப் பயன்படுத்திய அவர்கள் போருக்கும் அவற்றைப் பயன்படுத்தியிருக்கக் கூடும். சேர, சோழ, பாண்டியர் மூவர்க்குமுரிய முசிறி, புகார், கொற்கை ஆகிய துறைமுகங்கள் இருந்தமை, இத் துறைமுகங்கள் போர்க் கப்பல்கள் தங்கும் வசதி படைத்தவைகளாக விளங்கியிருக்கக் கூடும் என்பதனை மெய்ப்பிக்கின்றன. அக்காலத் தமிழ் மன்னர் களில் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் முதலானோர், கடற் போர்களில்வெற்றிபெற்றனர் என்பதற்கான ஆதாரங்கள்உள்ளன.

**போர்க் கருவிகள்**

தமிழர்களின் போர் முறை நல்ல வளர்ச்சி பெற்ற நிலை யிலிருந்தது எனவும், பல்வகைப்பட்ட கருவிகளைப் பயன்படுத் தினர் எனவும் அறிகிறோம். படைக் கருவிகள் கொல்லர்களால் செய்யப்பட்டன. கொல்லர்கள் எப்போதும் போருக்குத் தேவை யான புதிய கருவிகளைச் செய்வதிலும், சேதமடைந்தவற்றைச் செப்பனிடுவதிலும் முனைந்திருந்தனர். படைக் கருவிகள் வைக்கப் பட்ட இடம், படைக்கலக் கொட்டில் என்றழைக்கப்பட்டது. படைக் கருவிகள் நெய்யிடப்பட்டு, மாலை சூட்டி, மயிற்பீலி அணி விக்கப்பட்டுத் தக்க காவலுடன் வைக்கப்பட்டிருந்தன.

படைக் கருவிகளைப் 'படைக்கலம்' என்று அழைத்தனர். வேல், வாள், வில், அம்பு, கோல் ஆகியவை குறிப்பிடத்தகுந்த சங்க காலப் படைக்கலங்களாகும். தொல்காப்பியர், திருவள்ளுவர் ஆகியோர் வேலினைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். வேற்பஃறடக்கைப் பெருநற்கிள்ளி வேலினைப் பயன்படுத்துவதில் தனித்தன்மை பெற்றவன்; கருங்கை ஒள்வாள் பெரும்பேர் வழுதி சிறந்த வாள் வீரன்; வல்வில் ஓரி சிறந்த வில்லாளி என அறிகிறோம்.

எஃகில் செய்யப்பட்டமையால் வேலும், வாளும் எஃகம் எனப் பட்டன போலும். வாள் தகுந்த உறைகளில் இடப்பட்டிருந்தது. 'இளம் போர் மறவர்க்கு வேல் வடித்துத் தருதல்' கொல்லர்களின் கடமையெனப் புறநானூறு கூறுகின்றது.[1] வெற்றி பெற்ற படை வீரர், தம் வெற்றியின் அடையாளமாக வேலினை உயரே தூக்கிப் பிடித்தனரென்று இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளது.[2]

அம்பு, வேல் முதலியவைகளைக் கொண்டு மேற்கொள்ளப் படும் தாக்குதலைச் சமாளிக்கத் தோலினாலும், இரும்பினாலும் செய்யப்பட்ட பல தற்காப்புக் கருவிகள் பயன்படுத்தப்பட்டன. அவற்றைக் கேடயம் என்றனர். இக் கேடயங்களில் கண்ணாடிகள் பொருத்தப்பட்டிருந்ததாகக் குறிப்பிடப்படுகின்றது. கேடயங் களின் முனைகளில் சிறிய மணிகள் இணைக்கப்பட்டிருந்தன. இத் தற்காப்புக் கருவிகளில் சேர்த்து எண்ணிடத்தக்கது, மெய்ம்மறை அல்லது மெய்புகு கருவி எனப்பட்ட கவசம் ஆகும். தோலாலான பல்வகைக் கவசங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. படைவீரர்கள் முழங்கையிலிருந்து, விரல் நுனிவரை மூடிக் காத்த உறைகளை அணிந்தனர். அவை கைக் கவசம் எனப்பட்டன.[3] அம்புகள் வைக்கப்பட்டிருந்த கூடு அம்பறாத் தூணி என அழைக்கப்பட்டது. இதற்குப் பொருள் அம்புகளை வரையாது வழங்கக்கூடிய கொள் கலம் என்பதாகும்.

**போர் நிகழ்ந்த விதம்**

தொல்காப்பியத்தில் ஒரு தனி இயலே சிறந்த போர் முறை பற்றிக் கூற ஒதுக்கப்பட்டுள்ளது. அது புறத்திணை இயல் எனப் பெயர் பெற்றது. அதில் போருக்கான காரணங்கள், நடை முறை விளைவுகள் ஆகியவைப்பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

1 புறநானூறு, 312.
2 புறநானூறு, 58.
3 பதிற்றுப்பத்து, 19.

தொல்காப்பியம் விளக்குகின்ற ஒரு குறிப்பிடத்தக்க போர் முறை பின்வருமாறு: போரில் ஐந்து நிலைகள் இருந்தன எனலாம். அவையே வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை என்பன வாகும்.

**வெட்சி:** பகை நாட்டிலுள்ள கால்நடைகளைக் கவர்தலே போரின் தொடக்கமாக அமைந்தது. அங்ஙனம் கால்நடைகளைக் கவருவோர் வெட்சி மாலையினை அணிந்துகொண்டனர் என்பதனைத் தொல்காப்பியம் வாயிலாக அறிகிறோம். கால்நடைகளைக் கவரச் சென்று அருகில் உள்ள இடத்தில் தங்கித் தாம் மேற்கொண்டுள்ள முயற்சியில் வெற்றி கிட்டுமா என்ற நற்குறியினை (சகுனம்) எதிர் நோக்கி, நற்சொல் கேட்டுத் தம் வினையினைத் தொடங்கினர்.

**வஞ்சி:** நாடு பிடிக்கும் ஆசையால் ஓர் அரசன் மற்றொருவனுடைய நாட்டின்மீது படையெடுத்துத் தாக்குவதையும் அவ்வரசன் அப் படையெடுப்பினை எதிர்த்தலையும் வஞ்சி என அழைத்தனர். படையெடுப்புச் செய்தவனும் தன்னைத் தற்காத்துக் கொண்டவனும் வஞ்சி மலரைச் சூடிக் கொண்டனர்.

**உழிஞை:** போர்க்களத்தில் எதிரிப் படையைத் தாக்குவதற்குப் பதிலாக இயற்கையான அல்லது செயற்கையான கோட்டையை முற்றுகையிட நேர்ந்தால் அம் முற்றுகைப்போர் உழிஞை எனப்பட்டது. முற்றுகையிடுவோனும் முற்றுகையிடப் பட்டோனும் உழிஞை மலரைச் சூடிக் கொண்டனர்.

**தும்பை:** வலிமையே பொருளாகக் கருதிப் போருக்கு வந்த அரசனை எதிர்த்து நின்ற அரசன் தும்பை மலரைச் சூடிக் கொண்டான்.

**வாகை:** போரில் வெற்றி பெற்றோர் அவ் வெற்றியின் சின்னமாக வாகை மலரினைச் சூடிக் கொண்டனர்.

வெட்சியில் வீரக்கல் அமைப்பு விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. வஞ்சியில் படைஎடுப்புத் தந்திரங்களால் எதிரியின் நாட்டிற்கு எரியூட்டுதல், எரிபரந்தெடுத்தல் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. உழிஞையில் முற்றுகையிட்ட அரசனின் வெற்றிச் சிறப்புக் கூறப்பட்டுள்ளது. தும்பையில் நெருக்கமான போரினால் ஏற்படும் குழப்பமான பல சூழ்நிலைகள் விளக்கப்பட்டுள்ளன. வாகையில் அரசர்கள், பார்ப்பனர், பிற இனத்தவர் ஆகியோரின் சிறப்புத் தன்மைகள் காட்டப்பட்டுள்ளன. காஞ்சித் திணையில் உலக நிலையாமை வற்புறுத்திக் கூறப்பட்டுள்ளது. அரசனின்

சிறந்த புண்புகள் அல்லது வெற்றி பெற்ற சிறந்த அரசனின் சிறப்பு களைப் புகழ்ந்துரைக்கும் இயல்பான உயர்நிலை கடைசியாக அமைந்த பாடாண் ஆகும். பாடாண் தவிர ஏனைய திணைகள் எல்லாம் மலரால் ஆன சிறப்புப் பொருள்களைக் கொண்டுள்ளன. வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி ஆகியவை யெல்லாம் மலர்களின் பெயர்களாகும்.

அரசன் போர் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானித்த போது படைக்கான போர் வீரர்களைத் திரட்டி வருமாறு தூது வர்களை அனுப்பி வைத்தான். மறக்குலத்தைச் சேர்ந்த வீரர்கள் அதற்கு உட்பட்டு ஏராளமாகத் திரண்டனர். போர்க்களத்தை நோக்கிப் படைகள் செல்லுவதற்கு அடையாளமாகப் படை புறப் படுவதற்கு முன்னர் நன்னாளில் வாளினைப் புனித நீராட்டி, குடை, முரசு ஆகியவற்றுடன் அணிவகுப்பு ஊர்வலத்தினை நடத்தினர். இந் நாளினை நாட்கோள் என அழைத்தனர்.

படை வீரர்கள் வெள்ளையுடை அணிந்து போர்க்களம் சென் றனர் என்பதனைப் புறநானூறு வாயிலாக அறிகின்றோம். எதிரியைக் குறிப்பிட்ட எல்லையில் நடைபெறும் போரில் தோல்வி அடையச் செய்வதன் மூலமாகவே போர் முடிவிற்குக் கொண்டு வரப்பட்டது. குறித்த எல்லைகளில் நடைபெறும் போர் சமவெளி யான இடத்தில் நடைபெற்றது. படை வீரர்கள் ஆயுதங்களுடனோ ஆயுதங்கள் இன்றியோ போரிட்டனர். தோல்வி தவிர்க்க முடியாதபோது தம்முடைய கொடியைத் தாழ்த்தித் தோல்வியை ஒப்புக்கொண்டனர் என்பதனைப் புறநானூறு வாயிலாக அறி கிறோம்.[1] அரசனும் படையினரும் தனியாக உருவாக்கப் பட்ட பாடி வீடு அல்லது பாசறை என அழைக்கப்பட்ட இடங் களில் தங்கியிருந்தனர். அரசனுக்குப் அப்பாசறையில் எல்லாவித மான வசதிகளும் செய்யப்பட்டு இருந்தன. பாசறையானது தாற்காலிகமாக உருவாக்கப்பட்டமையால் அதனைக் கட்டப்பட்ட நகர் என்ற பொருளில் கட்டூர் என அழைத்தனர்.

அரசனுடையபாசறையின் உச்சியில் அரசனின் கொடிபறந்தது. அரசனுடைய தேவைகளுக்காகத் தனியாக ஓரிடத்தில் இக் கட் டூரில் பெரிய கூடாரம் ஒன்று கட்டப்பட்டது. நாளின் முடிவைக் காட்ட மணி ஒலித்த நேரத்திலும்கூட அரசனுடைய மெய்க்காவ லர்கள் சட்டையையும் தலைப்பாகையையும் அணிந்து அந்த இடத் தைக் காவல் காத்து நின்றனர். அரசனுடைய காவலர்கள் இனிய

மதுவைச் சுவைத்து மயக்கத்தில் இருந்தனர் என்றாலும்கூட அவர்கள் எஞ்ஞான்றும் கடமையிலிருந்து தவறியதில்லை. அரசன் பாடி வீட்டில் படுத்து உறங்கியபோதிலும் பகலவன் உதிக்கின்றவரை உறக்கமின்றி மறுநாள் விடிவதை எண்ணி விழித்து இருந்தனர். போர் முடிந்தவுடன் படை வீரர்கள் இரவில் ஓய்வு எடுத்தனரே தவிர இரவில் போர்களில் ஈடுபட்டதாகத் தெரியவில்லை. இரவுக் காலங்களில் இரக்க மனம் படைத்த அரசர்கள் படை வீரர்களைச் சென்று கண்டு ஆறுதல் கூறினர். நடு இரவாக இருந்த போதிலும் அரசன் கருணை தவழப் புன்னகை நிலவிய முகத்துடன் படை வீரர்களைச் சென்று கண்டு உசாவினான். அரசனின் அன்பு மொழிகள் புண்பட்டோருக்கு மருந்தாய் அமைந்தன.

கோட்டைச் சுவர்கள் மிக உயரமாகவும் அதைச் சுற்றியுள்ள அகழிகள் ஆழமாகவும் இருந்தன. கோட்டைச் சுவர்களைச் சுட்ட செங்கற்களால் கட்டி, செம்மண் சாந்து பூசினர். ஆகையால், சூரிய ஒளி அவற்றின்மீது பட்டபோது செப்புத் தகடுகள்போல் அச் சுவர்கள் மின்னின. கோட்டைக்கு இரண்டு மதில்கள் இருந்தன. அவற்றின் உள்ளிருந்த மதிலானது உள்மதில் எனப் பட்டது. கோட்டைக் கதவுகள் எதிர்த் திசையிலிருந்து மூடும் வகையில் அமைக்கப்பட்டு இருந்தன. கோட்டைக் கதவுகள் யானைப் படையினைக் கொண்டு திறக்கச் செய்யும் அளவிற்கு வலிமை வாய்ந்தனவாய் இருந்தன. ஏராளமான படைக் கருவிகள் கோட்டைகளில் இருந்தன.

அரசனுக்கு வெற்றியைத் தேடித்தந்த வீரர்கள் பொருத்தமாகப் பரிசு அளிக்கப்பட்டனர். அரசன் ஏராளமான அன்பளிப்புகளைப் படைவீரர்களுக்கு வழங்கினான். கந்தாரம் எனப்பட்ட இனிய மது அவர்களுக்கு ஒதுக்கி வைக்கப்பட்டதுடன் அல்லாமல் எதிரியின் நாட்டிலிருந்து கொள்ளை அடிக்கப்பட்ட பொருள்களும் அவர்களுக்குப் பகிர்ந்து அளிக்கப்பட்டன. வெற்றி பெற்ற அரசன் எந்த அளவிற்கு ஏற்றம் பெற்றானோ, அந்த அளவிற்குச் சமமாகத் தோற்ற அரசன் வறுமை நிலையினை அடைந்தான். அரசனால் வெற்றி பெற்ற படை வீரருக்கு எப்போதும் ஒளி மங்கிடாத பொன் மலர்கள் வழங்கப்பட்டன. இறையிலி நிலங்களும் வழங்கப்பட்டன.[1]

வெற்றி பெற்ற அரசன் தோல்வியடைந்த அரசனுக்குப் பல்வேறு வகைகளிலும் தொல்லை தந்துள்ளான் என உணர்

1. புறநானூறு, 297.

கிறோம். புறநானூற்று 15 ஆம் பாடலில் புலவர் ஒருவர் அரசன் அழித்த நாடுகளின் எண்ணிக்கை அதிகமா அல்லது அவன் கட்டி வைத்த வேள்விக்கூடங்கள் அதிகமா என வினவுகிறார். அவ்வளவு கூடங்கள் கட்டி வைத்தமையாலேயே அந்த அரசன் புகழப் பட்டான் எனத் தெரிகிறது.

தோல்வி பெற்ற அரசர்களை இழிவாக நடத்துகின்ற பழக்கம் சங்க காலத்தில் காணப்பட்டது. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் தோல்வி அடைந்த யவனரின் கைகளைப் பின்னால் கட்டி அவர்கள் தலையில் நெய்யினை ஊற்றிக் கூடவே நடத்தி வந்தான் என்று பதிற்றுப்பத்துக் குறிப்பிடுகின்றது.[1] மூவன் என்ற தலைவனைத் தோற்கடித்த பொறையன் என்ற அரசன் மூவனுடைய பற்களைப் பிடுங்கித் தொண்டியிலிருந்த தன்னுடைய கோட்டை வாயிலில் பதித்து வைத்தான். அரசர்களில் சிறைபிடிக்கப்பட்ட யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்பான் நெடுஞ்செழியனாலும், கணைக்காலிரும்பொறை சோழன் செங்கணானாலும் கைப்பற்றப்பட்டனர். தோல்வி பெற்ற அரசரைப் பல்வேறு வகையான அவமதிப்புகளுக்கு ஆளாக்கினர். தோல்வி பெற்ற அரசனின் பொன்முடி வெற்றி பெற்ற வேந்தனின் கழலாயிற்று.[2] வெற்றி பெற்றவன் நாட்டில் தோல்வியடைந்த அரசனின் குடையின் பிடி நடனம் ஆடுவோரின் தலைக்கோலாயிற்று; வெற்றி பெற்றவனுக்குப் புதிய முரசு செய்திடத் தோல்வி அடைந்த அரசனின் காவல் மரம் பயன்பட்டது.

சங்க காலத்தில் மேற்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க சில போர்களைக் குறித்த குறிப்புகள் உள்ளன. இப்போர்கள் பெரும் சிறப்பு வாய்ந்தவை. பழைமையான போர்களில் ஒன்று, சேரன் குடக்கோ நெடுஞ்சேரலாதனுக்கும் சோழ அரசன் வேற்பஃறடக்கை பெருவிறற்கிள்ளிக்கும் நடைபெற்றதாகக் குறிப்பிடப் பட்ட போரேயாகும். சோழ வேந்தன் வெண்ணி அல்லது வெண்ணில் என்னும் இடத்தில் பெரும் போரினை நிகழ்த்தியதாகக் குறிப்பிடுகிறது. அகநானூற்றில் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் போர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இதுபோலவே சங்க காலப் போர்கள் குறித்த செய்திகள் ஏராளமாக உள்ளன.

புறநானூற்றில் சில முற்றுகைகள் குறித்த குறிப்புகள் காணப்படுகின்றன. உறையூரைச் சோழன் நெடுங்கிள்ளி

1 பதிற்றுப்பத்து 2ஆம்பத்து -பதிகம்,

2 புறநானூறு, 40

முற்றுகையிட்டதையும் கோவூர்கிழார் இப் போரினை முடிவுக்குக் கொண்டுவரத் தீவிரமாக இருந்ததையும்அறிகிறோம். சேர, சோழ, பாண்டியப் படைகள் பாரியின் பறம்பு நாட்டின்மீது மேற் கொண்ட முற்றுகை சிறந்த வீரத்திற்கும், நயவஞ்சகத்திற்கும், எதையும் எதிர்பாராது நின்ற நன்றி உணர்விற்கும் எடுத்துக் காட்டு எனலாம்.

**சட்டமும் நீதியும்**

சங்க கால அரசர்கள் நீதியின் இருப்பிடமாகத் திகழ்ந்தனர். அவர்கள் நீதி வழங்குவதற்கு, யார் துணைபுரிவதற்குத் தகுந்தவர் களோ அவர்களுடைய துணையைப் பெற்று நீதி வழங்கினர். நகரங்களிலும் கிராமப் பகுதிகளிலும் நீதி மன்றங்கள் இருந்தன. தலைநகரங்களில் இருந்த நீதி மன்றத்தில் அரசர் தலைமை வகித்து நீதி வழங்கினர். மற்றைய இடங்களில் இருந்த நீதி மன்றங் களில் அரசனின் பிரதிநிதிகள் தலைமை வகித்து, குறைகேட்டு முறை செய்தனர். இந்த நீதி மன்றங்களில் வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் ஒருவருக்குத் தண்டனை வழங்குவதோ அவரை விடுவித்தலோ செய்யப்பட்டது.

இன்றைய நாளில் வெகுவாகப் பேசப்படுகின்ற அனைத் துலகச் சட்டம் (International Law) எனப்படும் கருத்து ஏதும் அவர்களுக்குத் தெரியாது எனக் கூறிவிடலாம். பன்னாட்டு அரசியல் உலகில் வாணிபமும் போரும் மட்டுமே சேர்க்கப் பட்டன. தவிர இராசதந்திர அடிப்படையிலான அயல்நாட்டு உளவுத் தத்துவம் ஏதும் அறியப்படவில்லை. சங்க காலக் காப்பி யங்கள் பாடல்கள் வாயிலாகத் தமிழகத்தில் அக்காலத்து நடை பெற்ற போர்களைக் குறித்து அறிகிறோம். ஆனால், ஒப்பந்தங்கள், உடன்பாடுகள் ஏதும் மேற்கொண்டனரா என்பதனை நம்மால் அறிய இயலவில்லை; போரில் தோற்ற அரசனிடத்திலிருந்து மிக அதிகமான தொகையினைப் போர்ப் பணயப் பொருளாகப் பெறுதல், தோற்ற எதிரிகளை இழிவுபடுத்தும் தண்டனைகள் வழங் குதல், திறை வசூலித்தல், நாடுகளைக் கைப்பற்றுதல் அல்லது திருப்பி அளித்தல் ஆகிய பழக்கங்கள் இருந்தன எனக் கேள்விப் படுகிறோம்.

அரசன் முரசினை அறைவித்துத் தன்னுடைய அறிவிப்புகளை வெளிப்படுத்தினான். இந்த அறிவிப்புகள் அரசனின் ஆசை களையும் நோக்கங்களையும் வெளிப்படுத்தின. அரசனுடைய ஆணைக்கு மக்களிடத்தே செல்வாக்கு இருந்தது. எனவே, அரச னுடைய ஆணைக்குக் கட்டுப்படாவிட்டால் வினைவுகள் கடுமையாக

இருந்தன. இந்தக் கடுமையான விளைவுகள் சட்டம், ஒழுங்கு நிலைநிறுத்தப்படத் துணைபுரிந்தன.

தலைநகரங்களிலிருந்த அரசனின் அவையும், கிராமங்களில் இருந்த மன்றங்களும் எளிய முறையில் நீதி வழங்கிய பொது இடங்களாகத் திகழ்ந்தன. தலைநகரங்களில் அரசனின் அரண் மனை முற்றமே நீதி மன்றமாக விளங்கிற்று. அரண்மனையின் நுழைவாயிலே மன்றத்தின் நுழைவாயிலாகவும் விளங்கிற்று. அரசன் தானே முன்னின்று முறைமை செய்தானேயன்றி யாரையும் நீதிபதிகளாக நியமித்ததாகக் கூறிட ஆதாரங்கள் ஏதுமில்லை. நகர வழக்கு மன்றங்களில் உயர் பண்பு, கல்வித் தகுதி, நேர்மை ஆகிய நல்லியல்புகள் வாய்க்கப்பெற்றவர்கள் அரசனுக்கு நீதி வழங்கிடத் துணை நின்றனர். அறிவுடைய ஆலோச கர்களின் கருத்துகளைக் கேட்டு முறை செய்தல், அரசனின் கடமையாயிற்று. நீதித்துறைப் பணிகளுக்காக அரசனின் அவை கூடிய இடத்தினை அவைக்களம் என்றனர். அரசனின் அவையில் காவிதி என்ற பட்டம் பெற்ற அமைச்சர்கள் இருந்ததற்கான குறிப்புகள் மதுரைக்காஞ்சியில் காணப்படுகின்றன. சோழர் களின் தலைநகரங்களில் ஒன்றான உறையூர் அல்லது உறந்தை நீதிநெறி வழுவாமைக்குப் பெயர்பெற்றது எனலாம். நீதிநெறியில் தேர்ச்சி பெற்றிருந்தவர்கள் அரசன் முன் கொண்டுவரப்பட்டு வழக்குகளை விவாதித்தனர் என்ற போதிலும் அரசனே வழக்கு களைக் கேட்டு நடுவுநிலை தவறாது ஏழை என்றும் செல்வர் என்றும் பாராது நீதி வழங்கினான். அவையைக் கலக்காமலே அரசன் தன் தீர்ப்புகளை வழங்கினான் என்று காட்டக்கூடிய சில வழக்குகளும் சங்க காலத்தில் இருந்திருக்கலாம் என்பதற்குத் திருக்குறள் ஆதாரமாகும் (குறள் 543). அரசன் இல்லாமல் போனால் அவை யோரே இருந்து தீர்ப்புவழங்கினர் என்று கூறத்தக்க சம்பவங்கள் ஏதும் சங்க இலக்கியங்கள் பொறுத்தவரையில் அறியப்படவில்லை.

வழக்கு, குறை எனவும், வழங்கப்பட்ட நீதி, முறை எனவும் அழைக்கப்பட்டன. அரசனின் நீதியைப் பொறுத்தே முனிவரின் தவம், மனைவியின் கற்பு, பருவ மழை ஆகியவை அமையும் என்று புலவர்கள் கூறினர்.

வயது, அனுபவம் ஆகியவை முறை வழங்கிட இன்றியமை யாத தகுதிகளாகக் கருதப்பட்டன. கரிகாலன் என்னும் சோழ அரசன் மிக இளவயதிலேயே அரியணை எய்தி நீதி வழங்கிடத் தலைப்பட்டான். ஆனால், வழக்கினைக் கொண்டு வந்தவர்களோ

இவன் இளையவனாக இருந்த காரணத்தால் 'உரைமுடிவு காணான்' என்று எண்ணினர். அவர்கள் வயதிற்கு மதிப்பளிக்கும் இயல்பினர் என்று உணர்ந்த கரிகாலன் உள்ளே சென்று நரைமுடித்துச் சொல்லால் உரை செய்தான் எனப் பழமொழி கூறுகிறது.

கரிகாலன் நரைமுடித்து உரை செய்தானோ இல்லையோ, ஒன்று மட்டும் நிச்சயமாகத் தெரிகிறது. அரசன் தானே வழக்குகளை விசாரித்தான் என்பதற்கு இந்நிகழ்ச்சி சான்றாக அமைகின்றது.

அரசர்கள் மனச்சான்றின் அடிப்படையிலேயே தீர்ப்புகளை வழங்கினர். தாம் தவறு செய்தபோது தமக்குத்தாமே தண்டனை விதித்துக் கொண்டனர் என்பதற்குப் பொற்கைப்பாண்டியன் எடுத்துக்காட்டாவான். நன்னன் என்பான் அரண்மனைத் தோட்டத்தில் வீணான மாங்கனி ஒன்றினைத் தின்ற பெண் ஒருத்திக்குக் கடும் தண்டனை விதித்தான். அப்பெண்ணின் பெற்றோர் தண்டனையாக 81 யானைகளையும், அப்பெண்ணினை ஒத்த எடையுள்ள தங்கச் சிலையும் அளிப்பதாகக் கூறியும் அப்பெண்ணைக் கொலை செய்வித்தான். ஆனால், அரசனின் மாறுபாடான நடத்தையானது பண்பாடுள்ள, உணர்ச்சியுள்ள மனிதர்களால் பெரிதும் கண்டித்துரைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தகுந்தது. பல தலைமுறைகளுக்குப் பின்னர் இளங்கண்டிரக்கோ, இளவிச்சிக்கோ என்ற இரு அரசர்களைத் தமிழ்ப் புலவர் பெருந்தலைச்சாத்தனார் சந்தித்தபோது முன்னவனை ஆரத்தழுவிய அவர் பின்னவனைத் தொடக்கூட இல்லை. பின்னவன் புலவரை அவருடைய வேற்றுமைப்படுத்தும் நடவடிக்கைக்கான காரணத்தினை வினவியபோது இளவிச்சிக்கோ, கொடுங்கோலனான நன்னனின் வழிவந்தவன் என்பதால் தள்ளியே வைத்திருந்ததாகப் புலவர் கூறினர். முறைமையற்றவற்றை எதிர்த்திடும் உணர்வு மிக வலிவானதாக இருந்தது. பிற்காலத் தலைமுறையினர் அக் கொடுங்கோலனை 'நன்னன் எனப்படும் பெண் கொலையாளி' என்றே அழைத்தனர்.

அரசனுடைய அவையில் வழக்கு விசாரணை வெளிப்படையாகவே நடைபெற்றது எனலாம். மேலும், காலம் கடந்துவிட்ட போதிலும் ஒருவர் குற்றவாளி என்பது கண்டறியப்பட்டால் அவருக்குத் தண்டனை வழங்கப்பட்டது. மனுநீதிச் சோழன் வரலாற்றில் பசு வழக்கைத் தொடுத்தது. அரசன் காலங்கடந்த பின்னரே குற்றவாளியைக் கண்டுபிடித்துத் தண்டனை வழங்கினான். எனவே, தண்டனை வழங்குவதற்குக் கால அளவு ஏதுமில்லை.

சாட்சியங்களைப் பற்றியும் சங்க இலக்கியத்தில் நாம் கேள்விப் படுகிறோம். பொய்யானவற்றைச் சொல்வது பாவம்; பொய்ச் சாட்சிச் சொல்வது அதைவிடப் பெரும் பாவம் என்று கருதப் பட்டது. பொய்ச் சாட்சி சொல்பவர்களின் நாவினைத் துண்டித்துத் தண்டனை வழங்கப்பட்டது.

திருக்குறளில் செங்கோன்மை அல்லது முறையான அரசு என்னும் தலைப்பில் அரச நீதிபற்றி இயல்பாகக் கூறப்பட்டுள்ளது. பாரபட்சமற்ற தன்மைக்கும் நீதியின் மற்ற நல் இயல்பான முறை என்பதற்கும் எடுத்துக்காட்டாக அரசனின் செங்கோல் விளங்கியது. திருக்குறளில் 'தன்கீழ் வாழ்வார் குற்றம் செய்தால் அக் குற்றத்தை நாடி, யாவர் மாட்டும் கண்ணோடாது நடுவுநிலைமையைப் பொருத்தி அக்குற்றத்திற்குச் சொல்லிய தண்டத்தை நூலோடு ஆராய்ந்து செய்தலே முறையாகும்;' 'முறை வேண்டினார்க்கு எளிய செவ்வி உடையனாய் அவர் சொல்லி யவற்றை நூலோர் பலரோடும் ஆராய்ந்து நின்ற உண்மைக்கு ஒப்ப முறை செய்யாத அரசன் தாழ்ந்த பதத்திலே நின்று தானே கெடும்' என்றும் கூறப்பட்டது.

சங்க காலத்தில் சோதனை முறை மூலமாகவும் வழக்குகள் விசாரிக்கப்பட்டன என அறிகிறோம். உரிமையியல் வழக்குகள் விசாரணைக்குக் கூடச் சோதனை முறை பயன்படுத்தப்பட்டது என அறிகிறோம். பாம்பு உள்ளே உள்ள பானையினுள் கையைவிடச் சொல்வது ஒரு யாதிரியான சோதனை முறை விசாரணையாகும். பானையினுள் உள்ள பாம்பு அவனைக் கடித்தால் அவன் குற்றவாளி எனவும், கடிக்கவில்லையெனில் குற்றமற்றவன் எனவும் கருதி விடுவிக்கப்பட்டான். உரிமையியல் வழக்குகளில் கடன் கொடுத்தவன் இத்தகைய சோதனைக்கு ஆளாக வேண்டியிருந்தது. கடன் கொடுத்தவர்கள் பலர் தங்கள் பணத்தை வழக்கு மன்றத்திற்குச் செல்லவில்லையெனில் இழந்தார்கள், சென்றால் பாம்பின் நஞ்சினாலே தங்கள் உயிரை இழந்தார்கள். எனவே, பழமொழி ஆசிரியர் முன்றுறை அரையனார் என்பவர் மிகவும் புத்திசாலித்தனமாகக் கடன் கொடுக்கக் கூடாது என்று அறிவுறுத்துகிறார்.

அரசனே முதன்மையான நீதிபதியாக விளங்கிய போதிலும் சிற்சில சமயங்களில் குடிமக்களின் காவலனாகவும், துப்பறிபவனாகவும் செயல்பட்டான் என அறிகிறோம் அரசர்கள் இரவு வேளைகளில் மாறுவேடம் பூண்டு குடிமக்களைக் காத்தனர். பொற்கைப் பாண்டியன் அவ்வாறு நடந்துகொண்டதற்கான செய்தி இதற்கு ஆதாரமாகும்

பிறன்மனை நயத்தல் கடுங் குற்றமாகக் கருதப்பட்டது. அதற்குப்பெரும் தண்டனை விதிக்கப்பட்டதுஎன்பதற்கு நாலடியார் சான்றாகும். பிறன்மனை நயந்தவன் அப் பெண்ணின் உறவினர் கையில் சிக்கினால் அவனுடைய காலைத் துண்டித்தனர் என்பதனையும் நாலடியார் வாயிலாக அறிகிறோம் (அடிக்குறிப்பு: நாலடியார் 81, 84). பிறன்மனை நயத்தலுக்கு உட்பட்ட பெண்டிரும் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர்.

அவையில் வந்த ஒரு பெண் தன்னைக் காதலித்தவன் திருமணத்திற்கு முன்னர் நட்புபூண்டு பின்னர் மனைவியாக ஏற்றுக் கொள்ளச் சம்மதிக்கவில்லையென எடுத்துக் கூறினால் அவையினர் அப் பெண்ணின் குற்றச்சாட்டில் உண்மையுள்ளது எனத் தெரிந்தால் குற்றவாளியை மூன்று கவர் முட்கள் உடைய கிளையில் கட்டி வைத்துச் சுண்ணும்பு நீற்றினைத் தலையில் கொட்டுவர் என அகநானூறு வாயிலாக அறிகிறோம் (அடிக்குறிப்பு: அகம். 256).

நன்னன் என்ற மன்னனால் இளம் பெண்ணுக்கு விதிக்கப்பட்ட தண்டனையை ஏற்கெனவே கண்டோம்.

நிலவருவாய் அல்லது வரிகள் செலுத்தாமை குற்றமாகக் கருதப்பட்டு அதற்குரிய வகையில் தண்டனை வழங்கப்பட்டது. அயல் நாட்டுப் பிரதிநிதிகளால் வேவு பார்க்கப்படுவது குற்றமாகக் கருதப்பட்டு ஒற்றர்களின் தலையைத் துணிக்குமாறு அரசர் ஆணையிட்டுள்ளனர். இளந்தத்தனார் என்ற புலவரைச் சோழன் நெடுங்கிள்ளி ஒற்றன் எனத் தவறாகக் கருதி புலவரின் தலையைத் துண்டிக்க முயன்றபோது கோவூர் கிழார் என்ற புலவர் தலையிட்டு அவரைக் காப்பாற்றினார்.

சங்க காலத்தில் குற்றங்களுக்கு வழங்கப்பட்ட தண்டனைகள் தலையைத் துண்டித்தல், உடல் உறுப்புக் குறைத்தல், கொடுமைப் படுத்தல், அபராதம் விதித்தல் ஆகியவையாகும்.

சிலவகையான குற்றங்களுக்குக் கப்பலில் துடுப்பு வலிக்கும்படி அனுப்பப்படும் தண்டனைகள் வழங்கப்பட்டன. கொற்கையில் உள்ள மீன் தொழில்துறையில் பணிபுரிந்திட வலியுறுத்தப் பட்டனர். பெரிபுளூஸ் நூலாசிரியர் தீர்த்து ஒதுக்கப்பட்டுவிட்ட குற்றவாளிகளே மீன் தொழில்துறையில் பணிபுரிந்தனர் எனக் குறிப்பிடுகின்றார். தவறு செய்யும் குடிமக்களை அரசன் தண்டிப்பது தவறில்லை எனவும், அது விளைநிலத்தில் களைகளை எடுத்தலுக்குச் சமம் எனவும், தீமை செய்வோரை ஒறுத்துக் குடிமக்களைக் காத்தல் அரசனுடைய புகழுக்கு இழுக்கன்று எனவும் கருதப்

பட்டன. தான் எதைச் சரியென எண்ணுகின்றானோ, அதன்படி தீர்மானித்து அவ்வடிப்படையில் பாகுபாடற்ற விசாரணையினை மேற்கொண்டு, குற்றம் கண்டறிந்தால், குற்றத்தின் தன்மைகளுக் கேற்பத் தண்டனை வழங்க வேண்டுவது அரசனுக்கு முறை யாயிற்று.

சிறைச்சாலைகள், நீதிநெறியாட்சியின் பகுதியாக, சங்க காலத்தில் விளங்கிச் சிறை எனவும், சிறைக்கோட்டம் எனவும் வழங்கப்பட்டன. சிறையில் கைதிகள் சங்கிலியால் பிணைக்கப் பட்டனர் போலும். சேரன் கணைக்கால் இரும்பொறை அவ்வாறு சங்கிலியால் நாயினைப் போல பிணைக்கப்பட்டிருந்ததாகக் கூறப் படுகிறது.[1] கைதிகளைச் சிறையில் அடைக்கும் வழக்கம் பொது வாகக் காணப்பட்டது போல் தோன்றுகிறது. கைதிகள் சிறைக் கோட்டத்தினுள் இழிவாக நடத்தப்பட்டனர் என்பதற்கும் கணைக் கால் இரும்பொறைபற்றிய செய்திகளே ஆதாரமாகும்.

நாம், இதுவரை பார்த்தவற்றிலிருந்து சங்க காலத்தில் சட்டம், நீதி, குற்றங்கள், தண்டனைகள் ஆகியவைபற்றித் தமிழர்கள், தங்களுக்கெனத் தனிக் கருத்துகள் கொண்டிருந்தனர் எனவும், தண்டனைகள் தேவையென உணர்ந்திருந்தனரெனவும் அறிகிறோம். தவறு செய்யும் குடிமக்களைத் தண்டனைகள் திருத்தும் விதத்தில் அமையவில்லை. மாறாக, செய்த தவறுக்கு அவை ஈடாகவே கருதப்பட்டது எனலாம்.

1 புறநானூறு: 74, 3.

# 6. சங்க காலச் சமுதாயம்

தமிழக வரலாற்றின் பொற்காலமெனப் பேசப்படும் சங்க காலத்து வாழ்ந்த தமிழ் மக்களின் வாழ்க்கை பலவாற்ருலும் சிறந்து விளங்கியது. சங்க காலத்தில் தமிழரின் நாகரிகம் நன்கு வளர்ச்சி பெற்ற நிலையில் இருந்தது. சங்க இலக்கியங்களே அக்கால அரசியல், சமயம் முதலானவற்றை எடுத்து இயம்புவது போன்று, சமுதாய வாழ்விற்கும் சான்ருக அமைகின்றன.

**சாதிப் பிரிவுகள்**

சங்க காலத்தில் பிற்காலத்திலிருந்தது போன்ற சாதிப் பிரிவுகள் இருந்தமைக்குச் சான்றுகள் இல்லை. மக்கட்பாகுபாடு, நில இயற்கையையும் தொழிற் பண்பையும் அடிப்படையாகக் கொண்டே இருந்தது. தொல்காப்பியம், தமிழ்ச் சமுதாயம் புதுமையான முறையில் ஐவகை நில இயற்கையின் வழியே, தொழிற்பண்பை அடிப்படையாகக் கொண்டு பிரிக்கப்பட்டிருந்தது என்பதனைப் 'பொருளதிகாரம்' வாயிலாகத் தெளிவு படுத்துகிறது.

ஐவகை நிலத்திலும், ஐவகைத் தொழில் புரியும் மாந்தர் வாழ்ந்தனர். குறிஞ்சி நிலத்திலே வாழ்ந்தவர் குறவர் எனவும், முல்லை நிலத்தவர் ஆயர் எனவும், மருத நிலத்தவர் உழவர் எனவும், நெய்தல் நிலத்தோர் பரதவர் எனவும், பாலை நிலப் பகுதியில் வாழ்ந்தவர் எயினர் அல்லது மறவர் எனவும் அழைக்கப் பெற்றனர். இப்பிரிவு எளிமையானதும், இயற்கையின் வயப் பட்டதாகவும் அமைந்து உள்ளது என்பது கண்கூடு.

மலையிலும் மலையைச் சார்ந்த பகுதிகளிலும் வாழ்ந்தவர்களில் ஆடவர், குறவர் என்று மட்டுமன்றி, கானவர், வேட்டுவர், குன்றவர் எனவும், பெண்டிர் குறத்தியர் எனவும் அழைக்கப் பெற்றனர். 'குன்றவர்' என்ற சொல்லே குறவர் என மருவியது. இக் குறிஞ்சி நில மக்களின் தலைவர்கள் வெற்பன், சிலம்பன், பொருப்பன் என அழைக்கப்பட்டனர்.

முல்லை நிலம் எனப்பட்ட காடும் அதைச் சார்ந்த பகுதியும் அடுத்த பிரிவாகும். இப் பகுதியில் வாழும் ஆடவர் ஆயர், கோவலர், இடையர் எனவும், மகளிர் ஆய்ச்சியர், இடைச்சியர் எனவும் அழைக்கப்பட்டனர். இப்பகுதியின் தலைவர்கள் அண்ணல், தோன்றல், நாடன் என அழைக்கப்பட்டனர்.

வயலும், வயலைச் சார்ந்த பிரிவான மருத நிலத்தில் வாழ்ந்த ஆடவர் உழவர், களமர் எனவும், மகளிர் உழத்தியர், களத்தியர் எனவும் அழைக்கப்பெற்றனர். மருதநிலத் தலைவர்கள் மகிழ்நன், ஊரன் என அழைக்கப்பட்டனர்.

கடலும், கடலைச் சார்ந்த இடமான நெய்தல் நிலத்தில் வாழ்ந்த ஆடவர் பரதவர் எனவும், பெண்டிர் நுளத்தியர் எனவும் அழைக்கப்பெற்றனர். துறையன், சேர்ப்பன் முதலான பெயர்கள் இப் பகுதித் தலைவர்களுக்கு இருந்தது.

பாலை நிலமெனப்பட்ட வறண்ட பகுதியின் ஆடவர் எயினர், மறவர் ஆவர். எயிற்றியர், மறத்தியர் எனப் பெண்டிர் அழைக்கப் பெற்றனர். பாலை நிலத் தலைவர்கள் மீளி, விடலை என அழைக்கப் பட்டனர்.

மேலே குறிப்பிடப்பட்ட ஐவகை நில மக்களின் பெயர் விளக்கம் குறித்துச் சிறிது காண்போம். குறவர் என்ற சொல் குன்றத்தில் வாழ்வதால் பெற்ற பெயராகும். வேட்டையாடுதல் அவர்களது தொழிலாகையால் வேட்டுவர் எனப்பட்டனர். கானவர் என்றால் காட்டில் உறைபவர் ஆவர்.

கோவலர் என்றால் பசுவினை மேய்த்தவர் அல்லது கால் நடைகளை வளர்த்தவர் என்று பொதுவாகக் கூறலாம். 'ஆயம்' எனப்படும் கால்நடைகளை மேய்த்தவர் ஆயர் ஆவர். 'கிடை' என்றால் கால்நடைக் கூட்டம் என்று பொருள். அதற்கு உரியவர் என்ற பொருளில் கிடையர் என அழைக்கப்பெற்று நாளடைவில் அது இடையர் ஆயிற்று.

உழவுத் தொழில் செய்தோர் என்ற பொருளைத் தருவதே உழவர் என்ற சொல்லாகும். உழவுத் தொழிலுடன் தொடர் புடைய களத்தில் பணிபுரிந்தமையால் 'களமர்' எனப்பட்டனர்.

பரவை என்ற சொல்லுக்குப் பரந்த கடல் எனப் பொருள் கொண்டு, அக்கடலைத் தம் வாழ்வினுக்கு அடித்தளமாகக் கொண் டவர் ஆகையால் பரதவர் என நெய்தல் நிலத்தவரும், வீரர் என்ற பொருளில் பாலை நில மறவரும் அழைக்கப்பட்டனர். சமுதா

யத்தின் இப்பிரிவானது தமிழக மக்களின் வாழ்க்கையின் ஒவ்வொரு நிலைகளையும் எடுத்துக் காட்டுகிறது எனலாம். குன்றவர், மறவர், வேட்டுவர் ஆகியோரின் வாழ்க்கை, பண்டைத் தமிழர் உணவுப் பொருள் தேடி அலைந்த நாடோடி வாழ்க்கையினைக் காட்டுகிறது என்றும், ஆயரது வாழ்க்கை அதற்கு அடுத்த நிலையினை எடுத்துக் காட்டுகிறது எனவும், 'உழவர்' என்ற நிலையே அவர் தம் வாழ்வு ஓரிடத்தில் நிலைபெற்றமைக்குச் சான்று என்றும் கூறுவர். மருத நிலத்தில் நாகரிகம் முதிர்ந்த நிலையில் கடலைச் சார்ந்தும், கடலில் சென்றும் வாழக் கற்றமையைப் பரதவர் நிலை விளக்குமெனலாம். இவ்வாறான பிரிவுகளைக் கண்ணுற்ற ஏ. எல். பாஷம் (A. L. Basham) 'தமிழ்ச் சமுதாயம்' குடி அல்லது இனமக்கள் (tribal groups) கூட்டத்தைச் சேர்ந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.

தொல்காப்பியர், மேலே குறிப்பிட்ட பிரிவுகளைத் தவிர, நகரங்களில் வாழ்ந்த நாகரிக வாழ்வு வாழ்ந்திட்ட பிரிவினரைக் குறித்தும் அறிவிக்கின்றார். அந்தணர், அரசர், வைசியர், வேளாளர் என நால்வகைப் பிரிவுகளையும் குறிப்பிடுவதிலிருந்து, சமுதாயத்தில் ஒரு குடியினும் மற்றது உயர்ந்தது என்ற நிலை இருந்திருக்க வேண்டுமென்று கருதப்படுகிறது. அந்தணர் என்ற பிரிவினரே பார்ப்பனர் ஆவர். அந்தணர் ஆறுவகைத் தொழில் புரிந்தோர் எனப்பட்டனர். ஓதல், ஓதுவித்தல், யாகம் நிகழ்த்தல், நிகழ்வித்தல், பிறர்க்குப் பொருளை அளித்தல், தாம் பெறுதல் முதலான ஆறுவகைத் தொழில்களையும் செய்தனர் எனப்படுகிறது. அவர்கள் வேளாண்மை, வாணிகம் முதலானவற்றிலும் தேர்ச்சி பெற்றிருந்தனர் எனவும் அறிகிறோம்.

தொல்காப்பியம் உயர்ந்தோர், பின்னோர், இழிந்தோர் என்ற சொற்களால், அக் காலத்துச் சமுதாயத்தில் இருந்த ஏற்றத் தாழ்வுகளை அறிவிக்கிறது. சமுதாயத்தின் அடிமட்டத்தில் இருந்தவர்கள் அடியவர், வினையாளர் எனப்பட்டனர்.

வடபுலத்து ஆரியர்களின் வருணப் பிரிவினையோடு, அந்தணர், அரசர், வாணிகர், வேளாளர் என்ற பிரிவினையைச் சிலர் ஒப்பிடுகின்றனர். நான்கு என்ற வகையில் அவை ஒத்ததாக விளங்கலாமேயன்றி, அடிப்படையில் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற ஆரியப் பிரிவினின்றும், தொல்காப்பியம் காட்டும் நால்வகைப் பிரிவு வேறுபட்ட ஒன்றேயாகும். ஏனெனில், இந் நால் வகைப் பிரிவு தவிர தமிழ்ச் சமுதாயத்தில் பொருநர், அறிவர், பாணர், கூத்தர், விறலியர், வேலன் முதலான

பிரிவினரும் இருந்தனர். தமிழ்ச் சமுதாயத்தில் ஆரியப் பாகுபாடு அடிப்படை நிலை பெறவில்லை. வேளாளர்களைச் சூத்திரர் என்ற நிலைக்குத் தாழ்வுபடுத்திட இயலாது. ஏனெனில், வேளாளர் தமிழ்ச் சமுதாயத்தில் மதிப்புடைய நிலையினை வகித்தனர். சாதி என்ற சொல்லைப் பல்வகையான மரம், செடி, கொடி முதலிய பிரிவினை வேறுபடுத்திக்காட்டத் தொல்காப்பியர் பயன்படுத்து கிறாரேயன்றி, மனிதர்களை வேறுபடுத்திச் சாதி என்ற சொல்லைப் பயன்படுத்தவில்லை.

தொல்காப்பியர் காலச் சமுதாயத்தில் நால்வகையாக மக்கள் பிரிக்கப்பட்ட போதிலும், உறுதியான சாதி முறை ஏதும் இல்லை. இப் பிரிவுகளுக்குள் உணவுக் கலப்போ, திருமணக் கலப்போ தடை செய்யப்படவில்லை. வேளாளர் குறவரின் மகளிரை மணந்து வாழ்ந்தனர். எனவே, சாதி என்னும் கொடுமை தொடக்கக் காலத் தமிழ்ச் சமுதாயத்தில் வேர் ஊன்றவில்லை. தொட்டால் குற்றம்; பார்த்தால் பாவம் முதலானவை தொல்காப்பியக் காலத்தில் நிச்சயமாக இல்லை எனலாம்.

சங்க இலக்கியங்கள், தொல்காப்பியருக்குப் பின்னர்க் காணப்பட்ட நிலையான நன்கு அமைந்த தமிழர் வாழ்க்கை முறையினை எடுத்துக் காட்டுகின்றன. சங்க காலச் சமுதாய மாறுதலுக்கு அரசியல் மாறுதல்களும் காரணம் என்று கூறலாம். குறுநிலத் தலைவர்கள் என்ற நிலை மாறிச் சேர, சோழ, பாண்டியர் என்ற மூன்று பேரரசுகள் உருவாயின. எனினும், சமுதாயப் பிரி வினரில் சில பகுதியினர் மூவேந்தர்களுக்கு ஆட்படாது தனித்து இயங்கினர் போலும். பரதவர் மீன் பிடித்தலைத் தொழிலாகக் கொண்டு தனியே இயங்கினர் என்பதையும் இளஞ்சேட் சென்னி என்ற சோழ அரசன் அவர்களைத் தோற்கடித்துத் தன் ஆட்சியின் கீழ்க்கொண்டு வந்ததை ஊன்பொதி பசுங்குடையார் என்ற புலவர், புறநானூற்றில் புகழ்ந்து உரைக்கின்றார் (புறம்: 378). பாண்டியன் நெடுஞ்செழியனைப் புகழுகின்றபோது மாங்குடி மருதன் என்ற புலவர், 'பரதவர்களை முறியடிக்கும் சிங்கம்' என்று கூறுவதும் மேற்சொன்ன கூற்றை மெய்ப்பிக்கும்.

பரதவர்களைப் போலவே குறவர்களும், தம் தலைவர்களின் கீழ்த் தனிப்பட்ட வாழ்வினைத் தொடர்ந்து மேற்கொண்டு ஒழு கினர். குறவர்கள் கல்வியறிவுடையோராய்த் திகழ்ந்தனர் என் பதற்கு 'ஏறைக்கோன்' என்ற குறவர் தலைவனைப் பாடிய இள வெயினியார் என்ற புலவரின் பாடல் (புறம்: 157) சான்றாக அமை கிறது. இங்ஙனமே முல்லை நிலத்தவரும், மறவரும் தாம் பழம்

பெருங்குடிகள் என்ற சிறப்புடன் தனியே ஒதுங்கி வாழ்ந்தமையே தமிழ்ச் சமுதாயத்தில் சாதி முறை இறுகிடக் காரணமென்று கூறப்படுகிறது. காலப் போக்கில் ஒவ்வொரு பிரிவும் இறுகிச் சாதிப் பிரிவாகிவிட்டன போலும்.

மல்லர்கள் அல்லது மாலவர்கள், சங்க காலத்தில் மன்னவனின் போர்ப் படையில் பணி புரிந்தனர் (கலித்தொகை: 106, 11-10). வேட்டுவர் எனப்பட்டோர் வலையர் எனவும் அழைக்கப்பட்டனர் (கலித்தொகை: 55–17). குறும்பர்கள் என்போர் சங்க காலத்தில் வாழ்ந்த குறுநிலத் தலைவர்கள் ஆவர். எயினர்கள் எனப்பட்டோர் வேட்டையாடுதலைக் கைக் கொண்டவர்கள். காடுகளை அழித்துத் திருத்தியவர்கள் 'வெட்டியான்கள்' எனப் பட்டனர் என்பர். தோண்டு என்பதில் இருந்து தோன்றியதே 'தோட்டி' என்பர். பறையர், பாணர் சங்க காலச் சமுதாயத்தில் சிறப்புடைய நிலை வகித்தனர். எம். சீனிவாச அய்யங்கார் பறையரும் எயினரும் ஒரே பிரிவினராதல் வேண்டுமென உரைக்கிறார். 'புலையர்' என்ற பிரிவினரைக் குறித்தும் சங்க இலக்கியங்களிலிருந்து அறிகிறோம்.

பறையன் என்ற சொல் புறநானூற்றில் ஒரே ஒரு இடத்தில் மட்டும் காணப்படுகிறது(புறம்: 335). பறையன் என்ற சொல் அரிதாகப் பயன்படுத்தப்பட்ட போதிலும், புலையர் என்ற சொல் முரசு அறைவோரைக் குறிக்க அடிக்கடி பயன்படுத்தப் பட்டுள்ளது. துடியன், பறையன், பாணன், கடம்பன் முதலான பிரிவினர் பொதுவாகப் புலையர் என்றே அழைக்கப்பட்டனர் எனக் கருத இடமுள்ளது(கலித்தொகை: 95; புறம்: 287).

பாணர்களும், விறலியர் எனப்பட்ட அவர்தம் துணைவியரும் தம் தலைவர்களைப் புகழ்ந்து பாடி வாழ்ந்தனர். பாணர்கள், அரசர்களால் சிறப்புச் செய்யப்பட்டனர். பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை வாயிலாகப் பாணர்களுக்கு அளிக்கப்பட்ட சிறப்பினைக் குறித்து அறியலாம். பிராமணர் வீடுகளிலும் அவர்கள் விருந்துண்டனர். எனினும், அவர்களும் புலையர் என்றே அழைக்கப்பட்டனர் (கலித்தொகை: 65). காலைப் பொழுதில் கதிரவன் எழுமுன் கவிபாடி, அரசரைத் துயிலெழுப்பும் பணியினை மேற்கொண்டதோடு அல்லாமல், அரசனுக்கும், அரசிக்குமிடையே ஏற்படும் ஊடலை நீக்கும் வாயிலாகவும் விளங்கினர். சில தலைவர்கள் பாணர்களைப் பரத்தையரிடத்தும் தூது அனுப்பினர் (கலித்தொகை: 85). இஃது எப்போதும் நடைபெற்ற பணியன்று. மாறாக ஒத்த காதலரின் மணவிழா முறையாக நடந்

திடத் தம் உதவியைச் செய்தனர் பாணர். இப்படி அரும்பணி யாற்றினர் எனினும், பாணர் 'புலையர்' என்ற 'கீழ்பிறப்பாளர்' பிரிவில் சேர்க்கப்பட்டனர். அவர்கள் வாழ்ந்த பகுதி 'பாண் சேரி' எனப்பட்டது. சேரி என்பதைக் கொண்டு இழிந்த பகுதி என்று பொருள் கொண்டுவிடக் கூடாது. அந்தணர் வாழ்ந்த பகுதி 'அந்தணர் சேரி' எனப்பட்டது என்பதை நினைவில் கொள்ளுதல் வேண்டும்.

சங்க காலத் தொடக்கத்தில் ஏற்படாத சாதிமுறை, சங்ககால இறுதியில் - சங்கம் மருவிய காலத்தில் வலிமை பெற்றது எனலாம். ஒவ்வொரு தொழிற் பிரிவும், சாதிப் பிரிவாக மாறி விட்டது போலும். இருப்பினும் அடிப்படையில் ஒன்றை மறந்துவிடக் கூடாது. தமிழ்ச் சமுதாயப் பிரிவு வடபுல ஆரிய மக்களிடத்தில் அமைந்த சாதிப்பிரிவினின்று பெரிதும் மாறுபட்டதும், தொடர் பற்றதும் ஆகும். சிறுசிறு குடிகளாக வாழ்ந்த தமிழ் மக்கள், நிலையானதோர் இடத்தைப் பெற்று வாழ்ந்தனர். தமிழ்ச் சமுதாயத்தில் 'சாதி' தொழிலின் அடிப்படையில் உருவானதே யன்றிப் பிறப்பின் அடிப்படையில் உருவானதன்று.

தொல்காப்பியர் காலச் சமுதாய அமைப்பினின்றும், சங்க காலச் சமுதாயம் பெரிய மாறுதல் எதனையும் பெற்றுவிடவில்லை என்று துணிந்து கூறலாம். சங்க காலத்தில் அந்தணர், வேள் விகள் நிகழ்த்தத் துணை புரிந்ததோடல்லாமல் சமயக் கல்வி, தத்துவம் ஆகியவற்றில் வல்லவர்களாக இருந்தனர். தீண்டாமை என்னும் நச்சுக் காற்று சங்க காலச் சமுதாயத்தில் காணப்பட வில்லை.

ஆயினும், சமுதாயத்தில், பார்ப்பனர்களுக்குச் சில சலுகைகள் வழங்கப்பட்டிருந்தன. போர் நடைபெறும்போது, அவர்கள் விலகிச் செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டார்கள். தொழில் களில் உயர்ந்த தொழில், தாழ்ந்த தொழில் என்ற பாகுபாடு ஏற்படத் தொடங்கிய பின்னரே, சாதி வேற்றுமைகள் சங்கம் மருவிய காலத்தில் தோன்றிவிட்டன எனலாம். டாக்டர் கே.கே.பிள்ளையவர்கள் வருண அடிப்படையிலான ஆரிய அமைப்பும், தொழில் அடிப்படையிலான திராவிட அமைப்பும், நாளடைவில் இணைந்து சாதி முறையாக மாறி விட்டது என்ற கருத்தினை அறிவிக்கிறார். எனவே, இதுகாறும் கண்டவற்றி லிருந்து தமிழ்ச் சமுதாயத்தில் சாதிப் பிரிவு, வேற்றுமை, தீண் டாமை முதலானவை சங்க காலத்தில் காணப்படவில்லை என்ப தைத் தெள்ளிதின் உணர்கிறோம்.

இனி, ஐவகை நில மக்களின் வாழ்க்கையினைக் குறித்தும் சிறிது காண்போம்.

குறிஞ்சி நில மக்கள் வாழ்ந்த இடங்களில் சந்தன மரம் மிக்க காடு இருந்தது. அக் காடுகளில் புலியும், கரடியும், யானையும் திரியும். அழகு மயில்கள் கூட்டங்கூட்டமாக உலாவும்.

தினையே குறிஞ்சி நிலத்தில் விளையும் முக்கியப் பயிர். குறவர் தம் உழைப்பின் பயனாகு முதிர்ந்த தினையைக் காவல் செய்வர். அவர் உயர்ந்த பரணிலே ஏறி, மலையிடங்களில், செறிந்த காடுகளில், வாழும் யானைகள்மீது கவணுமிழ் கற்களை வீசுவர். அக் கற்கள் யானைகளின் உயிரைப் போக்கும் முறைமை யால் கூற்றத்தை ஒப்பன என்று மலைபடுகடாம் கூறுகிறது. குறுந்தளிரை உண்டு நிற்கும் காட்டுப் பசுக்களையும், பன்றிகளையும் கவண் கற்கள் கொண்டு சாய்த்தனர். மலை நிலத்து மக்கள் உண்ணும் உணவு எவை என்றறிய மலைபடுகடாம் பெரிதும் துணை புரிகிறது. உடும்பு, பன்றி முதலியவற்றின் இறைச்சியையும், பின்னர் மூங்கிற் குழாயினுள் இட்டு வைத்த புளித்த தேனாகிய கள்ளையும் உண்டனர். அரிசியால் செய்த கள்ளையும் சில சமயம் உண்டனர். பலாவின் விதையாலாகிய மாவையும், புளியம்பழத் தையும், மோருடன் அளவாகக் கலந்து மூங்கிலரிசியாலாகிய சோற்றை உண்டனர்.

முல்லை நில மக்கள் வாழும் இடங்களில் மான்களும், முயல் களும், வான்கோழிகளும் வாழ்ந்தன. அவற்றைக் கொன்று, இறைச்சியை முல்லை நில மக்கள் உண்டனர். பால், தயிர் முதலி யனவும் தானிய வகைகளும் அவர்களது உணவாக இருந்தன. வீட்டில் ஆடுகள் வளர்க்கப்பட்டன. கயிற்றுக் கட்டில்களில் ஆட்டுத்தோல் விரித்து அவர்கள் உறங்கினர். கிராமத்தைச் சுற்றிலும் பசுக்கள் மேய்க்கப்பட்டன. நிலங்கள் வேலியிடப் பட்டுப் பாதுகாப்பாக விளங்கின.

ஆய் மகள், சுவை பொருந்திய தயிரைக் கடைந்து, சுமட்டின் மேலே, தயிர் புள்ளியாகத் தெறித்த வாயையுடைய மோர்ப் பானையை வைத்துக் கொண்டு திரிந்து, மோர் விற்ற காட்சியைச் சங்க இலக்கியத்தே காண்கிறோம். ஆயர் அரிசிச்சோற்றைப் பாலுடன் உண்டனர். முல்லை நில மக்களின் வாழ்க்கை நிலையினை அறிந்திடப் பெரும்பாணாற்றுப்படை பெரிதும் உதவுகிறது.

பெரும்பாணாற்றுப்படை, மதுரைக் காஞ்சி, மலைபடுகடாம் முதலிய நூல்களில் மருத நில இயற்கை வளமும், அந் நில

மக்களின் வாழ்க்கை முறையும், தொழிற்பண்பும் விரிவாகக் கூறப் பட்டுள்ளன. மருத நில மக்கள் வேளாண்மையையே முக்கியத் தொழிலாகக் கொண்டிருந்தனர். வேளாண்மை எவ்வகையில் செய்யப்பட்டது என்பதனைப் பெரும்பாணாற்றுப்படை விரிவாக வருணிக்கிறது. செந்நெல்லும், வெண்நெல்லுமே மருத நில மக்களின் முக்கியமான உணவாக இருந்தன. வெண்நெல்லும், வதக்கப்பட்ட மனைவாழ் கோழியும் இன்றியமையாத உணவாக இருந்தன. கரும்பின் தீஞ்சாற்றையும் உண்டனர்.

மீன் பிடித்தலைத் தொழிலாகக் கொண்டு நெய்தல் நில மக்கள் வாழ்ந்தனர். நெய்தல் நில மக்களின் குடிசைகள், வஞ்சி மரத்தின் கொம்புகளாலும் வெண்காஞ்சியின் கொம்புகளாலும் கட்டப்பட்டன. தருப்பைப் புல் கொண்டு வேயப்பட்டிருந்த கூரைகளின் மேல்சுரைக்காய் காய்த்துத் தொங்கின. நெய்தல் நில மக்களின் உணவு கொழியலரிசிக் கூழேயாகும். அவர்கள் இரண்டு பகல், இரண்டு இரவு, இனிமை பிறக்கும்படி புளிக்க வைக்கப் பெற்ற கள்ளையும், மீன் பொரியலையும் உண்டனர்.

பாலை நில மக்கள் முள்ளம்பன்றி ஊனை விரும்பி உண்டனர்; வெண்சோறும் உண்டனர். பாலை நில மக்கள் மான்களையும், குறு முயல்களையும் வேட்டையாடினர். எயினர் இருப்பிடங்களில் பருந்துகள் படியக் குத்தி முனை மழுங்கின புலால் நாறும் வாயை யுடைய வேல்களும், மணி கட்டின கேடயங்களும் நிரையாக வைக்கப்பட்டிருக்கும் என்றும், சங்கிலிகளாலே நாய்கள் கட்டப் பட்டிருக்கும் என்றும் இவ் வீடுகளில் ஈந்தின் விதையைக் கண்டா லொத்த சிவந்த சோற்றை விருந்தினர் பெறுவர் என்றும் பெரும்பாணாற்றுப்படை கூறுகிறது.

தமிழ்ச் சமுதாயத்தில் குறவர், ஆயர், உழவர், பரதவர், எயினர் இவர்களைத் தவிரக் கொல்லர், பொற்கொல்லர், தச்சர், கலஞ்செய் மக்கள், நூல் நூற்போர் முதலியோரும் வாழ்ந்தனர். பெரும்பாணாற்றுப்படை, குறுந்தொகை முதலிய நூல்கள் கொல்லர் சம்மட்டி கொண்டு, இரும்பை வளைத்து, நெளித்துக் கருவிகளாக ஆக்கும் சிறப்பைக் கூறுகின்றன. பொற்கொல்லர் பொன்னை உரைத்து, மாற்றுக் காணுதல் முதல், அணிகலன் பல அமைத் திடும் ஆற்றலும் நிறம்பப் பெற்றவர் என அறிகின்றோம். ஐங்குறு நூற்றில் பொன்னை உரைக்கும் கட்டளைக்கல் பற்றிய குறிப் புள்ளது போல் மதுரைக்காஞ்சி, குறுந்தொகை முதலியவற்றிலும் உரைகல் பற்றிய குறிப்புகள் உள்ளன. சங்க காலத்தில் தச்சுத் தொழில் சிறந்து விளங்கியது. நெடுநல்வாடையில் தச்சர் கட்டி

எழுப்பிய அரச மாளிகை சிறப்புறக் கூறப்பட்டுள்ளது. சிற்ப நூலை அறிந்தவர்களாகத் தச்சர் விளங்கினர். கதவுகளில் அழகிய வேலைப்பாடுகள் செய்யும் ஆற்றல் மிக்கோராய்த் தச்சர் விளங்கினர். அரசர், அரசியர்க்குரிய அழகுக் கட்டில்களையும் உருவாக்கினர். கட்டிலின் கால்கள் அழகுற உருவாக்கப்பட்டு உருண்டு, திரண்டு விளங்கின. சிறு பிள்ளைகளுக்குச் சிறுதேர் செய்வதிலும் அக்காலத் தச்சர் சிறந்து விளங்கினர்.

குயவர் தாழி முதலியவற்றை வனைந்தனர். குயவர் மட்கலம் சுடும் சூளையில், புகை போல விளங்கும் மலை மறையுமாறு வெள்ளிய மேகம் சூழ்ந்து தோன்றும் என்ற குறிப்பு அகநானூற்றில் காணப்படுகிறது (அகம் 308). துணிகளைத் துவைத்து, களர் நிலத்து உவர்மண்ணில் ஊறவைத்து, ஆடையின் அழுக்கினைப் போக்கினுள் புலத்தி எனப்பட்ட வண்ணாரப் பெண் என்பதைப் புறநானூறு (311), நற்றிணை (90), குறுந்தொகை (330) ஆகிய நூல்கள் அறிவிக்கின்றன. துவைத்த ஆடைகளுக்குக் கஞ்சியிடும் வழக்கமும், அக்காலத்தில் இருந்தது (அகம். 34, 387).

**இல்லற வாழ்க்கை**

தமிழர்கள் திருமண வாழ்க்கையையே, கற்புடைய வாழ்க்கையாகப் போற்றினர். திருமணம் நல்ல நாளில் நடைபெற்றது. திருமண வினைகள் தொடங்கும் முன்பு இறைவழிபாடு நடைபெறும்; மண முழவு முழங்கும். வெண்மையான நூலில், வாகை யிலைகளையும், அறுகம்புல் கிழங்குகளையும் கோத்த மாலையை மணமகள் அணிந்துகொள்வாள். அகநானூற்றுப் பாடலொன்றில் வரும் திருமண முறையாவது:

திங்கள், உரோகிணி கூடிய குற்றமற்ற நன்னாளில், விடியற் காலையிலிருந்தே, மணவினைக்குரிய ஏற்பாடுகள் தொடங்கப் பெறுகின்றன. வீட்டின் முன் பெரிய பந்தல் இடப்பட்டுள்ளது; புது மணல் பரப்பப்பட்டுள்ளது; மாலைகள் தொங்கவிடப்பட்டிருந்தன, விளக்குகள் ஏற்றி வைக்கப்பட்டிருந்தன.

உழுந்துக் களியும், பெருஞ்சோறும் வருவோர்க்கு வழங்குதற்காகப் பெருமளவில் ஆக்கப்பட்டிருந்தன. திருமண வீட்டில் ஒரே ஆரவாரம். உச்சியில் குடத்தினையுடையவரும், கையினிற் புதிய அகன்ற மண்டை எனும் கலத்தினை உடையவரும் ஆகிய முதிர்ந்த பெண்கள் வரிசையாய் நிற்கின்றனர். குழந்தைகளைப்

பெற்றவர்களாய், கணவனோடு வாழ்கின்ற பெண்கள் நால்வர் வருகின்றனர். குடங்களிலிருந்த தண்ணீரைக் கொண்டு, மணமகளை முழுக்காட்டுகின்றனர். அத் தண்ணீரில் நெல்லும் மலரும் இடப்பட்டுள்ளன. தண்ணீரைத் தலையில் ஊற்றும் போது, 'கற்பினின்றும் தவறாது, நல்ல பல செயல்களில் கணவனுக்கு உதவியாயிருந்து, அவன் விரும்பும் இணையாய் இருப்பாயாக' என்று வாழ்த்துகின்றனர் (அகம்).

மணமகன், மணமகளுக்குத் தாலி ஏதும் கட்டியதாகச் சான்றில்லை. ஐம்படைத் தாலியைக் குழந்தைகளுக்கு அணிவிக்கும் வழக்கம் அக் காலத்திலிருந்தது. அது காப்பணியாகவே கருதப்பட்டது. மங்கல நாண் பூட்டும் வழக்கம் இல்லையென்று உறுதியாகக் கூறிவிடச் சிலப்பதிகாரமும் சான்றாகும். திருமண நாளன்று மங்கல அணியை ஊர்வலமாகக் கொண்டு வரும் வழக்கம் இருந்தது என்று சிலப்பதிகார உரையாசிரியர் கூறுகின்றார். மங்கல அணி, தாலியாகக் கருதப்பட்டது என்றால், அது ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது என்பது வேடிக்கையாக இருக்கிறது. சங்க இலக்கியங்களில் இதனைப்பற்றிய குறிப்பு எதுவும் கூறப்படவில்லை. எனவே, மங்கல அணியைத் தாலியாகக் கருத வாய்ப்பு ஏதுமில்லை. எனவே, மங்கல நாண் பூட்டும் வழக்கம், பிற்காலத்தில் ஏற்பட்ட வழக்கமென்று கருத வேண்டும்.

சங்க காலச் சமுதாயத்தில் பெண்கள் மிகவும் சிறந்த இடத்தினைப் பெற்றிருந்தனர். பழந் தமிழர்களின் பண்பாட்டின் நிலைக்களனாய் இருந்தது அக்கால மகளிரின் அரும் பண்புகளே. தீவினைகளுக்கும், துன்பத்திற்கும் காரணமானவர்கள் பெண்கள் என்று கருதப்பட்ட கருத்துப் பரவாத காலமாகும் அது. பெண்களை நம்பக்கூடாது, அவர்கள் கூறுவதை உண்மை எனக்கொள்ளக் கூடாது என ஏலாதி முதலிய பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில், சங்கம் மருவிய காலத்தில்தான் அவ்வாறு கூறப்பட்டது. பெண்டிரை இழிவாகக் கருதுகின்ற பேதமை சங்க நூல்களில் இல்லை. பெண்கள் சமூக விழாக்களிலே பங்கு பெற்றுச் சுதந்திரமான வாழ்க்கை வாழ்ந்தனர். சங்கம் மருவிய காலத்தில் பெண்கள் தாழ்வாகக் கருதப்பட்டமைக்குச் சமணர் வருகையே காரணம் எனக் கூறப்படுகிறது இல்லற வாழ்க்கையையும், அதில் ஏற்படுகின்ற இன்ப துன்பங்களையும், வெறுத்த சமணர் பெண்களை வஞ்சகம் மிகுந்தவராகக் கருதினர்.

தொல்காப்பியர், மகளிர்க்கு உயிரைக் காட்டிலும் நாணம் சிறந்தது; அந்த நாணத்தைக் காட்டிலும் கற்புச் சிறந்ததென்று

குறிப்பிட்டுள்ளார். பெண்கள், ஆண்கள் அவ்வாவுறும் நற்செயல் களில் மேம்பட்டிருக்க வேண்டுமெனக்கருதிய தொல்காப் பியர், மகளிர்பால் இருக்க வேண்டிய பண்புகளை,

'செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்
அறிவும் அருமையும் பெண்பா லான'

(தொல். பொருளியல், 15)

என்று கூறியுள்ளார்.

சங்க கால மகளிரைப் பொறுத்தமட்டில் சமுதாயத்தின் மதிப்பு மிக்க நிலையினைப் பெற்றிருந்தனர் என்றுதான் கூற வேண்டும். சங்க கால மகளிர் அழகுறத் திகழ்ந்தனர்.

'பூவோடு புரையுங் கண்ணும் வேயென
விறல்வனப் பெய்திய தோளும், பிறையென
மதிமயக் குறூஉ நுதலும்'

என்று வருணிக்கப்பட்டுள்ளனர். மகளிர் மென்மையான உட லமைப்பினைப் பெற்றிருந்தனர். மகளிர்பால் காணத் தகும் மெல்லிய தன்மையினைச் 'சாயல்' என்ற சொல்லால் சங்கத் தமிழர் வழங்கினர்.

சங்க கால மகளிர் கல்வி கேள்வியில் வல்லவராயிருந்தனர். அக் கால மகளிர் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ்த் துறையிலும் தேர்ந்திருந்தனர். இளமையிலேயே நிறை கல்வியுற்ற வரை 'முதுக் குறைவி' என அழைத்தனர். பெண்கல்வி சிறந்த காலமாகச் சங்க காலம் விளங்கியது என்பதற்குச் சங்க காலப் பெண்பாற் புலவர்களின் பட்டியலே சான்று பகர்கிறது. பெண்கள் இலக்கியத்தில் மட்டுமன்றி, இலக்கணத்திலும் புலமை பெற்று விளங்கினர். காக்கைபாடினியம், சிறு காக்கைபாடினியம் ஆகிய இரண்டு யாப்பிலக்கண நூல்களையும் பாடியவர் காக்கை பாடினியார் என்னும் பெண்பாற் புலவரே. நாகையார், நன் முல்லையார், ஆதிமந்தியார், நச்செள்ளையார், இளவெயினியார், முடத்தாமக் கண்ணியார், நப்பசலையார், நெட்டிமையார், பொன் முடியார் முதலான முப்பதிற்கும் மேற்பட்ட பெண்பாற் புலவர்கள் சங்க காலத்தில் வாழ்ந்துள்ளனர்.

சங்க கால மகளிர், உடலுக்கு உறுதியளித்து, உள்ளத்திற்கு உவகை ஊட்டி, வாழ்விற்குப் பயிற்சி நல்கும் விளையாட்டுகள் பல

வற்றை விளையாடினர். சுனைப்பூவினைப் பறித்து மாலை தொடுத்தலும், தினைப்புனத்தில் கிளி கடிதலும் மலைவாணர் மகளிரின் விளையாட்டுகள் என்பதனைக் குறுந்தொகையின்,

'சுனைப்பூக் குற்றுத் தொடலை தைஇப்
புனக்கிளி கடியும் பூங்கட் பேதை'

என்ற பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன.

வண்டலயர்தல், சிற்றில் இழைத்தல், துணங்கை ஆடல், குரவையாடுதல் முதலியனவும் மகளிர் தம் விளையாட்டுகளாகும்.

'பாசவ லிடித்த கருங்கா ழுலக்கை
ஆய்கதிர் நெல்லின் வரம்பணைத் துயிற்றி
ஒண்டொடி மகளிர் வண்ட லயரும்'

(குறுந்தொகை 238: 1-3)

என்ற குறுந்தொகைப் பகுதியும்,

'அவலெறிந்த உலக்கை வாழைச் சேர்த்தி
வளைக்கை மகளிர் வள்ளை கொய்யும்
முடந்தை நெல்லின் விளைவயல்'

(பதிற்றுப்பத்து, 29: 1-3).

என்னும் பதிற்றுப்பத்துப் பாடற் பகுதியும், நெய்தல் நில மகளிர் விளையாட்டினைக் குறிப்பிடும்.

இன்று போலவே, பொம்மை வைத்து விளையாடும் வழக்கம் அன்றும் இருந்தது. தாம் விளையாடும் பாவையின்மேல் பேரன்பு செலுத்தினர் பெண்டிர். அவற்றிற்கு ஏதேனும் தீங்கு நேரிடின் தாங்களும் துன்புறுவர் எனக் குறிப்பிடப்பட்டு உள்ளது. இக்கால மகளிர் சிறு வயதில் மரப்பொம்மைகளுக்கு மணவிழா நடத்தி மகிழ்வதைப் போலவே, சங்க காலத்திலும் மகளிர் பஞ்சும், பட்டும், பூந்தாதும் கொண்டு தாம் செய்த அழகிய பொம்மைகளுக்குப் பெயர்கள் இட்டு, பல வீடுகளில் சென்று பிச்சை ஏற்று வந்து பிறர்க்கு இட்டு மணவிழா விளையாட்டு நிகழ்த்தினர்.

'செறியரிச் சிலம்பின் குறுந்தொடி மகளிர்
பொலஞ்செய் கழங்கின் தெற்றி ஆடும்.'

(புறம். 36: 3-4)

என்னும் புறநானூற்று வரிகளால் இளமகளிர் பொன்னால் செய்த கழற்காய் கொண்டு, மணல் மேடுகளில் விளையாடினர் என்பதை அறியலாம். பூப்பந்தாடுதல் மகளிர்க்கு மட்டுமே உரிய விளையாட்டாக இருந்தது. காற் சிலம்பு கலீர் கலீர் என ஒலிக்கப் பூப்பந்தாடிய பின்னர் மணற்பரப்பிலே இருந்து தம் வளை கலகல வென ஒலி செய்யக் கழற்காய் விளையாட்டு ஆடுவரெனப் பெரும்பாணாற்றுப்படை (பெரும்பாண். 332-335) குறிக்கின்றது.

சங்க கால மகளிரின் தனிப் பண்பாக விருந்தோம்பலைக் கூறலாம். அறவோர்க்களித்தலும், அந்தணர் ஓம்பலும், துற வோர்க்கெதிர்தலும், தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும் அக்கால மகளிர் பண்பாகும். சிறப்பு மிகுந்த விருந் தோம்பலினைச் செறிந்த நள்ளிரவிலும் விரும்பி மேற்கொள்ளும் நங்கையை,

'அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்
முல்லை சான்ற கற்பின்
மெல்லியல் குறுமகள்......'

(நற்றிணை, 142: 9-11)

என்று நற்றிணை பாராட்டுகின்றது.

பிரிவுத் துயரைச் சங்க கால மகளிர் பொறுது வருந்தினர். கணவனைப் பிரிந்த மகளிர், கூந்தலுக்கு எண்ணெய் இடுதல் இல்லை. 'நெய்யோடு துறந்த மையிருங் கூந்தல்' என்று புறநானூறு கூறும். கணவனைப் பிரிந்த மகளிர் மாலைக் காலத்தில் தம் கையே புணையாக நெய்யை வார்த்து விளக்கு ஏற்றிக் கணவர் வரவு நோக்கி எதிர்பார்த்திருந்தனர் என்ற செய்தி அவர் தம் கணவரிடம் கொண்டிருந்த ஈடுபாடு எத்தகையது என்பதைப் புலப்படுத்துகின்றது.

மகளிர் ஈன்று புறந்தருதல் தாயின் கடன் என்பதனை உணர்ந் திருந்தனர். வீரக்குடியில் பிறந்த மகளிர் 'மூதின் மகளிர்' எனப் போற்றப் பெற்றனர். மறக்குடி மங்கை ஒருத்தி, முதல் நாள் போரில் தன் தமையனும் மறுநாள் போரில் தன் கணவனும் மடிந்த நிலையில் தன் குடிக்கு ஒருவனுயுள்ள இளஞ் சிறுவனை அழைத்து வேலைக் கையில் கொடுத்துப் போர்க்களம் செல்க என அனுப்பினுள் என்ற வீர வரலாற்றை ஒக்கூர் மாசாத்தியார் என்ற பெண்பாற் புலவர் கூறுகின்றார்.

கணவனுக்கு அறுசுவை உண்டி தந்து மகிழ்விப்பது மனைவியின் முதற் கடமையாகும் என்பதனைச் சங்க கால மகளிர் நன்கு உணர்ந்திருந்தனர்.

சங்க கால மகளிர் பொறுமைப் பண்பினையும் நற்குண மேம்பாட்டினையும் கொண்டு விளங்கினர். தலைவன் பரத்தையை நாடிச் சென்ற போதும், அத் துன்பத்தைப் பொறுத்துக் கொண்டனர். பரிமேலழகர் பரிபாடல் பகுதி ஒன்றினுக்கு (பரிபாடல் 20: 86-89) எழுதியுள்ள உரையின் வாயிலாகச் சங்க கால மகளிரின் பொறுமைப் பண்பு வெளிப்படுகிறது. 'பரத்தையர்பால் சென்று தங்குபவனை, அங்ஙனம் செல்லாமற் காத்தலும், சென்றானென்று நீக்கி ஒழுகுதலும் மனைவியாற் கூடுமோ? கூடா. சால்பு மிக்க கற்புடை மங்கையர் தம்மைக் கணவர் இகழ்ந்தாலும், தாம் அவரைப் போற்றுவர்.'

சங்க கால மகளிர் வீர இளைஞர்களையே மணந்து வாழ விரும்பினர். முல்லை நில மகளிர் தங்களால் விரும்பி வளர்க்கப் பெற்ற வலிய எருதுகளைப் பிடித்து அடக்கும் அஞ்சா நெஞ்சமும், ஆற்றலுமுடைய இளஞ் சிங்கத்தையே மணக்க விரும்பினர் என்பதனை,

> 'கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையும்
> புல்லாளே ஆயமகள்' (கலித்தொகை, 103: 63-64)

என்று முல்லைக்கலி எடுத்துக் காட்டுகின்றது.

பண்டைய மகளிர் இறை நம்பிக்கை உடையவர்களாக விளங்கினர். மணமாகாத மகளிர் முருகனை நோக்கி 'யாம் எம் நெஞ்சமர்ந்த காதலரைக் கனவிற் கூறியுள்ளோம். அது பொய்யாகாது. நனவிலும் எம் திருமணத்தை முடித்து வைக்க வேண்டும். என வேண்டினர்; மணமான மகளிர், தங்கட்கு நல்ல பிள்ளைகள் பிறக்க வேண்டும் எனவும், தம் கணவர் மேற்கொண்ட செயல்கள் செம்மை பெறவும், போரில் வெற்றி வந்தெய்தவும் வரமருள வேண்டும் எனவும், முருகனை வேண்டி நின்றனர் என்பதனைப் பரிபாடல் (8: 102-108) எடுத்துக் கூறுகிறது. மகளிரின் இறை நம்பிக்கைக்குப் பத்துப்பாட்டில் ஒன்றான மதுரைக் காஞ்சியும் சான்று கூறுகிறது. நல்ல பண்புடைய பெண் மக்களைப் பெற வேண்டும் என்று கேட்டு, இறைவன் திருவருளை இறைஞ்சுகின்றனர் என்பதனால், பெண் மக்கட் பேற்றின் சிறப்பும் புலனாகின்றது. இதனை,

'குன்றக் குறவன் கடவுட் பேணி
இரந்தனன் பெற்ற வெள்வளைக் குறுமகள்'

(ஐங்குறுநூறு, 257: 1-2)

என்னும் கபிலர் வாக்கினால் உணரலாம். தன்னால் விரும்பப்பட்ட தலைவனையே தனக்கு வாழ்க்கைத் துணைவனாக அளிக்க வேண்டும் என்று தன் குல முதற் கடவுளாம் குமரனை நன்னீரும், நறுமலரும் கொண்டு மலைவாழ் மங்கையொருத்தி இறைஞ்சுகின்றாள்:

'குன்றக் குறவன் காதன் மடமகள்
மன்ற வேங்கை மலர்சில கொண்டு
மலையுறை கடவுள் குலமுதல் வழுத்தி'

(ஐங்குறுநூறு, 259: 1-3)

அவ்வாறு, வாழ்க்கைத் துணைவனாக வாய்த்த தலைவன்பால் தலைவி, தலையாய காதல் கொண்டிருந்தாள். தலைவன்பால் அவள் கொண்ட காதல் நிலத்தினும் பெரிதாய், வானினும் உயர்ந்ததாய், ஆழ்கடலினும் ஆழமுடைத்தாய் விளங்கியது. கீழ்க் கண்ட குறுந்தொகைப்பாடல் இதனை அறிவிக்கும்.

'நிலத்தினும் பெரிதே, வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரளவு இன்றே'

(குறுந்தொகை, 3: 1-2)

தலைவனைத் தலைவி இந்தப் பிறவியில் மட்டுமல்லாது, ஏழு பிறவியிலும் தொடர்ந்து வாழ வேண்டும் என்றே நினைத்தாள். உலக மக்கள் நீரின்றி இயங்க முடியாதது போலக் கொண்ட கணவரின்றிக் குலமகள் இயங்க முடியாதவள் ஆகிறாள் என்பதனை,

'நீரின் றமையா வுலகம் போலத்
தம்மின் றமையா நந்நயந் தருளி'

என்ற நற்றிணை வரிகள் கூறுகின்றன. எனவே, சங்க கால மகளிர் காதலிலும் வீரத்திலும் மேம்பட்டு விளங்கினர் என்பதனை அறிகிறோம். மனைத்தக்க மாண்புடையவளாகவும், தற்கொண்டான் வருவாய்க்கேற்பச் செலவு செய்பவளாகவும் வாழ்க்கைத் துணைவி ஒருவனுக்கு வாய்க்குமேயானால் அவன் நிறை வாழ்வு வாழலாம். நல்ல மனைவியைப் பெற்ற கணவனையே புலவர் போற்றினர். ஓர் ஆடவனைப் புலவர் போற்றும்போது, அவன் தன் மனைவியின் சிறப்பு நோக்கியே பாராட்டினர். திருமுருகாற்றுப்படையில்

நக்கீரர் திருமுருகனை, 'மறுவில் கற்பின் வாணுதல் கணவன்' என்றே பாராட்டியுள்ளார். 'இந்த நல்ல மங்கை நல்லாளுடைய கணவன் யான்' என்று கூறிக் கொள்வதில் அக்கால ஆடவர் பெருமை கொண்டனர்.

'நல்லோன் கணவன் இவனெனப்
பல்லோர் கூறயாம் நாணுகஞ் சிறிதே'
(குறுந்தொகை, 14: 5-6)

வெளி வேலைகளைச் செய்வதிலும், அக்காலப் பெண்கள் பங்கு கொண்டனர். குறிஞ்சி நில மகளிர் பரணிலேறிக் கிளிகளை ஓட்டிப் பயிரைப் பேணுவர். மலைகளில் வளரும் பிரம்பினாற் செய்யப் பெற்ற கவணினாலும், மற்றும் கருவியினாலும் கல்லெறிந்தும், முரசம் அறைந்தும் வானிலே திரியும் பறவைகளைக் குடம்பை நோக்கிப் பெயரச் செய்வர்.

பாலை நிலத்து எயிற்றியர் உறுதியான பிடியினையும் இரும்பு அலகினையுமுடைய மண்வெட்டிகளினாலே நிலத்தைத் தோண்டி வெற்று நிலத்தை வளம்படுத்தி, நெல் விளையச் செய்வர். முன்றிலில் நிலத்திலே அமைக்கப்பட்ட உரலில் நெல்லை இட்டு உறுதியான உலக்கையால் குற்றுவர். நெல்லைக் குற்றும்பொழுது பாடும் மகளிரைப் பற்றி மலைபடுகடாம் குறிக்கும். 'பரந்த அடியினை யுடைய உரலினது பகுவாயிடத்துத் தானியம் இடிக்கும்பொழுது குறமகள் பாடும் வள்ளைப்பாட்டு' என இதைக் குறுந்தொகைப் பாட்டு விளக்கிக் கூறும்.

இல்லற மகளிர் இருள் மறைந்து, கதிர் தோன்றுகிற விடியற் காலத்தில் இல்லத்திற்செய்ய வேண்டியவற்றை விரும்பிச்செய்வர். தேனீக்களும் வண்டுகளும் ஆரவாரிக்கும் மணல் பரவிய முற்றத்தைக் கூட்டுவர். அந்திக் காலத்தில் இரும்பாற் செய்த தகளியிலே நெய் தோய்ந்த திரியைக் கொளுத்துவர்.

பெண்கள் பாசறையில் வினை இயற்றுவதும் உண்டு. பெரும் பாலும் போர்த் தலைவர்க்குப் பணிப் பெண்டிராயும், விளக்கேற்று பவராகவுமே விளங்கினர்.

மணமான நங்கையினைப் புறநானூற்றுப் பாடல், இல்லத்தின் விளக்கொளி என்று குறிப்பிட்டு,

'மனைக்கு விளக்காகிய வாணுதல் கணவன்
முனைக்கு வரம்பாகிய வென்வேல் நெடுந்தகை'

எனக் கூறுகிறது. சங்க கால மகளிர் அலைகள் கரையில் வந்தலைக்கும் கடலில் நீந்தி விளையாடினர். கரைகளினால் சூழப் பட்ட குளங்களிலே பெண்கள் பாய்ந்து நீராடினரெனப் பொருநராற்றுப் படையிலிருந்து அறியலாம்.

'நுரைத்தலைக் குரைப்புனல் வரைப்பகம் புகுதொறும்
புனலாடு மகளிர் கதுமெனக் குடைய'

(பொருநராற்றுப்படை, 240-241)

பெண்களுக்கு இருக்க வேண்டிய மடம், நாணம், அச்சம் முதலிய பண்புகளைப் பற்றிப் பல நூல்கள் கூறும். சிறுபாணாற்றுப் படையும், அகநானூறும் முல்லை போன்ற பற்களையுடைய மகளி ரின் கற்புச் சிறப்பினைக் கூறுகின்றன. அருந்ததியின் கற்பு, பெண்களின் கற்பிற்கு உவமையாக அமையும். பெரிய தெளிவான விசும்பிடத்து, வடதிசைக் கண்ணே நின்று விளங்கும் அருந்ததி யொக்கும் கற்பினையுடைய மகளிரெனப் பெரும்பாணாற்றுப் படையும் புறநானூறும் கூறுகின்றன.

'பெருநல் வானத்து வடவயின் விளங்கும்
சிறுமீன் புரையுங் கற்பி னறுநுதல்'

(பெரும்பாணாற்றுப்படை, 302-303)

'வடமீன் புரையுங் கற்பின் மடமொழி'

(புறம். 122: 8)

கற்பு இரு திறத்தார்க்கும், அதாவது ஆணுக்கும் பெண்ணுக் கும் பொதுவென்று வைத்த போதிலும், பெண்டிரின் ஒழுக்கமே பெரிதும் இன்றியமையாததெனக் கருதப்பட்டது. ஆடவர், முறைதவறி வாழ்ந்த நிலையும் காண்கிறோம். அரசன் பேகன் தன் மனைவியைப் பிரிந்து நீண்ட காலம் வாழ்ந்ததைப் புறப்பாடல் (143: 14) எடுத்துக் கூறுகிறது. குடி மக்களிலும் அத்தகையோர் இருந்திருக்க வேண்டும்.

பரத்தையர் அல்லது பொருள்வழிப் பெண்டிருடன் மக்கள் கொண்டிருந்த தொடர்பு நேர் முறைமைக்கு மாறானது என்று கருதினர். பண்பாடுடையோர் தவிர்த்திட வேண்டிய ஒன்று எனக் கருதப்பட்டது. பொது மகளிரை, 'வரைவின் மகளிர்' என்று குறிப்பிடுவதைத் திருக்குறள் வாயிலாக அறிகிறோம். சங்க காலத்தில் அகநானூறு, நற்றிணை, ஐங்குறுநூறு முதலான

வற்றில் பரத்தையர் பற்றிய செய்திகளைக் காணலாம். மனைவியின் மகப்பேறு நேரங்களில், ஆடவர், பரத்தையருடன் தொடர்பு கொண்டு வாழ்ந்ததை நற்றிணை (380) வாயிலாக அறிகிறோம். கலித்தொகை (மருதக் கலி, 24) மதுரையில் ஒரு கிராமம் முழு வதும் வாழக் கூடிய எண்ணிக்கையுடைய எண்ணற்ற பரத்தையர் இருந்த செய்தியினைக் கூறுகின்றது.

பரத்தையருடன் தொடர்புடைய கணவர்கள் அவர்தம் உரிமை மகளிரின் சினத்திற்கு இலக்காக ஆயினர். கணவன் மனைவி பிணக்கைத் தீர்க்கும் நடுவர்களாகப் பாணர்கள் செயல் பட்டனர். இப் பரத்தையர் ஒன்றாகச் சேர்ந்து வாழ்ந்த இடம் பரத்தையர் சேரி என அழைக்கப்பட்டது. மனைவி கூடப் போர்க் களத்திற்குச் செல்ல அனுமதிக்கப்படாத நாளில் மன்னர்கள் போர்க்களத்திற்குப் பரத்தையரை அழைத்துச் சென்றனர் என்றறிகிறோம்.

பண்டைத் தமிழ்ப் பெண்டிரில், விதவைகளின் நிலையைக் குறித்துக் காண்போம். தமிழர்களிடையே சதி அல்லது உடன் கட்டை ஏறுதல் என்னும் வழக்கம், பொதுவாகக் காணப்பட்டது என்று கூறுவதற்கில்லை. பெருங்கோப்பெண்டு என்ற பூதப் பாண்டியனின் மனைவி உடன்கட்டையேறிய செய்தி ஒன்றே ஒன்று மட்டும் கிடைத்துள்ளது. ஆனால், பெருங்கோப்பெண்டு அதனைத் தொன்று தொட்டு இருந்து வந்த வழக்கம் என்ற அடிப்படையில் செய்திடவில்லை. கணவனின்றிக் கைம்பெண்ணாக வாழ்வதில் ஏற் படும் இடையூறுகளினின்றும் தன்னை விடுவித்தற் பொருட்டே அவ்வாறு செய்தாள்.

கணவனை இழந்த பெண்டிர் கைம்பெண் என அழைக்கப்பட் டனர். கைம்பெண், கணவன் இறந்த துயரைப் பொறுது குறித்த சில உணவு வகைகளை உண்டு நோன்பு நோற்றாள். கைம்பெண்கள் நெய்யுண்பதில்லை. தண்ணீர்ச் சோற்றைப் பிழிந்து எடுத்துக் கொண்டு, அதனுடன் அரைத்த எள்ளையும் புளியையும் கூட்டி, வெந்த வேளைக்கீரையுடன் அவர்கள் உண்டனர். கைம்பெண்கள் பாய்மேல் படுத்திடாது, வெறுந்தரையின் மேல்தான் படுத்துத் தூங் கினர். தலையை மழித்துக்கொண்டனர் என்பதற்குப் புறநானூற்றுப் பாடலில் (புறநானூறு, 25) ஆதாரம் உள்ளது. ஆனால், இப் பழக்கம் தமிழர்க்கு உரியதா, ஆரியர் வருகையினால் சமுதாயத்தில் பரவியதா என்பது தெரியவில்லை. தொல்காப்பியத்தில் இது குறித்து ஏதும் காணப்படவில்லை. பெண்டிர், தலையை மழித்தல் ஆரியர்களின் பழக்கமன்று எனவும், தமிழகத்தில் சமண, பௌத்

தர்களின் வருகையினால் இப் பழக்கம் பரவியிருக்க வேண்டு மெனவும் டாக்டர். கே. கே. பிள்ளையவர்கள் குறிப்பிட்டுள்ளார். சமண, பௌத்தர்களின் தொடர்பினால், வடபுலத்தில் ஏற்படாத பழக்கம், தமிழகத்தில் மட்டும் எப்படி ஏற்பட்டிருக்க வேண்டும் என்பது தெரியவில்லை. எப்படியோ தமிழகத்தில் தோன்றி விட்டது என்பர்.

சங்க கால மகளிர் குறித்து இதுகாறும் கண்டவற்றால் அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையின் சிறப்பு நிலையினை அறிய முடி கிறது. பெண்களுக்குச் சமநிலை வழங்கப்படவில்லை என்பது உண்மையே என்ற போதிலும், இழிவாகவோ, அடிமைகளைப் போலவோ கருதி நடத்திய நிலை எதுவுமில்லை. கணவனுக்கு முன்னர் மங்கலத்துடன் இவ்வுலக வாழ்க்கையை நீங்கிச் செல்லு தலையே மகளிர் இன்றுபோல் அன்றும் கருதினர். பெண்டிரில் பெரும்பாலோர் இல்லற வாழ்க்கையே வாழ்ந்தபோதிலும், மிகச் சிலர் துறவு வாழ்க்கையினையும் மேற்கொண்டிருந்தனர்.

**இன்ப வாழ்க்கை**

'வினையே ஆடவர்க்கு உயிரெ'னப்பட்டது. மகளிர் தம் கணவரை உயிராகப் போற்றினர். கூடலூர் கிழார் என்ற புலவர், புதிய மணவாழ்க்கை ஒன்றினை ஓவியமாக்கிக் காட்டு கிறார். புதிதாக மணஞ்செய்துகொண்டு, தன் கணவன் வீடு சென்ற பெண், பழக்கமில்லாத காரணத்தால், தன் விரல்கள் சிவக்குமாறு புளித்தக் கட்டித் தயிரைப் பிசைந்து, கண்ணில் புகைப்பட்டு வருந்துவதையும் பொருட்படுத்தாமல், அதனைத் தாளிதம் செய்து தன் கணவனுக்குப் படைக்கிறாள். அப் புளித்த மோர்க் குழம்பினைக் கணவன் இனிது இனிது என்று கூறியவாறு உண்ணுகிறான். தயிர் தோய்ந்த விரல்களை நீர்கொண்டு கழு வாது, தன் ஆடையில் துடைத்துக் கொள்கிறாள். கணவன் இனிது என்றவுடன் அவள் முகம் மலர்ந்து விளங்குகின்றது. இக் காட்சி, இல்லற இன்பத்தை முழுமையால் அறிவிப்பதாய் அமைந் துள்ளது.

சங்க காலத்தில் மகளிர் அறவோர்க்கு அளித்தல், அந்தணர் ஓம்பல், துறவோர்க்கு எதிர்த்தல், தொல்லோர் சிறப்பின் விருந்து எதிர்கோடல், முதலானவற்றையே, இல்லறக் கடமை யாகப் பெற்றிருந்தனர். இல்லறத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் மேற்கொள்ள வேண்டிய கடமைகள் இன்னின்ன என்பதை வள்ளுவர் அறிவிக்கின்றார். ஆடவரின் சிறந்த கடமை தொழில் புரிந்து பொருள் ஈட்டுவதே ஆகும். பொருளைக் கொண்டுதான்

ஏனைய அறங்களைச் செய்ய முடியுமென்று அவர்கள் உறுதியாக எண்ணினர்.

இல்லற வாழ்க்கைக்கு இன்றியமையாதது மக்கட்பேறு என்று எண்ணினர். புறநானூற்றுப் பாடலொன்று (188) மக்கட் பேற்றின் இன்பத்தைப் 'பலரோடு உண்ணும் பெருஞ் செல்வராய் இருப்பினும், குறுகுறுவென நடந்து, உணவைச் சிறு கையால் பிசைந்து, அங்குமிங்கும் சிறிதப், பெற்றோர் அறிவை இன்பத்தால் மயக்கும் மக்களைப் பெறுதார்க்கு உலகில் பயன்படும் பொரு ளொன்றும் இல்லை' என்று கூறுகிறது. மகவை ஈன்றெடுத்தல் தாயின் கடன் எனவும், அவனை முன்னணியில் நிறுத்தச் செய் வதும், சான்றோனெனப் பாராட்டுக் கிடைக்கச் செய்வதும் தந்தையின் கடன் எனவும் பொன்முடியார் என்ற புலவர் (புறநானூறு, 312) அறிவிக்கின்றார்.

தமிழர்களின் உணவுகளில் ஐவகை நில மக்களின் உணவு வகைகளை முன்னர்க் கண்டோம். சிறுபாணாற்றுப்படையிலிருந்து புழுங்கலரிசிச் சோற்றை உண்ணுதல் வழக்கமென அறிகிறோம். மிளகு, புளி, உப்பு, உணவில் சேர்க்கப்பட்டன. மாதுளங்காயை அரிந்து, அத்துடன் மிளகு பொடியைச் சேர்த்துக் கறிவேப் பிலையைக் கூட்டிப் பசு வெண்ணெயில் அதனைப் பொறிப்பார்கள். மாங்காய் வடுக்களை ஊறுகாய் ஆக்கிச் சேர்த்தனர். சங்க கால மக்கள் பயன்படுத்திய அரிசி, முல்லைப் பூவைப் போல மென்மை யாகவும் வெண்மையாகவும் இருக்கும். வெள்ளாடு, செம்மறியாடு, மான், முயல், காடை, கோழி, உடும்பு முதலியவற்றை உண்டனர். ஊனை நெய்யில் பொரித்தனர். உப்பில் அதனைத் தோய்த்துத் தோரணமாகக் கட்டிக் காய வைத்துப் பின்னர் நெய்யில் பொரித் தனர். தமிழர்கள், அசைவ உணவைப் பெரிதும் உண்டு வாழ்ந்த போதிலும், சைவ உணவையும் போற்றினர். நெல்லை இடித்து, ஆண் பன்றிக்குத் தீனியாகக் கொடுத்து அதைக் கொழுக்க வைப் பார்கள். அவற்றைத் தனியாகக் குழிகளில் விட்டு, வளர்த்துப் பிறகு கொன்று, அவ்வூனைச் சமைத்து உண்பர்.

கள்ளுண்ணும் வழக்கம் சங்க காலத் தமிழர்கள் இடையே இருந்ததென முன்னரே கண்டோம். மதுவகைகள் பலவாக இருந்தன. மதுவின் போதையினைப் புலவர்கள் பாம்பின் விடத் திற்குச் சமமாகக் கருதினர். கள்ளுக்கு, நறுமணமும் இன் சுவையும் ஊட்டுவதுண்டு.

கள்ளுண்டவர்கள் புளிச்சுவையை விரும்பிக் களாப்பழம், இலந்தைப்பழம், நாவற்பழம் முதலிய பழங்களை உண்ணுதல் உண்டு. கள்ளைப் பனைமரத்துப் பன்ஞடையால் வடிக் கட்டுவர்,

### ஆடை

மேலாடை அணிகின்ற வழக்கம் ஆண்களிடத்தும் பெண்க ளிடத்தும் இல்லையென வி. கனகசபைப் பிள்ளையவர்கள் கருது கின்றார். உயர் குடிப் பிறந்தோர் மட்டும் இடையில் வேட்டி ஒன்றும், மேலாடையும் அணிவர் என்பர். தைத்த ஆடைகளைச் சிலர் அணிந்தனர். அரசருடைய பணியாளர்கள் அணிந்த ஆடை மெய்ப்பை, கஞ்சுகம் என அழைக்கப்பட்டது. டாக்டர் கே. கே. பிள்ளையவர்களின் கருத்துப்படி, வாழ்க்கையில் உயர் நிலையில் நின்றவர்கள், மிகக் குறைந்த உடையையே உடுத்தினர். பணியாளர்கள்தாம் வேட்டியும் சட்டையும் அணிந்தனர் என்பது தெரிய வருகிறது.

பெண்கள் தம் மார்பகத்தை ஆடையால் மறைக்கும் வழக்கம் அக்காலத்திலில்லை. சந்தனத்தால், தொய்யில் எழுதியும் மலர்களை அணிந்தும் மார்பை மறைப்பர். வெண்ணிற ஆடைகளை அணிந்து மகளிர் பந்தாடினர்.

### நகைகள்

தமிழ் மக்கள் பல்வேறு வகையான அணிகலன்களைப் பெரிதும் விரும்பி அணிந்தனர். சிலப்பதிகாரம் மெட்டி, பரியகம், நூபுரம் அரியகம், பாடகம், சதங்கை, குறங்கு செறி, முத்துவடம், முத்து மேகலை, வளை, ஆடகம் ஆகியவை பற்றிய செய்திகளைக் கூறுகிறது. பெண்கள் இடையில் அணிந்த பட்டிகையானது மேகலை, காஞ்சி, கலாபம், பருமம், விரிசிகை என ஐவகைப்பட்டிருந்தது. காதணிக்குக் குதம்பை என்று பெயர். கணுக்காலில் சிலம்பு, கிண் கிணி அணியப்பட்டன. அக் காலத்திலிருந்த குழந்தை அணிகலன் களின் வகைக்கு கணக்கே இல்லை.

அணிகலன்களைக் கொண்டு மட்டுமன்றி, அழகு சாதனங்களைக் கொண்டும் சங்க காலத்தவர் அலங்கரித்துக் கொண்டனர். குழல், அளகம், கொண்டை, பனிச்சை, துஞ்சை எனக் கூந்தலை ஐவகை யாக முடித்துக் கொண்டனர். கூந்தலில் மலர் சூடல், உண்டு குளித்து முடித்துக் கூந்தலுக்கு அகிற்புகை ஊட்டி, அழகிய விரல் களால் கோதி உலர்த்தினர். கண்களுக்கு மை தீட்டினர். ஆடவரும், பெண்டிரும் தலைமுடியை நீளமாக வளர்த்தனர். ஆண்கள் தலையில் சூடும் பூ 'கண்ணி' என்றும், தோளில் அணிந்த மாலை 'தார்' என்றும் பெயர் பெற்றன.

**பொழுதுபோக்கு**

சங்க காலத்தில் சிறுவர் முதல் பெரியோர் வரை யாதேனும் ஒரு பொழுதுபோக்கு விளையாட்டில் இன்பம் கண்டுள்ளனர். கடற்கரையில் அலவனாட்டுதல், வண்டல் விளையாடுதல், பாவையை வைத்துக்கொண்டு விளையாடுதல், விளையாட்டுக் குதிரை, தேர் முதலியவற்றை இழுத்து விளையாடல், ஒருவரோடு ஒருவர் கைக் கோத்து ஆடல், பந்தாடல், நீரில் மூழ்கி விளையாடல், கிளி வளர்த்தல், திருவிழாக்களுக்குச் செல்லல் முதலியன அக் காலத்தில் வழக்கிலிருந்த பொழுதுபோக்குகளாகும். ஆடவர் மற்போர் புரிதலையும், கோழிப் போர், யானைப் போர் காண்டலையும், வேட்டையாடுதலையும் தமக்குரியனவாகக் கொண்டிருந்தனர். ஆடவரில் வயது முதிர்ந்தோர், ஓரிடத்தில் அமர்ந்து வல்லாட்டம் ஆடிப் பொழுதுபோக்கினர். ஓரை என்பது மகளிர்க்குரிய விளையாட்டு என்பதும் அதில் ஆடவரும் சேர்ந்து விளையாடுவர் என்பதும் (நற்றிணை, 155) அறியப்படுகிறது.

ஊசல் ஆடுதல், கழங்கு ஆடுதல் முதலான விளையாட்டுகள் மகளிர்க்கே உரிய விளையாட்டுகளாக இருந்தன. பந்தாடுதலும், பண்டை மகளிர்க்கே உரிய விளையாட்டாகும். அது கால் பந்தாக இல்லாமல், கைகளால் விளையாடும் பூப்பந்தாக இருந்தது.

கடற்கரையில் நண்டுகள் ஓடி மறைதலைக் கண்டு, பொழுது போக்கலைச் சிறு விளையாட்டாகக் கருதினர். காவிரிப்பூம்பட்டினத்து மக்கள் கடற்கரையில் பொழுதுபோக்கியதைப் பட்டினப் பாலையும் (62-117), எளிய மக்கள் இனிய முறையில் பொழுது போக்கியதைப் புறநானூறும் கூறுகின்றன(புறம். 24). மற்போர் குறித்தும், புறநானூறு வாயிலாக அறிகிறோம் (புறம். 80 81).

இனி, சங்க காலப் பழக்க வழக்கங்கள் குறித்தும் அறிதல் வேண்டும். திருமணமாகாத பெண்டிர், சிலம்பு அணிந்தனர். திருமணத்திற்கு முன்னர் அச்சிலம்பினைக் களைத்து புதுச் சிலம்பு அணிவித்தனர். சங்க காலத்தில், கணவரை இழந்த மகளிர் மறுமணம் செய்து கொள்ளவில்லை. பல்லி எழுப்பும் ஓசையாலும், கண் துடித்தலாலும் நிகழவிருக்கும் நன்மை தீமையைக் கணிக்கும் வழக்கம் இருந்தது (பாலைக் கலி, 10). காகத்திற்குச்சோறிடுதலும், காகம் கரைவதால் விருந்தினர் வருவர் என்பதும் அக்கால நம்பிக்கைகளே.

அழகு கலை வளர்ச்சியில், தமிழகம் சங்க காலத்தே தன் அரும்பெரும் பங்கினைச் செய்துள்ளது. அக்கால மக்கள் ஓவியக் கலையில் தேர்ந்து இருந்தனரென்பதனைச் சங்க இலக்கியங்கள்

தெரிவிக்கின்றன. நாடக அரங்குகளில் வண்ண ஓவியங்கள் தீட்டப்பெற்ற திரைச் சீலைகள் தொங்கவிடப்பட்டன. பல்வகைக் கூத்துகள் வழக்கில் இருந்தன. தமிழிசை தமிழர்களின் தனிக் கருவூலமாகும். ஏழிசையில் தமிழ்ப் பெயர்களாகவே குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பவை விளங்கின. பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டு யாழ், ஆதியாழ் முதலான பெயர்கள் யாழின் வகைகளை அறிவிப்பன.

சங்க கால மக்களில், நகரங்களில் வாழ்ந்தவர்கள் மாடி வீடுகளில் வாழ்ந்தனர். இவ்வீடுகளுக்கு வேயா மாடங்கள் என்று பெயர். வீடுகள் சுட்ட செங்கற்களால் கட்டப்பட்டன. வீடுகள் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டன. வீடுகளுக்குச் சாளரங்கள் பொருத்தப்பட்டு அவை மானின் கண்களைப் போல் தோற்ற மளித்தன. கதவுகளை மூடிக் குறுக்கே பூட்டியிருந்த கணைய மரத்திற்கு நுகம் என்பது பெயர். வீடுகளுக்கு இரட்டைக் கதவுகள் அமைக்கப் பெற்றன. தரையைப் பசுஞ் சாணங்கொண்டு மெழுகினர். சிலர், வீடுகளைச் சந்தனக் குழம்பால் மெழுகினர். செல்வந்தர்களின் வீடுகளைச் சுற்றி மலர்த் தோட்டங்கள் நிறைந் திருந்தன. பார்ப்பனர், வீடுகளில் கோழியையும் நாயையும் நுழைய விடுவதில்லை.

**கல்வி**

சங்க காலத் தமிழர்கள் கல்வியின் சிறப்பை உணர்ந்தவர்கள் என்பதற்குப் பாண்டியன் நெடுஞ்செழியனின் 'உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்' என்று தொடங்கும் பாடலே சான்றாகும். இன்றுபோல் கல்விச் சாலைகள் அன்றும் இருந்தனவா எனத் தெரியவில்லை.

சமுதாயத்தில் கற்றறிந்தோரைப் போற்றும் பாங்கு சிறந்து விளங்கியது. கணிதத்தில், மிக நுண்ணிய அளவையையும், மிகப் பெரிய அளவையையும் கையாண்டு வந்தனர். மிக நுண்ணிய அளவைக்குத் தேர்த்துகள் என்று பெயர். மிகப் பெரிய எண், வெள்ளம் என்பதாகும். கோள்கள் அவற்றின் செலவுகள், விண் மீன்கள், ஞாயிறு திங்களின் இயக்கம் ஆகியவற்றைப் பழந்தமிழர் நன்கு அறிந்திருந்தனர். ஓர் ஆண்டில் அமைந்த பன்னிரண்டு திங்களின் பெயரமைப்பைக் கண்டு வியக்காமலிருக்க முடியாது. தமிழரின் ஆண்டானது கதிரவனின் செலவைக் கணக்கிட்டு அறுதி யிடப்பட்டதாகும்.

தமிழர் வாழ்வியலின் கடைசி நிலையினை எங்ஙனம் நிறை வேற்றினர் என்பதனைக் காண்போம். நெருப்பிலிட்டு இறந் தோர் உடலைப் போக்குவதும், இறந்தோரின் எலும்புகளைப் புதைத்தலும், உடலைப் புதைத்தலும் வழக்கிலிருந்தன. உடல்களை எரித்தலே பொதுவான வழக்கம். இறந்தோர் உடல்களைப் பெரிய தாழிகளில் வைத்துப் புதைப்பதும் உண்டு. அப்படிப் புதைக்கப்பட்ட தாழிகள் முதுமக்கள் தாழி என வழங்கப் பட்டன. இறந்தோர்க்கு இறுதிக் கடன் ஆற்றுதலும் உண்டு. சிலப்பதிகாரம், அதனைக் கடன் என்று உரைக்கின்றது. உரை காரர் அதனைப் பலிக் கடன் என்பர்.

இத்துணைச் சிறப்புகள் பெற்ற தமிழ்ச் சமுதாயம் கி.பி. மூன்றும் நூற்றாண்டின் தொடக்கத்தில் களப்பிரர் என்ற குலத் தவரின் படையெடுப்பாலும், ஆரியரால் புகுத்தப்பட்ட பண் பாட்டுப் புரட்சியினாலும் சீர்குலைந்தது.

# 7. சங்க காலத் தமிழரின் வாணிகம்

பழங்கால வாணிகத்திற்கும், இக்காலத்து வாணிகத்திற்கும் பெரும் வேறுபாடுகள் உள்ளன. சங்க காலத் தமிழர் இடம், பொருள், ஏவல்களுக்கும், சூழ்நிலைகளுக்கும் தக்க வகையில் வாணிகத்தை நடத்தினர். சங்க காலத் தமிழ் மன்னர்களும், தங்களுடைய நாடுகளில் வணிகர்களை ஊக்குவித்து வாணிகத்தை வளர்த்தனர். சங்க காலத் தமிழர்களின் வாழ்க்கை வரலாற்றில் ஒரு பகுதி வாணிகத்தைச் சார்ந்தது.

**பண்டமாற்று**

பிற நாடுகளில், வரலாற்றின் தொடக்க காலத்தில் இருந்தது போலவே தமிழகத்திலும், சங்க காலத்தில் பண்டமாற்று முறை இருந்தது என்பதனைச் சங்க இலக்கியங்கள் வாயிலாக அறிகிறோம். குறுந்தொகைப் பாடலொன்றில், இடையன் பாலைக் கொடுத்து, அதற்கு ஈடாகத் தானியத்தைப் பண்டமாற்றுச் செய்து கொண்டதைப் 'பாலொடு வந்து, கூழொடு பெயரும் யாடுடை இடைமகன்' (குறுந். 221 : 2-3) என்று கூறப்பட்டுள்ளது. கூழ் என்பது ஈண்டு அரிசி, கேழ்வரகு, தினை முதலான தானியங்களைக் குறிக்கும். ஆய்ச்சியர் தயிரையும் மோரையும் கொடுத்து, அதற்கு ஈடாகத் தானியத்தைப் பெற்று, உணவு சமைத்து உண்டதைக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் பெரும்பாணாற்றுப்படையில் கூறுகிறார்; ஆனால் அவ்வாய்ச்சியரே நெய்யைப் பண்டமாற்றுச் செய்யாமல், விற்றுப் பொன் பெறுதலும் உண்டு என்பதைப் பெரும்பாணாற்றுப்படையே அறிவிக்கின்றது.

வேடன் ஒருவன், தான் வேட்டையாடிக் கொண்டுவந்த இறைச்சியை உழவனிடத்தில் கொடுத்து, அதற்கு ஈடாக நெல்லை மாற்றிக் கொண்டதையும், இடைச்சியர் உழவனுக்குத் தயிரைக் கொடுத்து நெல்லைப் பெற்றுக்கொண்டதாகவும் கோவூர்கிழார் கூறுகிறார்.

வேட்டுவர்களைப் போலவே, பாணரும் உள்ளூர் நீர்நிலைகளில் மீன் பிடித்தனர். பாண் மகளிர், அவர்கள் பிடித்த மீன்களை

ஊரில் கொண்டுபோய்ப் பயற்றுக்கும் தானியத்திற்கும் மாற்றினர்கள் என்பதை ஓரம் போகியார் என்ற புலவர் கூறுகிறார்.

'முள்எயிற்றுப் பாண்மகள் இன்கெடிறு சொரிந்த
அகன்பெரு வட்டி நிறைய மனையோள்
அரிகால் பெரும்பயறு நிறைக்கும்'
(ஐங்குறுநூறு, 47)

இப் பண்டமாற்று முறையை விளக்க இன்னும் பல சான்றுகளைக் காட்டலாம். கடற்கரையைச் சார்ந்த உப்பளங்களில் உப்பினை, உப்பு வணிகர் மாட்டு வண்டிகளிலே நெல்லைக் கொண்டு வந்து கொடுத்து, மாற்றிக்கொண்டு சென்றனர் என்று நற்றிணைச் செய்யுள் கூறுகிறது. கல்லாடனார், நெய்தல் நில முதுமகள் ஒருத்தி, தன் உப்பளத்தில் விளைந்த உப்பை மாற்றி, நெல் கொண்டுவரச் சொன்னாள் என்றும், ஊர் தெருக்களில் உப்பு விற்ற உமணப் பெண், உப்பை நெல்லுக்கு மாற்றினாள் என்றும், உப்பு வணிகர் பண்டமாற்று மூலம் கிடைத்த நெல்லைச் சிறு படகுகளில் ஏற்றிச் சென்றனரென்றும், சங்க இலக்கியங்கள் அறிவிக்கின்றன. எயினர்கள் அருந்துவதற்காகத் தம்மிடம் எப்பொருளும் இல்லாத காரணத்தால், காட்டில் வேட்டையாடி, யானைத் தந்தங்களைக் கொண்டுவந்து கொடுத்துக் கள் கேட்டு நின்ற செய்தியையும், கொல்லி மலையில் வாழ்ந்த சிறு குடிமக்கள், தம் சுற்றம் பசித்திருப்பதனால், தங்களிடமிருந்த யானைத் தந்தங்களைத் தானியத்துக்கு மாற்றிச் சோறு சமைத்து உண்டனர் என்ற செய்தியையும், குறுந்தொகை வாயிலாகத் தெரிந்து கொள்கிறோம்.

### காசுகள்

சங்க கால வாணிபம் பண்டமாற்று வாயிலாக மட்டும் நடைபெறவில்லை. காசுகளும் வழக்கில் இருந்துள்ளன. செம்பு வெள்ளி, பொன் இவைகளாலான காசுகளை, விலை உயர்வான பொருட்களை வாங்கிடப் பயன்படுத்தினர் என்று கருதலாம். அக் காசுகள், நெல்லிக்காயின் வடிவம் போன்று உருண்டு, சிறிது தட்டையாக இருந்தன என 'மதுரைக் கொல்வன் வெண்ணாகனார்' என்ற புலவர் கூறுகிறார். அவர் பாலை நிலத்து வழியிலே இருந்த நெல்லி மரங்களிலிருந்து உதிர்ந்துள்ள நெல்லிக்காய்கள் பொற்காசுகள் உதிர்ந்துகிடப்பன போலக் காணப்பட்டன என்று கூறுவதும், அகநானூற்றுப் பாடலில் உகா மரத்தின் பழம் போல மஞ்சள் நிறமாகப் பொற்காசுகள் இருந்தனெனக் காவன் முல்லைப் பூதனார் கூறுவதும், காசுகள் புழக்கத்தில் இருந்தமைக்குச்

சான்றுகும். மகளிர் தம் இடையைச் சுற்றிப் பொற்காசுகளை அணிந்து கொண்டனரென்பதை,

'ஆசில் கம்மியன் மாசறப் புனைந்த
பொலஞ்செய் பல்காசு அணிந்த அல்குல்'

எனப் புறப்பாடல் அறிவிக்கின்றது.

பொன் என்பதும், காணம் என்பதும் அக்காலத்தில் வழங்கிய காசுகள் என்று பதிற்றுப்பத்தினுல் தெரிகின்றன. செங்கம் என்னும் ஊரில் கிடைத்த ஈயக் காசுகளில் பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்டிருப்பதனுல், அவை கடைச் சங்க காலக் காசுகள் என்பதை அறியலாம். இதுவரை, நாம் மேலே கண்ட சான்றுகள், காசுகளும் வழக்கிலிருந்தன என்பதனை ஐயத்திற்கிடமின்றி மெய்ப்பிக்கின்றன.

**போக்குவரத்துச் சாதனங்கள்**

சங்க கால வாணிகம் சிறப்புற நடைபெறப் போக்குவரத்துச் சாதனங்களில் எவை எவை, எவ்வகையில் பயன்பட்டன என்பதைக் காண்போம். போக்குவரத்திற்கு எருது, கழுதை, வண்டி, படகு, பாய்க் கப்பல்கள் முதலியன பயன்பட்டன. குதிரைகள் பயன்படுத்தப்படவில்லையென்றே தெரிகிறது. கோவேறு கழுதைகள் அத்திரி எனப் பெயர் பெற்றன. அவைகளைப் பொதி சுமக்கவும், சரக்கு வண்டிகளை இழுக்கவும் பயன்படுத்தாது, ஊர்தியாகப் பயன்படுத்தினர்.

சேந்தன் கண்ணனுர் என்ற புலவர்,

'கொடிநுகம் நுழைந்த கணைக்கால் அத்திரி
வடிமணி நெடுந்தேர் பூண'[1]

என்று கூறுகிருர். மதுரையில், வைகையாற்றில் அத்திரியூர்ந்தனர் சிலர் என்று பரிபாடல் கூறுகிறது. அகநானூறு, நற்றிணை முதலியவற்றிலும் அத்திரி ஊர்ந்த செய்தியினைக் காண்கிருேம். அத்திரி உயர்தர ஊர்தியாகப் பயன்பட்டது என அறிகிருேம். சிறுபாணுற்றுப்படை குதிரை வண்டிகள் பற்றிய பல செய்திகளைக் கூறுவது போலப் பல்வேறு இலக்கியங்களும் அதனை இயம்புகின்றன. எனினும் குதிரை வண்டிகள் வாணிகப் பொருள்களை ஏற்றிச் செல்லப் பயன்படவில்லை.

மாட்டு வண்டிகளில் எருதுகளைப் பூட்டி வணிகர் பலர் ஒன்ருய்ச் சேர்ந்து, வாணிகப் பொருள்களை ஏற்றிச் சென்றனர்.

[1] அகநானூறு, 350.

இதற்கு **வணிகச் சாத்து** என்று பெயர். வணிகர் வாணிகப் பொருள்களை ஏற்றிச் செல்லக் கழுதைகளைப்பயன்படுத்தியதை,

'நெடுஞ்செவிக் கழுதை குறுங்கால் ஏற்றை
புறநிறைப் பண்டத்துப் பொறை'[1].

என அகநானூற்றுப் பாடலில் மருதனிள நாகனர் என்ற புலவர் கூறுகிறார். பலாப்பழம் அளவு சிறு பொதிகளாகக் கட்டப்பட்ட மிளகு மூட்டைகளைக் கழுதைகளின்மீது ஏற்றிக்கொண்டு பயணம் செய்தனரெனப் பெரும்பாணாற்றுப்படை கூறுகின்றது. வணிகர் கூட்டமாகச் செல்லும்போது, கொள்ளைக்காரர்களால் வழி மறிக்கப்பட்டதைக் கடியலூர் உருத்திரங்கண்ணனர்,

'...................சாத்தெறிந்து
அதர்கூட் டுண்ணும் அணங்குடைப் பகழிக்
கொடுவில் ஆடவர்'

(அகம். *167: 7-1.*)

எனக் கூறுகிறார். மற்றொரு பாடலில், (அகம். 245) மருதன் இளநாகனரும் இதைக் கூறுகிறார்.

அயல்நாடுகளுக்குத் தரைவழியாகச் சென்று வாணிகஞ் செய்தவர் கழுதைகள், எருதுகள், வண்டிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தினர். ஆங்காங்கே வழியிலிருந்த சுங்கச் சாவடிகளில், அரசனுடைய அலுவலர்கள் அவர்களிடம் இருந்து சுங்கம் வாங்கி னர்கள். கடல் வாணிகம் செய்த தமிழர்கள், நாவாய்களில் உள் நாட்டுச் சரக்குகளை அயல்நாடுகளில் விற்று, அந்நாடுகளிலிருந்து வேறு பொருள்களை ஏற்றி வந்தனர். வாணிகத்தில் பெருஞ் செல்வத்தை ஈட்டின வணிகர்களுக்கு, எட்டிப் பட்டமும், எட்டிப் பூவும் அளித்துச் சிறப்புச் செய்தனரென்பதற்குச் சங்கம் மருவிய இலக்கியங்களான சிலம்பும் மணிமேகலையும் சான்றாகும்.

**பிற நாடுகளுடன் வாணிகம்**

தமிழர்கள் கலிங்க நாட்டுடன் வாணிகம் செய்தனர். தமிழக வாணிகம் அங்குப் பெருகியதால், கலிங்க தேசத்துக் காரவேலன் என்னும் அரசன், தமிழ் வணிகரால் தன்னுடைய ஆட்சிக்கு ஆபத் தென்று கருதித் தமிழ் வணிகக் கூட்டத்தை அழித்த செய்தி அவ் வரசனின் ஹதிகும்பாப் பட்டயத்தின் வாயிலாக அறியப் படுகிறது.

[1] அகநானூறு. 343.

தமிழகத்திலிருந்து, ஆந்திர மாநிலம் சென்று வாணிகஞ் செய்த தமிழ் வாணிகர், அமராவதியில் எழுப்பப்பட்ட பௌத்தத் தூபியினைக் கட்டுவதற்கு உதவி செய்தனர் என்ற செய்தி, அங்குக் கிடைத்துள்ள பிராமிப்பட்டயம் ஒன்றினால் அறியப்படுகிறது. (No. 80 P. No. Notes on the Amaravathi Stupa J. Barges, 18/2, Archaeological Survey of India).

இலங்கை நாட்டுடன் தமிழர்கள் மேற்கொண்ட வாணிகத்திற்கு இலங்கைத் தலைநகரான அனுராதபுரத்தில் உள்ள பிராமிக் கல்வெட்டு ஆதாரமாக அமைகிறது. கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலேயே தமிழ் வணிகர் அனுராதபுரத்தில் பெரிய வாணிக நிலையம் அமைத்திருந்தனரென்பதனை இலங்கைப்பட்டயம் மெய்ப்பிக்கிறது. சங்க இலக்கியங்களில் இலங்கை வாணிகம் குறித்த செய்தியேதும் இல்லை.

கிழக்கிந்தியத் தீவுகள் என்றும், இந்தோனேசியத் தீவுகள் என்றும் இன்றைய நாளில் அழைக்கப்பெறும் தீவுகள் சங்க காலத்தில் தமிழர்களால் சாவகம், சாவகநாடு என்று அழைக்கப்பட்டன. சாவகத்துடன் அக்காலத்தமிழர் கடல்வழியே வாணிகம் செய்தனர். சாவக நாட்டிலிருந்து மிளகு தமிழகத்திற்குக் கொண்டு வரப்பட்டது. சாவக நாட்டுக்குள் கடல் கடந்து சென்று அங்குக் கிடைத்த வாசனைப் பொருள்களையும், பவளத்தையும், பட்டுத்துகிலையும் கொண்டு வந்து தமிழகத்தில் விற்றனர். தமிழர் பட்டுத்துணியை 'நூலாக் கலிங்கம்' என்றனர். இவ்வாறு கடல் கடந்து செல்லும்போது, கடலில் காற்றின் வேகத்தினால் மரக் கலங்கள் திசை தப்பியோடுவதும் உண்டு; கடலில் மூழ்குவது முண்டு. இருள் சூழும் போதில், மலை மறையும் தோற்றமானது, கடலில் மூழ்கும் கப்பல் போல் தோன்றியதென்று கொல்லன் அழிசி என்ற புலவர் கூறுகிறார் (குறுந்தொகை 240:5-7). கடற் கொள்ளையரின் தொல்லையும் அக்காலத்தில் இருந்தது. அவ்வாறு தொல்லை விளைவித்த கடற்கடம்பரைச் சேரநாட்டை அரசாண்ட இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் வென்று அடக்கினான். கப்பல்கள் துறைமுகத்தை அடைந்தவுடன் களைத்த மாலுமிகள் கள்ளையுண்டனர். அவர்களுக்காகத் துறைமுகங்களில் கள் விற்கப் பட்டது.

'வேறுபல் நாட்டிற் கால்தர வந்த
பலவினை நாவாய் தோன்றும் பெருந்துறைக்
கலிமடைக் கள்ளின் சாடி'

என்ற வரிகள் கள்ளினைச் சாடிகளில் வைத்திருந்தனர் என்பதை அறிவிக்கின்றன.[1] நாவாய்கள் துறைமுகத்தை அடைந்தபோது அதை மக்கள் மகிழ்ச்சியோடு எதிர்கொண்டழைத்தனர் என்பதை,

> 'தாம்வேண்டும் பட்டினம் எய்திக் கரைசேரும்
> ஏமுறு நாவாய் வரவெதிர் கொள்வார் போல'

என்று பரிபாடல் வரிகள் கூறுகின்றன.[2]

**பிற நாட்டார் வாணிகம்**

தமிழகம் பிறநாடுகளுடன் வாணிகம் செய்ததைப் போலத் தமிழகத்துடன், பிறநாட்டாரும் வாணிகம் செய்தனர். தமிழர்கள் கடல் கடந்து சென்றதைப் போல் பிற நாட்டவரும் கடல் கடந்து தமிழகம் போந்தனர். காவிரிப்பூம்பட்டினத்துத் துறைமுகத்தில் அயல்நாடுகளிலிருந்து கப்பலோட்டி வந்த வேறு மொழிகளைப் பேசின மக்கள் தங்கி இருந்ததைக் கீழ்க்காணும் வரிகள் மெய்ப்பிக்கின்றன.

> 'மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்
> புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையும்
> முட்டாச் சிறப்பிற் பட்டினம்'[3]

தமிழ்நாட்டிற்கு வந்து முசிறியில் வாணிகம் செய்த அராபியர் அந்த இடத்துக்குப் 'பந்தர்' என்று பெயரிட்டிருந்தனர். அரபிய மொழியில் பந்தர் என்றால் கடைவீதி என்பது பொருள். பதிற்றுப் பத்து 6 ஆம் பத்தில் (செய்யுள் 6) 'நன்கல வெறுக்கைத் துஞ்சும் பந்தர்' என்று கூறப்பட்டுள்ளது. அந்நூலின் 7ஆம் பத்து, 7ஆம் செய்யுளில் 'பந்தர் பெயரிய பேரிசை மூதூர்' என்றும், 8ஆம் பத்து 4ஆம் செய்யுளில் 'பந்தர் பயந்த பலர்புகழ் முத்தம்' என்றும் கூறப்படுகிறது.

அராபியர்களைப் போலவே, ரோமாபுரியிலிருந்து யவன வாணிகர் தமிழகம் வந்து வாணிகம் செய்தனர். யவனத்துடன் தமிழக வாணிகம் கி.மு. முதல் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்து கி.பி. மூன்றாம் நூற்றாண்டு வரையில் நடந்தது. ரோமாபுரி அரசர்களின் உருவ முத்திரையிடப்பட்ட பழைய நாணயப்

1 நற்றிணை, 295.
2 பரிபாடல்: 10: 38-39
3 பட்டினப்பாலை, 216-218.

புதையல்கள் தமிழ்நாட்டில் சில இடங்களில் சமீபத்தில் அகழ் வாய்வுகளில் கிடைத்துள்ளன. அந்தப் பழங்காசுகள் சங்க காலத்தில் நடந்த தமிழ-யவனர் வாணிகத் தொடர்புக்குச் சான்று பகர்கின்றன. அக்காலத்தில் தமிழ-யவனர் வாணிகத் தொடர் பினைப் பிளினி, தாலமி முதலான யவனர்களின் நூல்களிலிருந்து அறிகிறோம். யவன தமிழர் தொடர்பினால் மத்திகை, சுருங்கை, கலம், கன்னல் முதலான கிரேக்க மொழிச் சொற்கள் தமிழில் கலந்துவிட்டன. 'யவனர் தந்த வினை மாண் நன்கலம்' (அகம். 149), 'யவனர் நன்கலம் தந்த தண் கமழ்தேறல்' ஆகியவை வாணிகத் தொடர்பிற்குச் சான்றுகளாகும். திருவனந்தபுரத்திற்கு வடக்கே 150 மைல் தூரத்திலுள்ள பூஞ்சாரிலும், திருச்சூருக்கு வடமேற்கே 22 மைல் தூரத்தில் உள்ள எய்யலிலும் 1945ஆம் ஆண்டில் ரோம தேசத்துப் பழங்காசுகள் கண்டறியப்பட்டன. மேலும் தமிழகத்தில் கோவை, மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களிலும் கிடைத்துள்ள காசுகள் தமிழ - யவன வாணிகத்திற்குச் சான்றாக இருக்கின்றன.

சாவகத்தினரும், தமிழகத்துடன் வாணிகம் மேற்கொண் டனர். சோழ நாட்டிலிருந்தும், பாண்டிய நாட்டிலிருந்தும் அக் காலத் தமிழ் வணிகர் சாவக நாட்டிற்குச் சென்று வாணிகம் செய்தது போலவே, சாவகத் தீவிலிருந்த சாவக வணிகரும், தமிழ்நாட்டிற்கு வந்து வாணிகம் செய்தனர். சீன வணிகர், தமிழகம் வந்து அக்காலத்தே வாணிகம் செய்தனரா என்பது உறுதியாகத் தெரியவில்லை. அவர்கள் இங்கு வந்து வாணிகம் செய்ததற்கான ஆதாரங்கள் கிடைக்கப்பெற்றில. சீன நாட்டுக்கும் இந்திய நாட்டுக்குமிடையே மத்திய வாணிக நிலையமாகச் சாவகம் விளங்கியதால், சீனர்களும் தமிழகத்துடன் வாணிகம் செய்திருக்க வேண்டுமெனக் கருதலாம்.

**விளைபொருள்களும் விலைப்பொருள்களும்**

சங்க காலத்திலே வெல்லமும் சர்க்கரையும் செய்வதற்குப் பயன்படும் கரும்பு பயிர் செய்யப்பட்டது. கொங்கு நாட்டில் தகடூர் வட்டாரத்தை அரசாண்ட அதியமான் அரசபரம்பரையைச் சார்ந்த ஓர் அரசன், வெகு காலத்திற்கு முன்பே தேவலோகத்தி லிருந்து கரும்பைக் கொண்டு வந்து தமிழ்நாட்டில் பயிர் செய்தான் என்று கூறப்படுகின்றது.

'அமரர்ப் பேணியும் ஆவுதி அருத்தியும்
அரும் பெறல் மரபின் கரும்பு இவண் தந்தும்
நீரக இருக்கை ஆழி சூட்டிய
தொன்னிலை மரபின்நின் முன்னோர்'

எனப் புறப்பாடல் இதனைக் கூறும்.[1] பாண்டி நாட்டுத் தேனூரில் கரும்பைச் சாறு பிழியும் எந்திரமும், வெல்லம் காய்ச்சும் ஆலையும் இருந்தன.

'கரும்பின் எந்திரம் களிற்றெதிர் பிளிற்றும்
தேர்வண் கோமான் தேனூர்'

என்று ஐங்குறுநூறு கூறுகின்றது. வெல்லத்தை மக்கள் அதிகமாகப் பயன்படுத்தியமையால் வெல்லம் காய்ச்சும் தொழிலும், கரும்பு பயிரிடும் விவசாயமும் தமிழகத்தில் சிறப்பாக நடந்தன.

சங்க காலத்துத் தமிழகத்திலே கள்ளும் மதுவும் உற்பத்தி செய்யப்பட்டன. ஆனால், அவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகவில்லை; உள் நாட்டிலேயே செலவாயின. கள், தேறல், தோப்பி, பிழி, நறவு, மகிழ், மட்டு முதலான பெயர்கள் மது பானங்களுக்குப் பெயராகக் கூறப்பட்டுள்ளன. மதுவினைத் 'தெண்கட் டேறல்' (அகம். 336: 6), 'பாம்புக் கடுப்பன்ன தோப்பி' (அகம். 348: 7), 'பாம்பு வெகுண்டன்ன தேறல்' (சிறுபாண் 237), 'தண்கமழ் தேறல்' (புறம்.24), 'மணங்கமழ் தேறல்' (மதுரைக்காஞ்சி 780), 'இன்களி நறவு' (அகம். 173:16), 'அரவு வெகுண்டன்ன தேறல்' புறம். 376:14) என்று சங்கச் செய்யுள்கள் புகழ்கின்றன. ரோமாபுரியிலிருந்து வாணிகத்திற்காக வந்த யவனர் மது பானத்தையும் கொண்டு வந்தனர். அது 'யவனர் நன்கலந் தந்த தண்கமழ் தேறல்' எனப்பட்டது.

அரசர், வீரர் முதலானவர்கள் அக்காலத்தில் மது அருந்தினர். கள்ளையும் மதுவையும் பெண்கள் விற்றனரென அறிகிறோம்.

சேர நாட்டில் சங்க காலத்தில் வாழ்ந்த தமிழர் மிளகைப் பயிரிட்டு, மிளகு உற்பத்தி செய்தனர். சங்கச் செய்யுள்களிலே சேரநாட்டு மிளகும், மிளகு கொடியும் கூறப்படுகின்றன. குடபுலத்தில் கறிக்கொடி எனப்பட்ட மிளகு பலாமரங்களின் மேலே படர்ந்து வளர்ந்ததை நத்தத்தனர் 'பைங்கறி நிவந்த பலவின் நீழல்'[2] எனக் கூறுகிறார். மலைகளில், சந்தன மரங்களின் மேலேயும் மிளகு கொடிகள் படர்ந்து வளர்ந்திருந்தன.[3] மலைகளில்தாம்

[1] புறநானூறு, 99.
[2] சிறுபாணாற்றுப்படை, 43.
[3] அகநானூறு, 2.

மிளகு கொடி அதிகமாக வளர்ந்தது.[1] கருவூர் கந்தப் பிள்ளை சாத்தனாரும் கறிவளர் அடுக்கத்தைக் கூறுகிறார்.[2] கறிவளர் சிலம்பை ஆவூர் மூலங்கிழார் கூறுகின்றார்.[3] மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார் 'துறுகல் நண்ணிய கறியிவர் படப்பை' எனக் கூறுகிறார்.[4] நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் கறிக் கொடியைக் கூறுகின்றார்.

மிளகு வாணிகம் மிகச் சிறப்பாக நடந்ததெனலாம். யவன வாணிகர் மரக்கலங்களில் வந்து பொற்காசுகளைக் கொடுத்து மிளகை வாங்கிக் கொண்டு போனதை,

'......................சேரலர்
சுள்ளியம் பேரியாற்று வெண்ணுரை கலங்க
யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங்கெழு முசிறி'[5]

என்று தாயங்கண்ணனார் கூறுகிறார். யவனர் தமிழ்நாட்டுக்கு வாணிகம் செய்ய வந்தது மிளகுக்காகவே என்பதனைச் சங்கச் செய்யுள்களிலிருந்தும்,யவனரின் நூல்களிலிருந்தும் அறிகின்றோம்.

தமிழகத்திலிருந்து, வெளிநாடுகளுக்குத் துணி ஏற்றுமதியாயிற்று. பாடலிபுரம், காசி போன்ற கங்கைக்கரைப் பிரதேசங்களுக்குத் தமிழ்நாட்டுத் துணிகள் அனுப்பப்பட்டன. கலிங்கநாட்டுடன் துணி வர்த்தகம் செய்தனர். அதனால்தான் கலிங்கமென்ற பெயர் பிற்காலத்தில் துணிகளுக்கும் பொதுப் பெயராக வழங்கப் பட்டது. தமிழ்நாட்டிலே அக்காலத்திலும் பட்டாடைகளும் உடுத்தப்பட்டன. செல்வர், பருத்தியாடையையும் பட்டாடையையும் அணிந்தார்கள். 'கொட்டைக் கரைய பட்டுடை' என்று பொருநர் ஆற்றுப்படை கூறுகின்றது. பருத்திப் பயிர் செய்வதும் நூல் நூற்பதும் துணி நெய்வதும் ஆடை விற்பதுமாகிய தொழில்கள் சிறப்பாக நடந்தன. துணிகளை விற்ற வணிகருக்கு அறுவை வணிகர் என்று பெயர் கூறப்பட்டது. இளவேட்டனார் என்னும்

[1] குறுந்தொகை, 288
[2] புறநானூறு, 168.
[3] அகநானூறு, 112.
[4] அகநானூறு, 271.
[5] அகநானூறு, 149.

புலவர் அறுவை வாணிகம் செய்தார். ஆகையால், அவர் மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனர் என்று பெயர் பெற்ருர்.

நெய்தல் நிலமாகிய கடற்கரையில் உப்பளங்களில் பாத்திகள் அமைத்துக் கடல் நீரைப் பாய்ச்சி உப்பு விளேத்தார்கள். ஏர் உழாமல் உவர் நிலத்திலே உப்பு விளைவித்தபடியால் அவர்கள் 'உவர்விளை உப்பின் உழாஅ உழவர்' எனக் கூறப்பட்டார்கள். உப்பளங்களில், உப்பு விளைந்த பிறகு உப்பைக் குவியல் குவியலாகக் குவித்து வைத்தனர். பிறகு உப்பை வாங்குவதற்கு வருகிற உப்பு வணிகரை எதிர்பார்த்திருந்தார்கள். உமணர் ஒரே ஊரில் தங்காமல் ஊர்கள் தோறும் சென்றனர். போகிற வழியில் தங்கி ஊருக்குள் சென்று உப்பு விற்றனர். உமணப் பெண்களே உப்பை ஊர்க்குள் கொண்டுபோய் விற்ருர்கள். உப்பு வணிகம் செம்மையாக நடந்தது.

சங்கிற்குத் தமிழகம் பெயர் பெற்றது. தமிழில் அதனை வளை என்பர். தமிழகத்தின் மூன்று பக்கங்களிலும், கடல் சூழ்ந்திருந்தபடியால் வளை அதிகமாகக் கிடைத்தது. சங்குகளை அறுத்து வளையல் செய்தனர். தமிழ் மகளிர் சங்கு வளையல்களை விரும்பி அணிந்தனர். கொற்கைக் கடலிலும், கடலின் பல இடங்களிலும் சங்குகள் எடுக்கப்பட்டன. சிறுவாளினல் சங்குகளை அறுத்து, அரத்தினல் அராவி அழகு மிகு வளையல்களைச் செய்ததை, 'வல்லோன் வாளரம் பொருத கோணேர் எல்வளை' என்ற வரிகள் அறிவிக்கின்றன[1]. வளையல்களில் கொடிகள், பூக்கள், வரிக்கோடுகள் இடப்பட்டன. சங்க காலத்தில் கடலினடியிலிருந்து சங்கு எடுக்கும் தொழிலும், சங்குகளை வளையல்களாக அறுத்து விற்கும் தொழிலும் பெருமளவில் நடந்தன.

சங்குகளைப் போலவே கடல் விளை பொருளான உலகப் புகழ் பெற்ற முத்தும் எடுக்கப்பட்டது. கொற்கைக் குடாக்கடலில் விளைந்த முத்து சங்கச் செய்யுள்களில் புகழப்படுகின்றது. 'முத்துப்படு பரப்பிற் கொற்கை முன்றுறை' எனவும், 'கொற்கையப் பெருந்துறை முத்து' எனவும் கூறப்படுகின்றது. கால்களில் அணியும் சிலம்புகளில் கொற்கை முத்துகளைப் பாண்டிய அரசகுமாரிகள் பரல்களாக இட்டிருந்தனர்.

1. நற்றிணை, 77.

சங்க காலத்தில் மலைகளில் வாழ்ந்தவர்கள், யானைகளை வேட்டையாடிக் கொன்று அவற்றின் தந்தங்களைச் சேர்த்து வைத்தனர். வேங்கடமலையில் வாழ்ந்தவர், ஒன்று சேர்ந்து யானையை வேட்டையாடிக் கொன்று, அதன் தந்தங்களைக் கொண்டு போய் மதுக் கடையில் கொடுத்து மது அருந்தினர்.

நெல்லுக்குப் பதிலாக யானைத் தந்தங்களை அளித்தனர். யானைத் தந்தங்களை ஈர்வாளினால் அறுத்தும் கடைந்தும் பொருள்கள் பலவற்றைச் செய்தனர். யானைத் தந்தங்களை வெளியூர் வணிகர் வாங்கிச் சென்றனர். சங்க காலத்தில் அது வாணிகப் பொருளாக இருந்தது.

கொங்கு நாட்டில் சங்க காலத்தில் விலைமதிப்புடைய மணிக் கற்கள் கிடைத்தன என்பதைக் கீழ்க்கண்ட வரிகள் அறிவிக்கின்றன.

> 'இலங்குகதிர்த் திருமணி பெறூஉம்
> அகன்கண் வைப்பின் நாடு'[1]

எனப் பதிற்றுப்பத்தில் (66:19-20) கபிலர் கூறுகிறார். அரிசில் கிழாரும் அங்குக் கிடைத்த திருமணியைக் கூறுகிறார். உழவர் ஏர் உழுதபோது அம்மணிகள் வெளிப்பட்டனவாம்.

வேகமான நடையையுடைய குதிரைகள் பார்த்தியா, ஈழம் முதலிய பகுதிகளிலிருந்து வந்தன. எனவே, தமிழ்நாட்டில் குதிரைகள் இறக்குமதிப் பொருளாக விளங்கின. தென்னாட்டிற் கண்டெடுக்கப்பட்ட பழைய உரோம நாணயங்களைக் கொண்டு தென்னாட்டில் உரோம நாணயங்களாகப் பொன் இறக்குமதி செய்யப்பட்டது எனலாம். சந்தன மர வியாபாரம் குறித்து பெரிபுளூஸ் என்னும் நூல் அறிவிக்கிறது காவிரிப்பூம் பட்டினத்திற்கு மேற்கே இருக்கும் குடகுமலைப் (குடமலை) பகுதியிலிருந்து அகிலும் சந்தனமும் வந்து குவிந்தன. பவளம் தமிழ் நாட்டினின்றும் ஏற்றுமதியானதற்கு ஒரு சான்றும் இல்லை. அது 'குணகடல் துகிர்' என்றே குறிப்பிடப்படுகிறது. ஒரு பவள மணியை ஓர் இந்தியன் எந்த அளவிற்கு மதித்தானோ அவ்வள வுக்கு ஒரு முத்தை உரோமப் பெண்மணி மதித்தாள் எனப் பிளினி கூறுகிறார்.

உள்நாட்டு விற்பனைப் பொருள்களுள் உப்பு, நெல் குறிப்பிடத்தக்கன என்று கண்டோம். 'ஊரவரே, நெல்லும் உப்பும்

[1] பதிற்றுப்பத்து, 7-ஆம் பத்து 6-ஆம் பாடல்

விலை ஒப்பாகும்; கொள்வீராக' என்று சேரிகள் தோறும் கூறி விற்கும் அழகிய வளைந்த உந்தியினையும் மூங்கில் போன்ற தோளினையுமுடைய நெய்தல் நிலப் பெண்ணைப்பற்றி அகநானூறு கூறும். உப்பை விற்று வெண்ணெல்லைப் பெறுதலைக் குறுந்தொகை கூறும்.

**பண்டகசாலைகள்**

தமிழ் இலக்கியங்களின் வாயிலாகப் பல வணிக நிலையங்களைப் பற்றி அறிகிறோம். பண்டங்கள் யாவும் பெரிய சாலைகளில் வைக்கப்பட்டிருந்தன. கடலில் வந்தவற்றை உள்நாட்டினுள் செலுத்து முன்பும், உள்நாட்டில் நிலத்திலிருந்து வந்தவற்றைக் கடல் வழியே கொண்டு செல்லு முன்பும் பண்டகசாலையில் அவற்றைச் சேர்த்து வைத்தனர். பண்டகசாலைகளில் சேர்த்து வைக்கப்பட்டவற்றிற்கு மன்னனின் முத்திரை இடப்பட்டது. பட்டினப்பாலை வாயிலாக அவ்வாறு முத்திரை இடப்பட்ட மூடைகள் அகன்ற முற்றத்தில் ஏற்றுமதி, இறக்குமதிக்கு ஆயத்தமாக அடுக்கிவைக்கப்பட்டிருந்த வரலாற்றினை அறிகிறோம். இனிய ஓசையுடைய அலைகள் ஒலிக்கும் கடலிலே வந்த நல்ல பொருள்கள் வைக்கப்பட்டுள்ள பண்டகசாலை பதிற்றுப்பத்தில் கூறப்படுகிறது.

**துறைமுகங்கள்**

தமிழகத்தில் நடைபெற்ற பெரும் வாணிகத்தின் பயனாய்ப் பல துறைமுகங்கள் அக்காலத்தில் சிறப்புடன் விளங்கின.

சோழ நாட்டின் துறைமுகம் புகார் என வழங்கிய காவிரிப் பூம்பட்டினமாகும். காவிரியின் வடகரையில் இந்நகரம் அமைந்திருந்தது. காவிரியாறு அகலமும் ஆழமும் கொண்டு விளங்கியதால் பாரம் ஏற்றிய கப்பல்கள் பாய் சுருக்காது சென்று அதன் கரைகளில் வெளிநாட்டிலிருந்து வந்த பண்டங்களை இறக்கின. அத் துறைமுகத்தின் கரையருகே உயர்ந்த மேடைகளும் பண்டகசாலைகளும் இருந்தன. அவ்விடத்தில் குவிந்திருந்த பொருள்களில் சோழர் முத்திரை பொறிக்கப்பட்டது. அத்துறைமுகத்தில் வேற்று நாட்டினர் பலர் வாழ்ந்தனர். சுங்க வரி இறுப்பதற்கு இருந்த பொருள்கள் மலைபோல் குவிந்து இருந்தன.

முசிறி: சேரநாட்டுச் சிறப்புமிகு துறைமுகம் முசிரிஸ் என வழங்கப்பட்டது; தமிழ்நாட்டுக்குப் பொருள்களைக் கொண்டு வரும் வணிகரின் நாவாய்கள் பல இத்துறைமுகத்தில் நெருங்கி நின்றன. பெரிபுளூஸ் மென்மை மிக்க புடைவைகளும், சித்திர ஆடைகளும், பவளமும், செம்பும், ஈயமும், கோதுமையும் இத்

துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்பட்டதெனக் கூறுகிறது. இப் பட்டினத்தில் குட்ட நாட்டிலிருந்து வரும் மிளகும், முத்தும், யானைத் தந்தங்களும், பட்டும், இரத்தினமும் ஏற்றுமதி செய்யப் பட்டனவெனவும் கூறப்படுகின்றது.

**கொற்கை:** கொற்கையைக் குறித்துச் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்ட குறிப்புகள் யாவும் கிரேக்க உரோம வரலாற் றாசிரியர் கூறுவனவற்றோடு ஒத்திருக்கின்றன. அகநானூற்றுப் பாட்டுகள் பல கொற்கைப்பட்டினத்து முத்தைச் சிறப்பிக்கின்றன. முத்துச் சிறந்து பொலியும் சீரும் பெருமையும் வாய்ந்த கொற் கைப்பட்டினத்தை அறத்துடன் காப்பர் பாண்டியர் என்பதை,

> 'மறப்போர்ப் பாண்டியர் அறத்திற் காக்கும்
> கொற்கையம் பெருந்துறை முத்தின் அன்ன'

என அகநானூறு அறிவிக்கின்றது[1]. பாண்டியனது புகழ் மிக்க சிறப்பினையுடைய கொற்கைப் பதியின் கடற்றுறையிலே ஒளியினையுடைய முத்துப் பிரகாசிக்கும். நெருங்கிய நீர் மிக்க முத்துகள் விளையும் கடற் பரப்பினை உடையது கொற்கை. பெரிபுளுஸ் கொற்கையினைக் கொல்சி என உரைக்கின்றது. அது 'கொல்சியில் முத்துக் குளிக்கும் இடங்கள் பல உள; முத்துக் குளிப்பவர் சிறையிலிடப்பட்ட குற்றவாளிகள்; கொல்சி பாண்டிய அரசனுக்குரியது' என்று கூறுகிறது.

**கொல்லத்துறை:** கொல்லத்துறை என்னும் துறைமுகப் பட்டினம் வடபெண்ணையாற்றின் தென் கரையில் அந்த ஆறு கடலில் கலக்கின்ற முகத்துவாரத்தில் இருந்தது. இது தொண்டை நாட்டுத் துறைமுகப்பட்டினமாகும். கொல்லத்துறை என்னும் பெயர் கி. பி. 10ஆம் நூற்றுண்டில் கோபாலபட்டினம் என்று மாற்றப்பட்டது. கொல்லத்துறை துறைமுகத்தைப்பற்றிச் சங்கச் செய்யுள்களில் கூறப்படவில்லை. ஆயினும் பெரிபுளுஸ் இதனைப்பற்றிக் கூறுகின்றது. பெரிபுளுஸ் நூல் கூறுகிற போதவுகே துறைமுகம் இதுவே எனப்படுகிறது. எனவே, சங்க நூலில் கூறப்படாத வேறுசில துறைமுகங்களும் இருந்தன என்பதும் அவற்றில் கொல்லத்துறையும் ஒன்று என்பதும் பெறப் படுகிறது.

**எயிற்பட்டினம்:** சங்க காலத்தில் தொண்டை நாட்டில் முக்கியத் துறைமுகப்பட்டினமாக இருந்தது எயிற்பட்டினம்.

[1] அகம். 27.

இதற்குச் சோபட்டினம் என்னும் பெயரும் இருந்தது. 'சோ' என்றாலும், 'எயில்' என்றாலும் 'மதில்' என்று பொருள். பெரிபுளூஸ் இதனைக் கிரேக்க மொழியில் சோபட்மா என்று கூறுகிறது. சோபட்டினம் என்பதன் மரூஉ-தான் சோபட்மா எனப்படுகிறது. சிறுபாணாற்றுப்படையில் இது,

'மணிநீர் வைப்பு மதிலொடு பெயரிய
பனிநீர்ப் படுவிற் பட்டினம்'

என்று கூறப்பட்டுள்ளது. இத் துறைமுகப்பட்டினத்தில் நாவாய்களில் வந்து இறங்கின பொருள்களில் குதிரைகளும், வட இந்தியப் பொருள்களும் இருந்தனவெனப் பெரும்பாணாற்றுப்படையில் கடியலூர் உருத்திரங்கண்ணனார் கூறுகிறார்.

**தொண்டி:** சங்க காலத்திலே கிழக்குக் கரையிலும், மேற்குக் கரையிலும் இரண்டு தொண்டிப்பட்டினங்கள் இருந்தன. இரண்டிலொன்று சேரநாட்டில் மேற்குக் கடற்கரையில் இருந்தது. மற்றொன்று பாண்டி நாட்டில் கீழைக் கடற்கரையிலிருந்தது. இந்தத் தொண்டி கிழக்குக் கரையிலிருந்த பாண்டிநாட்டுத் தொண்டியாகும். ஐங்குறுநூற்றில் நெய்தல் திணையில் தொண்டிப் பத்து என்னும் தலைப்பில் பத்துச் செய்யுள்களைச் சங்கப் புலவரான அம்மூவனார் பாடியுள்ளார். அது சேர நாட்டுத் தொண்டி. அதே புலவர் அகநானூற்றில் பத்தாம் செய்யுளில் பாண்டி நாட்டுத் தொண்டியினை,

'மணங் கமழ் பாக்கத்துப் பகுக்கும்
வளங்கெழு தொண்டி'

எனப் பாடியுள்ளார். கீழ்க்கடல் தீவுகளிலிருந்து கொண்டு வரப்பட்டுத் தொண்டித் துறைமுகத்தில் இறக்குமதியான பொருள்கள் அகில், துகில், ஆரம், வாசம், கற்பூரம் முதலானவை என்று அறிகிறோம்.

மேற்குக்கரைத் துறைமுகத்தில், சங்க காலத்தில் தமிழகத்தின் ஒரு பகுதியாகவிருந்த துளுநாட்டின்கண் உள்ள மங்களூர்த் துறைமுகத்துக்குத் தெற்கே அமைந்தது நறவு என்னும் துறைமுகப்பட்டினம். மேற்குக் கடற்கரையின் சேர நாட்டில் இருந்த தொண்டி, சேரநாட்டுத் துறைமுகப்பட்டினமாகிய மாந்தை, முசிறிக்குள் தெற்கேயிருந்தவக்கரை, தாலமி

என்பவரால் **மேல்கிந்த** எனவும், பெரிபுளூஸ் என்ற நூலால் **நெல்கிந்த** எனவும், பிளினி என்பவரால் **நியாகிந்த** எனவும் கூறப் படும் துறைமுகமும் குறிப்பிடத்தக்கவை.

பொதியமலையைச் சூழ்ந்திருந்தது ஆய்நாடு. அந்நாட்டில் இருந்த துறைமுகத்தைத் தாலமி இலங்கொள் என்று குறிப்பிடு கின்றார். விழிஞம் மிகப் பழைமையான சரித்திரப் புகழ்பெற்ற துறைமுகப்பட்டினமாகும்.

ஒரு நாட்டின் தொழில்களிலே தலைசிறந்து விளங்கியவை உழவும் வாணிகமுமேயாம். இதுகாறும் கண்டவற்றால் சங்க காலத்தில் இவ்விரு தொழில்களும் தமிழகத்தில் சிறந்த நிலையில் நடைபெற்றன என அறிகிறோம்.

# 8. சங்க காலச் சமய வாழ்வு

தமிழ் மக்களின் சமய வாழ்க்கை சங்க காலத்தில் ஒரு தனிப் பண்பாட்டுடன் விளங்கியது. பிற்காலத்தில் ஆரியர் சமயக் கொள்கைகளும் வழிபாட்டு முறைகளும் சமயவாழ்விற் புகத் தொடங்கின. தொல்காப்பியம் தமிழரின் அகவாழ்க்கை, புற வாழ்க்கைகளைக் கூறுகையில் அவர்கள் வழிபட்ட பழந்தமிழ்த் தெய்வங்களின் பெயர்களைக் கூறுகிறது. மாயோன், சேயோன், வேந்தன், வருணன் ஆகிய தெய்வங்கள் முறையே முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்களில் வழிபடப்பட்டதைத் தொல் காப்பியம் கூறுகிறது. இத் தெய்வங்கள் சிறப்பாக அந்தந்த நிலங்களுக்கு உரியனவாகக் கூறப்பட்டாலும் எல்லா நிலத்து மக்களும் இத் தெய்வங்களை வழிபட்டனர். குறிஞ்சி நிலத் தெய்வமான முருகன், நெய்தல்நில ஊராகிய திருச்செந்தூரில் வழி படப்பட்டான். முல்லை நிலத் திருமால் திருவேங்கடம், அழகர்மலை முதலான குறிஞ்சி நிலங்களிலும், மதுரை, திருவரங்கம், காஞ்சி புரம் முதலான மருத நிலங்களிலும், காவிரிப்பூம்பட்டினம் முத லான நெய்தல் நிலங்களிலும் வணங்கப்பட்டதைச் சங்க இலக் கியங்களில் காண்கிறோம். கொற்றவை என்னும் வெற்றித் தெய்வமாகிய பெண் தெய்வத்தையும் தொல்காப்பியம் கூறு கிறது. சிவபெருமானையும் தொல்காப்பியம்,

> 'வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
> முனைவன் கண்டது முதனூ லாகும்'[1]

என்று கூறுகிறது.

**வழிபாட்டு முறைகள்**

தமிழருடைய வழிபாட்டிலே வெறியாட்டு முதலிய ஆட்டங்கள் முக்கிய இடம்பெற்றன. இவ் வழிபாடுகளில் பூசாரிகள் இல்லை. வழிபடுவோர், இறைவன் தம்மிலே வந்து வெளிப்படுவான் என்ற நம்பிக்கையுடன் கூத்தாடினர். வெறியாட்ட மரபினை, மதுரைக் காஞ்சியில் காணலாம். ஐங்குறுநூற்றில் வெறிப்பத்து என

[1] தொல் பொருள். மரபியல், 96.

ஒரு பகுதி உண்டு. 'மெல்லிய தோளை மெலியச் செய்த துன்பம், வெற்றியையுடைய முருகக் கடவுளால் வந்ததென்று வேலன் சொல்லுவான்' எனக் குறுந்தொகையில் கூறப்படுகிறது. இவ் வெறியாட்டில் தெய்வம் ஏறியதனால் அசைகின்ற அசைவு, உலாவி அசைந்து ஆடுகின்ற மடப்பத்தினையுடைய விறலியின் ஆட்டத்திற்கும், அரிய மணியை உடைய பாம்பின் ஆட்டத் திற்கும் ஒப்பிடப்படுகிறது. இவ் வெறியாட்டில் ஆட்டின் கழுத்தை அறுத்துத் தினையுடன் வழிபட்டனர் என்பதைக் குறுந்தொகையும், திருமுருகாற்றுப்படையும், அகநானூறும் அறிவிக்கின்றன. வெறியாட்டம் மேவிய மகளிருடைய தோற்றப் பொலிவு முதலியனவற்றைக் குறுந்தொகையும், அகநானூறும், பட்டினப்பாலையும் கூறுகின்றன.

போரில் இறந்த வீரரைக் கல்லில் அமைத்து வழிபடும் வழக்கமும் சங்க காலத்தில் இருந்தது. நடுகல்லைப்பற்றிய செய்தி மலைபடுகடாம், ஐங்குறுநூறு, அகநானூறு, புறநானூறு முதலியனவற்றில் காணப்படுகின்றன. நடுகற்களுக்கு ஆட்டினைப் பலி கொடுத்ததையும், மதுவும் சோறும் படைக்கப்பட்டதையும் அகம், புறம் ஆகியவற்றிலிருந்து அறியலாம். நடுகல் அமைத் தலுக்குத் தொல்காப்பியர் இலக்கணம் வகுத்துள்ளார். சங்க நூல்களில் நடுகல் தெய்வங்கள்பற்றி அடிக்கடி குறிப்பிடப்படுவ தால் அக்காலத்திலே அவை சிறப்புற்றிருந்தன எனத் தெரிகிறது. கற்கடவுள்களைப்பற்றிப் பட்டினப்பாலை, 'மகளிர் துறையிலே சென்று முழுகி மெழுகுவர்; அந்திக் காலத்திலே அவியாத விளக் கினை ஏற்றுவர்; கற்றெய்வத்தை மலரால் அலங்கரிப்பர்' என்று கூறுகின்றது. நெய்தல் நில மக்கள் முழுநிலா நாளில் கடற்கரை யில் கூடிக் கடல் தெய்வத்தின் அடையாளமாகச் சுறாவின் கொம்பை நட்டு அதற்கு மீனும் இறைச்சியும் படைத்து வணங்கு வார்கள் எனப் பட்டினப்பாலை குறிப்பிடுகின்றது.

### தெய்வங்கள்

தொல்காப்பியர் வேந்தன், வருணன் என்று குறிப்பிட்டுள்ள தெய்வங்களின் பெயர்கள் ஆரியருடைய வேதத்தில் கூறப்படு கின்ற தெய்வங்களோ என்று சிலர் ஐயுறுவர். உண்மையில் இத் தெய்வங்கள் ஆரியத் தெய்வங்கள் அல்ல. வேந்தர்களால் மருத நிலத்தில் ஆட்சி முறை வளர்க்கப்பட்டது. எனவே, ஆட்சி முறைக்கு அதி தெய்வமாக வேந்தன் எனும் தெய்வம் வணங்கப் பட்டான். வருணன் என்ற பெயர் இருக்கு வேதத்தில் காணப்படும் தெய்வம் அன்று. வருணன் என்ற தெய்வம் தமிழர் வணங்கிய கடல் தெய்வமே எனப்படுகிறது. இருக்கு வேதம் வருணனை அசுரன்

என்று கூறுகிறது. எனவே, ஆரியர் அல்லாதார் வணங்கிய வருணனை வேத காலத்து ஆரியர் ஏற்றுகொண்டனர் எனலாம். சங்கச் செய்யுள்களில் சிவன் என்னும் பெயர் காணப்படவில்லை. பத்துப்பாட்டில் சிவனைப்பற்றிய குறிப்புகள் உடைய இடங் களில்கூடச் சிவன் என்ற பெயர் காணப்படவில்லை. எட்டுத்தொகை நூல்களிலேயும் சிவனைப்பற்றிய குறிப்பு களைத்தாம் காண்கிறோம்.

அடைமொழிச் சொற்களால் சிவனைச் சங்கச் செய்யுள்கள் கூறுகின்றன. 'கறைமிடற்றண்ணல்'(புறம். 55), 'காரியுண்டிக் கடவுள்'(மலைபடுகடாம்,83), 'நீர்சடைக் கரந்தான்' (கலி.150),'கணிச் சியோன்' (கலி. 2.) 'முக்கட்செல்வன்'(புறம். 6; அகம். 181), 'ஏற்றூர் தியான்'(கலி.150), 'ஆல்அமர் செல்வன்'(கலி.81),'பிறவா யாக்கைப் பெரியோன்' (சிலம்பு 5:169), 'நுதல்விழி நாட்டத் திறையோன்' (சிலம்பு, 14:7), 'தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள்' (சிலம்பு, 20:64), 'ஏற்றுவலன் உயரிய எரிமருள் அவிர்சடை மாற்றருங் கணிச்சி மணிமிடற்றோன்' (புறம் 56:1-2) என்றெல்லாம் சிவபெருமான் கூறப்படுகிறான்.

இலிங்கம் என்னும் பெயர் சங்க இலக்கியங்களில் காணப் படவில்லை. மதுரைக்காஞ்சி ஐம்பூதங்களைப் படைத்தவன் என்றும், மழுவினை உடையவன் என்றும் சிவனைக் குறிக்கின்றது. நஞ்சை உணவாகக் கொண்டவன் என மலைபடுகடாம் பாடு கின்றது. திருமுருகாற்றுப்படை சிவனை 'ஆல்கெழு கடவுள்' எனக் குறிப்பிடுகின்றது. முக்கண்களை உடைய சிவனது கோயில் புறநானூற்றில், 'முக்கட்செல்வர் நகர்' என்று கூறப்பட்டுள்ளது. சங்க காலத்தில் சிவ வழிபாடு அவ்வளவு செல்வாக்குப் பெற வில்லை எனத் தெரிகிறது.

சங்க கால மக்களின் தெய்வமான முருகன் சேயோன் எனப்பட் டான். 'வெல்லும் போரை வல்ல முருகன்' என மலைபடுகடாம் அவனைச் சிறப்பிக்கின்றது. போர் வன்மைமிக்க முருகன் என அகநானூறும் புறநானூறும் கூறுகின்றன. முருகனுடைய கோயில் பற்றிய குறிப்பு, புறநானூற்றிலும் அகநானூற்றிலும் காணப்படு கிறது. சங்க நூல்களில் முருகு என்ற சொல்லே முருகனைக் குறிக்க வழங்கப்படுகிறது.

ஆறு படைவீடுகளில் குடிகொண்ட முருகன் புகழைத் திருமுருகாற்றுப்படை கூறுகிறது. இப்பாட்டிலே முருகன் பல பெயர்களால் அழைக்கப்படுகின்றான். அவற்றுட் சில ஆரியப் பெயர்கள்; சில திராவிடப் பெயர்கள். மறுவில் கற்பின்

வாணுதல் கணவன், சேய், அறுவர் சிறுவன், இமையணி சிறப்பிற் பழையோள் குழவி, வானோர்தானைத் தலைவன், குறிஞ்சிக் கிழவன் முதலியன அப் பெயர்கள். தமிழ் மக்கள் முருகனை மலைத் தெய்வ மாகக் கண்டனர்.

கொற்றவை வழிபாடு வெறியாட்டுடன் நடைபெற்றது. நெடுநல்வாடையில் போருக்குத் தலைவனைச் செலவு விடுத்த தலைவி யின் தோழியர், தலைவன் வெற்றியுடன் மீளவேண்டுமென்று வெற் றித் தெய்வத்தை வணங்குகின்றனர். அவ் வெற்றித் தெய்வம் கொற்றவையே. கொற்றவைக்குப் பலி கொடுத்து வாழ்த்துதலைக் கொற்றவைநிலை எனக் குறிக்கின்றது தொல்காப்பியம். அயிரை மலையில் வாழும் அச்சம் தரும் கொற்றவையைப்பற்றிப் பதிற்றுப்பத்து 79ஆம் பாட்டுக் குறிப்பிடுகின்றது. பிளவை உடைய மலைப்பக்கத்திலுள்ள வெற்றி பொருந்திய கொற்றவைக்குப் பலிக்கடன் கழித்தலைப்பற்றிக் குறுந்தொகை கூறுகின்றது.

முல்லை நிலத் தெய்வமான மாயோன் எனப்படும் திருமாலை மால், மாயோன் என்ற பெயரால் அழைத்தனர். மால் என்ப தற்குப் பெரியோன் என்றும், மாயோன் என்பதற்குக் கரியவன் என்றும் பொருள் கூறுவர். முல்லைப்பாட்டில் மால் என்ற சொல்லும் மதுரைக்காஞ்சியில் மாயோன் என்ற சொல்லும் வருகின்றன. மற்ற நூல்களில் இப் பெயர் காணப்படவில்லை என்றாலும் திருமாலின் பண்புகளைக் கூறும் பெயர்கள் இடம் பெறுகின்றன.

திருமால், கழுவப்பட்ட அழகிய நீலமணி போன்ற திருமேனி யையும், வானுற ஓங்கிய கருடக் கொடியையும் உடையவன்; ஆழியை ஏந்தியிருப்பவன் எனப் புறநானூறு உரைக்கின்றது. பாம்பிலே பள்ளிகொண்ட பரந்தாமனும் திருமாலைப்பற்றிப் பெரும்பாணாற்றுப்படை குறிக்கின்றது. அவுணர் கூட்டத்தை வென்றவனும், பொன்னால் செய்த மாலையை உடையவனுமாகிய திருமால் பிறந்த ஓணமாகிய நன்னாளில் ஊரிலுள்ளோர் விழா எடுப்பது வழக்கமாக இருந்தது.

அடுத்து, முல்லைப்பாட்டிலே திருமகள் குறிக்கப்படுகின்றாள்; பட்டினப்பாலை திருமகளை நகரக் காவல்தெய்வம் எனக் குறிப்பிடு கின்றது. நெடுநல்வாடையின் வாயிலாக வீட்டு வாயில் நிலைகளில் திருமகள் உருவம் தீட்டப்பட்டிருந்த செய்தியினையும், மதுரைக் காஞ்சி வாயிலாகத் திருமகளின் திருவுருவம் செதுக்கப்பட்ட மதிற் கதவுகளைப்பற்றியும் அறிகிறோம்.

பிற தெய்வங்களைக் குறித்து அறியும்போது கார்நிறக் கடவுளான திருமாலின் உந்தியில் நான்முகன் பிறந்தானெனப் பெரும்பாணாற்றுப்படை கூறும். உலகத்தில் இன்னாமை மிகு வதைக் கண்ட ஒரு புலவர் 'படைத்தான் மன்றஅப் பண்பி லாளன்' என்று பழிகூறுகிறார் பிரமனை. பிரமன் வழிபாடு இருந்ததாகத் தெரியவில்லை. கண்ணன் வழிபாடும் பலராமன் வழிபாடும் இலக் கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. தெய்வம் உறைந்த ஓர் ஆலமரம் 'கடவுள் ஆலம்' என வழங்கப்பட்டது எனப் புறநானூறு காட்டும். மக்கள் அக்காலத்தில் மலையிலும், நீரிலும், மரங் களிலும் கடவுள் உறைவதாக நம்பினர்.

## ஆரியர் நம்பிக்கைகள், சமயச் சடங்குகள்

சங்க காலத்திய அந்தணர், முனிவர் முதலியோரின் வாழ்க்கை முறை, பண்பு, கடமை முதலியவற்றைக் குறித்த செய்திகள் சங்க நூல்களில் உள. மதுரைக்காஞ்சியில் வேதம் ஓதும் அந்தணர் எழுப்பும் ஓசை தாதுண் தும்பியின் ரீங்காரத்தை ஒத்திருப்பதாகக் கூறப்படுகிறது. 'அறம்புரி கொள்கை நான் மறை முதல்வர்' எனப் புறநானூற்றில் அந்தணர் குறிப்பிடப்படு கின்றனர். அவர்கள் அறுவகைத் தொழில்களைச் செய்து வந்தமை யால் அறுதொழிலந்தணர் என்று புறநானூறு குறிப்பிடுகிறது. அந்தணர்தம் அறுதொழில், அவர் அணியும் முப்புரிநூல் ஆகிய வற்றைத் திருமுருகாற்றுப்படை விரிவாகக் கூறுகிறது. அந்தணர் வாழ்கின்ற தெருவினைப்பற்றிக் குறுந்தொகை கூறுகிறது.

முனிவர் எனப்பட்டோர் அணையாத தீயைப் பேணி வெண் கோட்டை உடைய யானைகள் கொண்டுவரும் விறகினால் வேள்விச் சடங்குகளைச் செய்வர் எனப் பெரும்பாணாற்றுப்படை கூறுகிறது. ஆரியக் கருத்துகள் தமிழ்நாட்டில் புகுந்தமைக்குப் பெரும்பா ணாற்றுப்படையில் சான்று உளது.

அக் கால வழக்கில் வேள்வி செய்து வழிபடும் முறை இருந்தது. வேள்வி பல நிகழ்த்தியமையாலேயே பாண்டியன் ஒருவனுக்குப் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்ற பெயர் வழங்கப்பட்டது. குளமுற்றத்துத் துஞ்சிய வளவனுடைய நாட்டில் எங்கும் வேள்வி வேட்டதை எரிக்காட்டூர் தாயங் கண்ணனார் என்ற புலவர் குறிப்பிடுகிறார்.[1] வேள்வி செய்யப்பட்ட முறையினை ஆலூர் மூலங்கிழார் பாடிய பாடல் வாயிலாக அறிய லாம்.[2] காரியினுடைய நாடு வேள்வித் தீயைப் பாதுகாக்கும்

[1] புறம். 397.

[2] புறம். 166.

அந்தணர்க்குரியது எனப் புறம் கூறுகிறது.[1] பெரும்பாணாற்றுப் படை வாயிலாக நிலையாமையைப்பற்றியும், மனிதனுடைய பொய் உணர்வைப்பற்றியும் சில குறிப்புகளைக் காணலாம். வாழ்நாள் நிலையின்றிக் கழியும் என்ற தத்துவம் பொருத்தமாகப் புறநானூறு வழியே வெளிப்படுத்தப்படுகிறது.

ஊழ்வினையைப்பற்றிச் சில பாட்டுகள் கூறுகின்றன. தாம் தாம் செய்த வினைக்கேற்ப இன்பமும் துன்பமும், உயர்வும் தாழ்வும், செல்வமும் வறுமையும் எய்தும் என நம்பினர்.

**சமணமும் பௌத்தமும்**

கிறித்து பிறப்பதற்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன்னரே தமிழ்நாட்டுக்குச் சமணரும் பௌத்தரும் வந்துவிட்டனரெனினும் பத்துப்பாட்டு எட்டுத்தொகை நூல்களை நோக்குமிடத்து அவர் களின் செல்வாக்குத் தென்னாட்டில் அக்காலத்திற் சிறந்திருக்க வில்லை என அறிகிறோம். மதுரை, காஞ்சி முதலான தலைநகரங் களில் சமண, பௌத்தத் துறவிகள் தங்கித் தத்தம் சமய உண்மை களைப் புகட்டுவதற்குப் பள்ளிகள் இருந்தன எனப் பெரும்பாணாற் றுப்படை கூறுகிறது. மதுரைச் சோலைகளிற் சமணத் துறவிகள் வாழ்ந்து சாவகர்களுக்குக் (சமணரில் விரதங்காக்கும் இல்லறத் தார்) கல்வி கற்றுத் தந்தனர்.

தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ் செழியனின் அவைப் புலவரான மாங்குடி மருதனார் மதுரைக் காஞ்சியில், மதுரையிலிருந்த பௌத்தப் பள்ளிக்கு மகளிர் தம் குடும்பத்தோடு சென்று வழிபட்டதைக் கூறுகிறார் (மதுரைக் காஞ்சி, 461-467). அவர் நோன்பு செய்வதன் பொருட்டுக் கல்லைப் பிளந்தாற் போன்று சிறிய வாயை உடைய குண்டிகைகளைப் பல வடங்களையுடைய உறியிலே தொங்கவிட்டுத் திரிவர் எனப் பத்துப் பாட்டு வாயிலாக அறியலாம். எட்டுத்தொகையில் வரும் இளம் போதியார், சீத்தலைச் சாத்தனார் இருவரும் பௌத்த சமயத்தைச் சேர்ந்தவர்கள் என அறியலாம். சங்க கால மக்களின் சமய வாழ் விலே சமண பௌத்தரின் செல்வாக்கு மிகவும் குறைவாகவே இருந்தது.

சமயத்தின் பொருட்டே வாழ்க்கை என்ற எண்ணம் சங்க காலத்தில் இல்லை. மக்களுக்குத் தொண்டு செய்வதிலும், உலகம் நல்ல நிலையில் வாழவேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்திலுமே அவர்கள் உள்ளம் பதிந்திருந்தது.

[1] புறம், 122.

மறுமையில் தமிழர் நம்பிக்கை கொண்டிருந்தனர் என்பதற்குப் பாரியின் வாழ்க்கை நிகழ்ச்சி எடுத்துக்காட்டாக அமைகிறது. வேள் பாரி இறந்துவிட்ட பின்னர்க் கபிலர் 'இப் பிறப்பில் இருவரையும் கூட்டி ஒன்றிய நட்பினால் உயர்வாழ்வு வாழச் செய்த நல்லூழ் மறுபிறப்பிலும் இடைவிடாத காட்சியினை உடைய உன்னோடு கூடி வாழும் வாழ்வைக் கொடுப்பதாக' என்று பாரியை நினைந்து ஏங்கிக் கூறுகிறார். மறுமைப் பயன் கருதி இம்மையில் அறம் செய்தல் இல்லை. அறத்தை விலைகொடுத்து வாங்குவது வாணிகத்திற்கு ஒப்பானது எனப் புறநானூறு குறிப்பிடுகின்றது.

## அக்கால நம்பிக்கை

வீர சுவர்க்க வாழ்வு ஒன்று மரணத்திற்குப் பின் உண்டு என நினைத்தனர் மக்கள். போர்க்களத்திலே போகும் உயிர் புண்ணிய உலகு செல்லவேண்டும் என்ற நம்பிக்கையின் பயனாய்த்தான், போர்க்களத்திலே இறக்காதவர்களையும், முழு வளர்ச்சியடையாத பிண்டத்தையும் வாளால் வெட்டிப் புதைத்தனர். உயிரைக் கவர்ந்து செல்பவன் கூற்றுவன் என்ற நம்பிக்கை அவர்களிடம் இருந்தது. புறநானூற்றில் நரிவெரூஉத் தலையாரின் பாட்டு கூற்றுவனைப்பற்றிக் கூறுகிறது. இப் பாடலில் அறம் செய்ய வாய்ப்பிருந்தும் தவறிவிட்டால், கூற்றுவன் வருகின்றபோது அதனைச் செய்ய இயலாது போய்விடும் என்று காட்டப்படுகிறது.

## புறநானூறும் தம்மபதமும்

புத்தபகவான் அருளிய பொன்மொழிகளையும், வரலாற்றையும் விளக்கும் நூல் திரிபிடகமாகும். இது முப்பெரும் பிரிவுகளை உடைய பௌத்த சமய வேத நூல் ஆகும். அதில் சூத்திர பிடகம் என்பது ஒரு பிரிவு. சூத்திர பிடகத்தில் ஐம்பெரும் பகுதிகள் உள்ளன. அதில் 'குத்தகநியாயம்' எனும் பகுதியில், 'தம்மபதம்' என்ற மிகச் சிறந்த நூல் திகழ்கிறது. அறவழி என்பது இதன் பொருள். தம்மபதம் பௌத்தர்களுடைய வேத நூல். அவர்களுக்குக் கீதையைப் போலவும் குறளைப் போலவும் பயன்படுகிறது இந்நூல். ஔவையார் பாடிய புறநானூற்றுப் பாடல் ஒன்று தம்மபதத்தின் மொழிபெயர்ப்பாக இருப்பது வியப்பாக உள்ளது என்பதனை ஜகந்நாத ராஜா என்பவர் ஆராய்ச்சி என்ற பத்திரிகையில் (டிசம்பர், 71) எடுத்துக் காட்டியுள்ளார்.

தம்மபதத்தின் 7ஆவது பகுதியான அரஹந்த 'வர்க்கம்' எனும் பகுதியில் உள்ள 9ஆவது பாடல் இது.

காமே வா யதி ரஞ்ஞேவா
நின்னே வா யதி தலே வா
யத் தார ஹந்தோ விஹரந்தி
தங் பூமாஸ் ராமணெய்யகங்

(தம்மபதம், 98)

இந்தப் பாடலின் நேர் மொழிபெயர்ப்பைக் கீழே காணலாம்.

காமே வா — நாடாக இருந்தாலும்
யதி — அல்லது
ரஞ்ஞேவா — காடாக இருந்தாலும்
நின்னேவா — பள்ளமாக இருந்தாலும்
யதி — அல்லது
தலே வா — மேடாக இருந்தாலும்
யத்து — எங்கே
அரஹந்தோ — சான்றோர்கள்
விஹரந்தி — நடமாடுகிறார்களோ
தங் — அந்த
பூமாஸ் — நிலமானது
ராமணெய்யகங்— எழில் நலமுடையதாகும்.

இதே கருத்தினைப் புறநானூற்றின் 187ஆவது பாடலில் ஔவையார் பாடியுள்ளார். இதே சொல் நடையில், சொல் அமைப்பு முறையும் மாறாமல் சீர்நிலை அடிகள்கூட ஓரளவினதாக அமைந்துள்ள பாடல் இது.

'நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே'

எந்த மொழியிலிருந்து எந்த மொழிக்குப் பெயர்க்கப்பட்டது என்பது தெரியவில்லை. ஔவையாரின் இப்பாடல் புத்தருடைய பரிநிர்வாணத்திற்கு 100 ஆண்டுகளுக்குள் எழுதப்பட்டது என்பதால் புறப்பாடல் தம்மபதத்திற்குப் பிற்பட்டது எனத் தெரிகிறது. தம்மபதம் புறநானூற்றுச் செய்யுள்களைக் காட்டிலும் பழைமையானது. ஆதலால் தம்மபதத்திலிருந்து ஔவை மூதாட்டி மொழிபெயர்த்த பாடல் இது எனக் கருதலாம். தமிழகத்தில் பௌத்த

சமயக் கருத்துகள் பரவியிருந்தன என்று காட்டிட இப் புறப்பாடல் ஓர் அகச் சான்று எனலாம்.

**பேய்பற்றிய கருத்து**

பண்டைத் தமிழ்ச் சமுதாயத்தினரிடம் பேய்களைப்பற்றிய எண்ணம் இருந்திருக்கிறது. பதிற்றுப்பத்து, பிளவுபட்ட தலையை உடையவளாகப் பேய் மகள் தோன்றுவாள் என்னும் பொருள் படக் 'கவைத்தலைப் பேய் மகள்' என்று கூறுகிறது. 'கருங்கண் பேய் மகள்' என்று பதிற்றுப்பத்தும், 'கவையடி கடுநோக்கம்' உடையது பேய் என்று மதுரைக்காஞ்சியும் குறிப்பிடுகின்றன. குறுந்தொகையில் யானையின் பரந்த அடிகளைக் கூறும்போது பேய் வருணிக்கப்படுகிறது. நெருப்பு எழுந்து எரிவதுபோல் பேயின் நாக்கு இருந்தது என்பதை 'எரிமறிந் தன்ன நாவின் பேய்மகள்' எனச் சிறுபாணாற்றுப்படை குறிப்பிடுகிறது.

பேய்கள்பற்றிய குறிப்புகள் வரும் பெரும்பான்மை இடங்களும் அவை பிணத்தைத் தின்று ஆடுகின்றன என்னும் கருத்தைக் கூறுகின்றன. பேய்கள் சுடுகாட்டுப் பிணங்கள் எரியும்போது அங்கே இருக்கும் என்பதைப் புறப்பாடல்கள் வாயிலாக அறிகிறோம். பேய்மகளிர் பிணத்தைத் தழுவிக்கொண்டு நிற்பர் எனவும் கூறப்பட்டுள்ளது. போரில் புண்பட்டவர்களைப் பேய் காக்கும் செய்தியும், இப் பேய்கள் நடு இரவில் சஞ்சரிக்கும் என்ற நம்பிக்கையும் நற்றிணை வாயிலாக அறியப்படுகின்றன. தொல்காப்பியர் புண்பட்ட கணவனைப் பேய் நெருங்குமுன் மனைவி அவனிடம் வருதலைத் 'தொடாஅக் காஞ்சி' எனக் கூறுகிறார். பேய் குழந்தைகளைப் பறித்துச் சென்றுவிடும் என்ற நம்பிக்கையும் இருந்தது. பேயுடன் நரியும் சேர்ந்தலைதலை 'பேயொடு கணநரி திரிதரும்' எனப் புறநானூறு கூறுகிறது.

பேய் என்ற சொல் அச்சத்தின் விளைவால் தோன்றியது என்று கருதப்படுகிறது.

'இருமுந்நீர் பேஎ நிலைஇய இரும்பௌவத்து'

'மருங்குல் நுணுகிய பேஎமுதிர் நடுகல்'

என்னும் சொற்றொடர்களில் பேய் என்னும் சொல் அச்சம் என்னும் பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளதை உணரலாம்.

சங்கத்திற்கு முற்பட்ட கால மக்கள் நோய், இயற்கை விபத்துகள், போர்கள் முதலியவற்றால் பாதிக்கப்பட்டதால் அச்சமும், வருங்காலத்தில் நம்பிக்கையின்மையும் ஏற்பட்ட நிலையில்

தெய்வங்களைக் கற்பனையில் படைத்து அவற்றிடம் சரணடைந்தனர். இதுபோல் அச்சத்தின் மனவுருவாகப் பேய்மகளிரைப் படைத்தனர். பேய்மகளிரை இறைவடிவமாகக் கருதி அவற்றையும் வழிபட்டனர் போலும்.

**சமூக நலனும் சமயமும்**

'நன்மையும் தீமையும் பிறரால் ஏற்படுவன அல்ல; துன்புறுதலும் பின் அது மறைதலும் சாதாரண நிகழ்ச்சியே எனவும், உலகில் இறந்து போவது என்பது புதிய நிகழ்ச்சியன்று; இயல்பாக நடைபெறுவதே எனவும் கருதினர். அதனால் 'இனியன நடந்தபோது மகிழ்வதும், இனியனவல்லாதன நிகழ்ந்தபோது வருந்துவதுமில்லை' எனப் புறம் அறிவிக்கின்றது. இது தமிழர்தம் இயற்கை வாழ்வை உணர்ந்த தன்மையினை அறிவிப்பது ஆகும். வாழ்க்கையைத் தமக்கென வாழாமல், சமூக நலனை அடிப்படையாகக் கொண்டு, சமயத்தில் தீவிரம் காட்டாமல் வாழ்ந்த தமிழர் வாழ்க்கை போற்றுவதற்குரியது என்பதை,

'யாது மூரே யாவருங் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலு மவற்றோ ரன்ன
சாதலும் புதுவ தன்றே வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்று மிலமே முனிவின்
இன்னா தென்றலு மிலமே'

என்ற புறநானூற்று வரிகளின் வாயிலாக அறியலாம்.

# முடிவுரை

## சங்க கால மக்களின் பண்பாடு

பண்பாடு என்பது அரிய பொருள் தரும் சொல்லாகும். பண் படுதல் என்ற சொல்லின் அடிப்படையாகப் பிறந்ததே பண்பாடா கும். பண்படுதல் என்பது சீர்படுதல் என்ற பொருளைத் தரும். செம்மைப்படுத்தப்பட்ட நிலம் பண்பட்ட நிலம் என்று கூறப்படு கிறது. அதுபோல் திருத்தம் பெற்ற மனநிலையே பண்பாடு என்று அழைக்கப்படுகிறது.

இப் பண்பாடு நாகரிகத்தோடு நெருங்கிய தொடர்பு கொண் டது எனலாம். மனிதனது நடை, உடை, பேச்சு, பாவனை முதலானவற்றில் ஏற்படும் திருத்தத்தை நாகரிகம் என்றும், மனத் தளவில் ஏற்படும் திருத்தத்தை—செம்மையைப் பண்பாடு என்றும் கூறலாம்.

'பண்பெனப் படுவது பாடறிந் தொழுகல்'. அதாவது நம் நண்பர்களது மனமறிந்து அதற்குத் தக்கவாறு நடந்துகொள்ளு தலே பண்பு எனக் கூறப்படுகிறது. இத்தகைய பண்பாளர்கள் வாழ்வதால்தான் இவ்வுலகம் வாழ்கின்றது என்பதை,

> 'பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அஃதின்றேல்
> மண்புக்கு மாய்வது மன்'

எனக் குறள் கூறுகிறது.

பண்டைத் தமிழ் மக்கள் எத்தகைய பண்பாடு உடையவர் களாக வாழ்ந்தார்கள் என்பதைக் கடலுள் மாய்ந்த இளம்பெரு வழுதி என்பார் எடுத்துக் கூறுகிறார். 'இந்திரர்க்குரிய அமிழ்தம் கிடைத்தாலும், பயன் கருதி அதனைத் தாமே உண்ணார்; புகழ் வருகின்றது என்னில் தம் உயிரையும் கொடுப்பர்; பழிவரும் என்னில் உலகினையே பரிசாகக் கொடுப்பதாயினும் பெற்றுக் கொள்ளமாட்டார்; பிறர் அஞ்சுகின்ற தீயனவற்றைத் தாமும் கண்டு அஞ்சுவர்; தளர்ச்சியின்றிச் செயலாற்றும் தன்மை உடை யார்; தமக்கென வாழாது பிறர்க்கெனவே வாழும் தன்மையுடை யார்; இத்தகைய பெருமக்கள் வாழ்வதனால்தான் உலகம் நிலை பெற்று உள்ளது' என அவரது புறப்பாடல் அறிவிக்கின்றது.

வள்ளுவர் தம் நூலில் பண்பாட்டுப் பிழிவாகப் பல குறள்களைக் கூறியுள்ளார். அவற்றினின்றும் அக்கால மக்களின் பண்பாடு எத்துணை விழுமியதாய் இருந்தது என்பதை அறியலாம். பிறர் செய்த நன்றியை நாம் மறத்தல் கூடாது; நன்றல்லவற்றை அன்றே மறந்துவிடவேண்டும்; இன்னா செய்தார்க்கும் இனியவே செய்ய வேண்டும்; இன்னா செய்தாரைத் தண்டிக்க நினைத்தால், மாறுஇலா நன்மையை அவர்க்குச் செய்தல் வேண்டும் எனச் செம்மைப்பட்ட பல கருத்துகளை அறிவித்துள்ளார்.

அக்கால மக்கள் அனைவருமே கல்வியின் சிறப்பை அறிந்தவர்களாக இருந்தனர். அறிந்ததோடு மட்டுமன்றிச் சிறந்த புலவர்களாகவும் விளங்கினர். தொழில் முறையால் வேறுபட்ட பல குலத்தும் கவிவல்லார் இருந்தனர். கூலவாணிகம் செய்தோர், பொன் வாணிகம் செய்தோர், குறக்குலத்தைச் சேர்ந்தோர் அனைவருமே கல்வியிற் சிறந்தோராய் விளங்கினர். அன்னாரின் புலமையை அறியும் திறமுடையவர்களாக அக்கால அரசர்களும் விளங்கினர். 'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்' என்றபடி புலவர்களின் புலமையை அறிந்து அன்னார்க்கு வேண்டுவனவெல்லாம் தந்து பக்கத்தே ஒக்க அமரவைத்துச் சிறப்புத் தந்தனர். அரசர் பலர் தாமே பெரும்புலமை உடையவர்களாகத் திகழ்ந்தனர். ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என்பான், கல்வியின் சிறப்பையெல்லாம் தொகுத்துக் கூறி, அக் கல்வியை யாங்ஙனம் கற்க வேண்டும் என அறிவுறுத்தியுள்ளான். பாண்டியன் அறிவுடைநம்பி மழலைச் செல்வத்தின் இன்றியமையாமையையும், பெற்றோரைக் கழிபேரின்பம் அடையச் செய்யும் குழந்தையின் தன்மைகளையும் விரிவாக எடுத்துக் கூறுவதை நோக்க அப் பாண்டிய மன்னனின் அறிவும், அனுபவமும், நுண்ணுணர்வும் எத்தகையன என்பதை அறிகிறோம்.

கல்வியிற் சிறந்திருந்தது போலவே பிற கலைகளிலும் பண்டைய மக்கள் சிறந்து விளங்கினர். மிடற்றிசையோடு பல்வகைக் கருவிகளை இசைப்பதிலும் திறமை பெற்றிருந்தனர். தோற்கருவி, துளைக்கருவி, நரப்புக்கருவி, கஞ்சக்கருவி ஆகிய நால்வகைக் கருவிகளைப் பயன்படுத்தினர். ஐவகை நிலத்தில் வாழ்ந்தவர்களும் தத்தமக்குரிய யாழ், பறை இவற்றைக் கொண்டிருந்தனர். குறிஞ்சிப் பண்ணைப் பாடித் தினை உண்ண வந்த யானையைத் தூங்கச் செய்த இசைச் செல்வியை அகப்பாடல் குறிக்கின்றது. மருதம், செவ்வழி, பாலை, குறிஞ்சி முதலான பண்களை அறிந்திருந்ததோடு காலையில் பாடவேண்டிய பண், மாலையில்

பாடவேண்டிய பண் எனவும் வரையறுத்திருந்த செய்தி அக்கால மக்கள் இசையில் எந்த அளவிற்குப் பயிற்சி பெற்றிருந்தனர் என்பதைக் காட்டுகின்றது.

இசையுடன் நெருங்கிய தொடர்புடைய கூத்துக்கலையிலும் பண்டைய மக்கள் சிறந்து விளங்கினர். வள்ளிக் கூத்து, குரவைக் கூத்து, துணங்கைக் கூத்து முதலான பல கூத்துகளைப்பற்றி அறிகிறோம். நற்றிணை, புறம், மதுரைக்காஞ்சி, பொருநராற்றுப் படை, பெரும்பாணாற்றுப்படை முதலான நூல்கள் மக்கள் ஆடிய கூத்துகளைப்பற்றிய விவரங்களைக் கூறுகின்றன.

ஓவியம், சிற்பம், கட்டடம் ஆகிய கலைகளும் மிகச் சிறந்த முழுமை அடைந்த நிலையில் இருந்தன என அறிகின்றபோது, சங்க காலத்திற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இக் கலைகள் செம்மையுற்ற நிலையில் தமிழகத்தில் வழக்கில் இருந்திருக்க வேண்டும் என்பது பெறப்படுகின்றது.

கல்வி, கலை இவற்றில் மேம்பட்டிருந்ததோடு மட்டுமன்றி மனிதனுக்கு இன்றியமையாத பிற பண்புகளிலும் மேம்பட்டு இருந்தனர். பண்டைத் தமிழ் மக்களிடத்து மானவுணர்வு தலை சிறந்து விளங்கியது. அம் மானத்திற்குச் சிறிது தாழ்வு வரின் அதனைப் பொறுது உயிரினை நீத்தனர்.

> 'மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
> உயிர்நீப்பர் மானம் வரின்'

என வள்ளுவர் இதனை அறிவிக்கிறார். சோழன் கோச்செங் கணனிடத்துப் போரில் தோல்வியுற்று அவனால் சிறைப்படுத்தப் பட்ட சேரமான் கணைக்காலிரும்பொறை, சிறைக்காவலர் காலம் தாழ்த்தி நீர் கொடுத்தமையின் அதனைப் பருகாது, தன் மானச் சிறப்பை ஒரு பாடல் மூலம் வெளிப்படுத்தி உயிர் இழந்த கதை யைப் புறம் கூறும். வெண்ணிப்பறந்தலை என்றவிடத்துக் கரிகால னோடு போர் செய்து, தன் மார்பில் வேல் பாய்ந்து முதுகில் உருவிச் சென்றது என்ற காரணத்தால் சேரமான் பெருஞ்சேர லாதன், தான் பெற்ற புறப்புண்ணுக்கு நாணி வடக்கிருந்து உயிர் துறந்த செய்தியை வெண்ணிக் குயத்தியார் வியந்து பாராட்டி யுள்ளார். கோப்பெருஞ்சோழன் தன் மக்களே தன்னை எதிர்த்து நின்ற செயலைப் பொறுக்கமாட்டாது, மான மேலீட்டால் வடக் கிருந்து உயிர் துறந்தான்.

மன்னர்களேயன்றி ஏழைப் புலவர்களும் தன்மான உணர்வு நிறைந்தவர்களாக விளங்கியுள்ளனர். வறுமையிற் செம்மை கண்ட புலவர் எனப் புகழப்படுபவர் பெருஞ்சித்திரனார் ஆவார். மனைவியும் குழந்தைகளும் தாயும் வறுமையில் வாடி வருந்திய காலத்தும் அவர் மானக் குறைவை வெறுத்தார். இளவெளிமான் சிறிது கொடுப்பக் கொள்ளாது சென்று குமணனிடம் யானைப் பரிசில் பெற்று வந்தார்; அதியமான் தன்னைக் காணாது கொடுத்த பரிசிலைக் கொள்ளாது,

'காணாது ஈத்தஇப் பொருட்கு யானோர்
வாணிகப் பரிசிலேன் அல்லேன்'

எனக் கூறி வந்துவிட்டார். இத்தகைய பெருமிதம் உடைய புலவர் பொருள் கிடைத்தக்கால் செய்த செயல் செயற்கரிய செயலாக உள்ளது. பரிசிற்பொருளைக் கொணர்ந்து தன் மனைவியிடம் கொடுத்து அனைவர்க்கும் அப்பொருளைத் தாராளமாக வழங்குமாறு கூறுவதைப் புறநானூற்றில் காணுகிறோம்.

பண்டைத் தமிழகத்தில் ஈகைப் பண்பு அனைவரிடத்தும் மேலோங்கி நின்றது. ஆற்றுப்படை நூல்கள் அக் காலத் தமிழக மன்னர்களின் வள்ளல் தன்மையைக் காட்டுவன. பேரரசர்களே யன்றிச் சிற்றரசர்களும், குறுநிலத்தலைவர்களும் வள்ளல்களாகத் திகழ்ந்தனர்; கடையெழு வள்ளல்கள் என்ற சிறப்புப் பெயர் பெறும் அளவிற்கு அவ் வள்ளல்கள் ஈகைக்குணம் உடையவர்களாய் வாழ்ந்தனர். அவ்வெழுவரும் ஒருருக் கொண்டாற்போல் குமணன் விளங்கினான். சிறுகுடி என்ற ஊருக்குத் தலைவனான பண்ணன் என்பான் பசிப்பிணி மருத்துவன் என்றழைக்கப் பட்டான்.

'யான்வாழும் நாளும் பண்ணன் வாழிய'

எனத் தன் வாழ்நாளும் சேர்த்து அப் பண்ணன் வாழட்டும் என நாடாண்ட பேரரசன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் பண்ணனை வாழ்த்துவதைப் புறம் அறிவிக்கின்றது.

'செல்வத்துப் பயனே ஈதல்' என நக்கீரனார் செல்வர்களுக்கு அறிவுறுத்துகிறார். எல்லோரும் எல்லாம் பெற்று வாழ வேண்டும் என்ற சமதர்மத்தை அன்றே நக்கீரனார் அறிவிப்பதைக் கண்டு வியக்கவேண்டி உள்ளது.

இங்ஙனம் கல்வி, கேள்விகளில் மேம்பட்டுக் கலைகளில் சிறந்து மானம், ஈகை முதலான உயிர்ப்பண்புகளில் ஓங்கி வாழ்வாங்கு வாழ்ந்த வாழ்க்கையைப் பண்டைத் தமிழகத்தில் காண்கிறோம்.

'மன்னு உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே'

(புறம். 165)

எனப் புறப்பாடல் கூறுகிறது. அதற்கேற்பவே நிலையற்ற உலகத்தில் வாழ்ந்த நம் பண்டைத் தமிழ் மக்கள் புகழ் தரும் நற்குண நற்செயல்களையே தம் வாழ்நாளில் மேற்கொண்டு ஒழுகினர் என்பது திண்ணம்.

# தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

**சென்னை - 600 031**

*

## தமிழில் பயில்பவர்க்குக் கல்லூரிப் பாடநூல்கள்

**(Tamil Medium Books for Colleges)**

**1977 ஏப்ரல் முடிய 779 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன**

*

## மேலும் விரைவில் வெளிவருபவை

| | | | |
|---|---|---|---|
| பொறியியல் | ... | 4 | நூல்கள் |
| மருத்துவவியல் | ... | 1 | ,, |
| இயற்பியல் | ... | 5 | ,, |
| வேதியியல் | ... | 1 | ,, |
| விலங்கியல் | ... | 2 | ,, |
| கணிதவியல் | ... | 2 | ,, |
| வணிகவியல் | ... | 3 | ,, |
| பொருளியல் | ... | 2 | ,, |
| புவியியல் | ... | 1 | ,, |
| வரலாற்றியல் | ... | 9 | ,, |
| அளவையியல் | ... | 1 | ,, |
| வானியல் | ... | 1 | ,, |
| உளவியல் | ... | 1 | ,, |
| புள்ளியியல் | ... | 3 | ,, |
| கல்வியியல் | ... | 2 | ,, |
| அரசியல் | ... | 2 | ,, |
| கூட்டுறவியல் | ... | 1 | ,, |

கிடைக்குமிடம்

**தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனக் கிடங்கு**

(கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலகச் சுற்றுக்குள்)

**கல்லூரிச் சாலை, நுங்கம்பாக்கம்,**

**சென்னை - 600 006.**

**கல்லூரிப் பாடநூல்களுக்கு 20% கழிவு வழங்கப்படும்.**